அமெரிக்காவின் இரகசிய அணுக்கரு கூடத்தல்

உலக உலா

பெப்ரவரி 1985

குற்றவியல் கையேடுகள்

அனைத்துலகச் செயலகம்
தமிழீழ விடுதலைப் புலிகள்

விஞ்ஞான தொழில் நுட்ப திறப்பிதழ்

உலகின் ஆயுத வியாபாரிகள்



பக்கம்: 31

பூனைக் குடும்பத்தில் புலி

பக்கம்: 68

உலக விவகாரங்கள்

ஆசியா

அகதிகள் வேண்டாம் 05
அணுக்கருக் கட்டத்தல் 07
அரசியல்வாதிகளும் அக்கிரிக்குஞ்சுகளும் 10
கிழக்கு திமோரின் சோகம் 12
ஆசிய - பசுபிக் பொருண்மிய கூட்டுறவு 15
நேபாளத்தில் அரசியல் மாற்றம் 16
பகை மீள வெடிக்கிறது 17

ஐரோப்பா

லிதுவேனிய மாபியா 19
அமெரிக்க - ருஷ்ய உறவுகளில் விரிசல் 22
மிதிபடுகிறது பொஸ்னியா 25

அமெரிக்கா

வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு 27
உலகின் ஆயுத வியாபாரிகள் 31

ஆபிரிக்கா

தண்டனையை எதிர்நோக்கும் கொலைகாரர்கள் 34
அமைதியான நமீபியா 36
தென்னாபிரிக்காவின் அற்புதங்கள் 38

கணனி விஞ்ஞானம்

கணனியின் விந்தைகள் 41

சமூகவியல்

உணவும் சமையற் கலையும் 45

குற்றவியல்

போதைப் பொருட் பாதை 48
தொல்பொருள் பகுப்பாளரின் வீழ்ச்சி 60

உலா : 18

விலை ரூபா 79-99

முகாமைத்துவம்
உணவைக் கொடுத்து உறவைத் தேடல் 49

மனிதவியல் வரலாறு
அமெரிக்க பழங்குடியினரின் பண்பாடு 52
மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும் 55

உளவியல்
யார் அங்கவீனர்கள்? 58

சூற்றுச் சூழல்
மடகஸ்காரில் பாரிய அழிவு 62
மறக்கப்பட்ட மாபெரும் மிருகம் 64

இலத்திரனியல்
இலத்திரனியல் இன்று 66

விலங்கியல்
பூனைக்குடும்பத்தில் புலி 68

மதம்
மதகுருவின் படுகொலைகள் 72

விண்வெளி
பிரபஞ்சத்தின் வயது என்ன? 74

விஞ்ஞானமும்
தொழில்நுட்பமும்
குற்றத்தடுப்பில் இலத்திரனியல்
கருவிகள் 75

பலதிணைப் பகுதி
சிறப்புப் போட்டி 30

அச்சுப்பதிப்பு
இராசன் அச்சகம்
144, அருச்சுனா சாலை,
யாழ்ப்பாணம்.

★

முன் அட்டைப் பதிப்பு
அந்திவானம் பதிப்பகம்
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

★

வெளியிடு
உலக உலா நிறுவனம்
144, அருச்சுனா சாலை.
(3 ஆம் மாடி)
யாழ்ப்பாணம்.

★

பணிமனை
உலக உலா செயலகம்
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

★

விநியோகஸ்தர்கள்
தென்மராட்சிக் கோட்டம்,
சோதி புத்தக நிலையம்
கச்சாய் வீதி,
சாவகச்சேரி.

★

வடமராட்சிக் கோட்டம்
உதயன் புத்தக நிலையம்
மருதடி,
பருத்தித்துறை.

சிறப்புப் போட்டி

அன்பான வாசகர்களே!

சிறப்புப் போட்டியொன்றினூடாக உங்களைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். பொது அறிவுத்திறனை வளர்க்கு முகமாகவே இந்தப் போட்டி நடாத்தப் படுகிறது. அடுத்த பக்கத்தில் அரசியல் தலைவர்கள், இராணுவத் தளபதிகள், விளையாட்டு வீரர் போன்ற உலகப் புகழ் பெற்றவர்களது படங்கள் காணப்படுகின்றன. இவற்றில் ஒருவரைத்தவிர ஏனைய அனைவரும் கடந்த கால உலக உலாக்களில் உலா வந்தவர்களே! இந்தப் பக்கத்தில், படங்களிற்கு இலக்கம் இட்டுள்ளோம். இதோ நீங்கள் செய்ய வேண்டிய தெல்லாம் இவ்வளவு தான். இங்கு காணப்படும் 35 உலகப் புகழ் பெற்றவர்களது படங்களையும் பார்த்து படிவத்தில் காணப்படும் இலக்கத்திற்கு நேராக உரியவர்களதுபெயர்களை எழுதி அனுப்ப வேண்டியது மட்டும் தான்.



போட்டி நிபந்தனைகள்

1. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பி அனுப்புபவர்கள் மட்டும தான் போட்டியில் கலந்து கொள்ள முடியும்.

2. விடைகள் தெளிவாகவும், வாசித்து விளங்கக் கூடிய வகையிலும் இருத்தல் வேண்டும்.

3. உலக உலாவின் குடும்ப அங்கத்தவர்கள் தவிர்ந்த ஏனையவர்கள் இப் போட்டியில் பங்குபற்றலாம்.

4. நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

5. விடைகள் வந்து சேர வேண்டிய இறுதி நாள் 01-03-1995.

பரிசுகள்

★ முதற் பரிசு — ரூபா 3,000 பெறுமதியான பொருள்கள்.

★ இரண்டாம் பரிசு — ரூபா 2,000 பெறுமதியான பொருள்கள்.

★ மூன்றாம் பரிசு — ரூபா 1,000 பெறுமதியான பொருள்கள்.

மேலும் தலா ரூபா 480 பெறுமதியான 20 ஆறுதற் பரிசுகளும் உண்டு.

★★ சரியான விடையுடன் முதலில் வந்து சேரும் படிவத்திற்கு சிறப்புப் பரிசு உண்டு.

சிறப்புப் போட்டி



இந்தியக் குடியுரிமை கேட்கும் சக்மா அகதிகள் மீது தாக்குதல்

கலாநிதி க. சோமஸ்கந்தன்

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் வெளியாருக்கு இடமில்லை என்ற நிலை உருவாகியுள்ளது. மிசோராம், மணிப்பூர், அசாம், அருணாச்சல் பிரதேசம் ஆகியவற்றில் வெளிமாநில வாசிகளை வெளியேற்றும் இயக்கம் முனைப்பாகச் செயற்படுகின்றது. வெளி மாநிலத்தவர் என்ற பதத்தில் இந்திய குடிமக்களும் அறுபதுகளில் பங்களாதேசத்திலிருந்து அகதிகளாக வந்து இந்தியாவில் குடியேறியவர்களும் அடங்குவர். இந்திய குடிமக்களை வெளியேற்றும் நடவடிக்கை மிகவும் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும். மத்திய அரசு நியமித்த அதிகாரிகள், மாநில அதிகாரிகள், இடைநிலை கடைநிலை அலுவலர்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். தொழில் நிமித்தம் இந்த மாநிலங்களுக்கு வந்து சேர்ந்தவர்களும், முதலீடு செய்துள்ள வர்த்தகர்களும் வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. புதுடில்லியிலுள்ள மத்திய அரசின் ஆளுமைத் திறன் சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது என்று சுருக்கமாகக் கூறலாம்.

1994 ஆம் ஆண்டு இந்தியாவும், பங்களாதேசமும் செய்த உடன்படிக்கைப் படி பங்களாதேசின் சக்மா இனத்தவர்கள் இந்தியாவை விடுத்து மீண்டும் சொந்த நாடு திரும்ப வகை செய்யப்பட்டுள்ளது. அவர்களுக்கு நாடு திரும்பும் ஊக்குவிப்புத் தொகையைக் கொடுக்க இந்தியா ஒத்துக் கொண்டுள்ளது. பங்களாதேசம் தனது பங்கிற்குத் திரும்புவோரை நல்ல முறையில் வரவேற்றுச் சொந்த இடங்களில் குடியேற உதவுவதாக உறுதியளித்துள்ளது. இதன் பிரகாரம் 5,000 சக்மா இன அகதிகள் நாடு திரும்பி உள்ளனர். இவர்களுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு திருப்தியாக அமையாத படியால் பெருந்தொகையான சக்மா அகதிகள் இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களில் இன்றும் உளர்.

பங்களாதேசம் கிழக்கு பாகிஸ்தானாக இருந்த காலத்திலேயே சக்மா மக்களின் தொல்லைகள் ஆரம்பமாகி விட்டன. பங்களாதேசம் கடல் மட்டத்தோடு ஒத்த சமதரைப் பூமி. அதன் வடக்கெல்லை ஒரத்திலும் தென்-மேற்குப் பகுதியிலும் சிறுமலைகளும், குன்றுகளும் காணப்படுகின்றன. பங்களாதேசத்தின் மிகப் பெரிய துறைமுகத்தையும், மலைப்பிரதேசத்தையும் அடக்கிய சித்தாகொங் மக்கள் செறிந்த வளமான பிரதேசமாகும். மேற்கூறிய துறைமுகம் சித்தாகொங் என்றழைக்கப்படுகிறது. இங்கும் சனத்தொகை மிகுதியாகக் காணப்படுகின்றது. பங்களாதேசத்தின் இரட்டைப் பிரச்சினைகள், நிலத் தட்டுப்பாடும் சனப்பெருக்கமும் என்று தெரிவிக்கப்படுகிறது.

சித்தாகொங் மலைப்பிரதேசத்தில் சக்மா இனப் பழங்குடியினர் பன்னெடுங் காலமாக வாழ்கின்றனர். முஸ்லிம்களைப் பெரும் பான்மையாகக் கொண்ட இந்த நாட்டில் அவர்கள் புத்த மதத்தையும் வித்தியாசமான பண்பாட்டு வெளிப்பாடுகளையும் உடையவர்கள். அவர்கள் வாழும் சித்தாகொங் மலைப் பகுதியில் பெறுமதிமிக்க மரங்களும், காட்டு யானை, புலி, றைனோசரஸ் போன்ற விலங்குகளும் காணப்படுகின்றன. இவர்களை விரட்டி விட்டு அவர்கள் வாழ்ந்த மண்ணைக் கைப்பற்றும் திட்டமொன்று நெடுங் காலமாகநடைமுறையில் உண்டு. அரசியல் வாதிகளும் இராணுவத்தினரும் இதன் பின்னணியில் உளர். தம்மை விரட்டி விட்டு வந்து குடியேறும் முஸ்லிம்களை எதிர்த்துப் போராடியும் அதில் அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. பெருந்தொகையானவர்கள் எல்லை நாடான இந்தியாவின் திரிபுரா மாநிலத்திற்கு அகதிகளாகச் சென்று விட்டனர்.

இந்திய மத்திய அரசு சக்மா இனத்தவர்களை முகலில் திரிபுராவின் அகதிமுகாம்களில் வைத்துப் பராமரித்த பின் அசாமிலும் 1987 இல் பிறிதொரு மாநிலமாக்கப்பட்ட அருணாச்சல் பிரதேசத்திலும் குடியேற அனுமதித்துள்ளனர். சக்மா இனத்தவர்கள் நல்ல உழைப்பாளிகள். தமது நிலையை உயர்த்துவதில் தேர்ந்தவர்கள். அருணாச்சலில் இன்று 80,000 சக்மா இனத்தவர்கள் வாழ்கின்ற

னர், முழுச் சனத்தொகையில் 8 சத வீதம் ஆவர். இவர்களுக்கு குடியுரிமை இல்லாதபடியால் மாநில அரசு இவர்களை வெளியேறும்படி பணித்துள்ளது. மாநில முதலமைச்சர் ஜீ.கொங் அபாங் காங்கிரஸ் கட்சியினராக இருந்தும் டில்லியை மீறி இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார். வெளியாரை வெளியேற்றும் குறியுடன் நிறுவப்பட்ட மாணவர் இயக்கத்திற்கு இவரு டைய ஆதரவு உண்டு.

சக்மா மக்கள் இந்தியாவின் தேசிய மனித உரிமை ஆணைக் குழுவிடம் தங்கள் பிரச்சனையை சமர்ப்பித்துள்ளனர். இதற்கிடையில் அருணாச்சல் மாநிலத்தை விட்டு அசாமில் புகும் சக்மா மக்களைத் தடுப்பதற்கு அசாம், கண்டவுடன் சுடும் சட்டத்தைப் பிறப்பித்துள்ளது. சக்மா இனத்தவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கும் நோக்கில் கூடுதலான துருப்புக்கள் அருணாச்சல் பிரதேசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இங்கு 12,000 திபெத்திய அகதிகளும் வாழ்கின்றனர். இவர்களுக்கும் இப்போது தொல்லைகள் ஆரம்பமாகியுள்ளன. 1995 ஆம் ஆண்டு தேர்தல்கள் வரவிருப்பதால் அபாங் மக்கள் ஆதரவைப் பெறுவதற்காக வெளியாரை வெளியேற்றும் நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

இந்தியாவின் வட-கிழக்கு மாநிலங்களை ஊன்றி நோக்குபவர்கள் ஒரு முக்கிய விடயத்தைக் கவனிக்கலாம். தமது வளத்தைப் பெருக்குவதற்கும், வெறும் நிலங்களை நிரப்புவதற்கும் இந்த மாநிலங்கள் 30 வருடங்களுக்கு முன் வெளியாரை வரவேற்றுக் குடியிருத்தியுள்ளன. இப்போது கூடின உழைப்பால் வெளியார் மேம்பாடு அடைவதைப் பொறுக்காதவர்கள் அவர்களை வெளியேற்றத் துணிந்துள்ளனர். தமது பிரச்சனைகளுக்கு ஒரே தீர்வு இந்தியக் குடியுரிமை தான் என்று சக்மா இனத்தவர் தீர்மானித்து அதற்குரிய விண்ணப்பங்களையும் மத்திய அரசுக்குச் செய்துள்ளனர். அவர்கள் மீது தாக்குதல்கள் கூடுவதற்கு இதுவும் ஒரு காரணம்.

:பார் ஸ்ரேன் எக்கணமிக் ரிவியூ
நவம்பர் 17, 1994

★

குழந்தைகளின் பாதுகாப்பு

சிசு மரணம் அல்லது குழந்தைகளின் சடுதி மரணம் அறிகுறி (Sudden Infant Death Syndrome) என்னும் நோய் வைத்தியர்களைத் திணறச்செய்து வருகிறது. அண்மைய காலங்களில் ஆய்வாளர்கள் குழந்தை நித்திரை செய்யும் நிலை இந்த நோய் ஏற்படுவதற்கான முக்கிய காரணி எனக் கண்டறிந்துள்ளனர். மூச்சுத் திணறலினால் ஏற்படக்கூடிய கஷ்டங்கள் பொதுவாகத் தெரிந்ததே, வயிற்றுப் பக்கமாக அல்லது முதுகுப் பக்கமாகக் குழந்தைகளைப் படுக்கவைக்கும் நிலை இந்த நோய் தோன்றுவதற்கான ஒரு முக்கிய காரணியாகும்.



இதிலிருந்து பாதுகாப்பு வழங்கும் பொருட்டு அதாவது குழந்தைகளைப் பக்கவாட்டிலேயே படுக்க வைப்பதற்கான ஒரு வழியை பிரிட்டனில் உள்ள எஸ். டபிள்யூ. ரான் அன்கோ (SW Tan & Co) நிறுவனம் அறிமுகப் படுத்தியிருக்கிறது. குழந்தைக்குப் பாதுகாப்பான தேவதை என்று இவ் அமைப்பிற்குப் பெயரிடப்பட்டுள்ளது. ஒன்றுக்கு ஒன்று பெரியதும் சிறியதுமான இரண்டு துண்டுகள் கொண்ட இவ் அமைப்பின் நடுவிலே குழந்தையைக் கிடத்திவிட்டால் குழந்தையின் அசைவுக்கு ஏற்ப அது தன்னை இசைவாக்கிக் கொள்ளும். எதேவேளை குழந்தை தொடர்ந்தும் பக்கவாட்டிலேயே படுத்திருப்பதை உறுதிப் படுத்திக் கொள்ளும். குழந்தைகள் பிறந்தது முதல் வளர வளரப் பயன்படுத்தக்கூடிய வகையில் இவ்அமைப்பு வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இதன் பெறுமதி சுமார் 35 அமெரிக்க டொலர் ஆகும்.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் கடத்தல்

இரண்டு மத்திய ஆசியக் குடியரசுகளின் செய்திகள்

கிர்கிஸ்தான் – கசாக்ஸ்தான்

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

1991 ஆம் ஆண்டு நிகழ்ந்த சோவியத் ருஷ்யாவின் மறைவுக்குப் பின் மத்திய ஆசியாவில் ஐந்து புதிய நாடுகள் உதயமாகியுள்ளன. இவை முன்னாள் சோவியத் ருஷ்யாவின் கிழக்கு ஆசிய நிலப்பரப்பின் ஒரு பகுதியாகும். துர்க்மென், உஸ்பெக், தட்சிக், கிர்கிஸ், கசாக் எனப்படும் இந்த ஐந்து நாடுகளும் கூட்டாக மத்திய ஆசியக் குடியரசுகள் என்றழைக்கப்படும். இவை நிலப்பரப்பைக் கூடுதலாகக் கொண்டிருந்தாலும். மக்கள் தொகை குறைவாக உள்ளவையாகும். வளம் குறைந்த மண்ணும், குளிர் மிகுந்த வரட்சியான காலநிலையுமே இதற்குக் காரணம். இந்த நாடுகள் யாவற்றிலும் மேற்குலக பாணி ஜனநாயகம் வேர்விட மறுத்துள்ளமை கண்கூடு. இங்கு ஜனநாயகப் பாரம்பரியம் காணப்படாததும் சோவியத் ருஷ்யாவின் அரசு முறைகள் இன்றும் ஏதோ ஒரு வ'தத்தில் பின்பற்றப்படுவதும் இதற்கு விளக்கமாக அமைகின்றன.

இந்த ஐந்து குடியரசுகளில் நான்கின் பொருளாதார நிலையும் மேம்பாடும் மிகமோசமாகக் காணப்படுகின்றன. உள்நாட்டுக் குழப்பங்களால் அவை சீரடையும் வாய்ப்புகள் குறைவாகக் காணப்படுகின்றன. கிர்கிஸ்தான் இதற்கோர் விதி விலக்கு. மேற்குச் சீனாவின் எல்லை நாடுகளாக கிர்கிஸ்

தான், கசாக்ஸ்தான் காணப்படுகின்றன. கிர்கிஸ், கசாக் நாட்டைப் போன்று பெருநிலமும், நிலத்தடியிலிருந்து எடுக்கக் கூடிய எண்ணெய் மற்றும் எரிவாயுவும் கொண்டதல்ல. இந்தச் சிறிய நாட்டில் மக்கள் தொகையிலும் ஆடுகளே கூடுதலாகக் காணப்படுகின்றன, எனினும் அண்மையில் இந்த நாட்டிற்கு விஜயம் செய்த உலக வங்கித் தலைவர் லுவிஸ் பிறெஸ்ரன், ''வளர்முக நாடுகள் யாவற்றிற்கும் இதுவொரு முன் உதாரணமாகும்'' எனத் தெரிவித்துள்ளார்.

ருஷ்யப் பொதுநலவாய நாடுகளில் (சி. ஐ. எஸ்.) வருவாய் வளர்ச்சியும், தொழில் ஏற்றமும் காட்டும் ஒரே நாடு இந்த 4 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட கிர்கிஸ் நாடுதான். 1991 இல் பணவீக்கம் 40 சத வீதமாக விருந்து இப்போது மிகக் குறைந்த அளவுக்கு இறங்கியுள்ளது. முன்னாள் கிர்கிஸ் விஞ்ஞானக் கழகத்தின் தலைவரும் இப்போது கிர்கிஸ் குடியரசின் ஜனாதிபதியுமான அஸ்கார் அகாயெவ் (ASKAR AKAYEV) அவர்களின் வழி நடத்தலில் இந்த நாடு சுமூகச் சூழ்நிலை அடைந்துள்ளது. 1991 ஆம் ஆண்டு சர்வதேச நாணய நிதியம் சிபாரிசு செய்த மூன்று விதக் கொள்கைகளையும் அவர் இறுக்கமாகப் பின்பற்றுகிறார். அவையாவன: சந்தைப் பொருளாதாரத்தை ஊக்குவித்தல், பணக்கட்டுப்பாடு, அரசு செலவுகளைக் குறைத்தல் என்பனவாம்.

கசாக்ஸ்தான்
தலைநகர்
அல்மா - அதா
பரப்பு
27,17,300 ச. கி. மீ
மக்கள் தொகை
1,70,48,000
மொழி
கசாக், ருஸ்பன், ஜேர்மன்
சமயம்
இஸ்லாம், கிறிஸ்தவம்
நாணயம்
ரூபிள்

கிர்கிஸ்தான்
தலைநகர்
புருன்ஸ்
பரப்பு
1,98,500 ச. கி. மீ
மக்கள் தொகை
45,18,000
மொழி
கிர்க்கீனி, ருஷ்யன்
நாணயம்
சோம்

வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு தமது பணத்தை கிர்கிஸ் நாட்டில் முதலீடு செய்ய இது வரையில் நம்பிக்கை வரவில்லை. அவர்களை வருவிக்க ஜனாதிபதி அகாயெவ் அவர்களின் நிதிக் கொள்கைகள் ஓரளவுக்கு உதவுகின்றன. மிகுதியான நான்கு குடியரசுகளில் நடந்தது போன்று அவர் எதிர்க்கட்சிகளைத் தடை செய்து ஒரு சர்வாதிகார ஆட்சி முறையை நிறுவ முயலவில்லை, அவர் வாக்காளரின் சார்புரியத்திலும், தனது பொருளாதார மதிநுட்பத்திலும் பெரும் நம்பிக்கை வைத்திருக்கிறார்.

எண்ணெய் இலாபம் இல்லாவிட்டாலும் கிர்கிஸ் மண்ணில் கனியங்களும் தாதுப் பொருள்களும் பெருமளவில் காணப்படுகின்றன, உலகின் மிகக் கூடுதலாகத் தங்கம் விளையும் நாடுகளில் கிர்கிஸ் ஏழாவது நிலையில் இருக்கிறது. ஆனால் இவற்றை வெளியில் எடுத்துச் சந்தைப்படுத்தத் தொழில் நுட்பமும் இதர வசதிகளும் அதனிடம் இல்லை. வெளியாரின் உதவி கட்டாயம் தேவைப்படுகிறது. அண்மையில் பாரிஸ் நகரில் நடந்த சர்வதேச முதலீட்டாளர் மாநாட்டில் கிர்கிஸ் நாட்டுப் பிரதிநிதிகள் வருகை தந்துள்ளனர். தமது நாட்டில் இஸ்திரத்தன்மையையும் முதலீடுகள் பாதுகாக்கப்படும் என்ற செய்தியையும், அவர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். பெரும் முதலீடுகள் சேராவிட்டால் கிர்கிஸ் நாட்டின் எதிர்காலம் சோபிக்காது என்பது திண்ணம்.

கிர்கிஸ் நாட்டிற்கு வடக்கிலிருக்கும் கசாக்ஸ்தான் கஸ்பியன் கடல்வரை நீடித்த மிகப் பெரிய நிலப்பரப்பாகும். இங்கு அப்பட்டமானதோர் சர்வாதிகார ஆட்சி நடைபெறுகிறது. திட்டமிடல், சந்தைப்படுத்தல், முகாமைத்துவம் போன்ற இன்றைய முன்னணி நாடுகளின் செயற்பாடுகள் அங்கு காணப்படவில்லை. நிலத்தடியில் காணப்படும் பெரும் எண்ணெய் வளம் நாட்டுயர்வுக்கு பயன்படுத்தப் படாமல் வீண் விரயமாகின்றது.

1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றிய வீழ்ச்சியின் விளைவாக சோவியத் அரசு மேற்கு கசாக் நாட்டின் சீன எல்லை ஒரமாகத் தனது அணு எரிபொருள் சுத்திகரிக்கும் நிலையத்தை உரிமை கோராமல் கையுதறி வீட்டுள்ளது. இங்கு 90 சத வீதம் சுத்திகரிக்கப்பட்ட 600 கிலோ அணு எரிபொருள் இவ்வாறு கசாக் நாட்டின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. இன்று சோவியத் ருஷ்யாவிலிருந்து உதிர்ந்த வேறு குடியரசுகளிலும் இவ்வாறான உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக் கூடிய அணுக்கரு காணப்படுகின்றது. இப்படியான வற்றை சந்தை விலை கொடுத்து வாங்கி அமெரிக்காவில் சேமித்து வைக்கும் திட்டமொன்றை செனேற்சபை அங்கத்தவர்களான சாம்னூன், பிச்சாட்லூகன் ஆகிய இருவரும் அமெரிக்க அரசு நிதியமாக நிறுவி உள்ளனர். இந்த நிதியத்தின் வைப்பிலுள்ள பணத்தைக் கொடுத்து வாங்குவதற்கு அமெரிக்க நிபுணர்கள் குழு பெப்ரவரி 94 இல் கசாக் சென்றுள்ளது. அணுக்கருவின் தரத்தையும் அவை பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த விதத்தையும் நோக்கிய நிபுணர்கள் அது அப்புறப்படுத்த வேண்டிய அவசியத்தை உணர்ந்துள்ளனர்.

அங்கு காணப்பட்ட அணுக்கரு 36 அணுகுண்டுகள் செய்யப் போதுமானவையாக இருந்தன. இதுபோன்ற தரமான பொருளைத் தேடி ஈரான், ஈராக் வர்த்தகப் பிரதிநிதிகள் முன்னாள் சோவியத் நாடுகளை வலம் வருவது யாவரும் அறிந்த தொன்றே. அமெரிக்கர்களும் கசாக் அரசும் பேரம் பேசியதில் திரவப் பணமாக 100 மில்லியன் டொலர் 600 கிலோ அணுக்கருவின் விலையாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பணத்தைக் கொடுத்துப் பொருளை அப்புறப்படுத்துவதற்குத் தடை ருஷ்ய அரசின் அனுமதி ஒன்றுதான். இது எளிதில் கிடைக்குமென்று அமெரிக்கா எதிர்பார்க்கவில்லை. ஆனால் ருஷ்யாவின் பதில் விந்தியாசமானது. ''எம்மிடம் போதுமானளவு உண்டு. எமக்கு அதில் அக்கறை இல்லை.''

சுமை கூலிப் பணமாகத் தேவைப்பட்ட 7 மில்லியன் டொலரைக் கிளின்ரன் வழங்கினார். மிகவும் இரகசியமாகத் திட்டமொன்று வகுக்கப்பட்டது. விமான மார்க்கமாகவே கொண்டு வருவது உசிதம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஒர் இராணுவ நடவடிக்கை போன்று நடத்த வேண்டிய இந்தக் கண்டம் விட்டுக் கண்டம் பாயும் நிகழ்ச்சிக்கு ஒப்பறேஷன் சபையர் என்றும் நாமம் இடப்பட்டது. ஒக்ரோபர் 07, 1994 அமெரிக்க விமானப் படைக்குச் சொந்தமான மூன்று சி 5 ரக இராட்சத பொதிசுமக்கும் விமானங்கள் கசாக் விமான நிலையமொன்றை நோக்கிப் பறந்தன.

மூன்று விமானங்களிலும் 29 ஆண்களும், 2 பெண்களும் சென்றனர். இதில் 25 விஞ்ஞானிகளும், தொழில் நுட்பவியலாளர்களும் அடங்குவர். ஒரு தொலைத் தொடர்பு நிபுணர், ஒரு வைத்திய அதிகாரி, நான்கு இராணுவ அதிகாரிகள், மூன்று ருஷ்ய மொழி தெரிந்த அமெரிக்கர்களும் கூடச் சென்றனர். அணுக்கரு பொதி செய்வதற்குரிய 500 வெள்ளை-இரும்புச் சாடிகள், ஒரு முழு அளவு

அணு விஞ்ஞான ஆய்வு கூடம் போன்றவையும் ஏற்றிச் செல்லப் பட்டன.

விமானத்தில் ஏற்றும் வேலைகள் மிக வேகமாக நடைபெற்றன. நவம்பர் பிற்பகுதி டிசம்பர் முற்பகுதியில் கசாக் பிரதேசத்தில் மூடுபனி ஆரம்பித்து விடும். அதன் பின் விமானம் கிளம்புவது இயலாது.

இந்தக் குழுவினருக்குத் தலைமை தாங்கிய 36 வயது அலெக்ஸ் நீடி சொல்கிறார்:'மிகவும் பாதுகாப்புக் குறைந்த சூழலில் 1,050 உருக்குப் பரல்களில் அணுக்கரு காணப்பட்டுள்ளன. இவற்றை வெளியில் எடுத்து நீர்ப் பசுமை போக்கி எமது பிப்பாக்களில் அடைப்பதில் நாளொன்றுக்கு 41 மணிகள் வேலை செய்தோம். வாரம் ஒன்றுக்கு ஒரு நாள் ஓய்வு எடுத்தோம். இவ்வாறு ஆறுமாதத்தில் செய்யும் வேலையை ஆறு வாரங்களில் செய்து முடித்தனர்' என.பனி விழும் முன்பாக நவம்பர்20 1994 இல் விமானங்கள் மூன்றும் கசாக் நாட்டை விட்டுக் கிளம்பின. மத்தியதரைக் கடல், அத்திலாந்திக் சமுத்திரம் ஆகியவற்றின் மேலால் ஓர் இடத்திலாவது நிறுத்தாமல் விமானங்கள் பறந்தன. கூடுதலான விமானிகள் சென்றபடியால் இது சாத்தியப்பட்டது. அத்துடன் வழியில் வேறு அமெரிக்க விமானங்கள் விண்ணில் இணைத்துத் திட்டப்படி எரிபொருள் நிரப்பின.

இப்படியான தோர், அதி இரகசியமான நடப்பு இரண்டாம் உலக யுத்தத்தின் பின் நடைபெறவில்லை என்று அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. இதுவும் ஒரு பாதுகாப்பு நடவடிக்கை தான் என்கிறார் ஓர் உயர் இராணுவ அதிகாரி. அவ்வாறான ஒரு சவாலாக ஏற்று இந்தச் சட்டபூர்வமான கடத்தலைச் செய்துள்ளோம். பெருஞ்சுமையோடு ஒரிடமாவது நிறுத்தாமல் 20 மணி பறந்ததே ஒரு சாதனை அல்லவா என்று அந்த அதிகாரி பெருமிதமாக வினவுகிறார்.

ஆதாரம்:-1நியூஸ்வீக் டிசெம்பர் 12, 1994
2.ரைம் டிசெம்பர் 05, 1994.

கணனித் திரையின் தொழிற்பாடும் கண்களுக்கு ஒரு வலி நிவாரணியும்

ஒரு'கொம்பியூட்டர்' கணனித் திரைக்கு முன்பாக நீண்ட நேரத்திற்குத் தொழிற் படுவதனால் கண்களுக்கு மிகுந்த வலி உண்டாகும் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. ஒளிக் கட்டுப்பாடு செய்யப்பட்ட திரைகளும், இருண்ட நிறங்களைக் கொண்ட மூக்குக் கண்ணாடியும் இந்த வலியைக் குறைக்க உதவக் கூடும். ஆனால், அதுவும் கண்களுக்கு வலி தோன்றுவதற்கு முன்பாக வேலை செய்யக்கூடிய நேரத்தை நீடிப்பதில் மட்டுமே பயன்தரக்கூடும்.

''மிக்சிகள், பகுதியிலுள்ள Ann Arbor நிறுவனத்தின் லியோனார்டோ விஷன் அமைப்பினர் அன்சியானோ என அழைக்கப்படும் ஒருவகைக் கண்ணாடியை அறிமுகப்படுத்தியுள்ளனர். இதிலே உள்ள வில்லைகள் ஒளிக் கதிர்களைத் திசைமாற்றம் செய்யக் கூடியதாகவும், அறை வெளிச்சத்தைக் கட்டுப்படுத்துவதாகவும் இருக்கிறது. அத்துடன் இவ்வில்லைகளில் இள நீலநிறம் கண்களுக்கு மிக ஆறுதலை அளிப்பதாகவும் இருக்கின்றது. இதே வேளை இது அதிகம் இருட்டைக் கொடுக்காததாகவும் உள்ளது. இந்த ''ஆங்கிறேறோ'' தயாரிப்பாளர்களின் இவ் உபகரணம் கணனித் திரையிலே ஒரு கணக்கான அளவில் தான் வெளிச்சத்தை மங்க வைக்கிறது.

கணனித் திரையில் தோன்றும் எழுத்துக்களையும், உருவங்களையும் பாரதூரமான அளவிற்கு இருட்டடிப்புச் செய்யாமல் வாசிக்கக் கூடிய அளவு வெளிச்சத்தில் வைத்திருக்கக் கூடியது என்று இதன் தயாரிப்பாளர்கள் கூறுகின்றனர். வேறு கண்ணாடிப் பிறேம்களிலும் பொருத்தக் கூடியதாகவும், கழற்றக்கூடியதாகவும் இவ் அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பெறுமதி சுமார் 35 டொலர் ஆகும்.

''கண்ணைத் திறந்து கொண்டு வேலை செய்யவே கணனிகளை இங்கு விடுகிறான்கள் இல்லை. இந்த லட்சணத்திலே இதுகளை வேற சொல்லி எங்கட வயிற்றெரிச்சலை இளப்பாமல் விடும்'' என்று உலக உலா வாசகர் ஒருவர் கூறுகிறார்.



அரச படைகளுடன் இணைந்த கமுறாச் போராளிகள் கல்வி பயில்கிறார்கள்.

அரசியல் வாதிகளும் அக்கினிக் குஞ்சுகளும்

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

தெற்கு ஆசியாவின் மிகப் புதிய ஜனநாயகம் என்ற பெயர் கம்போடியாவுக்கு உண்டு. தேர்தல்கள் நடந்து 18 மாதங்களாகி விட்டன. புத்தம் புதிய அரசமைப்பு விதிகள் அமுலாகி ஒரு வருடமாய் விட்டது. நாடு இன்னும் ஆற்றைக் கடக்கவில்லை. இருபது வருடங்களாக இடைவிடாது நடந்த யுத்தங்களின் தாக்கங்கள் இன்னும் மறையவில்லை. உள்நாட்டு யுத்தமும், குழப்பமும் இன்னும் காணப்படுகின்றன. நாடு எவற்றை நோக்கிச் செல்கிறது என்ற கேள்விக்கு விடையாக இக் கட்டுரை அமைகிறது. கம்போடியாவில் அரச மட்ட ஊழல் பெருகிவிட்டது. கட்டுப்பாட்டில் கொண்டுவர எத்தனித்த நிதிமந்திரி சாம்றெயின்சி பதவியிழந்தார். அவருடைய நண்பரான வெளிவிவகார அமைச்சரும் பதவி விலகியுள்ளார். மூன்று வெள்ளை யர்கள் பணயக் கைதிகளாகப் பிடிபட்டு உயிரிழந்துள்ளனர். ஆளுங் கட்சிகளுக் கிடையில் கடுமையான முரண்பாடு; ஆட்சி கவிழும் படியான வதந்திகள். 1996 ஆம் ஆண்டில் ஆசியான் அமைப்பில் கம்போடியா சேர்த்துக் கொள்ளப்படலாம். இராணுவம் தனக்குச் சொந்தமான சிறைக்கூடங்களில் மக்களைச் சித்திரவதை செய்கிறது. அரச பயங்கரவாதமும் கட்சி வன்முறையும் நிறைய உண்டு. இவ்வாறு மனித உரிமைக்குழு அறிக்கை.

முறையே 58, 51 இடங்களைப் பிடித்த அரச குடும்பத்தினர் தலைமை தாங்கும் புன்சின்பெக் கட்சியும், கம்போடிய மக்கள் கட்சியும் நாட்டைக் கூட்டாட்சி செய்கின்றன. புன்சின்பெக் தலைவர் நொரொதொம் ரனாரீத் முதலாவது பிரதமராகவும் கி. பி. பி. எனப்படும் கம்போடிய மக்கள் கட்சித் தலைவர் கூன்சென் இரண்டாவது பிரதமராகவும் பதவி வகிக்கின்றனர். தமக்கிடையில் நெருங்கிய ஒற்றுமை நிலவுவதாக இருவரும் தெரிவித்துள்ளனர். 120 அங்கத்தவர்கள் கொண்ட தேசிய ஆட்சி அரங்கில் இந்தக் கூட்டு மிகப் பலம் வாய்ந்ததாக இருக்கிறது. பிளவிற்குரிய அறிகுறி யொன்றையும் இப்போது காணோம்.

மாகாண ஆளுநர்களை புன்சின்பெக் நியமித்தாலும் காவல் துறை, இராணுவம், நிர்வாக சேவை போன்ற கட்டமைப்புக்கள் சி. பி. பி. யின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. கம்போடியாவில் வியற்நாமியர் ஆட்சி நிலவிய 1979-1991 காலப்பகுதியில் கூன் சென் அவர்களின் கட்சி வேறு பெயரில் ஆட்சிப் பொறுப்பில் இருந்துள்ளதே காரணம். சிலருடைய கணிப்பில் முதலாவது பிரதமர் அதிகாரம் குறைந்தவராகக் காணப்படுகிறார். "அவர் நினைத்தவாறு உயர் பதவிக்கு ஒருவரை நியமிக்க அல்லது பதவி நீக்க அவரால் முடியாது" என்கிறார் ஒரு பத்திரிகையாளர். அண்மைக் காலத்தில் இரு பிரதமர்களும் வெகு கிரமமாகக் கிராமப் புறங்களுக்கு உத்தியோகபூர்வமாகச் சென்று வருவதை அவதானிக்கலாம். கிராம மக்களின் வாழ்க்கை நிலை படுமோசமாக இருக்கிறது. கொள்ளைக் கூட்டங்களும், கமறூச் இயக்கத்தினரும் அவர்கள் வாழ்வைச் சீராக்குகின்றனர். "புதிய அரசு நிறுவப்பட்டதிற்கு ஆதாரமாக அவர்களுக்கு ஒரு நன்மையும் கிடைக்கவில்லை" என்கிறார் ஒரு மேற்குலக இராஜதந்திரி.

அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கிராம அபிவிருத்தியில் அரசு அக்கறை காட்டவில்லை என்ற குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளன. தனது குறுகிய கால நலனில் அரசு கவனமாய் இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர். கிராமப்புறம் அபிவிருத்தியடையாமல் இருப்பதைக் கமறூச் வரவேற்கிறது. மக்கள் கொதிப்படைந்தால் தம் பக்கம்

> **"ஒருவனாய் வந்தால் திருடன், ஒன்பது பத்தாய் வந்தால் கொள்ளைக் கூட்டம், நூற்றுக்கணக்காய் வந்தால் அரசியற்கட்சி."**

சாய்வர் என்பது அதன் கணிப்பு. புரட்சி கிராமங்களில் தொடங்கி தலைநகரை அடைய வேண்டும் என்பது மாவோவின் சித்தாந்தம். இதைக் கமறூச் இயக்கம் நம்புகிறது.

கம்போடியாவின் வட மேற்குப் புறத்தின் சில பகுதிகளை கமறூச் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறது. தாய்லாந்து எல்லையைச் சார்ந்த பிரதேசம் இதுவாகும். மூத்த அரசர் சிகானூக் அவர்கள் கமறூச் இயக்கத்தையும் இணைத்து தேசிய அரசை நிறுவ நினைத்தார். ஆனால், கமறூச் இயக்கத்தின் குறி ஆட்சியைக் கைப்பற்றுவதாக இருக்கையில் இது சாத்தியப்படாது. இரு பிரதமர்களும் மூத்த அரசரின் யோசனையை நிராகரித்துள்ளனர். கூன் சென் கமறூச் இயக்கத்தின் பரம வைரியாவார். ஜூலை 94 இல் கமறூச் இயக்கத்தைத் தடைசெய்யும் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஒவ்வொரு வருடமும் கோடை காலத்தில் கமறூச் இயக்கத்தினரின் நிலைகள் மீது அரச படைகள் தாக்குதல் நடத்தும் வழக்கம் உண்டு. புதிதாக நியமனம் பெற்றுள்ள வெளிவிவகார அமைச்சர் உங்குயோட் அரசின் புதிய திட்டத்தை வெளிப்படுத்தியுள்ளார். ''எதிர்வரும் கோடையில் பாரிய தாக்குதல் ஒன்றும் நடைபெறாது. இரண்டு பிரதமர்களும் இதில் திடமாகியுள்ளனர்.'' சிறிய குறுகிய காலத்தாக்குதல்களை நடத்தி கமறூச் இயக்கத்தைக் குறிப்பிட்ட எல்லைக்குள் மடக்கி வைப்பதே புதிய யுக்தி. கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் அதற்கான அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கிச் செயற்படுத்துவதிலும் அரசு கவனஞ் செலுத்தும் என்கிறார் அமைச்சர் குயோட்.

சுற்றுலாத்துறை அமைச்சர் வெனங் இன்றைய கம்போடியாவை 30 வருடங்களுக்கு முன் இருந்த மலேசியாவுடன் ஒப்பிடுகிறார். அன்று அந்த நாட்டின் பல பகுதிகளைக் கொம்யூனிஸ்ட்டுகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். எங்கும் அவர்கள் ஊடுருவி இருந்தனர். மலேசியா போன்று நாமும் கிராமப்புறத்தின் பொருளாதார முன்னேற்றத்தில் கவனஞ் செலுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதால் பெரும் நன்மை பெறலாம். மக்கள் எம் பக்கமென்றால் கமறூச் இயக்கம் தனித்து விடும், தானே அழிந்து விடும் என்கிறார் வெங். எமது முன்னேற்றப்பாதை மலேசியா, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகியவற்றைப் போன்று இருக்கும் என்றெல்லாம் அவர் ஒயாது கூறுகிறார்.

கமறூச் இயக்கத்திலிருந்து பிரிந்து வந்து அரச படைகளுடன் சேருவோர் எண்ணிக்கை அண்மையில் கூடியுள்ளது. 3 வெள்ளையர்கள் கொல்லப்பட்டதற்குப் பதிலடியாக நடந்த தாக்குதல்களில் இவர்கள் வழிகாட்டியதுடன் அரச படைகளுடன் இணைந்து போரிட்டுள்ளனர். கமறூச் இயக்கத்தினரின் கட்டுப்பாட்டிலிருக்கும் படை வடமேற்குப் பகுதி மீது தாம் நன்கு திட்டமிட்டுப் போடும் அபிவிருத்திக் குண்டுகள் நல்ல பயன் தருவதாக அரசு தெரிவிக்கின்றது. இந்த இலக்குடன் அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஜப்பான், அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் வேறு சில நாடுகளும் 1994—95 ஆம் வருடத்திற்கு 777 மில்லியன் டொலர் உதவித் தொகையைக் கொடுக்கிறார்கள். சர்வதேச நாணய நிதியமும் 120 மில்லியன் டொலர் கடனுதவியைக் கம்போடியாவுக்குக் கொடுக்கிறது.

50 வயதினரான முதலாவது பிரதமர் இளவரசர் நொரொதொம் றனாரீத் அவர்களுடன் ஒரு நேர்காணல்

கே: கம்போடியாவின் அத்தியாவசியத் தேவைகள் என்ன?

ப: முதலாவதாக எமது நாட்டிற்கு அமைதி தேவை. இரண்டாவதாக சட்டமும், அதற்கு மதிப்பும், சமுதாய ஒழுங்கும் தேவை. மூன்றாவதாக வெளிநாட்டு முதலீடுகள் நிறையத் தேவை. வறுமை ஒழிப்பு எமது மிகப்பெரிய பிரச்சினை.

கே: மந்திரி சபை மாற்றங்கள் பற்றி?

ப: எமக்குத் தனிக்கெட்டித் தனம் வேண்டாம். ஒற்றுமையாக ஒருமித்து இயங்குவதையே நாம் விரும்புகிறோம்.

கே: உங்கள் நாட்டில் பெரும் ஊழல் நிலவுகிறதே?

ப: இது உண்மை. ஆசியாவுக்கே இது பொதுவானதாகும். அறுபதுகளில், சிங்கப்பூரில் நிலவவில்லையா? மக்களின் வாழ்க்கைத்தரம் உயர நிலைமை ஓரளவுக்குக் கட்டுப்பாட்டில் வரும்.

கே: கமறூச் இயக்கத்திற்குத் தாய்லாந்து புகலிடம் வழங்குவது பற்றி?

ப: நான் எத்தனையோ முறை சொல்லி விட்டேன், அவர்கள் உதவி வழங்கவில்லை என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள், செவிடர்களுடன் பேசுவது நல்ல பலன்தரும். பொல்பொட் எங்கிருக்கிறார் என்றும் எமக்குத் தெரியும். கமறூச் போராளிகள் ஓய்வு பெறுவது தாய்லாந்தில் தான். அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சரும் இதையே அண்மையில் கூறினார். தாய்லாந்து அரசும், இராணுவமும் அவுஸ்திரேலியாவைத் திட்டினார்கள். அவர்கள் எல்லையை அடைக்கிற மாதிரி அடைத்தபின் திறந்தும் விடுகிறார்கள். இந்த உதவி இல்லாவிட்டால் எமது நாட்டைச் சீராக்க எம்மால் முடியும்.

தங்களுடைய அதிவேகத் திட்டங்கள் மூன்றிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் பயன்தருமென அரசு தெரிவித்துள்ளது. அவர்கள் தொழில் வளத்தைப் பெருக்க வேண்டியது அவசியம். 1960 ஆம் ஆண்டு தொடக்கம் அந்த நாட்டில் ரயர், சிமெந்து, எண்ணெய் சுத்திகரிப்பு என மூன்று தொழிற்சாலைகள் இயங்குகின்றன. போர் உச்சக் கட்டம் அடைந்தபோது அவை மூடப்பட்டன. இப்போது மீண்டும் தொழிற்படுகின்றன. கடலோரப்பகுதிகளில் எண்ணெய் வளம் உண்டு. சர்வதேச நிறுவனங்கள் அரசின் அனுமதியுடன் வெளிக் கொணரும் வேலையை ஆரம்பித்துள்ளன. விவசாயத்தை நம்பித் தான் இந்த நாட்டு மக்கள் வாழ்கின்றனர்.

சுற்றுலாத் துறையால் கம்போடியாவுக்கு நிறைய வருமானம் உண்டு. அமைச்சர் வெங் தனது நாட்டிற்கு வருவோருக்கு ஆலோசனை கூறுகிறார்: ''நான்முகனுக்கு எழுப்பப்பட்ட அன்கோர் வாற் போன்ற கலைச் செல்வங்களைப் பார்க்க வரும் பயணிகளே, மிதிவண்டியில் சுற்றிப்பார்க்கக் இளம் பாதிர். எமது நாடு அந்தளவு முன்னேறவில்லை? உங்கள் பாதுகாப்புக்காகச் சொல்கிறோம். பொதுப் போக்குவரத்தைப் பாவியுங்கள். குழுக்களாக உலாவுங்கள். எங்கள் நாட்டில் பணக் கஷ்டம், ஊழல் எல்லா மட்டத்திலும் உண்டு, இங்கும் அவதானமாயிருங்கள்'' என்பதாகு.

ஏசியா வீக், நவம்பர் 30, 1994

★

ஆசியா

150 வருடங்களுக்கு

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

ஐப்பத்தையாயிரம் சதுரமைல் நிலப்பரப்பைக் கொண்ட போர்த்துக்கல் ஐரோப்பாவின் தென்-மேற்கில் அத்திலாந்திக் சமுத்திரத்தை மேற்கெல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. 500 வருடங்களுக்கு மேலாகப் போர்த்துக்கல் திரை கடல் ஓடி ஆபிரிக்கா, ஆசியா, தென் அமெரிக்கா போன்ற நாடுகளில் பல காலனிகளை ஏற்படுத்தியுள்ளது. ஒரு காலத்தில் மிகப் பெரியதும், செல்வம் மிக்கதுமான இச்சாம்ராச்சியம் இன்று சுருங்கி விட்டது. ஐரோப்பாவின் மிக வறிய நாடுகளில் ஒன்றாகப் போர்த்துக்கல் கணிக்கப்படுகிறது. அவுஸ்திரேலியாவின் வடபுறத்தில் காணப்படும் திமோர் தீவின் கிழக்குப் பகுதியைப் போர்த்துக்கல் 1859 ஆம் ஆண்டு தொடக்கம் ஆட்சி செய்துவந்துள்ளது. றோமன் கத்தோலிக்க மதத்தையும், தன் மொழியையும், பண்பாட்டு வெளிப்பாடுகளையும் இப்பகுதியில் போர்த்துக்கல் புகுத்தியுள்ளது. இப்போது இந்தோனேசியாவாக இருக்கும் பெருந்தொகைத் தீவுகள் இரண்டாம் உலக யுத்தம் வரை இன்னுமோர் ஐரோப்பிய நாடான ஒல்லாந்தின் (Holland) கிழக்கு இந்திய சாம்ராச்சியமாக இருந்துள்ளது. ஜப்பானின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாது வெளியேறிய டச்சுக்காரர்கள் ஜப்பானின் தோல்விக்குப்பின் மீண்டும் இந்தோனேசியத் தீவுகளைக் கைப்பற்ற இயலாமல் போய்விட்டது. இதன் காரணமாக இந்தோனேசியா விடுதலையாகி 1949 ஆம் ஆண்டு ஐநா அங்கீகாரம் பெற்ற தனி நாடாக இடம் பிடித்துள்ளது.

மேற்கு திமோர் இந்தோனேசியாவுக்குக் கிடைத்த போது கிழக்கு திமோர் மீண்டும் போர்த்துக்கேயரின் ஆட்சியின் கீழ் சென்றுள்ளது. கிழக்கு திமோரையும் தனது பிடியில் கொண்டு வருவது இந்தோனேசிய அரசின் திட்டமாகும். இரியன் என்ற பெயருடன் திமோர் தீவின் கிழக்கில் அமைந்த நியூகினியின் மேற்குப்பாதி இந்தோனேசியாவின் கிழக்கு எல்லையாக இருக்கும் போது நடுவில் போர்த்துக்கேயக் காலனியாகக் கிழக்கு திமோர் இருப்பதை இந்தோனேசியா விரும்பவில்லை. போர்த்துக்கேயரை வெளியேற்ற இந்தோனேசியா தனது படைகளைத் தயார் நிலைக்குக் கொண்டு வந்த போது போர்த்துக்கல் 1975 ஆம் ஆண்டளவில் திடீரெனத் திமோரை விட்டு வெளியேறியுள்ளது.

கிழக்கு திமோர் மக்கள் தாம் வேறு இனத்தவர் என்ற அடிப்படையில் இந்தோனேசிய ஆட்சியை ஏற்க மறுத்துள்ளனர். இதுவரையில் ஐநாவும் இந்தோனேசிய நடவடிக்கைக்கு ஒப்புதல் வழங்க மறுத்துள்ளது. விடுதலை வேண்டி நின்ற கிழக்கு திமோர் மக்களுக்குத் தலைமை தாங்கப் பல இளைஞர் அணிகள் முன்வந்தன. இவர்கள் இந்தோனேசியா இப்பகுதிக்கு அனுப்பிவைத்த இராணுவத்துடன் மோதுவதோடு கூடுதல் நேரத்தை ஒருவரை ஒருவர் அழிப்பதில் ஈடுபட்டுள்ளனர் உலகின் கவனத்தைப் பெற்ற கிழக்கு திமோரின் பெரெற்றிலின் (Fretilin) விடுதலை இயக்கம் டிசம்பர் 1975 அளவில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாற்று இயக்கத்தினரைக் கொன்றுள்ளது. பக்கச் சார்பற்ற பார்வையாளர்களின் கணிப்பில் ஐந்து குழுக்கள் ஆரம்ப காலத்தில் செயற்பட்டன வென்றும் ஐவரும் மக்கள் யாபேருக்கும் தங்கள் குழுவின் அடையாள அட்டைகளை விநியோகம்

மேற்பட்ட கிழக்கு திமோர் வரலாறு

செய்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தமது அடையாள அட்டைகளை வைத்திராதவர்களை :பெற்றிலின் கொன்று குவித்ததாக விளக்கம் கொடுக்கப்படுகிறது.

கிழக்கு-திமோர் வாழ் 750, 000 மக்களின் தனிக்குரலாக :பெற்றிலின் இயக்கத்தை ஐநா தெரிவு செய்தாலும் தளநிலை வித்தியாசமாக இருக்கிறது. இவர்கள் மக்களின் வெறுப்பைச் சம்பாதிப்பதில் பெரும் வெற்றி கொண்டுள்ளனர். மக்களைச் சுரண்டுதல், நகுந்த காரணமின்றிக் கொலைத் தண்டனை கொடுத்தல் போன்றவை காரணங்களாகும். இவர்கள் ஆயுதம் சேகரித்துப் பொது எதிரியுடன் போராடுவதில் அக்கறை காட்டவில்லை என்பதே பெரும்பாலான அவதானிகளின் கருத்து. பேரணி நடத்துதல், மாநாட்டு முன்றலில் கூச்சலிடுதல், பதாகைகள், கட்டுதல் அறிக்கைகள் விடுதல் போன்ற ஆரம்ப நிலைக்குப் போராட்டம் திரும்பியுள்ளது.

தென்-கிழக்கு ஆசியாவின் மிகப் பெரிய முப்படை இந்தோனேசியாவிடம் உண்டு. கிழக்கு திமோர் மீதான இராணுவத்தின் பிடி மிக இறுக்கமானது. ஆரம்ப காலத்தில் கொடூரமான வன்முறைகளைச் செய்த இராணுவத்தினர் இப்போது ஆட்சியாளர்களின் வழி நடத்தலில் தமது நடை முறைகளை மாற்றி அமைத்துள்ளனர். இந்தோனேசிய அரசு தனது வேறு பிரதேசங்களில் செய்யாத அபிவிருத்தித் திட்டங்களை இங்கு செயற்படுத்துகின்றன. கல்லூரிகள், நெடுஞ்சாலைகள், மின்சார நிலையங்கள், மருத்துவமனைகள் பெருஞ் செலவில் துரித கதியில் அமைக்கப்படுகின்றன. இதனால் எதிர்ப்புணர்வில் வீழ்ச்சி ஏற்பட்டதுடன் மக்களின் ஒரு சாரார் இராணுவத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவும்

கலகம் அடக்கும் பொலிசார்

தலைப்பட்டுள்ளனர். :பெற்றிலின் ஒரு பொருட்டாக மதிக்கப்படுவதில்லை. ஒரு சிலர் உலாவுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. தாம் கிழக்கு திமோரில் தங்குவதற்கு ஒரு நகுந்த காரணம் வேண்டுமென்பதற்காகவே இராணுவம் இ[illegible]விட்டு வைத்திருக்கிறது. இவ்வாறு பத்திரிகையாளர்கள் விளக்கம் கூறுகின்றனர்.

கிழக்கு திமோரை இந்தோனேசியா தன் பிடியில் கொண்டு வந்து 19 வருடங்கள் சென்றுவிட்டன. சிறிதும் பெரிதுமாக 13, 677 தீவுகள் கொண்டதே இந்தோனேசியா. இத்தனை தீவுகளையும் நிர்வாக நோக்கில் அரசு 26 மாகாணங்களாக வகுத்துள்ளது. கிழக்கு திமோரை 27 ஆம் மாகாணமாக நிர்வாக சேவையினர் குறிப்பிடுகின்றனர், 1975 ஆம் ஆண்டு தொட்டு இதுவரை ஓர் இலட்சம் உயிர்கள் பலியாகியுள்ளன. சில மிகவும் நம்பத்தகுந்த பார்வையாளர்களின் கணிப்பில் உயிரிழப்பு இன்னுமொரு மடங்கு கூடுதலாக இருக்கலாம். 1991 ஆம் ஆண்டு பிரேத அடக்கத்துடன் சேர்ந்த ஊர்வலம் ஒன்றின் மீது இராணுவம் சுட்டதில் 100 பொது மக்கள் இறந்துள்ளனர். 1976—1990 காலப் பகுதியில் இந்தோனேசிய இராணுவம் 10,000 துருப்புக்களை இழந்துள்ளது. அதன்பின் அவர்கள் பக்கத்தில் இறப்புக்கள் மிகக்குறைவு. போராளிகள் ஒரங்கட்டப் படுவதோடு, தாக்குதல் வலுவிழந்து விட்டனர் என்பது மிகப் பொருத்தம்.

இராணுவத்தின் கையோங்கி விட்டது என்று சொல்லும்போது படைபலம் மாத்திரம் குறிப்பிடப் படவில்லை. இராணுவத்தின் தயவில் சீலனம் நடத்தும் ஒரு வர்க்கம் கிழக்கு திமோரில் உண்டாக்கப் பட்டுள்ளது. இவர்கள் இராணுவத்தின் கண்ணும், காதுமாகச் செயற்படுகின்றனர். மாதமொன்றுக்கு 12 டொலர் ஊதியமாகப் பெற்றுக் கொண்டு மக்கள் மத்தியில் நடப்பவை யாவற்றையும் இராணுவத்தின் புலனாய்வுத்துறைக்கு ஒப்படைப்பதே இவர்கள் பணி. அத்துடன் கிழக்கு திமோரின் ஏற்றுமதிப் பொருளாதாரம் இராணுவத்தினரின் முழுப் பொறுப்பில் வந்துள்ளது. கோப்பிக் கொட்டை, சந்தனமரம் போன்றவற்றால் 1992 ஆம் ஆண்டு இராணுவத்திற்கு 7.7 மில்லியன் டொலர் இலாபம் கிடைத்துள்ளது. அண்டிப்பிழைக்கும் மக்களும் இத்தோடு உருவாகியுள்ளனர். பெருந் தொகையான வெளிமாகாண வர்த்தகர்களையும் கிழக்கு திமோரில் குடியேற இராணுவம் அனுமதித்துள்ளது. இவர்கள் வருகையால் மக்கள் மத்தியில் கசப்புணர்வு நிலவுவதில் அதிசயமில்லை.

இளைஞர்களுக்குப் பணம் கொடுத்துப் பேரணி விடும் தந்திரத்தையும் இராணுவம் கையாளத் தொடங்கியுள்ளது. அண்மையில், தன்னாட்சி கோரி தலைநகர் டில்லியில் கிளம்பிய ஊர்வலத்தை இராணுவத்தினர் தமது போட்டி ஊர்வலம் மூலம் சிதறடித்துள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட தன்னாட்சி கொடுப்பது பற்றி ஒரு காலத்தில் சிந்தித்த ஆட்சியாளர்கள் இப்போது முற்றாக மறுத்துள்ளனர். இது இராணுவ நடவடிக்கைகளின் வெற்றியை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது. மக்கள் மத்தியிலும் சமரசம், ஒத்துப்போதல் போன்ற எண்ணங்கள் பெரும்பாலாகக் காணப்படுகின்றன. இது தோல்வி மனப்பான்மையின் வெளிப்பாடு. கிழக்கு திமோர் மக்களுக்கும், அவர்களுடைய அபிலாசைகளுக்கும் வெளி உலகில் நிறைய அனுதாபம் உண்டு அவ்வளவுதான்.

தன்பலம் இல்லாப் போராட்டம் வீண் என்பது வரலாறு

அண்மையில் ஆசிய – பசுபிக் பிராந்திய நாடுகளின் பொருளாதார மாநாடு இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடந்த வேளை 29 இளம் கிழக்கு திமோர் வாசிகள் அமெரிக்கத் தூதரக வளாகத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்துள்ளனர். அவர்கள் விடுத்த கோரிக்கை பின்வருமாறு: ''சிறையில் இருக்கும் எமது தலைவரை விடுதலை செய்யுங்கள், தன்னாட்சி வழங்கும்படி அரசுக்கு அழுத்தங் கொடுங்கள்.'' மாநாடு முடிந்த பின் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன், இந்தோனேசிய ஜனாதிபதி சுகார்த்தோ ஆகியோரின் சந்திப்பில் கிழக்கு திமோருக்குக் கூடுதல் தன்னாட்சி வழங்கும்படி கிளின்ரன் கேட்டுக் கொண்டார். இந்தோனேசியத் தலைவர் சந்தேகத்திற்கிடமின்றி இதை நிராகரித்துள்ளார்.

அமெரிக்க-இந்தோனேசிய நல்லுறவு இதனால் பாதிக்கப்படவில்லை. மறுப்புத் தெரிவிக்கப்பட்ட அதே நாளில் 35 மில்லியன் டொலர் பெறுமதி நிலத்தடியிலிருந்து எண்ணெய் வெளிக் கொணரும் இருநாட்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுள்ளது. தெற்கு ஆசியாவின் எண்ணெய் வரலாற்றில் இது போன்ற பாரிய உடன்படிக்கை இது வரையில் செய்யப்படவில்லை. இத் தொகை போர்த்துக்கல் நாட்டின் வருடாந்த வருவாயிலும் கூடியதாகும். இதைத் தொடர்ந்து 17 வர்த்தக ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கும் இடையில் உடன்பாடாகி உள்ளன. கிழக்கு திமோர் மக்களுக்குத் தார்மிக ஆதரவு வழங்குவதை விடுத்து போர்த்துக்கலும் இந்தோனேசியாவுடன் ஒப்பந்தஞ் செய்ய முன்வரலாம்.

காலத்திற்குக் காலம் கிழக்கு திமோர் நடப்புக்கள் பரபரப்பான செய்திகளாக மாறினாலும் போராட்டம் ஒருவித முன்னேற்றமும் அடையவில்லை என்று துணிந்து கூறலாம். அமெரிக்கத் தூதரக வளாகத்தினுள் புகுந்து கலகம் விளைவித்த அனைவருக்கும் போர்த்துக்கலில் புகலிடம் கிடைத்துள்ளது. பத்திரிகையாளர்களை நோக்கி இந்தோனேசிய ஜனாதிபதி சொன்னார்: ''தன்னாட்சி விரும்புவோர் எல்லாம் இப்படி வெளியேறினால் நான் மகிழ்ச்சி அடைவேன்'' என்பதாக.

ஆதாரம்:

1. ஏசியா வீக், டிசெம்பர் 7, 1994.
2. ரைம், டிசெம்பர் 12, 1994.

புலியை வெல்லும் மிதிவண்டி

1993 ஆம் ஆண்டில் மிதிவண்டியிற் பெறப்பட்ட ஆகக்கூடுதல் வேகம், ஒரு மணித்தியாலத்திற்கு 68.73 மைல் என்ற செய்தி, எம் போன்ற இரண்டு சில்லு மிதிவண்டிப் பிரியர்களுக்கு இனிப்பான தகவல். ஒரு சீற்றா (Cheetah) இனப் புலியின் வேகம், மணித்தியாலத்திற்கு 68 மைல் என்று கண்க்கிடப்பட்டுள்ளது. சீற்றா என்ற பெயருடன், ஒரு சைக்கிள் அமெரிக்காவில் தயாரிக்கப்பட்டு, வேகப் பரீட்சை பார்க்கப்பட்டுள்ளது. படத்திற் காட்டியது போல், இந்த வண்டி மேல், கண்ணாடி இழையிற் செய்யப்பட்ட காற்று உதைப்புக் குறைந்த மூடியொன்று பொருத்தப்பட்டிருக்கும். இதிற் சவாரி செய்பவர், நிமிர்ந்திராமல் ஒரு விதத்திற் படுத்திருந்தே மிதிக்கவேண்டும். அண்மையில், இதிற் பெறப்பட்ட 68.73 மைல் வேகம், உலக சாதனையென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது இந்தச் சைக்கிளுக்கும் ''சீற்றா'' எனப் பெயரிடப்பட்டமை மிகவும் பொருத்தமே.

எப்படி ஓடினாலும், விழுகுகளைக் கட்டிக் கொண்டு சாவகச்சேரி வீதியால் இது ஓடுமோ? என்று, ஒரு சைக்கிள் வியாபாரி கேட்கிறார்.

ஆசிய - பசுபிக் பொருளாதாரக் கூட்டுறவு

தமிழில்: திரு. சொக்கன்

கடந்த மாதம் இந்தோனேசியாவில் இடம்பெற்ற ஆசிய-பசுபிக் பொருளாதார அமைப்பின் APEC உச்சிமாநாட்டுக் கருத்தரங்கில் 18 நாட்டுத் தலைவர்கள் கலந்து கொண்டார்கள். 2020 ஆம் ஆண்டில் APEC 2.2 பில்லியன் நுகர்வோரையும், உற்பத்தியாளரையும் உள்ளடக்குவதும் உலக வர்த்தகத்தில் 41 சதவீதத்தை ஏற்கனவே தன்னகத்தே கொண்டதை மேலும் விரிவாக்குவதும் இக்கருத்தரங்கின் நோக்கமாகும். இந்தோனேசியாவின் போகர் எனும் பழைமை வாய்ந்த இடத்தில் இந்த மகாநாட்டுப் பிரகடனமானது போதிய தெளிவையோ, சட்டவரம்பையோ பெற்றிருக்கவில்லை. அது முன்வைத்துள்ள பொர்சுகள் கணிசமான அளவு கூடிய செயற்பாட்டையும், பாரிய அரசியல் ரீதியான உறுதிப்பாட்டையும் வேண்டி நிற்கிறது. எது எப்படியோ இக் கருத்தரங்கில் கலந்து கொண்ட தலைவர்கள் 1995 இல் ஜப்பான் ஒசாகாவில் மீண்டும் சந்திப்பர் என்பது உறுதியாகி விட்டது.

1989 இல் சீற்றிலுக்கு அண்மையிலுள்ள பிளேக் தீவில் கிளின்ரன் கூடிய மாநாட்டில், அவுஸ்திரேலியப் பிரதமர் சுதந்திரப் பொருளாதாரம் இயங்கு விசை வெற்றி பெற்றுள்ளதாக முடிவு கட்டினார். இவ் விடயத்தைக் கிளின்ரன் உறுதியாக நம்புகிறார். இதனால் விலைப்பட்டியல் மூலம் விலைக்குறைப்புக்களை எடுத்துக் காட்டும் முயற்சிகள் இடம்பெற்றன. போகர் மாநாட்டில் கலந்து கொள்ளாத கடும் போக்கானவர்களை இந்தோனேசிய ஜனாதிபதி சுஹார்ட்டோ வற்புறுத்தி வரவழைத்துள்ளார். இவற்றையெல்லாம் அவதானித்த கிளின்ரன் சுஹார்ட்டோ இல்லாமல் 2020 இலக்கை அடைய முடியாது என்று கூறினார். சுதந்திர வர்த்தகத்திற்கு விரிவான தொரு செயல் திட்ட அறிக்கையை உருவாக்குவது அவசியமானது என்பதையும் கிளின்ரன் உணர்ந்துள்ளார்.

பசுபிக் சுற்றுவட்டத்தின் மற்றைய நாடுகளைப் பொறுத்தவரை போகரின் தீர்மானம் இரு முனைப்பான கருத்துகளுக்கு இடம் தருகின்றது. APEC உலகிலேயே மிக விரைவாக வளர்ச்சி கண்டு வரும் பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். அதன் உயிர் நாடி வர்த்தகந்தான். ஆனால் சுதந்திர வர்த்தகம் அதற்கு அவசியமானது என்பதில்லை. சுதந்திரத் துறைமுகங்களைக் கொண்ட ஹொங்கொங்கையும், சிங்கப்பூரையுந் தவிர்ந்த ஆசிய அரசுகள் ஏற்றுமதியை முன்னேற்றும் ஜப்பான், தென்கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளும் வர்த்தகப் போட்டியிடுவதில் குறைவான இடத்தில் இல்லை என்பது நிச்சயம். சீனா பெரும் ஏற்றுமதி நாடாகையாலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் வெவ்வேறான இறக்குமதி நிலவும் அந்நாட்டில் சுதந்திர வர்த்தகத்தை மேற்கொள்வது எளிதன்று.

இந்தோனேசியாவும், தாய்லாந்தும், மலேசியாவும் உள் நாட்டு உற்பத்திகளை மிக உயர்ந்த முறையில் பாதுகாத்து வந்தவை. அவை இறக்குமதி வர்த்தகத்திலே போட்டியிடும் நிலையில் இல்லை. உண்மையைச் சொல்வதானால் ஒவ்வோர் ஆசிய நாடும் தனது கைத்தொழில்களைச் சரிசெய்வதில் விரைவாக ஈடுபடுதல் வேண்டும், அல்லது உடனடியாக வரிகளைக் கைவிடுதல் வேண்டும்.

APEC பசுபிக் சுற்றுவட்டத்தினைச் சுதந்திர வர்த்தக வலயமாகச் செய்வது, அடுத்த ஆண்டில் அதன் வரவேற்பாளரான ஜப்பான் இடைப்பட்ட 12 மாதங்களிலும் APEC இயக்கு விசையைத் தொடர்ந்து ஏற்று தடைமுறைப் படுத்துவதிலேதான் தங்கியிருக்கின்றது.

ரைம் நவம்பர் 28, 1994

நோய்க் கிருமியைத் தாக்கும் மீன்திசு

சுறாமீனின் திசுவிலிருந்து புரட்சிகரமான மருந்து வகை யொன்று அண்மையிற் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்துக்கு ''ஸ்குலாமைன்'' (Squalamine) என்ற பெயரிடப்பட்டுள்ளது. காசம், உடலுறவுச் சீர்கேடுகளால் வரும் நோய்கள் ஆகியவற்றில், இதுவரை காலமும் அழிக்க முடியாதிருந்த 'பக்ரீரியா'' ரக நுண் கிருமிகள், இனிமேல் ''ஸ்குலாமைன்'' பிரயோகத்தால் ஒழிக்கப்படும் சந்தர்ப்பம் உண்டு. அமெரிக்காவின் மருந்துகள் தயாரிப்பு ஆய்வுக்கூடமொன்றில், இந்தப் புரட்சிகரமான கண்டுபிடிப்பு நிகழ்ந்துள்ளது. வருங்காலத்தில், மாற்றமுடியாத பல நோய்களுக்கு எதிராக, எம்மைச் சுற்றியுள்ள ஜீவராசிகளிடமிருந்தே மருந்துகள் பெறப்படும் வாய்ப்புக்கள் நிறைய உண்டு.

சுறாமீனை சாப்பிடவே, இந்த நேபிக்காரன் விடுகிறான் இல்லை. இதை எங்கே, இங்கே வீடப்போகிறான்?!

நேபாளத்தில் அரசியல் மாற்றம்

நேபாளம்: இங்கு கொம்யூனிசம் உலகிலேயே அதிஉயர் நிலையில்

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

நவம்பர், 94 இல் நடந்த பொதுத் தேர்தலில் குறிப்பிடத் தக்க அரசியல் மாற்றம் நேபாள நாட்டில் ஏற்பட்டுள்ளது நெடுங்காலமாகப் பதவியிலிருந்த காங்கிரஸ் கட்சி பதவி இழந்துள்ளது. யூ. எல். எம். என்ற சுருக்குப் பெயரைக் கொண்ட நேபாள கொம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியைப் பிடித்துள்ளது. 7 மில்லியன் மக்கள் வாழும் இந்த மலை நாட்டில் 30 சத வீதத்தினர் மாத்திரம் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். பெருந்தொகை மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்றனர். பழைய நிலமானிய பிரபுத்துவ சமுதாய அமைப்பு இன்றும் நிலவுகின்றது. ஆட்சி மாற்றம் இதன் நேரடிப் பிரதிபலிப்பாகும்.

இந்தியா, சீனா ஆகியவற்றின் பெருநிலப்பரப்பால் சூழப்பட்ட நேபாளம் தனது வெளி உலகத் தொடர்பிற்கு இரு நாடுகளையும் நம்பி இருக்கிறது. இதுவரை இந்தியாவின் அழுத்தங்கள் கூடுதலாகக் காணப்படுகின்றன. கடந்த தேர்தலில் சீனாவும், இந்தியாவும் ஒரு பலப் பரீட்சையை நடத்தியுள்ளன. பெயரளவில் இந்தியா தோல்வியுற்றாலும் நேபாள அரசியலில் இந்தியாவின் தலையீடு தொடர்ந்து காணப்படும். நேபாளப் பிரசைகள் பெருந்தொகையில் இந்தியாவில் பணி செய்கின்றனர். அதே போன்று இந்தியர்களும் நேபாளத்தில் காணப்படுகின்றனர். நேபாளத்தின் வெளி உலக வர்த்தகத் தொடர்பு, போக்குவரத்து ஆகியவை இந்திய உதவியுடன் நடைபெறுகின்றன.

வெற்றிக்களிப்பில் கம்யூனிசம்

24 அரசியற் கட்சிகள் போட்டியிட்ட இத்தேர்தலில் கொம்யூனிஸ்ட்டுகள் மக்கள் ஆதரவைப் பெற்றாலும் இமாலய உச்சியில் பொதுவுடைமை நெறி வெற்றி பெற்றதாக நினைக்க வேண்டாம், மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரமுடைய மன்னராட்சி நேபாளத்தில் உண்டு. அவருடைய அழைப்பை ஏற்று ஆட்சி அமைத்த 73வயதான மான்மோகன் அதிகாரி. பின்வருமாறு கொள்கை விளக்கம் செய்துள்ளார். '' எமது மேற்கு உலக நண்பர்கள் எம்மைப் பற்றி அச்சங் கொள்ள வேண்டியதில்லை. நாம் மறைந்த சோவியத் ருஷ்யா, மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் கொள்கைகளைக் கடைப் பிடிப்பவர்களல்ல '' என்பதாக.

1960 ஆம் ஆண்டு தொடக்கம் 17 வருட காலம் சிறையிலிருந்தவர் இந்தப் பழுத்த அரசியல்வாதி, மான்மோகன் அதிகாரி சர்வ வல்லமை பொருந்திய நேபாள மன்னரின் அதிகாரங்களைக் குறைத்து மக்கள் ஆட்சி மலரச் செய்ய அவர் நடத்திய போராட்டத்தின் பரிசு, இந்தச் சிறைவாசம். இப்போது வெகு இறுக்கமான அரசமைப்பு விதிகள் அமுல் செய்யப்படுகின்றன. அவற்றை உடைத்துச் செயற்பட அதிகாரியின் கட்சியால் இயலாது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் நிலவிய பொருளாதார ஒழுங்குகள் தொடர்ந்து நிலவும், இதில் சந்தேமில்லை. தனியார் துறை வளர அரசு உதவும்; வெளியார் முதலீடுகளை வரவேற்கும்.

அத்துடன் முதலீட்டாளர்களுக்குச் சலுகைகள் வழங்கும், ஆனால், நிலப்பிரபுக்களின் ஆதிக்

நேபாளம்

தலைநகர்
காத்மண்டு

பரப்பளவு
1,47,181 ச. கீ. மீ

மக்கள் தொகை
2,06 கோடி

மொழி
நேபாளி, மைதீர், போஜ்புரி

எழுத்தறிவு
25.6 சத வீதம்

சமயம்
இந்து 90 சத வீதம்
புத்தம் 7 சத வீதம்
இஸ்லாம்

நாணயம்
நேபாள ரூபீஸ்

தனி நபர் வருமானம்
170 டொலர்

கத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு [உண்டு. கிராமப் புறங்களில் நிலச் சுவந்தார்களின் ஏகபோகம் குறுகத் தறிக்க வேண்டிய காலம் நெருங்கிவிட்டது.

சுங்கவரி, ஏற்றுமதி, இறக்குமதி போன்ற நடைமுறைப் பிரச்சினைகள் இவ்வளவு காலமும் இந்திய நயம் கருதியே தீர்மானிக்கப் பட்டுள்ளன. புதிய அரசு மாற்றங்கள் செய்ய உறுதி பூண்டுள்ளது. மலிவான இந்திய உற்பத்திகள் நேபாளத்திற்குள் தள்ளப்படுவதால் உள்ளூர் உற்பத்திகள் நசுங்கியுள்ளன. நடைமுறையில் இருக்கும் வரிவிலக்கை நீக்குவதுடன் புதிய வரிகளைப் போடுவதற்கும் அரசு உத்தேசித்துள்ளது. நேபாளத்திலிருந்து இந்தியாவுக்குப் பெருந் தொகை நீர் வரியின்றிக் கொடுக்கப்படுகிறது. இங்கும் வரி விதிக்கப் படும். "இந்தியா எமது நிர்வாகத்தின் மேல் கடுங்கோபம் கொள்ளலாம் ஆனால், நெடுநாள் நிலவும் ஒழுங்குகள் நீடிக்கும் என்ற எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும்" என்கின்றார் அதிகாரி ஒருவர்.

இந்தியாவுடன் முரண்பாடுகளை வளர்ப்பதால் நேபாளத்தின் முன்னேற்றம் நிச்சயம் தடைப்படும். இந்த நாட்டின் தலைவிதி அதன் புவியியல் நிலையத்தில் தங்கியுள்ளது. ஒருவித முன்னெச்சரிக்கையாக முன்னாள் இந்தியத் தூதுவர் அரவிந்தர் தியோல் நேபாளத்திற்கு விடுக்கும் அறிவுறுத்தல் பின்வருமாறு: "இரு நாடுகளும் பரஸ்பரம் நல்லுறவைப் பேணத் தவறின் எதிர்காலம் கடினமாக இருக்கும்." யாருக்குக் கடினமாக இருக்கும் என்பதை இவ்விடத்திற் சுட்டிக்காட்ட வேண்டியதில்லை.

நியூஸ் வீக், நவம்பர் 28, 1994.

★

சீனாவின் படைபலத்தைக் கண்காணிப்பதற்கு தாய்வானிய அதிரடிப் படையினர் "கியூமோய்" இல் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

பகைமை மீள வெடிக்கிறது

சீனாவிலிருந்து தாய்வானைப் பிரிக்கும் நீரிணைக்கு ஊடாகத் தற்செயலாகப் பாய்ந்து சென்ற குண்டு பழைய பூசல்களைக் கிளப்புகிறது.

தமிழில்:
காவலூர்நகரோன்

நவம்பர் நடுப்பகுதியில் காலை வேளை தாய்வானுக்குச் சொந்தமான தீவு ஒன்றிலிருந்து 30 பீரங்கிக் குண்டுகள் வரிசையாகப் பாய்ந்து சென்றன. தென் சீனக் கிராம மொன்றில் விழுந்து வெடித்தன, நால்வர் காயமுற்றனர். தாய்வான் அரசு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கையில், "ஆகாய விமானஎதிர்ப்புப் பீரங்கிகள் போர்ப் பயிற்சியின் போது சுட்ட குண்டுகள் ஆகாயத்தில் வெடிக்காமல் தவறுதலாகச் சீனப் பிரதேசத்தில் விழுந்தன" என்று விளக்கம் கூறியது. சீன அரசு கோபத்தால் கொதித்தது. "தாய்வானிய நீரிணைக்கு அப்பால் இருந்த [அமைதியான] சூழ் நிலையைப் பாழ்படுத்திய கொடிய செயல்" என்று வருணித்தது. இரு நாடுகளும் சில காலமாக முறுகல் நிலையின் விளிம்பில் நிற்கின்றன. எந்நேரமும் நிலைமை சீர்கெடலாம்.

தாய்வானில் டிசம்பரில் தேர்தல் நடைபெறும். எதிர்க்கட்சிப் பிரசாரம் என்றோ ஒரு நாள் தாய்வான் தனித்தேசிய இனமாகச் சீனாவிடமிருந்து பிரிய வேண்டும் என முழங்குகின்றது. சீனா அதை ஏற்கவில்லை. அத்துடன் ஆயுதப் படைப் பெருக்கமும் இரு புறமும் அதிகரிக்கின்றது. செப்ரெம்பரில் சீனா தாய்வான் நீரிணையில் மிகப் பெரிய போர்ப் பயிற்சியை மேற் கொண்டது. நீரிலும், நிலத்திலும் ஓடும் வாகனங்கள் போர் பழகின. 40 போர்க் கப்பல்களும், 10,000 போர்ப் படையும் பயிற்சி செய்தன.

உதவிக்குப் பறந்த புதியரக விமானங்கள் ருஷ்யா அமைத்துக் கொடுத்த எஸ். யூ. 27 ஜெற் வகையின. தாய்வானின் மேற்குக் கரையை ஒத்த ஒரு சீனத் தீவில் எப்படிப் போர் புரிவது என்ற பயிற்சி நடந்தது. சில வாரங்களில் தாய்வான் அத்தகைய தொரு தாக்குதலை எப்படி வெல்வது என்ற எதிர்ப் பயிற்சியை மேற் கொண்டது; தனது புதிய உள்ளூர்ப் போர் எதிர்ப்புப் போராளிகள் அலகு, (ஐ. டி. எஃப்) கடற் படைப் போராளிகள், தரைப் படையின் புதிய ஏவுகணைச் செலுத்திகள் அனைத்தையும் பயிற்சியில் ஈடுபடுத்தியது. இப்படியான மரண ஆபத்தான தொழில் நுட்ப வளர்ச்சி ஒன்றே இரு நாடுகளுக்குமிடையே பகை வளரக் காரணமாகும். ஒரு முக்கிய இராணுவ நிபுணன் தாய்வானின் தேசிய சிங்கு பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்தவருமான ஆர்தர் லிங் கூறுகிறார்; ஒரு பகுதியினர் மறு பகுதிக்கு ஆத்திரமூட்டுவதற்கு இவைகள் போதும்'' என்று.

உயர்தர ஆயுதங்கள்

இப் பிரதேசத்தில் சீனா பெரும் இராணுவ முஸ்தீபுகளைச் செய்வது குறித்து உளக் கொதிப்புக் கொள்ளும் சிறு நாடுகளில் தாய்வானும் ஒன்று. சோவியத் ஒன்றியம் வீழ்ச்சியுற்றதால் சீனாவின் தரை எல்லைப் பகுதியில் அச்சம் இல்லை என்ற நிலை ஏற்பட்டதும், சீனப்படைத் தலைவர்கள் தென்சீனக் கடலில் தமது உரிமைகளை வற்புறுத்துவதில் கவனம் செலுத்துகின்றனர். விமான அணி, ஆழ்கடற் படையணிகளை நவீன மயமாக்கிப் பெருக்குகின்றனர். தாய்வானுக்கு மட்டும் தான் ஆபத்து என்று அவர்களது குறி உணர்த்தவில்லை. நீரிணைக்கு அண்மையில் 150,000 போர் வீரர் மட்டுமே உள்ளனர். தாய்வானிய படையில் 440,000 போர் வீரர் உளர், அதிநவீன ஆயுதங்களும் உள. எனவே பயப்பட அவசியம் இல்லை.

ஆனால் தாய்வானின் கேந்திரீய போர்யுக்தி தற்பாதுகாப்பைக் குறிக்கோளாக்கி உள்ளது; அத்துடன் எதிர்த் தாக்கம் புரிய அவதிப்படுவது போலத் தீவிரமாகியுள்ளது. இராணுவ நவீன மயப்படுத்தலுக்கு 40 மில்லியன் டொலர் செலவிடும் திட்டத்தில் அரைவாசி நிறைவேறி விட்டது. 150 அமெரிக்க எஃப் – 6 போர் விமானங்கள், 60 பிரெஞ்சு 'பேய்த்தேர்' 2,000-5 விமானங்கள், தமது எஃப் பிரிவில் அமெரிக்க தொழில் நுட்ப உதவியுடன் தயாரித்த விமானங்கள் 140 – இத்தனையும் அதன் ஆகாயப் படையில் ஆயத்த நிலையில் உள்ளன. இவை கொண்டு தன் வான் எல்லையிலும், நீரிணைப் பகுதியிலும் தனது உயர் திறனை நிரூபிக்க ஆயத்தமாயிருக்கிறது தாய்வான். சீனாவின் விஸ்தரணம் அரசியற் தாக்கம் என்பனவற்றை நோக்கினால், இந்த இரும்புப்பலம் சமம் அன்று. தாய்வான் தான் சுதந்தர நாடு என்று பிரகடனம் செய்தால், சீனா இராணுவ நடவடிக்கை எடுக்காமலே வர்த்தகத் தடையை விதித்து, நடை முறைப் படுத்தினால் அச்சிறு தீவின் பொருளாதாரத்தின் கழுத்தைச் சுருக்கிட்டு இறுக்க முடியும்.

தாய்வானின் சுதந்திரம் பற்றி முழங்கும் குரல்கள் பலமுறுகின்றன. ஜனநாயக முன்னேற்றக் கட்சி சுதந்திரத்தை ஆதரிக்கிறது. அதற்குச் சட்டசபையில் ஆசனங்கள் உள. மிகப் பெரிய மாவட்ட உள்ளூர் ஆணைச் சபைகள் அதன் கட்டுப்பாட்டில் உள. டிசம்பரில் நடைபெறும் தேசாதிபதிகளுக்கான தேர்தலில் அக்கட்சி பழைய கோமின்டாங் கட்சியிலுங் கூடிய வெற்றி பெறலாம். 1945 முதல் இத்தீவை ஆளுங் கட்சி தோல்வியுறலாம். இத்தேர்தல் முடிவை சீனா சுதந்திரத்துக்கு வாக்களித்ததாகக் கருதலாம்; தாய்வான் அந்நெறியிற் சென்றால், ''நாம் கைகட்டிக் கொண்டு பார்த்திருக்கப் போவதில்லை'' என்று சீன ஜனாதிபதி ஜியாங் ஸெமின், சமீபத்தில் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனை இந்தோனேஷியாவில் சந்தித்த போது கூறினார். தாய்வானின் நண்பர்கள் ஜியாங் கும்மா வாய்ப்பறை சாற்றுகிறார் என்று கருத வேண்டாம் என்று அதனை எச்சரிக்கை செய்கிறார்கள்.

தாய்வான், நண்பர்களின் இவ் வெச்சரிக்கையை ஏற்றுக் கொள்ளும் என்பது நிச்சயமில்லை. எதிர்க் கட்சியின் வளரும் பொது சனமதிப்பைக் கவலித்த ஜனாதிபதி லீ. ரெங். ஹுயி தாமும் தாய்வானின் சுதந்திரம் பற்றிப் பேசுகிறார். கும்மா வாயால் 'ஒரு சீனா' என்ற கருத்தைச் சொல்லிக் கொண்டே, அவர் உலகெங்கும் சுற்றுப்பயணம் செய்து, தாய்வானின் செல்வாக்கை உயர்த்தவும், அடுத்த ஆண்டு ஐ.நா. சபையில் பீஜிங் பிரதி நிதிக்கு அடுத்த ஆசனத்தில் தாய்வான் பிரதிநிதியை அமர்த்தவும் பகீரதப் பிரயத்தனம் செய்கிறார். இந்த இராஜதந்திர முயற்சிகள் ஆபத்தானவை. கடந்த 15 ஆண்டுகளாக முழங்காமலிருந்த பீரங்கிகள் சென்ற நவம்பரில் 'தவறுதலாக' சீன மண்ணில் குண்டுகள் வீசின, கடந்த சகாப்தத்தில் வர்த்தகம், முதலீடு, கலாசார பரிவர்த்தனை போன்ற கருமங்களால் 'ஸ்னிர்ப் போர்' முரண்பாடுகள் குறைந்துள்ளன. செல்வச் செழிப்பு இரு பகுதியினரையும் அண்மிக்கச் செய்தது. ஆனால் சமீபத்திய குண்டு வீடுருவல் எச்சரிக்கையாய் அமைகின்றது. தாய்வான் நீரிணை மீண்டும் ஆபத்தான இடம் ஆகலாம்!

நியூஸ்வீக், நவம்பர் 28, 1994.

தாய்வான்

தலைநகர்
தாய்பேய்

பரப்பு
35,981 ச. கி. மீ

மக்கள் தொகை
2,06,00,000

மொழி
மண்டாரீன், சீனம், தாய்வான்

எழுத்தறிவு
90 வீதம்

சமயம்
புத்தமதம், கொன்பியூசியம்

நாணயம்
நியூ தாய்வான் டொலர்

தனிநபர் வருமானம்
8815 டொலர்

லிதுவேனியாவில் உதித்துள்ள புது மாபியா அந்நாட்டைச் சிலுப்பவைக்கிறது

தமிழில்: திரு. கிருபைராஜா

லிதுவேனியாவில் சிறையொன்றில் சிறைக்கைதிச் சீருடை அணிந்து, மொட்டை அடிக்கப்பட்ட தலையில் சூல்லாப் போட்டு, கைகள் இரண்டையும் பின் புறம் வைத்து விலங்கு பூட்டப்பட்டிருக்கும் போறிஸ் டெகானிட்ஷே முன்பு விலினியஸ் நகரில் ஒரு பெரும் விளையாட்டுப் புள்ளியாக இருந்தான். சில மாதங்களுக்கு முன்பு அவன் பெரும் படாடோப வாழ்க்கை நடத்துபவனும், அட்டகாசக் கும்பலொன்றின் ''தொட்டப்பாவாகவும்'' திகழ்ந்தான். அவனும், அவனுடைய தந்தை ஜியோர்ஜியும் பெரும் வர்த்தக நிலையம் ஒன்றை நடத்திப் பல பொருள்களை ருஷ்யாவுக்கும், மத்திய ஐரோப்பிய நாடுகளுக்கும் அனுப்பிப் பணம் அள்ளிக் குவிப்பவர்களாகத் திமிர்கொண்டு இருந்தனர். லிதுவேனியாவின் காவல் துறையினர் அவனுடைய வியாபாரப் பணக்காரத் தன்மைச் செயற்பாடுகளுடன், அவன் பாதுகாப்புத் தரக்கப் பம் வாங்குதல், மோட்டார் வாகனங்கள் களவு முதலிய பல அடாவடித் தனங்களையும் தன்னுடைய கையாட்களை வைத்து நடத்திக் கொண்டு வருவதை அவதானித்தனர். ''விலினியஸ் கும்பல்'' என்ற அவனுடைய கூலிப்படை திறமையாகச் செயற் பட்டது.

வறுமை நாடான லிதுவேனியாவில் அவனுக்கு மட்டும் பணத்தட்டுப்பாடு இருக்கவில்லை. பல நீதி மன்ற வழக்குகள் அவனுக்கும், அவனுடைய கும்பலைச் சேர்ந்தவர்களுக்கும் எதிராக வைக்கப்பட்டன. அவன் படாடோபமான ஜேர்மன் கார்களில் சுற்றிச் சுழன்று திரிந்த தோடு உணவு விடுதியில் வைத்துப் பெண்களுக்கு முகத்தில் அறைந்து விட்டுத் தப்பிப் போகும் திறமையும் கொண்டிருந்தான்.

ரெஸ்பப்ளிகா என்ற தினசரிப் பத்திரிகையில் துப்புத் துலக்கி எழுதும் நிருபரான விடாஸ் லிங்குயிஸ் என்பவருடைய கவனத்தில் அவன் ஈர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அவன் மீதும், அவனுடைய கும்பல் மீதுங் குற்றஞ் சுமத்தும் கட்டுரைகள் அவரால் எழுதப்பட்டுப் பிரசுரமாயின. சென்ற ஒக்ரோபர் மாதத்தில் ஒரு நாள் லிங்குயிஸ் அவருடைய வீட்டுக்கு அருகில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார். பொலிசார் விசாரணையின் பின்பு போறிஸ் டெகானிட்ஷேதான் அந்தக் கொலையைச் செய்வித்தான் என்று குற்றஞ் சாட்டினர். அடுத்து நவம்பர் 10 ஆம் திகதியன்று மூன்று நீதிபதிகள் அமர்ந்த மன்று ஒன்று அவன் ''வேண்டுமென்று திட்டமிட்டுக் கொலை செய்வித்தான்'' என்று கூறிக் குற்றவாளியாக்கியது. ஆனால், அவனோ அது ''வேண்டுமென்று தூண்டிவிட்டுத் தன்னை மாட்ட வைத்த செயல்'' என்று கூறுகிறான்.

போறிஸ் டெகானிட்ஷே சிறைப் படுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாதுகாப்புத் துறையினர் திட்டமிட்ட குற்றச் செயல்களை மடக்கி அடக்க ஆரம்பித்தனர். முன்னாள் சோவியத் ஒன்றியம் உடைந்து பிரிந்த பின்பு லிதுவேனியா, மாபியா நடவடிக்கைகளின் நடு நிலையமாக ஆகிவிட்டது என்று லிதுவேனியாவின் தலைமை அரச வழக்குத் தொடுநர் கூறுகிறார்.

லிதுவேனியா

தலைநகர்
வில்நியஸ்

பரப்பு
65,200 ச. கி. மீ

சனத்தொகை
38,00,000

மொழி
லிதுவேனியன்

சமயம்
கிறிஸ்தவம்

நாணயம்
லிடாஸ்

முகமூடி தரித்த மாபியா எதிர்ப்பு பொலிசார் நாட்டு எல்லையில் வைத்து ஒருவனைக் கைது செய்கிறார்.

ருஷ்யா வுக்கும், மேற்கு நாடுகளுக்கும் நடுவில் அமைந்துள்ள லிதுவேனியா, போதைப் பொருள்கள் முதல் ருஷ்யாவில் களவாடப்படும் இரசாயனங்கள் வரை, பல பொருள்களையும் கள்ளக் கடத்தல் செய்வோருக்கு வசதியான ஓர் இடமாக மாறியுள்ளது. கலிலின் கீராட்டில் அமைந்துள்ள ருஷ்ய இராணுவத் தளத்திற்குக் கப்பலில் ஏற்றப்படும் இரசாயனங்கள் உலோகப் பொருள்கள், மரப்பலகைகள் என்பன எல்லாம் இடைநடுவில் மறைந்துபோய் மேற்கு நாடுகளில் கள்ளமாகச் சந்தைப் படுத்துகின்றன, லிதுவேனியாவில் உள்ள குற்றக் குழுப்பல்களிடம் நுணுக்கமான இரகசிய தொடர்புச் சாதனங்களும் ஐரோப்பாவில் உள்ள ருஷ்ய மாபியாக் காரர்களுடன் உறவுகளும் உள்ளன. சட்ட மீறல் மட்டற்றுப் போனதால் அரசாங்கம் சாத்திய மான எதிர் நடவடிக்கைகளில் இறங்கக் களத்தில் குதித்துள்ளது. ''அவர்கள் வெல்கிறார்களா? அல்லது அரசு வெல்கிறதா? என்று நாங்கள் காட்டியாக வேண்டும்'' என்று பிரதம வழக்குத் தொடுநர் கூறியுள்ளார்.

போரிஸ் டெகானிட்ஷேயின் தந்தை ஜியோர்ஜி டெகானிட்ஷே, ''தனது 32 வயதான மகன் ஒரு கங்காரு நீதிமன்றத்தால் வீணாகத் தண்டிக்கப்பட்டு விட்டான்'' என்று கூறினார். பருத்த மதாளித்த தோற்ற முடைய அந்த ஜியோர்ஜியின் கைகளில் தங்கச் சங்கிலிகளும், வைரம் பதித்த தங்கத்தாலும், பிளாற்றினத்தாலும் ஆன மோதிரங்களும் ஜொலிக்கின்றன. அவருடைய அலுவலக அறைக்குள் வெளியே வருவோர், போவோரைக் காட்டும் உள்ளகச் சுழற்சித் தொலைக் காட்சியும் உள்ளது.

'' நானும் எல்லோரையும் போல ஒரு மனிதன் தான் அல்லாமல் ஒன்றும் கரும் பூதம் அல்ல'' என்று கூறிய அவர், '' சோவியத் அமைப்பு முறிந்துபோன பின்பு எல்லைக் கட்டுப்பாடுகள் அற்றுப் போனதால் வரி அறவிடுகளும் அற்றுவிட்டன என்பதால் இலகுவாக அதிகபணஞ்சேர்க்க முடிகிறது'' என்றும் கூறினார்.

கம்யூனிஸம் சரிந்த பின்பு ஏனைய முன்னாள் கம்யூனிஸ நாடுகளைப் போல் லிதுவேனியாவிலும் குழப்ப நிலை ஊழலால் கொழுப்போர்களுக்கு சந்தர்ப்பங்கள் உண்டாகிவிட்டுள்ளது. அரசுடைமைத் தொழில் துறைகளைத் தனியார் துறைக்கு மாற்ற, ஏலத்தில் விடப்படும்பொழுது குண்டர்கள் வந்து முண்டிக்கொண்டு, விலை வைக்க வந்தவர்களைக் குலைத்து, கலைந்துபோகச் செய்து விட்டு மாபியாத் தலைமைகளுக்குக் குறைந்த விலையில் சொத்துச் சேர்க்க வழி செய்கின்றன. மில்லியன் கணக்கான டொலர் பெறுமதியான வியாபாரங்கள் எல்லாம் காசுக் கைமாறலால் நடத்தப்படுவதால் அனேக ஊழல்களும் வரி ஏய்ப்புகளும் நடக்கின்றன. பல பெரும் கடன் அறவிடல்களைச் சட்ட முறைப்படி நடத்த முடியாமல் இருப்பதால் சட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒப்பந்தங்கள் செய்துகொள்ளப் படுகின்றன. அவை நிறைவேற்றப் படாதுபோனால் சட்டத்தை மட்டந் தட்டித் தமது கைகளில் ஏந்திக் கோலோச்சும் குண்டர் கும்பல்கள் மூலம் சண்டித்தனம் வெடி வைத்துக் கொல்லல் போன்ற பல அடிபிடி நடவடிக்கைகளை மேற்கொண்டு அறவிட்டுக் கொள்கின்றனர். அரசாங்கம் சரிந்து அதிகாரங்கள் குலைந்து கிடக்கும்போது வலலமை உள்ள சிலர் தமக்கு ஏற்ற அமைப்புக்களை உருவாக்கி மற்றவர்களின் வாழ்க்கையிலும், உயிர்களின் மீதும் தமது செல்வாக்கைச் செலுத்தி வெல்கின்றனர். '' இது நல்லதோ கெட்டதோ என்று என்னால் ஒன்றும் சொல்ல முடியாது'' என்று ஜியோர்ஜி டெகானிட்ஷே கூறுகிறார்.

பொலிசாரும் தாம் அவனுக்கு நல்லவர்களாகவே இருந்ததை ஏற்றுக் கொள்கின்றனர். '' அவர்கள் வர்த்தகம் நடத்தத் தொடங்கிய ஆரம்பத்தில் ருஷ்யப் பாதாள உலகப் பேர்வழிகளுடன் தனக்கு இருந்த தொடர்புகளைப் பயன்படுத்தி அங்கிருந்த அரசாங்கத் தொழிற்சாலைகளில் இருந்து பொருள்களைப் பெற்றுக் கொண்டார்'' என்று அவர்கள் கூறுகின்றனர். ஒரு சட்டத்துறை உயர் அதிகாரி கூறினார்: ''அவர், குற்றச் செயல் நபர்களுக்கு அவர்களுடைய பணத்தை எப்படி முதலீடு செய்ய வேண்டும் என்று ஆலோசனை கூறுகிறார். இருந்தும் அவற்றை நிரூபிக்க முடியாமல் உள்ளது'' என்பதாக.

சென்ற நவம்பர் முற்பகுதியில் ஜேர்மனிய புலனாய்வுத் துறையினர் லிதுவேனியா அரசாங்கத்திற்கு அதன் இணையினா அணுமின் நிலையம் வெடிவைத்துத் தகர்க்கப்படக் கூடிய அச்சுறுத்தல் உள்ளதாக அறிவித்தனர். லிதுவேனிய செய்தித்தாள்கள் ஜியோர்ஜி டெகானிட்ஷே தனது மகனுக்கு மரண தண்டனை கொடுக்கப்பட்டால் அப்படிச் செய்யப்போவதாக சாடிச் செய்தி வெளியிட்டன. ஆனால், ஜியோர்ஜியோ அவை எல்லாம் ''வீண் அவதூறு'' என்று கூறுகிறார். அவர்மீது அவதூறு சொல்லப்படும் பொழுது அதனால் அவருக்கு நன்மைகள் விளைவது போல் தெரிகிறது. '' அவர்கள் என்னைத் தொட்டப்பா என்று பட்டம் சூட்டும் பொழுது நான் அவர்களுக்கு நன்றி என்று சொல்வதா? அல்லது வாயைப் பொத்துங்கள் என்று சொல்வதா? என்று தெரியாமல்

இருக்கிறது '' எனக் கூறும் அவர், அவர்கள் அப்படித் தன்னை அழைக்கும் பொழுது அதனால் தனக்கு இலவச விளம்பரம் கிடைப்பதாகக் கூறுகிறார். ஏனெனில் அதனைக் கேள்விப்பட்டு தேவையுள்ள ஆட்கள் அவரிடம் உதவி கேட்கும் வேளை அவர்கள் துணையால் சில பல விடயங்களைச் சாதித்துக் கொள்ளவும் வருகிறார்களாம் என்று சொன்னார்.

நவம்பர் மாத இறுதியில் அரசாங்கம் எல்லா மரண தண்டனைகளையும் இடைநிறுத்தி வைப்பதாகவும் அவை அனைத்தும் மீளாய்வு செய்யப் படவிருப்பதாகவும் அறிவித்தது. அதனால் ஜியோர்ஜிக்கும் தனது மகன் போரிஸை மீட்டுக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

விடாஸ் லிங்குயிஸின் கொலையைத் தொடர்ந்து தீவிர விசாரணைகளில் இறங்கிய பொலிசார் சிங்கப்பூரிலிருந்து விலினியஸ் வரை படர்ந்து அங்கிருந்து கோபன்ஹேகன் வரை விரிந்து செல்லும் அமைப்பு ரீதியான குற்றச் செயற்பாடு ஒன்று இயங்குவதாக அறிந்து கொண்டுள்ளனர். அவர்கள் அவற்றின் அடி முடிகளைக் கண்டுகொள்ள முனைந்துகொண்டு இருப்பதாலும், ஐரோப்பிய ஐக்கிய அமெரிக்க காவல் துறைகளுக்கு இடையில் ஒன்றிணைப்புக்கள் இல்லாத படியாலும் முன்னேற்றந் தடைப்படுகிறது. இதற்கிடையில் லிதுவேனியாவில் உள்ள குற்றக் கும்பல்கள் தமது தடங்களை உள்நாட்டில் மாற்றி மறைக்கத் தொடங்கிவிட்டன.

நியூஸ் வீக், டிசம்பர் 5, 1994.

★

கூழுத்துப் பட்டியிலே பணப்பை

வளர்ப்பு நாய்களுடன் உலாப் போகின்றவர்களுக்கு உதவும் முகமாகக் கழுத்துப் பட்டியுடன் கூடிய பணப்பை ஒன்று நியூயோர்க் நகரில் குறொஸ்செக் பகுதியின் உள்ளூர்ச் சந்தை ஒன்றில் அறிமுகமாக்கப் பட்டுள்ளது. வளர்ப்பு நாய்களின் கழுத்துப் பட்டியுடன் இணைக்கப்பட்டுள்ள இப் பணப்பையில் மோதிரங்கள், சிறிய சாவிகள், அடையாள அட்டைகள் போன்ற பொருள்கள் மிகப் பாதுகாப்பாக வைக்கப் பட முடியும். நாய்களின் நிறத்திற்கு ஏற்ற வகையில் தெரிவு செய்யக் கூடியதாகக் கறுப்பு மற்றும் பழுப்பு வர்ணங்களில் பாதுகாப்பான நல்லதோலினால் இவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. தற்போது இவை நியூயோர்க்கின் சந்தையில் விற்பனை செய்யப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

வளைவை நிமித்தும் கருவி

தட்ப வெப்ப மாற்றங்களால் மரப்பலகை வளைந்து கோலிக் கொண்டு இருந்தால், அதை நிமிர்த்திச் சீராக்குவதற்கு ஒரு இரும்புக் கருவி தயாராகி விட்டது. அறையப் பட்டிருக்கும் ஆணிகளைத் தளர்த்தியபின் பலகையை நிமிர்த்தலாம். அதன்பின் மீண்டும் ஆணியை இறுக்கலாம். இந்த ஆயுதத்தின் விலை 65 டொலர்.

சந்திர மண்டலத்திலும் ஓடக்கூடிய மிதிவண்டி

புதையும் மணற்காடாக இருந்தாலென்ன, உறைபனிப் பிரதேசமாக இருந்தாலென்ன இந்த அமெரிக்கன் சைக்கிள் உங்களைச் சுமந்து செல்லும் விதத்தில் வடிவமைக்கப் பட்டுள்ளது. சிறிய ரக ஸ்கூட்டர் போன்ற சில்லும், பலூன் மாதிரி ரயர்களும் இதில் காணப்படுகின்றன. கார்களுக்குப் பொருத்தப்படும் நிறுத்தி (பிறேக்) இதில் பொருத்தப்பட்டுள்ளது. இது பனியிற் சறுக்காது, மண்ணிற் புதையாது என்று இதன் தயாரிப்பாளர் தெரிவிக்கின்றார். தேவையேற்படின் சில்லுகளை அகற்றி விட்டுப் பனிச்சறுக்குத் தகடுகளையும் பொருத்தலாம். இதன் விலை 3,200 டொலர்.

மணற்காட்டில் ஓட்டிக் காட்டினால் எங்களுக்கும் இது உடன்பாடுதான்.

அடுத்து இடம் பெறப் போவது 'பனி அமைதியா?'

எழுதியவர்: ஜோஷ். யே. சேச்

கடந்த மாதம் புடாபெஸ்ரில் 53 நாட்டரசுகள் கலந்து கொண்ட ஐரோப்பிய பாதுகாப்பு, ஒத்துழைப்பு மாநாடு (CSCE - Conference of Security and Cooperation in Europe), நடை பெறுவதற்குப் பல நாள்களுக்கு முன்பே ஐக்கிய அமெரிக்க-ருஷ்ய உறவுகளில் விரிசல் ஏற்படும் என்ற எச்சரிக்கைகள் பரவலாக எழத் தொடங்கி விட்டன. ஐ. அமெ. உருவாக்கியுள்ள ஈராக் மீதான எண்ணெய் வர்த்தகத் தடைச் சட்டத்தை நீக்குவதிலும், அமெரிக்காவின் அநுசரணையுடன் ஐ. நா. பாதுகாப்புச்சபை பொஸ்னியா மீது நிறைவேற்றிய தீர்மானத்திற்கு முட்டுக்கட்டை போடுவதிலும் ருஷ்யப் பிரதிநிதிகளின் முனைப்பான முயற்சி வெற்றியளிக்கவில்லை. (CSCE) யின் உச்சி மாநாடு ஆரம்பமாவதற்குச் சிறிது முன்பு, ஐ. அ. வின் தலைமையிலான நேட்டோ நேசநாடுகளுக்கும் ருஷ்யாவுக்குமிடையில் இராணுவத் தடைகளைத் தளர்த்துவதற்கென்று தயாரிக்கப்பட்டு ஒப்பமிடவிருந்த ஆவணங்களைப் படித்துப் பார்க்கவும். ருஷ்ய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர், அந்திரேகொசிரேவ் மறுத்துவிட்டார்.

ஆனால், புடாபெஸ்ரில் தலைவர்களுக்கிடையிலான கலந்துரையாடல்களிலே இடையிடையே தடைகள் ஏற்பட்ட போதிலும் அவை வேகமாகவே நடைபெற்றன; பில்கிளின்ரனும் பொறிஸ் யெல்சினும் தாங்கள் முன்பு நடத்திய ஆறு கூட்டங்களின் போது கடைப்பிடித்த நட்புணர்வைக் கைவிட்டு நளினமாக சொற்போரிலே இறங்கியதைக் காணமுடிந்தது. முன்பு ருஷ்யாவைச் சார்ந்திருந்த போலாந்து, செக்கோ செலவாக்கியக்குடியரசு, ஹங்கேரி ஆகிய நாடுகளை 1999 இல் நேட்டோவுடன் இணைத்துக் கொள்வதற்கான வரையறுப்பினை ருஷ்யா எதிர்த்ததைக் கிளின்ரன் மறைமுகமாகச் சாடினார். '' ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கு அடித்தளமாக நேட்டோ உள்ளது. புதிய உறுப்பினர்கள், பழைய உறுப்பினர்கள், உறுப்பினரல்லாதவர்கள் யாவரையும் ஒன்று சேர்த்து நேட்டோவை விரிவாக்கம் (Expansion) செய்வது கூடிய பாதுகாப்பானது '' என்றார் கிளின்ரன்.

இந்தத் தடவை ருஷ்யா ஒரு கன்னையிலும் மற்றைய நாடுகள் இன்னொரு கன்னையிலுமாகப் பிளவுபட்டு ஐரோப்பாவில் மீண்டும் எதிர்ப்புக்கள் உருவாகும் என்ற அச்சத்தினை யெல்சின் வெளியிட்டார். நேட்டோவின் விரிவாக்கம், ருஷ்யர் இன்னும் கருதுவதற்கொப்ப ருஷ்யாவின் எல்லைப்புற நாடுகளையும் பிறநாடுகளையும் ருஷ்யாவுக்கெதிரான உறவுப் பிணைப்பில் ஒன்று சேர்க்கும் என்பது யெல்சினின் கருத்து. ''ஐரோப்பா இன்னும் பனிப் போரிலிருந்து தன்னை முற்றாக விடுவித்துக் கொள்ளவில்லை. அது 'பனி அமைதிக்குள்' (Cold Peace) தள்ளப்படும் ஆபத்தையும் எதிர் கொள்ள நேரிடும்'' என்றார் யெல்சின். மிகையான தன்முனைப்

ஐக்கிய அமெரிக்காவுக்கும் ருஷ்யாவுக்கு மிடையிலான உறவுகளிலே விரைவில் விரிசல் ஏற்படலாம்!

போடு தானே யாவருக்கும் மேலான மாபெருஞ் சக்தியாக ஐ. அ. தன்னை வெளிப்படுத்துவதாக அவர் குற்றஞ் சாட்டினார். அவரின் வார்த்தைகளிலேயே சொல்வதானால், ''கண்டங்கள் அனைத்தினதும், உலக சமுதாயங்கள் அனைத்தினதும் தலைவிதியை ஒரே ஒரு தலைநகரிலிருந்து கொண்டு தீர்மானிப்பது என்ற கருத்து ஆபத்தான மாயையாகும்.''

ஐ. அ. ருஷ்ய வாய்ச்சண்டை (CSCE) ஐப் பொறுத்தவரை பொஸ்னியப் போர் தொடர்பான எந்த ஓர் உடன்பாட்டிற்கும் வர முடியாது தடையிட்டது. பிரியாக் சிறுநிலப்பகுதியில் வாழும் முஸ்லிம்கள் மீது பழைமை பேணுநரான சேர்பியர் நடத்தி வரும் தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானத்துக்கு, ருஷ்யா முட்டுக்கட்டையிட்டது. இந்த முரண்பாட்டு நோய்க்குப் பத்தியமாக ஜேர்மனியின் அதிபர் ஹெல்மட் கோல், பொஸ்னியாவில் தற்காலிகப்

போர் நிறுத்தம் கொண்டு வரலாம் என்று கூறிய ஆலோசனையும் எடுபடவில்லை.

மாதக்கடைசியில், கிளின்ரனின் நிர்வாகம், ஐ.நா. சபையின் சுமார் 25,000 படையினரைக் கொண்ட கட்டுப்படுத்தும் படைப் பிரிவொன்றினைப் பொஸ்னியாவுக்கு அனுப்பிவைக்கலாம் என்ற ஆலோசனையை, இணக்கம் கொள்வதில் ஐயங்கொண்ட நேசநாடுகளுக்கு வழங்கியது. ஆனால் இது தொடர்பான முக்கிய சாத்தியப் பாடுகள் பற்றிக் கேள்விகள் எழுந்தன. இப்படியும் நடக்கலாம், அப்படியும் நடக்கலாம் என்ற எதிர்வுகூறல்கள் இடம் பெற்றன. ஐ.நா. வின் கட்டுப்படுத்தும் படை அங்கு சென்றால், அது தற் பொழுது அங்கு நிலைகொண்டிருக்கும் 19 நாட்டுப் படைகள் இணைந்த ஐ.நா. அமைதிப்படை வாபஸ் பெறுவதற்கு உதவலாம். அப்போது தான் கிளர்ச்சியாளர்கள் வெளிப்படுவர். அவ்வேளை அவர்களை அழிப்பது எளிதாகலாம். இதன் பின்னரும் சமாதானத்தில் ஆர்வம் அற்றிருக்கும் கொங்கிரசுடன் ''கலந்து ஆலோசனை'' செய்ய வேண்டியிருக்கும். இவை சாத்தியமானாலும் அமெரிக்க அரசுப்படை பொஸ்னியர் சேர்பியரைச் சுட்டுத்தள்ளுவதால், ஐ.அ. ருஷ்ய் மனஸ்தாபமானது குறையக் கூடிய சாத்தியம் இல்லாது போகக் கூடிய நிலையும் உருவாகலாம்.

இந்த இறுக்கங்கள் (Tensions) மட்டுமே ஐ.அ, ருஷ்ய உறவு விரிசலின் கதையினை முற்றாகக் கூறுவதாகவும் கொள்ள முடியாது. இவ்விரு நாட்டுத் தலைவர்களினதும் உறுத்தலான சொற்பரிமாற்றங்களின் பின்பு இருவரும் கலந்து கொண்ட ஒரு வைபவத்தின் போது ஆயுதக் குறைப்புப் பற்றிய பேச்சு வார்த்தையை அங்கு மீளவும் ஆரம்பித்து வைத்தனர். 1991 இல் இது பற்றிய ஒப்பந்தத்திற்கிசைய உக்ரேன், பெலறஸ், கசகிஸ்தான் பிரதேசங்களில் ருஷ்யா தனது அணுவாயுதக் கருவிகளை அழித்திருக்க வேண்டும்.

அமெரிக்காவும், தனது பிரதேசங்களிலே அவ்வாறே நடந்திருக்க வேண்டும். ஆனால், ஒரு காலத்தில் மிகவும் ஆபத்தானவையாய் விளங்கிய இவற்றை அழிப்பதாகிய வைபவம் எந்த அளவிற்குச் சரியாகவும், விளைவுடையதாகவும் நடந்தது என்ற உண்மை கவனத்துக்கு எடுக்கப்படவே இல்லை. ருஷ்யப் படைத்திட்ட ஆய்வுக் கழகத்தின் (Institute of Strategic Studies) பணிப்பாளரான ஜெவ்ஜெனி கொசோக்கின், கீழ்மட்ட அளவில் சாதாரண அமெரிக்கரும், சாதாரண ருஷ்யரும் ஒன்றிணைந்து இச் செய்திட்டத்தின் பல அம்சங்களையும் நிறைவேற்றுவதில் நாள் தோறும் ஈடுபட்டு வருவதாகக் கூறுகிறார். ''முன் என்றும் நிலவாத புதியதோர் உறுதிப்பாட்டுண்மை இது'' என்பது அவரின் முடிவு. அமெரிக்க உப ஜனாதிபதி அல்கோர், ருஷ்யப் பிரதமரான விக்டர் சேர்னொமிர்டின் அவர்களோடு இவ் விடயமாகப் பேச்சுவார்த்தை நடத்த மொஸ்கோவிற்குச் சென்றிருப்பது இறுக்கத்தை ஓரளவு தளர்த்தலாம்.

எது எவ்வாறிருந்த போதிலும் இரு நாடுகளுக்குமிடையே நிலவும் இறுக்கம் எதார்த்தமானது என்பதை மறுப்பதற்கில்லை. யெல்சின் தேசிய உணர்வு பற்றித் தமது தாயகத்திலே வாய் வார்த்தைகளால் வேண்டுகோள்களை அள்ளித் தெளிப்பதால் மட்டும் இந்த இறுக்கம் நெகிழ்வடையல் ஆகிக் கொண்டிருப்பதால் அவற்றைத் தடுத்து நிறுத்தும் செயற்பாடுகளில் யெல்சின் அதிகம் அதிகமாக ஈடுபட வேண்டிய தேவை அவருக்கு உண்டு. ஏனெனில் கிளின்ரனைப் போலவே, 1996 இல் இடம்பெறப் போகும் தேர்தலிலே தாம் மீண்டும் தெரியப்படுவதற்கான நம்பிக்கை ஈடாடிக் கொண்டிருப்பதை அவர் அறிந்திருக்கிறார். ருஷ்யர், யெல்சின் தலைமையிலான ''ருடியரசாட்சி'' முறையையா அல்லது அமரர் லியோனிட் பிறெச்னேவின் ''தனியாள் ஆட்சி'' முறையையா ஏற்கப்போகிறார்கள்? என்ற அடிப்படையில் தேர்தல் நடக்கவுள்ளது. பிறெச்னேவின் தலைமைக் காலத்தை (சோவியத் ஒன்றியக் காலத்தை) ''மாறுதலற்ற காலம்'' என்று மக்கள் எள்ளி நகையாடினாலும் பிறெச்னேவ் 46 சத வீதத்திற்கு 28 சத வீதம் என்ற விகிதத்தில் வெற்றி பெற்றவர்.

ருஷ்யாவின் தேசிய ஆர்வங்களிற் சில, ஐ.அ. வுடன் முட்டி மோதக் கூடிய நிலையின் பயனாகவும் இரு நாடுகளுக்குமிடையே உராய்வுகள் (Frictions) ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகியுள்ளன. ருஷ்யா ஈராக்கின் மீது எண்ணெய் வர்த்தகத் தடை விதிக்கப்பட்டதை நீக்குவதிலே முனைவதற்கு அடிப்படைக் காரணம் அதன் நிதி நெருக்கடிதான். ருஷ்ய, சோவியத் ஒன்றியக் காலத்தில் ருஷ்யா தனது ஆயுதங்களுக்குப் பண்ட மாற்றாக அதனிடமிருந்து எண்ணெயைப் பெற்றது. எனவே இன்று இந்தத் தடை ருஷ்யாவைப் பெரிதும் பாதிக்கிறது என்பது உண்மை. அசெர்பைஜானில் எண்ணெய்க் கிணறுகளைத் தோண்டும் கூட்டகங்கள் ருஷ்யாவினூடாகத் தமது விநியோகக் குழாயினைக் கட்டமைக்க வேண்டும் என்று அது வலியுறுத்துவது இந்த அடிப்படையிலேயே.

பிரிந்து செல்ல முயலும் செச்னியா மீது ருஷ்யா இராணுவ நடவடிக்கையை மேற்கொள்வதை ஐ.அ. அமைதியாக அங்கீகரிக்கிறது. ''செச்னியா விவகாரம் ருஷ்யாவின் உள்நாட்டு விவகாரமே'' என்று ஐ.அ. அரச இணைக்களம் அறிவித்த போதிலும், ''அமைதி காத்தல்'' என்ற பெயரால் தர்கிஸ்தான், ஜோர்ஜியா மற்றும் சுதந்திரம் பெற்ற குடியரசுகளைப் பலவந்தமாக ருஷ்யாவோடு இணைத்துக் கொள்ள முயல்வதை அது எதிர்க்கிறது. ஆனால் ருஷ்யாவோ அயல் நாடுகளாயுள்ளவற்றில் அழிவுகள் நிகழாவண்ணம் நடவடிக்கைகளை மேற்கொள்வது தனது சட்ட பூர்வமான அக்கறை என்றும் தவிர்க்க முடியாத கடமையென்றும் வலியுறுத்தி வருகிறது.

21 ஆம் நூற்றாண்டின் சமையலறை

வருங்காலத்தில் சமையலறையை எப்படி அமைத்துக் கொள்ளலாம். இது தொடர்பாக வடிவமைப்புக்கான மத்திய சித்திரக்கல்லூரி மாணவர்கள் பல உருவமைப்புக்களை முன்வைத்துள்ளனர். 21 ஆம் நூற்றாண்டின் சமையலறை உபகரணங்கள் நிரந்தரமாகப் பொருத்தப்படுபவற்றை விடவும் தளபாடங்களாகவே அதிகமாக இருக்கும் வகையில் இவர்கள் தமது உருவமைப்புக்களை வடிவமைத்துள்ளனர்.

இவற்றில் சில வகை மாதிரிகளை இங்கே சுட்டிக் காட்டுவது பொருத்தமானதே. உயர் நிலை ஒக்றோன் சக்தியால் வெப்பம் ஊட்டக்கூடியதாக ஜெற்குழாய் போன்ற வடிவிலான ஒற்றைக்காலில் நிற்கக் கூடிய ஓர் அடுப்பு ஒன்றை எட்வேர்ட் ஹேசின் வடிவமைத்துள்ளார். தானாகவே தண்ணீர் கொப்புளித்துக் கொள்ளக்கூடியதாகக் கழுவல் வேலைகளை மேற்கொள்ளக் கூடியதான கழுவல் மேசை ஒன்றை ரெப் றூஸ் மற்றும் யோன் ஆகியோர் வடிவமைத்துள்ளனர். தட்டுக்களைக் காந்த சக்தியின் மூலம் தேவையான வெப்ப நிலையில் வைத்துக் கொள்ளக்கூடியதும், தேவைக்கு ஏற்றாற் போல் தானே விரிந்து கொள்ளக்கூடியதுமான சாப்பாட்டு மேசை ஒன்றை ஜெங் சலோசர் மற்றும் ஜோ டால் ஆகியோர் உருவாக்கியுள்ளனர். காற்றினால் குளிரூட்டக்கூடியதாகவும், உணவுப் பொருள்களைக் காற்றுத் திரையினால் பாதுகாக்கும் வகையிலும் கதவுகள் இல்லாததுமான குளிர்சாதனப் பெட்டி ஒன்றை டறக் றோசன் என்பவர் வடிவமைத்து இருக்கிறார்.

எல்லா வற்றிலும் முதன்மையான பிரச்சினை உளவியல் சார்ந்ததாகும். இராணுவ, பொருளாதார பலவீனங்களாலே பாதிப்புற்றுக் கிடக்கும் ருஷ்யாவைச் சரித்திரப் பிரசித்தி பெற்ற வல்லாண்மையரசாக மீண்டும் கட்டியெழுப்ப வேண்டும் என்பதே ஒவ்வொருவரதும் அரசியற் கருத்தாக வலிவு பெற்று வருகின்றது. ருஷ்யாவைச் சார்ந்திருந்த நாடுகளெல்லாம் நேட்டோவில் முழுமையான உறுப்புரிமை பெறுவதால், தான் தாழ்ந்து போக நேரிடும் என்ற அச்சம் ருஷ்யாவை வாட்டுகிறது. ஆனால் அதே சமயம்சார் மன்னர்களும், கொமிசார்களும் அண்டை நாடுகளைக் கபளீகரம் செய்து ருஷ்யாவோடு இணைத்த கொடுமையான நீண்ட வரலாற்றை அது மறந்து விட்டது. இவையாவிலும் மோசமானது, ருஷ்யா அண்மைக் காலத்தில் மத்திய ஐரோப்பாவிலும் பால்டிக் அரசுகளிலுமிருந்து தனது படைகளை வாபஸ் பெற்றுக் கொண்டதால், நேச நாடுகளின் வலிமை கூடித்தான் அந்நியப்பட்டு விட்ட நிலையாகும்.

எதிர் வரும் தேர்தலில் கிளின்ரனின் கட்சி தோல்வி கண்டு குடியரசுக் கட்சியினரின் கையோங்கி அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க நேரிட்டால் அந்த மாறு நிலையையிட்டும் ருஷ்யா கவலையடைய வேண்டியுள்ளது. அரசியல் ரீதியான முன்னுரிமை ருஷ்யாவிற்குக் கிடைக்கும் வகையிலே கிளின்ரனின் நிருவாகம் அதற்கு நேசக் கரம் நீட்டியிருந்தது. வெளிநாட்டு விவகாரங்களில் பழைமை பேணுவோரான குடியரசுக் கட்சியினர் முக்கிய குழுக்களில் இடம் பெறும் பொழுது, அவர்களின் வெளி நாட்டுக் கொள்கை நிச்சயமாக ருஷ்யாவுக்கு எதிராகவே அமையும். பொதுவுடைமைக் கெதிரான கொள்கையை இன்று கடைப்பிடிக்கும் ருஷ்யாவையும் அவர்கள் நம்பத் தயாராயில்லை. ருஷ்யாவுக்கு வழங்கும் நிதியுதவிகள் களவாடப்படுவதாகவும், தவறாகப் பயன்படுத்தப்படுவதாகவும் காமாலைக் கண்களோடு அவர்கள் நோக்கினாலும், அந்தப் பார்வையை முழுமையாகத் தவறு என்றும் கூறிவிட முடியாது. இவர்கள் இந்நிதியுதவிகளை நிறுத்தவோ, உக்றேன் முதலான முன்னாள் ருஷ்ய ஒன்றிய நாடுகளுக்குத் திருப்பி விடவோ கூடும். ருஷ்யரின் கவலை இவ்விடயத்தில் நிலையாகவே உள்ளது. நிதியுதவி வழங்க முற்படுகையில் ஐ.அ வும் மேற்கத்திய நாடுகளும் மலையைத் தருவதாக ஆசை காட்டிக் கடுகளவே வழங்குகின்றன.

அமெரிக்கருஞ்சரி, ருஷ்ய ருஞ்சரி மீண்டும் ஒரு பனிப்போரைத் தொடங்கும் அளவுக்கு முட்டாள்கள் அல்லர். யெல்சின், தமது இடி முழக்கப் பேச்சினிடையே CSEC கூட்டத்தில் மிக அவதானமாக வார்த்தைகளை அளந்து பேசவும் தவறவில்லை. '' நாங்கள் இவியும் பகைவர்களல்லர், பங்காளிகள் ''. அவருடைய கருத்து வெளிப்பாடு எவ்வளவு தான் ஒரு பக்கச்சார்பான தென்றாலும், சிறிது நேரத்திற்கு முன்பு நட்புறவின் முழுமலர்ச்சியாக மலர்ந்தும் உணர்வே, 'பனி அமைதியாக' க் குவித்தும் கருதக் கூடிய பேராபத்து இல்லாமலில்லை.

மொஸ்கோவிலிருந்து
கலி பி. டொலைலியூல்,
வாஷிங்ரனிலிருந்து
ஆன். எம். டிமன்கம்
அனுப்பிய செய்தியறிக்கையிலிருந்து.

ரைம், டிசம்பர் 19, 1994.

★

ஐரோப்பா

மிதிபடுகிறது பொஸ்னியா

தமிழில்: திரு. இளையவன்

பிஹாக்கின் இரத்தம் சிந்தப் படுவதிலும் பார்க்கச் சித்திரவதைப்பட்டு வருகின்ற யெசுனியாவிலும் பார்க்க மேலானதாக ஐ. நாவினதும், அத்திலாந்திக் நேச நாடுகளினதும் வியப்பூட்டும் திறமைகள் எல்லாம் பால்க்கன் போர்க்களத்திலேயே துண்டு துண்டாகக் கிழித்து வீசப்பட்டு விட்டன. பொஸ்னியாவின் தற்போதைய நிலை குறித்து இரத்தினச் சுருக்கமாகக் கூறுவதானால் பின்வருமாறு குறிப்பிடலாம். நேட்டோவும் அதனுடன் சேர்ந்த ஐ. நாவும் அமெரிக்காவுடன் தொடர்புள்ள மேற்குலகின் வேறு சக்திகளும் சேர்ந்து சமாதானத்தைத் திணித்து அநாகரிகத்தை ஊட்டி ஆக்கிரமிப்புச் செய்கின்றன எனலாம். ஆனால் சோவியத் யூனியனின் சரிவுக்குப் பின்னர் அதன் தொடர்ச்சியின் ஓர் அங்கமாகவே பொஸ்னியாவில் மக்கள் துன்பங்களுக்கு இலக்காகின்றனர். நேட்டோவும், ஐ. நாவும் பரஸ்பரம் குற்றஞ் சாட்டிக் கொள்ளும் நிலையிலும் நேட்டோ அணி நாடுகள் ஒவ்வொன்றும் தத்தமக்குச் சார்பான நாடுகளின் விருப்பத்திற்கு ஏற்ப தாளம் போடுகின்ற நிலையிலும் பொஸ்னியாவின் உண்மையான நிலைப்பாடுகள் மழுங்கடிக்கப்படுகின்றன. யுத்தம் எவ்வாறு ஒழுங்காக நடத்தப்படலாம் என்பதற்கான பிடிமானங்களுங் கூட இழக்கப்படுகிறது. ஐ. நாவினால் அமைதி வலயம் எனப் பிரகடனம் செய்யப்பட்ட பிஹாக் நகரைப் பிடித்து ஆட்சி செய்யும் சேர்பியரை அடித்துத் துரத்த முடியாமல் போனமை காரணமாக மேற்குலகப் படைகளின் பயங்கரத் தோற்றம் எல்லாம் வெறும் பம்மாத்தாகப் போய் விட்டது.

பாட்டிற்குக் கொண்டுவரும் வழி உலக நாடுகளுக்குத் தெரியவில்லை என்பதே பொஸ்னியச் சிக்கலின் இன்றைய நிலை. கடந்த நவம்பர் மாத பிற்பகுதியில் கிளின்ரன் நிர்வாகம் மூன்று கப்பல்களையும், 2000 கடற்படையினரையும் பால்கன் கரைக்கு அனுப்பி இருந்தது. பென்ரகனின் இந்த நடவடிக்கை ஒரு பாதுகாப்பாகவே யன்றி வேறில்லை எனக் கூறப்பட்ட போதும் சேர்பியத் தலைவர் கராட்சிக் அமெரிக்கா தனது படைகளை அனுப்புவது மூலம் இன்னுமொரு வியற்நாமை உருவாக்க விரும்புகிறது என எச்சரிக்கை செய்திருந்தாராம். சேர்பியர்களது ஆதிக்கத்தை எதிர்க்க மேற்கத்தேய நேச நாடுகள் போதிய சக்தியை உபயோகிக்க விரும்பாமல் இருக்கின்றனர் என்பது ஒருபுறமிருக்க சேர்பியரும், பொஸ்னியரும் மத்தியஸ்தர்களுடன் பேசும்போது எந்தவொரு முடிவுக்கும் சம்மதம் சொல்வதாக இருக்கிறார்கள் என்பது மறுபுறம். இதனிடையில் நேட்டோவோ அல்லது வேறு எவரோ சேர்பியருடன் யுத்தத்தில் குதித்தால் உடனடியாக அவ்விடத்தை விட்டு வெளியேறுவது என்பதே ஐ. நா இராணுவத்தின் நிலையாக இருக்கிறது. பொஸ்னியா யுத்தம் என்பது சேர்பிய

> போதிய பலத்தைப் பிரயோகித்து சேர்பியரைப் பின்தள்ள முனையாத நேசநாடுகள் - மத்தியஸ்தர்களின் எந்த முடிவுக்கும் சம்மதம் தெரிவிக்காத சேர்பிய பொஸ்னிய தலைமைகள் சேர்பியர்களின் பதில் தாக்குதல்களிலிருந்து பாதுகாப்பு வாங்காமல் விலகிச் செல்லும் ஐ. நா. படைகள் இவற்றிற்கு மத்தியில் நசுங்குண்டு மிதிபடுகிறது பொஸ்னியா.

தடுக்கமுடியாதது சேர்பியர் முன்னேற்றம்

31 மாதங்களாக யுத்தம் நடைபெறுகின்ற போதும் கூட சேர்பியர்களை ஓர் இனப் பண்

ஆக்கிரமிப்பாளர்களுக்கும் வஞ்சிக்கப்பட்ட பொஸ்னிய முஸ்லிம்களுக்கும் இடையேயானது. இதில் ஒவ்வொரு தடவையும் சேர்பியர்கள் தான் முன்னேறுகின்றனர் என்பதே பொஸ்னிய சிக்கல் குறித்த அமெரிக்காவின் பார்வைக் கோணமாக இருக்கிறது.

நண்பர்களுக்கு இடையிலும் யுத்தம்

பொஸ்னியச் சிக்கலின் தன்மை காரணமாக இதில் சம்பந்தப்பட்டுள்ள இரு அமைப்புக்களான நேட்டோவும், ஐ.நாவும் தமக்கிடையே பரஸ்பரம் குற்றச்சாட்டுக்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டியதாகி விட்டது. ஐ.நா அமைதிகாப்புப் படைகளுடன் அதனுடைய நேச நாடுகளான ஐரோப்பிய, ருஷ்ய பங்காளிகளை உள்ளடக்கியிருக்கிறது. பிஹாக்கை சேர்பியர்கள் பிடித்துக் கொண்ட பின்னர் நேட்டோ அந்தப் பலத்தை வெளிக்காட்டிய போது அது சக்திவாய்ந்த ஒன்றாக இருக்கவில்லை என்பது ஒருபுறம், 39 நேச நாடுகளின் 50 விமானங்கள் அங்குமிங்கும் பறந்து குண்டுகளை வீசிக் கொண்டிருந்த அதே வேளையில் சேர்பியர் ஐ.நா. அமைதிப்படையைச் சேர்ந்த 250-க்கும் அதிகமான பங்காளதேச இராணுவத்தைச் சிறைப்பிடித்து விட்டது.

எனினும் இறுதியாகக் கிடைத்த நிலைப்பாடுகளின் படி பார்க்கும்போது பெல்ரகன் தனது துருப்புக்களையும், மாலுமிகளையும், கப்பல்களையும் அட்ரியாட்றிக் கடலுக்கு மீளப் பெறவும் அடையாளத்திற்கு மட்டும் சில படையினரை நிறுத்தி வைக்கவும் விரும்புவதாகத் தெரிகிறது. சேர்பியரைத் தாக்குவதற்கு ஊக்கம் அளிக்க விரும்பும் அதே சமயம் தனது தரைப்படையை ஈடுபடுத்துவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை. இதன் காரணமாகக் கோபமும், கூர்மையான கசப்பான பிரிவினைவாதமும் தோன்றியிருக்கிறது என்பது வட அத்திலாந்திக் சபைக் (நேட்டோ) கூட்டத்தின் மூலம் உணர முடிகிறது. பிஹாக்கைச் சுற்றி கரை ஆயுதப்படை அணியினரை நிறுத்தவும் திட்டமிட்ட வகையில் கேந்திர இலக்குகள் மீது விமானத் தாக்குதல் நடத்தவும் ஐ.நா படை ஒன்றின் மூலம் சேர்பியரைப் பின்தள்ள வைக்கவும் அமெரிக்காவின் பென்ரகன் ஆலோசனை கூறியது. மேலதிக படையினரை எங்கிருந்து பெறுவது என்ற கேள்வியின் அடிப்படையில் பிரான்ஸ் இதனை ஆட்சேபித்தது. பொஸ்னியாவில் உள்ள ஆயுதத் தடையைத் தளர்த்த அமெரிக்கா முயற்சிப்பதை அமைதி காப்புப் படையினருக்கு எதிரான தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்ற அச்சத்தின் அடிப்படையில் நேச நாடுகள் விரும்புவதாக இல்லை.

ஆக மொத்தத்தில் பார்க்கும் போது மேற்கு நாடுகளின் தலையீடு என்பது பொஸ்னியாவின் யுத்தம் நீடிப்பதற்கு வழிவகுக்கிறது எனலாம். தாக்குதல்கள் நடத்துவதற்கான முன் அனுமதி இல்லாமலே ஐ.நா படைகள் ஈடுபடுத்தப்பட்டிருப்பதையும் வான் தாக்குதல்கள் நடத்தப்படுவதையும் கட்டுப்படுத்தக் கூடாது என்ற நேட்டோவின் நிலைப்பாடும் இதைத்தான் காட்டுகிறது. ஐ.நா. படையின் தளபதிகளே தாம் பாதுகாக்க முனையும் மக்கள் மீதே வான்வழித் தாக்குதல்கள் நடத்தப்படுவதைப் பலப் பிரயோகம் செய்யப்படுவதை வரவேற்பதாக இல்லை. இவற்றின் விளைவாக சர்வதேச உதவிகளில் தங்கியிருக்கும் அகதி முகாம்களின் எண்ணிக்கைகள் தான் பெருகுகின்றன. நேட்டோ நேச நாடுகளும் அவர்களைச் சேர்ந்த ஐந்து நாட்டுப் பிரதிநிதிகளும் சேர்ந்த குழு பொஸ்னியாவைப் பிரிவிடுதல் செய்வதற்கான ஒரு திட்டத்தைக் கொண்டிருந்தது. தங்களுடையதும், தங்களுக்குள்ளே தோன்றியதுமான இவ் உடன்பாட்டை அமுல்படுத்த முடியாத நிலை தோன்றிய காரணத்தால் ஏற்பட்ட அசுத்த மனத்தோடு யுத்தத்தை எப்படித் தொடர்ந்து நடத்தி முடிப்பது என்பதை அறியாதவர்களாக இப்போது மாறிவிட்டனர். இதனால் தங்களுடைய ஆவேசத்தைத் தீர்த்துக் கட்டுவது ஒன்றையே செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள்.

இப்படியாகப் பலப்பல முரண்பாட்டுக் கொள்கைகள் அதிகார துஷ்பிரயோகங்கள், முடிவுகள் எடுப்பதில் சிக்கலான நிலைமைகள் எனப் பலவும் சேர்ந்து போயிருக்கிறது. பொஸ்னியாவின் நிலை இதனால் தமது நாட்டில் சமாதானமோ, சாவோ என்று அறிந்து கொள்ளக்கூட முடியாதவாறு ஆகி விட்டது. பொஸ்னிய மக்கள் நேட்டோ, ஐ.நா. அமெரிக்கா என அளந்துமே பொஸ்னியச் சிக்கலில் தோற்றுப்போய்விட்டனர் என்பது ஒரு புறம், ஐரோப்பியர்களின் இயலாத் தன்மைகள் என்பது இன்னொரு புறம், "அகதிகளும் இல்லை, தங்குவதற்கு இடங்களும் இல்லை. சேர்பியர்களின் தாக்குதலுக்கு முகங் கொடுக்க வேண்டிய இக்கட்டான நிலை எங்களுக்கு" என்று பொஸ்னிய மக்கள் எழுப்பும் குரல் உலகின் செவிகளில் உறைப்பதாக இல்லை என்பதே கவனத்திற்கு உரியது.

ரைம், நவம்பர் 24,
டிசம்பர் 5, 12, 19, 1994
நியூஸ்வீக், ஒக்ரோபர் 31,
நவம்பர் 21, 28, 1994.

★

அமெரிக்க ஜனாதிபதி மாளிகையும் அதன் பாதுகாப்பும்

தமிழில் :
திரு. இருபைரசா

உலகில் ஜனநாயகத்திற்கு ஒரு சின்னமாக மதிக்கத் தக்கதாக உள்ள அமெரிக்க ஜனாதிபதியின் அரசு இல்லமான வெள்ளை மாளிகை அது நிலவி வந்த கடந்த 194 ஆண்டு காலத்தில் முன்பு ஒரு பொழுதுமே துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானதில்லை. 1914 ஆம் ஆண்டில் பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்கள் அதை நோக்கி வந்த வேளையில் எதிர் கொள்ளத் தயார் நிலையில் இருக்காத அமெரிக்கர்கள் வேறு வழி மாநிலங்களில் படை ஒரு போதுமே வெள்ளை மாளிகையை அடையவில்லை.

ட்ரூமன் ஜனாதிபதியாக இருந்த போது 1950 இல் வெள்ளை மாளிகை திருத்த வேலைகளுக்கு உட்பட்டு இருந்ததால் தெருவில் மறுபுறத்தில் இருந்த பிளேயர் மாளிகையில் அவர் குடியிருந்த வேளையில் அவரைப் படுகொலை செய்ய முயன்ற இரண்டு வெறி கொண்ட போர்டோ ரீக்கோ தேசிய வாதிகள் தாக்குதல் நடத்தினர். அவர்களில் ஒருவன் தெருவோரத்தில் கொல்லப்பட்டான். வெள்ளை மாளிகைக் காவலர் ஒருவரும் இறந்தார்.



அந்த வேளையில் அவ்விடத்தில் நின்ற ஒருவர் துப்பாக்கி நபர் 27 முறை வெள்ளைமாளிகை மீது சுட்டு விட்டு ஓடும் போது எடுத்தபடம்.

ஆனால் 1994 ஒக்ரோபர் 29 ஆந் தேதி கன்று கொலொராடோ ஸ்பிறிங்ஸ் என்ற இடத்தைச் சேர்ந்த மெத்தைத் தையற்காரனான 26 வயது பிரான்ஸிஸ்கோ மாடின்ரோன் என்பவன் மனமொடிந்த நிலையில் கோபமுற்றுத் துப்பாக்கிச்சூடு நடத்திய காலவரை அந்த மாளிகையின் மீது சன்னங்கள் பாய்ந்தது கிடையாது. அவன் தனது மேலாடைக்குள் இருந்து இழுத்தெடுத்த சீனத் தயாரிப்பான அரை வாசி தானியங்கும் எஸ். கே. எஸ் தாக்குதல் துப்பாக்கியால் மாளிகையின் வடக்குப் பக்கத்தில் நின்று 27 முறை சுட்டான், ஐந்து சன்னங்கள் அந்த மாளிகையின் 1.2 மீற்றர் தடிப்பான கெங்கற் சுவரில் துளை அடையாளங்களை ஏற்படுத்தின.

மாளிகையின் மேற்குப் பக்கத்துக்கு அருகே உள்ள பத்திரிகை மகா நாட்டு அறையின் சுவரின் யன்னலைத் தகர்த்துக்கொண்டு வந்த ஐந்து சன்னங்கள் சிதறல்களை ஏற்படுத்தின. பல சன்னங்கள் மரங்களில் பட்டுச்சிதறின. அந்த வேளையில் மாளிகையின் உள்ளே தொலைக்காட்சியில், காற்பந்து விளையாட்டு ஒன்றைப் பார்த்துக் கொண்டு இருந்த ஜனாதிபதி கிளின்ரன் அந்த இடத்தில் மிகுந்த பாதுகாப்பான பகுதியில் இருந்தவர் ஆவார். அங்கே சன்னம் துளைக்காத கண்ணாடியும், அவருக்கும் துப்பாக்கியால் சுட்டவனுக்கும் இடையில் இருந்த பல இரகசிய காவற்றுறை வீரர்களின் நிலையும் அவருக்குக் கவசமாக அமைந்தன.

அமெரிக்க வழக்குத் தொடுநர்கள் அங்கே அருகாமையில் பிக்அப்,



ரெக்ஸாஸில் உள்ள டாதகாட்பு நிறுவனம் ஒன்றில் வேலைசெய்யும் 34 வயதான துப்பாக்கி நபர் ஹரி றெகோஸ்கி மீண்டும் தோட்டா நிரப்ப முற்பட்ட போது மடக்கிப் பிடித்து விட்டார்.

றக்வண்டி ஒன்றில் இருந்த குறிப் புக்களையும், வேறு பொருள்களையும் டுறான் தன்னுடன் கொலொறாடோவில் புறோட்மூர் பயணிகள் வீடுதியில் வேலை செய்யும் தொழிலாளி ஒருவருக்குக் கூறியதாகச்

கொல்லப்படும் அச்சுறுத்தலான சொற்களையும் வைத்துக் கொண்டு அவன் மீது கொலை எத்தனக் குற்றச்சாட்டில் வழக்குத் தொடுக்க ஆலோசித்துக் கொண்டுள்ளனர். இதற்கிடையில் அமெரிக்க ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எப்படி என்ற கேள்வி மீண்டும் தலைதூக்கி நிற்கிறது.

அந்த இரகசியக் காவல்துறையைத் தனது அதிகாரத்தின் கீழ் கொண்டுள்ள நிதி அமைச்சர் லொயிட் பென்ட்சன் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டிருக்கும் திட்டமிடல் ஒன்றில் இந்த வெடிவைப்பும் வெள்ளை மாளிகையின் பாதுகாப்பு முறைகளும் உட்படுத்தப்பட்டுப் பரிசீலனை செய்யப்படும் என்று கூறினார். சென்ற செப்ரெம்பர் மாதத்தில் சிறுவிமானம் ஒன்று வெள்ளைமாளிகை வளவிற்குள் நொருங்குண்டு தரையிறங்கி ஜனாதிபதியின் படுக்கை அறைக்குக் கீழே உள்ள சுவரில் மோதி அந்த விமானத்தை ஓட்டிவந்த மனக்குழப்பம் முற்ற விமானியை மாத்திரமே கொல்லுறைத் தொடர்ந்து அத்திட்டமிடல் தொடங்கப்பட்டது. அந்த மாளிகைத் தோட்டத்தையும் கட்டடத்தையும் பராமரிப்பதில் பொறுப்பாக உள்ள தேசிய பூங்காக்கள் துறை வெள்ளை மாளிகையினைப் பேணிப்பாதுகாப்பதற்கும் சுற்றுலா மற்றும் இடவசதி போன்றவற்றிற்குமாக நீண்டகாலத் திட்டம் ஒன்றைத் தீட்டிக் கொண்டுள்ளது. வெள்ளை மாளிகை உலகின் அதிகாரத்தின் அரங்கமாக உள்ளதால் ஒரு புது அமைவு தேவைப்படுகிறது.

அந்தச் சூட்டுச் சம்பவத்திற்குப் பின்பு ஜனாதிபதியின் பாதுகாப்பிற்குப் பொறுப்பான இரகசியப் பாதுகாப்புச் சேவை அதிகாரி புதிய ஆலோசனை ஒன்றை முன்வைத்து பாதுகாப்பு அலுவலர்களுக்கு பார்வையாளர்களின் மீது கட்டுப்பாடு செலுத்துவதை இலகுவாக்க வெள்ளை மாளிகை முன்னுள்ள பெனிசில்வேனியா தெருவில் ஒரு பகுதியை மூடிவிட வேண்டும் என்றார்.

உண்மையில் பார்க்கப்போனால் அந்த இல்லத்தின் உள்ளே சுறுசுறுப்பாக வேலையில் ஈடுபட்டிருப்பதும் அது புலப்படக் கூடியதாக இருப்பதும் தலைமைத்துவத்திற்கான சரக்குத்தான். தேசிய பூங்காக்கள் துறையிடம் ஏதாவது இயற்கையாகவோ வேறுவிதமாகவோ ஏற்படும் அனர்த்தங்கள் ஏற்படும் இடத்து மீண்டும் இயன்ற அளவுவிரைவாக வெள்ளை மாளிகையை இயங்க வைக்கவும். ஜனாதிபதி பொது மக்களால் பார்க்கப்படவும் அந்தப் பழக்கப்பட்ட இடத்தில் தனது கடமைகளில் ஈடுபட்டு இருக்கவும் ஏற்றதாக ஏற்பாடு செய்ய அவசரச் செயல் திட்டங்கள் உள்ளன. வெள்ளை மாளிகையைப் போல் அதிகாரத்திற்கு அடையாளமோ வேறொன்றும் இல்லை என்று அந்தத் திட்டமிடல் பிரிவைச் சேர்ந்த ஒருவர் கூறினார்.

லின்டன் ஜோன்சன் ஜனாதிபதியாக இருந்தபோது வெள்ளை மாளிகைக்குப் பின்னால் இருக்கும் பெனிசில்வேனியா பெருந்தெருவையும், ஈதொரு தெருவையும் மூடி இவற்றை நிலத்திற்கு அடியில் சுரங்கப்பாதைகளாக அமைத்து அதனால் வரும் இடப்பரப்பையும், அதனை அடுத்துள்ள லாபேய் சதுக்கத்தையும் உள்ளடக்கிய 7.2 ஹெக்ரெயார் இடப்பரப்பில் ஜனாதிபதியின் பூங்கா என்று ஒன்றை அமைக்கத்திட்டம் இடப்பட்டது. அதன்படி அங்கே வர்த்தக நிலையங்கள் கொண்டதெரு ஏதும் இருந்திருக்காது. "அப்படி நடந்திருந்தால் இப்பொழுதிலும் பார்க்க மிக நன்றாக இருந்திருக்கும்" என்று வெள்ளை மாளிகையின் வரலாற்றாளர் வில்லியம்சியேல் கூறினார்.

"அதனால் உல்லாசப் பயணிகளை மேலும் இலகுவாகக்கட்டுப்படுத்தக்கூடிய நிலை ஏற்பட்டிருக்கும் என்பதுடன் அவர்களும் ஒரு பூங்காச் சூழலில் நிற்பதால் மேலும் அருகாமையில் இருப்பதான ஓர் உணர்வை அடையக்கூடியதாக இருந்திருக்கும்" என்று அவர் கூறினார்.



அருகில் நின்ற மெயிலான்டைச் சேர்ந்த கென்டேவிஸ், 24 வயது துப்பாக்கி நபரின் கால்களைப் பிடித்து அடக்கிக் கொள்ள அவனைக் கைது செய்ய வெள்ளைமாளிகைப் பாதுகாவலர்கள் வேலிக்கு மேலால் பாய்ந்து வந்து கொண்டிருக்கின்றனர்.

வெடி வைத்தவனை பாதுகாப்பு அதிகாரிகள் மடக்கிப் பிடித்து கைவிலங்கு பூட்டுகின்றனர். பின்பு அவன் மீது ஜனாதிபதியைக் கொலை செய்ய எத்தனித்ததாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

பனிப்போர் நிலவியகாலத்தில் மாளிகையின் பாதுகாப்புத் துறையினர் வெள்ளை மாளிகைக்கு ஏற்படக்கூடிய பயங்கரவாத அச்சுறுத்தல்கள் பற்றிய ஒத்திகைகளை நடத்திப் பார்த்த பொழுது அவர்களால் ஒரு தீர்வு காணமுடியாத ஓர் எதிர்பார்க்கப்படக்கூடிய

ஆபத்தாகவும் இருந்தது. வெடிப் பொருள் நிரப்பப்பட்ட வர்த்தக விமானம் ஒன்று வோஷிங்டன் தேசிய வானூர்தி நிலையத்தின் வழமையான தரையிறக்க முறைகளுக்கு அமைய அங்கு தரையிறங்கிய பின்பு அங்கிருந்து திடீரென்று ஒரு தற்கொலைத் தாவலில் வெள்ளைமாளிகையை இலக்கு வைத்து வந்து மோதுமானால் என்ன செய்வது என்பதாகும், அதற்கு ஒரேஒரு பதிலாக அந்த விமான நிலையத்தை மூடுவதுதான் வழி என்று கூறப்பட்டபோது அரசுப் பேரவையான காங்கிரஸ் அதனைப் பரிசீலிக்க மறுத்துவிட்டது. ஏனெனில் அது பாராளுமன்றுக்கு அருகில் இருப்பதும் அதனை அடுத்துள்ள மோட்டார் வாகனத் நிறுப்பு வசதிகளும் சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கு உள்ள ஒரு பெரும் வசதி வாய்ப்பாகும்,

பல அதிகார ஆதிக்கங்கள் சந்தேகத்திற்கு இடம் இல்லாமல் பாதுகாப்பைச் சிக்கலாக்குகின்றன. பெனிசில்வேனிய பெருந்தெருவை கொலம்பியா மாவட்டக் காவல் துறை கட்டுப்படுத்துகிறது. அதன் கரையோர இருமருங்கு நிலப்பரப்பைத் தேசிய பூங்காக்கள் துறை பேணுகிறது. பாதுகாப்புச் சேவையினர் வேலிக்கு உட்புறத்திலும் மாளிகையின் உள்ளேயும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாகச் செயற்படுகின்றனர். அந்த சூட்டுச் சம்பவம் நிகழ்ந்த போது கூட பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த பலர் சீருடைகளும் தோலாலான மேற்சட்டைகளும் அணிந்து வெள்ளை மாளிகைச் சுற்றாடலில் நடமாடிக் கொண்டு இருந்தனர். சில வருடங்களுக்கு முன்பு தேசியப் பூங்காக்கள் துறை தனது சீருடை தரித்த காவல் பிரிவினரைக் கொண்டு ஒரு நாளில் நான்கு முறை மாறும் காவல் வலம் ஒன்றை வெள்ளை மாளிகையைச் சுற்றி நடத்தியது. ஆனால் அது காலகதியில் ஒரு காவல் வீரர் மோட்டார் ஸ்கூட்டரில் ஒரு நாளைக்கு ஒருமுறை வந்து நோட்டமிடும் கடமையாகத் தேய்ந்து குறைந்தது.

இப்போது அந்தப் பாதுகாப்புச் சேவையினர் மீண்டும் சீருடை தரித்த காவல் வீரர்களை ஒருவரை ஒருவர் கண்ணால் தொடர்பு கொள்ளக் கூடிய விதத்திலும் சந்தேகத்திற்கு இடமாக நடமாடித் திரிவோரையும் கண்டு கொள்ளக் கூடியதான பயிற்சி கொடுத்துச் சேவையில் ஈடுபடுத்தத் திட்டம் போட்டுக் கொண்டு உள்ளனர்.

ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு அளிப்பது ஒரு பொதுவான முறையாக ஆரம்பிக்கப்பட்டு இன்று அது தனக்கே உரிய பெருந் தொகை அதிகாரிகள் கொண்ட அமைப்பொன்றாக வளர்ந்துள்ளது. முதலாவது ஜனாதிபதி ஜோர்ஜ் வோஷிங்டன் குதிரைச் சவாரியில் சென்றபோது அனேகமாக ஓர் ஆயுதந் தரித்த நண்பனைத் தனக்கு அருகில் குதிரையொன்றில் ஏறிச் சவாரிவரச் செய்தார். ஜனாதிபதி ஜேம்ஸ் மொன்றோ வெள்ளை மாளிகையில் பெரும் வரவேற்பு உபசாரங்கள் நிகழ்ந்தபோதெல்லாம் இலக்குப் பிசகாமல் சுடக்கூடிய துப்பாக்கி வீரர்களை மாளிகையின் கூரைமீது [illegible]க்கு நிறுத்தினார். ஜனாதிபதி பிரங்லின் பியர்ஸ் தான் முதன் முதலில் முறையானதொரு காவல் பிரிவை அங்கு ஏற்படுத்தினார். ஏபிரகாம் லிங்கன் பதவி வகித்தபோது அதனை அலன் பிங்காடனின் தலைமையில் தொடரச் செய்தார். முதலில் கள்ளக்காசு நோட்டுக்கள் அச்சடிப்போரை மடக்கவென அமைக்கப்பட்ட இரகசியப்படை 1906 இல் ஜனாதிபதி தியடோர் ரூஸ்வெல்ருக்குப் பாதுகாப்புத்தரும் படையாக ஆனது.

பல வருடங்களாகப் பாதுகாப்புப் பிரச்சனை பற்றியும், பாதுகாப்பு வீரர்கள் இடநெருக்கடியான வேலை இடங்களில் இருந்து கடமை செய்வதைப் பற்றியும் செய்யப்பட்ட முறையீடுகள் காரணமாக வெள்ளை மாளிகையின் பாதுகாப்புப் பற்றிய யோசனைத் திட்டங்கள் மாறிமாறி வந்துள்ளன. சென்ற நூற்றாண்டில் ஒரு புதிய வெள்ளை மாளிகை ஒன்றை வோஷிங்டன் நகரில் பரந்த இடப் பரப்பு உள்ள நொக்கிறீக் பார்க் என்ற இடத்தில் கட்டுவது என்ற திட்டம் தீட்டப்பட்டது. இப்போது சென்ற வாரத்தில் தொலைக்காட்சி நேர்காணல் நிகழ்ச்சியில் பங்கு பற்றிய அமெரிக்கப் பொதுமக்கள் சிலர் வெள்ளை மாளிகையை ஒரு வைபவரீதியான அரும்பொருட் காட்சிச்சாலையாக மாற்றிவிட்டு ஜனாதிபதியையும், குடும்பத்தினரையும் காம்ப் டேவிற் போன்ற ஒரு இடத்தில் குடியிருக்க வைக்க வேண்டும் என்று கூறியதை எல்லோரும் காணக்கூடியதாக இருந்தது.

பல்வேறு சிக்கல் நிலைகள் அந்தக் கட்டடத்தையும் அதனுடன் தொடர்புடையவற்றையும் மாற்றி அமைப்பது பற்றிப் பல ஆலோசனைகள் முன் வைக்கப்படச் செய்துள்ளனர். இரண்டாவது உலகப் போர் நிகழ்ந்த காலத்தில் வெள்ளை மாளிகையின் கூரையில் பல பகுதிகளில் மண்மூடைகள் அடுக்கப்பட்டு இயந்திரத் துப்பாக்கிகளும் அங்கு பொருத்தப் படவேண்டும் என்று ஆலோசனை வழங்கப் பட்டது. ஆனால் வெள்ளை மாளிகையை விமானப்படையின் தந்திரமான மறைப்பு முறைகளின் படியாகத் தோற்றும் விதமாக வர்ணம் பூச வேண்டும் என்ற ஓர் ஆலோசனை முன்வைக்கப்பட்டபோது ஜனாதிபதி பிரஸ்லின் டரூஸ்வெல்ற் அதனைக் கேட்டு நகைத்துவிட்டு மறுத்து விட்டார்.

1991 இல் வளைகுடா யுத்தம் நிகழ்ந்த வேளையில் வெள்ளை மாளிகையின் மீது பயங்கரவாதிகள் தாக்கலாம் என்ற தகவல் அவ்வளவு உண்மையாக்கப்பட்டதால் பொது மக்கள் வெள்ளை மாளிகையடிக்குச் சுற்றுலா வருவது ஒரு வாரகாலத்துக்குச் சத்தமில்லாமல் இடைநிறுத்தி வைக்கப் பட்டதுடன் கட்டடத்தின் பாதுகாப்பும் இருமடங்காக அதிகரிக்கப் பட்டது.

ஜனாதிபதியைப் பாதுகாப்பதற்கான உண்மையான செலவுத் தொகை ஒரு பெரும் இரகசியமாக உள்ளதுடன் அது பற்றிக் கெபிடல் ஹில் வட்டாரத்திலும் வேறு பல இடங்களிலும் பலவிதமான கதை

கள் அடிபடுகின்றன. ''இந்தப் பாதுகாப்புச் சேவை மட்டுக்கு மீஞ்சிய ஓர் இழவடிப்பு'' என்று வெள்ளைமாளிகை அலுவலர் ஒருவர் வர்ணித்தார். அது உண்மையான பாதுகாப்பு என்ற படிக்கட்டைத்தாண்டி வேறெங்கோ நின்று கொண்டு தனது செயற்பாடுகளை சிக்கலாக்கிக் கொண்டுள்ளது என்று அந்த அலுவலர் கூறினார். அந்தப் பாதுகாப்புச் சேவைக்கான ஆண்டுச்செலவு 461 மில்லியன் டொலராக இருந்து கொண்டு உலகெங்கும் மொத்தம் 4,600 பேரை வேலைக்கு அமர்த்தியுள்ளது. ஆயினும் ஜனாதிபதிக்குப் பாதுகாப்பு வழங்க அதில் எவ்வளவு செலவாகிறது என்பது புரிந்து கொள்ளமுடியாததாக உள்ளது. ஆனால் பாதுகாப்புச் சேவை நிதி கோரும் பொழுதெல்லாம் அனேகமாக ஒரு பொழுதுமே பாராளுமன்றான காங்கிரஸ் அவை மறுப்புக் காட்டியதே இல்லை என்பதுடன் அந்தத் திணைக்களம் தனக்கே உரிய இறுமாப்பினால் பாதிக்கப்பட்டுக் கொண்டு உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. ''அவர்கள் நல்லவர்கள் தான், என்றாலும் அவர்கள் தாம் நினைக்கும் அளவிற்கு நல்லவர்கள் அல்லர்'' என்று பாதுகாப்புச் சேவையின் முன்னாள் அலுவலர் ஒருவர் கருத்துக் கூறியதுடன் அதில் உள்ளவர்கள் குடியியல் சுதந்திரங்களைச் சுருக்குவதில் மிகவான விருப்பம் உடையவர்களாக இருக்கிறார்கள் என்றும் கூறினார்.

வெள்ளை மாளிகையைப் பற்றி அது எப்படி 1914 டிசம்பர் 7 ஆந்தேதிக்கு முன்பு செயற்பட்டது என்பதை நினைவில் கொண்டுள்ளவர்கள் இப்போது இவ்விதமாக மனம் வருந்திப் பேசுகின்றனர். அந்த நாட்களில் வெள்ளை மாளிகை வளவு திறந்து விடப்பட்டதாக இருந்தது. பிள்ளைகள் அங்கே வெறுங்காலுடன் துள்ளி விளையாடித் திரிந்து ஐஸ்கிறீம் வாங்கிக் குடித்து மகிழ்ந்தனர்.

அப்போது அங்கிருந்த வேலி மூன்று அடி உயரமானதாக இருந்ததுடன் நாய்களை மட்டுமே உட்புக விடாமல் தடுக்கக் கூடியதாக இருந்தது. அங்கு கடமையில் நின்ற காவலர்கள் புன்னகையுடன் முகத்துடன் எல்லோரையும் பார்த்தனர். அங்கே புறுங்ஸ் நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள் மாளிகையின் முன்வாசலடிமட்டும் சென்று தங்கள் பெயர், முகவரி அச்சிட்ட அட்டைகளைப் பெட்டியிலே போட்டுவிட்டு ஜனாதிபதி ரூஸ்வெல்ற் தம்மை அங்கே ஏதும் வரவேற்பு உபசாரங்களுக்கு அழைப்பு அனுப்பமாட்டாரா என்றஎதிர்பார்ப்புடன் போனார்கள். திருமதி இலியானோர் ரூஸ்வெல்ற் அப்படியானவர்களை சில வரவேற்பு உபசாரங்களில் கலந்து கொள்ள அழைத்ததும் உண்டு.

கெவின் பிலிப்ஸ் என்ற கதாசிரியர் தமது நூலொன்றில் வோஷிங்ரனை ' இறுமாப்புக் கொண்ட தலைநகர்'' என்று கூறியுள்ளார். அவருடைய கதை ஒன்றில் ஓர் இளைஞர் தனது முகம் திறந்த காரில் 1930 களில் வெள்ளை மாளிகையைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது மழை பொழியத் தொடங்கவே காரை வெள்ளை மாளிகையின் தலைவாசல் போட்டிக்கோ உள்ளே செலுத்தி நிறுத்திவிட்டு மழை ஓய்ந்த பின்பு அதிவேகமாகச் செலுத்தி தெருவுக்குள் ஓட்டிச் சென்றாராம்.

இரண்டாம் உலகப் போரின் போது ஜப்பானில் பர்ள் ஹாபரில் அமெரிக்கர் சற்றும் எதிர்பாராத அதிர்ச்சியாக பேரிழப்பான பேரடி விழுந்து முன்பிருந்த வசதியான உலகவாழ்வு நொருங்கி விழுந்த பின்பு வெள்ளை மாளிகையில் முதலில் மேற்கொள்ளப்பட்ட செயல் அதன் பாதுகாப்பு எல்லையைக் கதவடியில் இருந்து வளவின் எல்லை இருந்த இரும்பு வேலிவரை அகட்டியதாகும். அன்று முதல் அது அப்படியே இருந்து வருகிறது என்பதுடன் இனிமேல் மேலும் அதனை அகட்ட வேண்டிவராலாம் போல் இருக்கிறது.

ரைம் நவம்பர் 14, 1994

★

காது கேளாத போது

ஒருவரின் செவிப்புலன் குன்றத் தொடங்கியதும் அவர் வானொலி தொலைக்காட்சி முதலியவற்றை உரத்து ஒலிக்க வைத்தும் கதைக்கும் பொழுது உரத்துக் கதைத்தும் கேட்கும் மற்றவர்களுக்குத் தொல்லை தரத் தொடங்கும் போது செவிப்புல ஒலி பெருக்கி ஒன்றை அணிந்து கொள்வது தான் ஏற்றது என்றாலும் அதன் அளவும் அது மற்றவர்களுக்கு இவருடைய காது மந்தம் என்று சொல்லாமல் சொல்வதாலும் சிறிது தயக்கம் காட்டக் கூடும். ஆனால் இப்பொழுது அந்தச் சங்கடத்தைப் போக்க சிக்காகோவின் பெல்டோன் இலத்திரனியல் நிறுவனம் காது ஓட்டைக்குள்ளேயே முழுமையாகப் பொருந்தும் ஒரு செவிப்புல ஒலிபெருக்கியை சந்தைப்படுத்துகின்றது. அந்தச் சிறிய சாதனத்தின் அளவும் செவியின் உட்புற நிழலும் சேர்ந்து அதனை வெளியே தோன்றவிடாமல் மறைப்பதனால் அணிந்திருப்பதை மற்றவர்கள் அவதானிக்க முடியாது போகலாம். ஆரம்பம் முதல் ஓரளவு செவிட்டுத்தன்மை உள்ளவர்களுக்கு இது உகந்ததாம். பெயர்: டப்ட் இன்விசியா. விலை: 1500 முதல் 2500 டொலர் வரை.

உலகின் ஆயுத வியாபாரிகள்

உலகில் இருக்கும் 190 நாடுகளில் 146 நாடுகளுக்கான ஆயுத விநியோக முகவராக இப்போழ்து அமெரிக்காவே விளங்குகின்றது. அமெரிக்காவிற்கு ஆயுத விற்பனவு பனிப்போர் முடிவுக்குப் பின் 134 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. உலகில் தற்போது முக்கியத் துவம் பெற்றுள்ள 48 முரண்பாடுகளில் 39இன் பின்னணியில் அமெரிக்க ஆயுதங்களே இருக்கின்றன.

ஐக்கிய அமெரிக்கா ஆயுத உற்பத்தியிலும், விற்பனையிலும் எப்போதும் ஈடுபட்டு வருகின்ற அதே சமயம் மற்றவர்கள் மீது இதற்காக குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவது தெரிந்ததே. 1986 களில் இது சுலபமாக இருந்தது. அப்போது உலக ஆயுத விற்பனையில் அமெரிக்காவின் பங்கு 13 சத வீதம் மட்டுமே, ஆனால் உலக ஆயுத விற்பனையில் அமெரிக்காவின் பங்கு இப்போது 70 சத வீதத்தையும் கடந்து விட்டது.

தமிழில்:
திரு. இளையவன்

1992 இல் பில் கிளின்டன் தனது தேர்தல் பிரசாரத்தின் போது ஆயுத வர்த்தகத்தைக் குறைப்பது பற்றியே பேசி இருந்தார். ஆனால் அவர் பதவியேற்று இரண்டு வாரங்களாவதற்கு இடையில் ஆயுத வர்த்தகத்தை நியாயப்படுத்த வேண்டிய அவசியம் நேரிட்டு விட்டது. ''ஆயுத உற்பத்தியாளர்களோடு சேர்ந்து உலகம் முழுவதிலும் ஆயுதங்களின் கொள்வனவாளர்களைக் கண்டுபிடிக்க முயற்சி செய்வோம்'' என்று கிளின்டன் நிர்வாகத்தின் வர்த்தக செயலாளர் தொன் பிறவுண் வாக்குறுதி வழங்கும் அளவுக்குக் கீழிறங்கி விட்டது. ''வெளிநாடுகளுக்கான ஆயுத விற்பனையானது தொழில் வாய்ப்புக்களைப் பெருக்குவதோடு, சதிகார உலகில் எங்களுக்கான அதிகாரத்தையும், செல்வாக்கையும் தேடித் தருகிறது'' என்பது அமெரிக்க ஆயுத வர்த்தகர் ஒருவரின் கருத்தாக இருப்பதையும் இங்கு குறிப்பிட்டுக்காட்ட முடியும்.



ஆர்ஜென்ரீனாவும் பிறேசிலும் எப்-16 ரக விமானங்களைக் கோரு மிடத்து அவ்வர்த்தகத்தை மகிழ்வுடன் ஏற்கத் தயாராக இருப்பதாக அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி வேறு கூறியிருக்கிறார். எகிப்தும் அது போன்ற இதர நாடுகளும் டீசலில் இயங்கும் 350 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நீர்மூழ்கிக் கப்பல்களைப் பெற்றுக்கொள்ள இருக்கின்றன. இவை கடந்த ஏப்ரல் மாதத்தில் அமெரிக்கா தனது கொள்கை நிலைப்பாடுகளில் மேற்கொண்ட மாற்றங்களின் மூலம் சாத்தியமாகி இருக்கிறது.

அமெரிக்காவின் ஆயுத அன்பளிப்புகள்

புத்தம் புதிய ஆயுத வகைகளைக் கொள்வனவு செய்ய முடியாத வறிய நாடுகளுக்கு உதவ பனிப் போர் நிலவிய காலத்தில் ஆயுத உற்பத்திச் சாலைகளில் தேங்கிக் கிடந்த

ஆயுதங்களைக் கொடுத்து உதவ வும் பென்ரகன் திட்டம் வகுத்துள் ளது. பென்ரகன் என்பது அமெரிக் காவின் இராணுவத் தலைமையக மாகும். இத் திட்டத்தின் மூலம் அமெரிக்காவுக்கும், ஏனைய நாடு களின் இ ரா ணு வ ங் க ளு க் கு ம் இடையே பரஸ்பர நல்லெண்ணத் தை ஏற்படுத்தவும், பல மில்லியன் டொலர் பணத்தை மிச்சம் பிடிக் கவும் முடியும் என பென் ர க ன் நம்புகின்றது.

மேலும் இவ்வாறு செய்யாது விட்டால் இந்த ஆயுதங்கள் உபயோகமற்ற துண்டு துணிக்கை களாகி விடும் எனவும் அது கருது கிறது. இந்தக் காரணங்களால் இடம் பெற்ற ஆயுத அன்பளிப்புக் கள் மூலம் எகிப்து 700 எம் - 60 ரக ராங்கிகளையும், 1500 இயந் திரத் துப்பாக்கிகளையும் பெற்றது. இஸ்ரேல் 15 F-15 ரக விமானங் களையும், 16 CH-53 ரக உலங்கு வானூர்திகளையும் பெ ற க் கூ டி ய தாக இருந்தது. மெக்சிக்கோ 48, 178 MI ர க கா ர் பை ன் கள் பெற்றது. கிறீசும், துருக்கியும் அமெரிக்காவின் நண் ப ர் க ள ா கி எப்-16 ரக விமானங்களில் பறந்து திரிவது சாத்தியமாகியது, கிறீஸ் 80 ஏ-7, ரக போர்க்கப்பல்களை யும், எப்-4ரக போர் வி மா ன ங் கள ையும், ஒரு நாசகாரியையும் பெற்றது. துருக்கிக்கு 28. ஏ. எச்1. ரக உலங்கு வா னூ ர் தி களும், 822 எம்-60 ரக ரா ங் கி களும், 72 தா னி ய ங் கி ஏவுகணைகளும் கிடைத்துள்ளன. இந்த நன்கொடை களைப் பார்வையிட்டு பரிசோதனை செய்த எந்த நா டு ம் ஏ ற் று க் கொள்ள முன்வரவில்லை என்பது ஆச்சரியமானது தான். இவற்றை எடுத்துச் செல்வதற்கான போக்கு வரத்துச் செலவு அந்நாடுகளுக்கு கட்டுப்படியானதாக இருக்கவில்லை என்பது புலனாகக் கூடியதே.

ஆயுத விற்பனைச் சந்தையில் அதிகரிக்கும் அமெரிக்க செல்வாக்கு

உலகளாவிய ஆயுத வி ற் ப னைச் சந்தை கடந்த வருடத்தில் பெரும் வீழ்ச்சி கண்டுள்ளது. 31.9

போய் விமானக் கண்காட்சியில் 25 மில்லியன் டொலர் பெறுமதி மிக்க உலங்கு வானூர்தியை வாங்க விரும்புவோர்பார்வையிடுகின்றனர்.

பில்லியன் டொலராக இது வீழ்ச்சி கண்டது. 1988 இல் இது 67.9 பில்லியன் டொலராக இருந்தது என்பதுடன் ஒப்பிடும் போது அரை வாசிக்கும் குறைவாகும். அமெ ரிக்காவின் பங்கு இ தில் வான ளாவ உயர்ந்து விட்டது. 89 இன் பிற்பகுதியில் பெர்லின் சுவர் தகர்க் கப்பட்டது முதல் அமெரிக்காவின் ஆயுத விற்பனை 82·7 பில்லியன் டொ ல ர் வரை உயர்ந்துள்ளது. ஏனைய நாடுகள் அ னை த் தும் சேர்ந்து 66.8 பில்லியன் டொல ருக்கே ஆயுத வி ற் ப னை செய் துள்ளன. 1993 இல் அமெரிக்கா ஆயுதங்களின் இடம் மாற்றுவதற் கான ஒப்பந்தங்கள் மூ ல ம் 22.3 பில்லியன் டொலர் பெ ற் று ள் ளது. இது விடயத்தில் இரண்டாவ தாக நிற்கும் ருஷ்யா 2.8 பி ல் லி யன் அமெரிக்க டொ ல ரு க் கும் பிரிட்டன் 2.3 பில்லியன் அமெரிக்க டொலருக்கும், ஒ ப் ப ந் த ங் கள் செய்துள்ளன. பென் ர க ன் 86 நாடுகளுக்கான ஆ யு த வி ற் பனவு களை மேற்கொண்டு வ ரு கி ற து. மேலும் 2.2 மில்லியன் டொலரை 50 நா டு க ளு க் கு இலவச ஆயு தங்கள் மற்றும் இராணுவ பண்டங் களின் கப்பல் கட்டணங்களுக்காக வாசிங்ரன் ஒதுக்கியுள்ளது. அத்து டன் உலகிலுள்ள 190 நாடுகளில் 146 நாடுகளுக்கான ஆ யு த வி ற் பனையாளராக அ மெ ரி க் கா வே இப்போது உள்ளது.

அமெரிக்க ஆ யு த சந்தையின் பங்கு வியாபாரமானது போ ட் டி யாளர்களுடைய தோல்வியின் மூல மாக எதிர்பார்க்கக் கூடிய ஊ க ங் களை விடவும் வேகமாக அதிகரித் துச் செ ல் கி ற து. கடந்த நான்கு வருடங்களில் அதாவது 1986-89, 1990-93 ஆம் ஆ ண் டு க ளு க் கு இடையில் பிரிட்டனின் ஏற்றுமதி 76 சத வீதமும், சீனாவின் ஏற்று மதி 68 சத வீதமும் வீ ழ் ச் சி கண்டுள்ளது. ஆனால் அமெரிக்கா வின் ஏற்றுமதியில் 134 சத வீத அதிகரிப்புக் கா ண ப் ப டு கி ற து. அமெரிக்காவின் ஆதிக்க மா ன து ருஷ்யாவின் பொ ரு ளா தா ர ச் சீர் குலைவுகளால் பென்ரகனின் பிர தான போட்டியாளர் பின் தள்ளப் பட்டிருப்பதாலும், வளை கு டா ப் போரின் வெற்றியினாலும் ப ர வி யுள்ளது.

இந்த ஆயுத விற்பனவுகளின் மூலம் மற்ற நாடுகளின் இ ரா ணு வத்தினர் மத்தியில் நல் லு ற வு களை ஏற்படுத்தவும், மற்ற நாடு கள் ஒவ்வொன்றும் தத்தம் பாது காப்பை நல்ல முறையில் பேண வும், பெருந் தொகையில் உற்பத் தியைச் செ ய் வ தால் அமெரிக்க ஆ யு த தளபாடங்களின் விலை யைக் குறைக்க மு டி வ தா க அமெரிக்க அதிகாரிகள் கூறுகின்ற னர். அமெரிக்காவின் வரவு செல வுத் தி ட் ட த் தி ல் துண்டு விழும் தொகையைச் சமாளிப்பதற்காகவே வெளி நாடுகளுக்கான ஆயுத விற் பனவுகள் ஊக்குவிக்கப்படுகி ற து என்றும், அமெரிக்காவின் ஆ யு த விற்பனைக் கொள்கையானது மக் கள் பாதுகாப்புடன் வாழ ஏ ற் ற ஒரு வழி என்றும், கூறி நியாயப் படுத்தப்படுகிறது.

ஆயுத விற்பனைகள் குறித்து மேற்கொள்ளப்படும் எந்தவொரு தீர்மானமும் நாட்டின் நன்மை கரு தியே எடுக்கப்படுகிறது. இந்த விற் பனவு இயற்கையாக விரிந்து போ வதற்கு விடப்படுவதில்லை என்று கிளின்ரன் நிர்வாகம் கூறிக் கொள் கிறது. அத்துடன் பல விதமான இராணுவங்கள் சேர்ந்து ஒ ரு பொது

எதிரியுடன் மோதும்போது ஒரே வகையான ஆயுதங்களுடன் இருப்பது, யுத்தத்தை இலகுவாக்குகிறது. இதற்கு வளைகுடா யுத்தம் ஒரு நல்ல அனுபவம் என்பதும், அமெரிக்க அதிகாரிகளின் கருத்தாக உள்ளது. இன்னும் ஒரு படி மேலே போய், பாதுகாப்புத்துறை ஒப்பந்தக் காரர்கள் வேலையின்றி இருக்கிறார்கள், நாங்கள் ஒரு நெருக்கடியான காலத்தில் இருக்கிறோம், வரவு செலவுத் திட்டப் பற்றாக் குறை அழுத்தங்களை ஏற்படுத்துகிறது என்றெல்லாம் கூறப்படுகிறது.

எப்-15 மற்றும் எப்-16 ரகப் போர் விமானங்களும், எம்-1 ரக ராங்கிகளும், ஏ. எச் 64 ரக உலங்கு வானூர்திகளும், வெளி நாட்டு விற்பனைக்காக இப்போது உற்பத்தியாகின்றன. இந்த வெளி நாட்டு விற்பனைக்கான உற்பத்திகளுக்காக கிளின்ரன் நிர்வாகம் ஒரு பில்லியன் டொலரைக் கடனாகவும் வழங்க உத்தேசித்துள்ளது.

1993 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வருடம் முழுவதும் இத்துறை, வேலை வாய்ப்பை வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நோக்கம் எதுவாக இருக்கின்றபோதும் பென்ரகனும், அதன் விநியோகத்தர்களும் இத்தகைய தொழிற்சாலைகளைத் தொடர்ந்தும் பேணவே விரும்புகின்றனர். உதாரணமாக விமானப் படை பாவித்த நிலையிலுள்ள 300 எப்-16 ரக விமானங்களை இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மொஸ்கோ போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. இவை புதிய விமானங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலையில் இல்லை. மேலும் இவ்விற்பனை மூலம் பெறப்படும் 2 மில்லியன் டொலர் இலாபம் 75 புதிய எப்-16 ரக விமானங்களை நிர்மாணிக்கப் போதுமானதாகும்.

இதேவேளை, அமெரிக்காவின் ஆயுத விற்பனவுகள் தொடர்பாக வாடிக்கையாளர்களிடமிருந்தும் பரவலாக முறைப்பாடுகள் கூறப்படுகிறது. உலக அரங்கில் முக்கியமான 48 முரண்பாடுகளில் 39 முரண்பாடுகள் அமெரிக்காவின் ஆயுதங்களே பின்னணியில் இருக்கின்றன என்பது அதில் பிரதானமானது.

அமெரிக்காவின் ஆயுத ஏற்றுமதியில் விமானங்களையும், ராங்கிகளையும் விட சிறிய ரக ஆயுதங்களே முதலிடம் பெறுவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். இதனால் அதிகளவில் இரத்தம் சிந்தப்படுவதில்லை என்பது அவர்களின் கருத்து. ஆனால் றுவாண்டாவில் இத்தகைய ஆயுதங்கள்தான் பெருமளவிலான கொலைகளுக்குக் காரணம் ஆகியுள்ளது. எனினும் பெரும் எடுப்பிலான ஆயுத தளபாடங்களுடன் இராணுவத்தினர் பாதுகாப்புக்கு இருக்கும்போது, ஒரு புயல் வீசும்போது பலர் உயிரிழப்பது தவிர்க்க முடியாதது தானே எனக் குறிப்பிடவும் படுகிறது.

அதாவது அமெரிக்காவின் ஆயுத விற்பனையால் பிரதேசத்தின் அதிகார சமநிலை பாதிக்கப் படமாட்டாது என்பதே அமெரிக்க நிர்வாகம் கூறும் பதிலாக இருக்கிறது. எனினும் வெளிநாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது பெரும்பாலும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்துகிறது. பனாமா, ஈரான், சோமாலியா மற்றும் ஹெய்ற்றி போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவ அணிகள் சந்தித்த எதிர்ப்பு இதற்கு ஓர் எடுத்துக் காட்டு. அவர்களின் எதிரிகள் அனேகமாக அமெரிக்காவின் ஆயுதங்கள், பயிற்சிகள் மற்றும் இராணுவ தந்திரோபாயங்களைப் பெற்றவர்களாகவே இருந்து உள்ளனர். இது தொடர்பாக பென்ரகனும், கடற்படைப் புலனாய்வாளர்களும் அமெரிக்க நிர்வாகத்திற்கு எச்சரிக்கை செய்துள்ளனர், புகார் கூறியுள்ளனர். பிராந்திய நாடுகளின் பலம் அதிகரிப்பது தொடர்பாகவும் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது.

ரைம், டிசம்பர் 19, 1994

★

கனன் நிறுவனத்தின் புதியரக வீடியோ கமெரா

வீசீ-சீ ! என்ற குறியீடுடன் கனன் நிறுவனம், சிறிய குழுவினர் கலந்துரையாடல் செய்யும் போது, சிலரைத் திரையில் முன்னுக்கும் வேறு சிலரைத் திரையில் பின்புறமும் மாற்றி ஆறுவிதமாகப்படம் பிடிக்கும் தொழில்சார் வீடியோ படக்கருவியைத் தயாரித்துள்ளது. இதன் விளக்கத்தைப் பற்றிக் குழுவின் தலைவர் பேசும்போது அவருக்குப் பிரதான இடம் கொடுத்துப் படம் பிடித்தல், தலைவர் குழு அங்கத்தவர் ஒருவரைக்குறிப்பிட்டு பேசும்போது அவரைத் தனித்துக்காட்டுதல், பின்பு இன்னுமொருவர் குறிக்கிடும் போது அவரையும் முன்னுக்குக் கொண்டுவருதல், சாதாரண வீடியோ கமெராவிலும் இதைச் செய்யலாந்தானே என்ற கேள்வி எழுகின்றது. விந்தியாசமென்னவென்றால் இந்த வீடியோ கமெராவைச் சுமந்தபடி கலந்துரையாடல் செய்வோர் மத்தியில் உலாவ வேண்டும். ஆனால் கனன் இப்போது தயாரித்திருக்கும் கமெரா ஒரு குறிப்பிட்ட தேவைக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. கலந்துரையாடலைக் குழப்பாமல் தூரத்திலிருந்து படம் பிடிக்கும் ஆற்றல் இந்தப் புதியரகக் கருவிக்கு உண்டு. இந்தப் புகைப்படக் கருவி ஒரு கணனிப் பொறியுடன் பொருத்தப்பட்ட நிலையில் செயற்படுகின்றது. சாதாரண வீடியோக் கருவி அப்படி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விலை 2000 டொலர்.

வந்து ஒத்துழைப்பதாகக் கூறுவது அதிர்ச்சி தருகிறது என்று கூறுகிறார்கள். விவசாயிகள் இழப்பீட்டடிப்படையில் நில உரிமைப் பேச்சு வார்த்தைகளைச் சுமுகமாகத் தீர்க்கத் தயாராக உள்ளார்கள் என்றே தெரிகிறது.

தொழிலாளர்கள் அரசுப் பின்பலத்துடன் இயங்கும் இரு வைப்பகங்களிலிருந்து (Banks) கடனுதவி பெற்று வைற்ஹோலின் 33 வீதம் பங்குகளை வாங்குவதற்கான நடவடிக்கைகளுக் கெனப் பிரதிநிதித்துவக் குழுவொன்றை உருவாக்கி உள்ளார்கள். விவசாயப் பண்ணை உற்பத்திகளை விற்பனை செய்து பெறும் வருவாயிலிருந்து கடனைச் செலுத்தி, பத்து வருடங்களில் 28 000 டொலர் மதிப்புடைய பங்குக்கு ஒவ்வொருவரும் உரிமையாளராகலாம் என்பது இவர்களின் கணிப்பீடு. இது சாத்தியப்படுமானால் ஆண்டான் அடிமை நிலைமாறித் தொழிலாளர் சொத்துரிமையாளராகும் அதிசயம் நிகழலாம்.

தொழிலாளரின் இந்தத் திட்டம் நிலக் கைம்மாற்றம் அன்று; இலாபம் அளிக்கும் துணிகர முயற்சியாகும். விவசாயப் பண்ணையில் தொழில் புரிபவர் வில்ஹெல்மினாவிசெர். இவருடைய மூன்று சகோதரிகளும், இவரின் கணவரும் விவசாயப் பண்ணைத் தொழிலாளிகளே. '' கடந்த காலம் எங்களுக்கு எதையும் தரவில்லை. இப்பொழுது எதிர்காலத்துக்கு நாம் ஏதாவது சேமித்து வைக்க வழி பிறந்திருக்கிறது '' என்கிறார் இவர். வைற்ஹோல், '' இது இருசாராருக்கும் வெற்றி – வெற்றி நிலைமையாகும் '' என்கிறார். தொழிலாளருக்குப் பாதுகாப்புணர்வும், விவசாயப் பயன்களும் கிடைப்பதால் அவர்கள் விசுவாசமாகத் தொழில் புரிவார்கள், வைற்ஹோலின் தாராண்மை, அவரின் பழத்தோட்டத்தில் வேலை செய்யும் பெண்கள் அவரை, '' அப்பா '' என்று அழைக்க வைத்திருக்கிறது.

இத்தகைய பரிசோதனைகள் நம்பிக்கையளிப்பனவாயினும், டேர்ண்கோப் வாசிகளான பெடி கூட்டத் தினரைப் பொறுத்தவரையில் வித்தியாசமானவை. 1964 இல் இவர்களை இவர்களின் பாரம் பரியப் பிரதேசமான லெபோவிலிருந்து அன்றைய வெள்ளையரசு வெளியேறுமாறு நிர்ப்பந்தம் கொடுத்தது. இவர்களிலே கடைசிக்குடியானவரையும் அன்றைய காவல் துறையினர் 20 ஆண்டுகளுக்கு முன்பு வலுவந்தமாக வெளியேற்றினர். இவர்களின் பழத்தோட்டங்கள் போர்ப்பயிற்சி நிலையமாக மாற்றியமைக்கப்பட்டன. அவ்வேளையில் சுமார் 10 டொலர் ஒவ்வொரு குடும்பத்துக்கும் இழப்பீடாக வழங்கப்பட்டது.

மனித உரிமை நிறுவனங்களின் பக்கத்துணையோடு பெடிகள் 1989 இல் தமது நில உரிமைகளை மீளப் பெறச் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டனர். நீண்டகாலமாக இவ்விடயத்தில் மண்டேலா அரசு வாதாடி வந்து இம்மாதத் தொடக்கத்தில் விவசாயிகளைத் தமது தாயகத்துக்குத் திரும்ப அனுப்பியிருக்கிறது. நாள் தோறும், கூட்டங் கூட்டமாக இவர்கள் தங்கள் நிலங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தாயகம் திரும்புவதற்கான ஒழுங்குகளை கலுஷிகலுஷி என்பவர் மேற்கொண்டு வருகிறார். அடுத்த வருடத் தொடக்கத்தில் 20,000 பேர் திரும்புவர் என எதிர்பார்க்கப்படுகிறது. '' வீடுதிரும்புதல் என்பது எத்தகைய உணர்ச்சியநுபவம் என்பதை உம்மால் நம்பமுடியாது. நாங்கள் முன்மரங்களின் கீழ் நிற்கும் பொழுது புதர்கள் இசை பாடுகின்றன. எத்தகைய மகிழ்ச்சியான நத்தார் நாளை நாம் கொண்டாடப் போகிறோம் என்பதைச் சொல்லால் விளக்க முடியாது '' என்கிறார் கலுஷி.

கறுப்பரான விவசாயிகளை நிலமற்றவர்களாக ஆக்குதலும் அவர்களை விவசாய முயற்சியிலிருந்து அப்புறப்படுத்தலும் தேசியக் கட்சி பதவிக்கு வருமுன்பே தொடங்கி விட்டன, இனத்துவேஷம் அன்று சட்டவரம்பு கொண்ட ஒன்றாகக் கடைப்பிடிக்கப்பட்டது. மண்டேலாவின் அரசு வரலாறு பூர்வமாக இந்த அநீதியை ஒழித்துக் கட்டுவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காண்பதற்கு அது திட்டமிட்டுள்ள ஐந்தாண்டு காலத்திலும் கூடிய காலம் தேவைப்படும். ஓராண்டுக்கு முன்பு அவர் எடுத்துக் கொண்ட சூளுரையான, தொழில் வாய்ப்புகள், வதிமனைகள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் காலம் எடுக்கும். இருந்தபோதிலும் தன்னம்பிக்கைக்கான ஒளிக்கதிர்கள் தோன்றி, தென்னாபிரிக்கர் பலருக்கும் உற்சாகம் அளிப்பதாக இவ்வாண்டு அமைகிறது.

பிற்றர் ஹோதோணின் (கேப் ரவுண் செய்தியறிக்கையிலிருந்து திரட்டப்பட்டது.

மைம் டிசம்பர் 19, 1994.

★

கணனி ஒலிக்கருவி

இரண்டு ஸ்பீக்கர்களையும் (ஒலிப்பெட்டிகள்) இந்தக் கணனி ஒலிக்கருவியையும் உங்கள் வீட்டுக் கணனிப்பொறியில் பொருத்தி விட்டால் மிகவும் உயர்தரமான கச்சேரி மண்டப இசை வருவதாக இதன் தயாரிப்பாளர் தெரிவிக்கின்றார். ஒலிப்பெட்டிகள் ஒவ்வொன்றும் 20 வாற் ஒலியைத்தருகின்றன. இன்னுமோர் 50 வாற் ஒலி அதிர்வுடைய ஒலிப்பெட்டி அடிநாதம் (Base) கொடுப்பதற்காகப் பொருத்தப்பட்டுள்ளது. இது ஓர் ஒலிப்பிறப்பாக்கி மாத்திரமே. இதன் விலை 700 டொலர்.

தரையிறங்கும் விமானங்களுக்கு செய்மதி உதவி.

மூடு பனி நிறைந்த, அல்லது பனித்திரை அற்ற நேரங்களில் விமானங்களைத் தரையிறக்குவதற்கு, விமானமோட்டிகளுக்கு இது வரை காலமும் றாடரும், தரைக் கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து கிடைக்கும் உத்தரவுகளுமே உதவி வந்துள்ளன. இன்னும் சில வருடங்களில், செய்மதியும், அத்துடன் தொடர்புடைய இறங்கு துறைக் கருவிகளுமே, இதைச் செய்யுமென எதிர் பார்க்கப்படுகின்றது. அமெரிக்கா, பூமியைச் சுற்றி வரும் செய்மதி ஒன்றை ஏவியுள்ளது. புவியிலுள்ள நிலைகளைத் துல்லியமாகக் காட்டுவதே, இந்தச் செய்மதியின் பிரதான கடமை. விமான இறங்கு துறையில் அமைக்கப்பட்டிருக்கும் கருவிகளும், இந்தச் செய்மதியும் ஒன்றிணைந்து செயலாற்றும் போது, விமானங்கள் மிகவும் பாதுகாப்பாக இறங்கவும், ஏறவும் முடியும். தற்போதைய ஒழுங்குகளின் படி, இது இயலாத காரியம். சில அடி தூரத்தால் குறி பிசகக்கூடும் என்று, பொறியியலாளர்கள் வரப் போகும் ஒழுங்குகளை வியந்து பாராட்டியுள்ளனர்.

எழுபது ஆண்டுகளுக்கு முன்பு 2,000 பேருக்கு இடவசதியுடன் கட்டப்பட்ட கிகாலி சிறைக் கூடத்தில் இன்று 5,500 பேர் அடைக்கப்பட்டுக் கிடக்கின்றனர் என்பதுடன் தினமும் பலர் பிடித்துக் கொண்டு வரப்பட்டு அதற்குள் தள்ளப்பட்டுக் கொண்டு உள்ளனர். உணவு உட்பட அனைத்துமே அங்கு பற்றாக் குறையாக உள்ளன. ஆயிரக்கணக்கான கைதிகள் மழை பொழியும் நேரத்தில் நனைந்து விறைத்து நடுங்கிக் கொண்டு காலங் கழிக்கின்றனர். ஆனால் உள்நாட்டு விசாரணைகளை முதலில் நடத்தி அந்தச் சிறை நெருக்கடியைத் தீர்க்க அரசு மனதில் எண்ணினாலும் அதற்கான நீதிமன்றக் கட்டமைப்புகளும் நீதிபதிகளும் இல்லை. அழிவுகளும், இனப்படுகொலைகளும் நடந்தபோது அந்தக் கட்டமைப்புக்கள் அழிக்கப்பட்டும் பல நீதிபதிகள் கொல்லப்பட்டும் இன்னும் பல்லாயிரக்கணக்கானோர் அகதிகளாக அண்டை நாட்டுக்குத் தப்பி ஓடியுமுள்ளனர். ''எங்களிடம் வாகனங்கள், காகிதம் என்று எதுவுமே இல்லை'' என்று நீதிமன்றிலேயே மாரிறுகுபிடோ கூறினார். இருந்தும் விசாரணை அலுவல்கள் இயன்ற கெதியில் விரைந்து கொண்டு உள்ளன. கிகாலி சிறையின் பணிப்பாளரின் மதிப்பீட்டின்படி சுமார் 20 சத வீதமானோர் அப்பாவிகளாக இருக்கலாம். பெருந் தொகையானோருக்கு மரண தண்டனை நிறைவேற்றுவது பற்றி எண்ணும்போது அவரே திடுக்கிடுகிறார். ''பெரும் புள்ளிகளை எல்லாம் கொலைத் தண்டனைக்கு ஆளாக்கிவிட்டு மற்றவர்களுக்கு ஒரு பொது மன்னிப்புக் கொடுப்பது தான் ஏற்ற வழி'' என்று கூறினார்.

அனைத்துலக விசாரணை மன்றம் அமைக்கும் வேலைகள் ஓரளவு முன்னேறிக் கொண்டு உள்ளன. ஐ.நா. விசாரணைக் குழுவுக்குக் காசும், மேலதிக ஆளணியும் வரத் தொடங்கி விட்டன. ஆளணியில் இரண்டு சட்ட மருத்துவ நோய்க் கூற்றாளர்களும், அனைத்துலக பொலிஸ் அமைப்பான இன்ர்போலைச் சேர்ந்த இருவரும் அடங்குவர். அந்தக் குழுவினர் பெரும் அளவில் சவங்கள் போட்டு மூடப்பட்ட 30-ற்கும் மேற்பட்ட கிடங்குகளை கோயில்கள், பொது இடங்கள் என்று பெருந்தொகைக் கொலைகள் நடந்த இடங்களையெல்லாம் தோண்டி ஆராய்ந்து உள்ளனர். அவர்கள் சேகரித்த ஆவணச் சான்றுகளின் படி முந்திய அரசாங்கம் ருட்சிகளை இன அழிப்புச் செய்ய ஆயத்தப்படுத்திய சான்றுகள் பல தேடி எடுக்கப்பட்டுள்ளன. உள்ளூர் அரசாங்க அதிகாரிகளிடம் இருந்து மத்திய அரசுக்குப் போன கடிதங்களில் ஆயுதங்கள் அனுப்பக் கோரியிருந்ததுடன் ''குகோறாவுக்கு'' அவை தேவைப்படுவதாகக் கூறப்பட்டுள்ளன. அந்தச் சொல் ''வேலை கொடுக்க'' என்ற அர்த்தத்தில் ''கொன்றொழிப்பதையே'' சங்கேதப்படுத்தியுள்ளது. கிகாலியில் இருக்கும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ''நாசி ஜேர்மனியில் நடந்ததுபோல் நம்ப முடியாத ஒரு சமாந்தரச் செயல் இங்கும் நடந்துள்ளது'' என்று கூறினார்.

ஐ.நா. பாதுகாப்புச் சபையும், ருவாண்டா அரசும் அனைத்துலக விசாரணை மன்றை எங்கே அமைப்பது என்பதில் இன்னும் கருத்தொருமைப்பாடு காணவில்லை. ஐ.நா. சீனியாஹேக் இன்னும் பல இடங்களை அதற்குத் தேர்ந்தெடுத்து இருப்பினும் ருவாண்டா அரசு அந்த விசாரணைகள் உள்நாட்டில் நடந்தால் தான் மக்கள் பார்க்கவும், சான்று கூற வருவதற்கும் வசதியாக இருக்கும் என்று அரசு வாதிக்கிறது.

ஐ.நா. 1994 இல் குற்றம் புரிந்தவர்களை மட்டுமே விசாரிக்க வேண்டும் என்பதுடன் அதன் மனித உரிமைக் கொள்கைப்படி மரண தண்டனை கொடுக்கக்கூடாது என்றும் கூறுகிறது. ஆனால் ருவாண்டா அரசின் விருப்பமோ அதற்கு முந்திய குற்றவாளிகளும் தண்டிக்கப்படுவதுடன் மரண தண்டனைகளும் கொடுக்கப்பட வேண்டும் என்பதாகும். இருந்தும் அரசு ஐ.நாவுடன் ஒத்துழைக்க இணங்கியுள்ளது.

கொலைகாரர்களை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நீதியின் முன்னால் நிறுத்துவதால் ருவாண்டா உற்றுள்ள புண் ஆறுமா அல்லது அந்த நாட்டில் இரு இனங்களுக்கும் இடையில் எழுந்துள்ள ரோதம் மேலும் ஆழமாகி விரிவுறுமா என்பதைத் தெளிவாகக் கூறமுடியாமல் உள்ளது.

எழுதியவர்:- கிகாலியிலிருந்து
ஜோசுவா ஹாமர்.
நியூஸ்வீக், டிசம்பர் 12, 1994

★

விண்ட்ஹோக்கில் வீசும் மென்காற்று

தமிழில் : திரு. சொக்கன்

ஆபிரிக்காவில் ஓர் அற்புதநாடு செயலில் அயராது முனையும் நமீபியாதான் அந்த நாடு

ஆபிரிக்காவின் முதன்மையான நகரமும் நமீபியாவின் தலைநகரமுமாக விண்ட்ஹோக் விளங்குவதன் காரணம், அதனுடைய தனித்துவப் போக்குத்தான். முதலாவது உலகப் போரோடு (1914-19) முடிவடைந்த முப்பது ஆண்டுகளின் ஜேர்மனிய ஆட்சிக்கு நினைவுக் குறிகளாக இன்றும் இந்த நகரத்து வீதிகளிலே அடையாளங்கள் (Signs) உள்ளன. வீதிகள் ஓஸ்லோ நகரத்திலும் சுத்தமானவை, லண்டன் நகரத்திலும் பாதுகாப்பானவை. நகரின் இடையிடையே எழுந்து நிற்கும் உயர் மாடிக் கட்டடங்கள், லுசாக்கா வி லும், லுவாண்டாவிலு முள்ள சிதைபாடுகள் நிறைந்த கட்டடங்களிலிருந்து எதிரிடையான காட்சி தருகின்றன. மூன்று மாற்றுக் கட்சிகளின் 12 உறுப்பினரைக் கொண்ட நகராட்சிச் சபையும் இவ்வாறே வேறுபட்ட ஒன்றாகவே விளங்குகிறது. விண்ட்ஹோக்கின் முக்கியமான பிரச்சினையாயிருப்பது நீர் விநியோகம் என்ற ஒன்று தான். நகரத்தின் பிரதான நீர்க்குழாய்க்குச் சேதம் உண்டான செய்தி, நமீபியப் பத்திரிகைகளின் முதற் பக்க முதன்மைச் செய்தியாக வெளியாயிற்று.

வரட்சி, நோய், உள் நாட்டுப் போர் என்பவற்றால் அலைக்கழிக்கப்படும் ஒரு கண்டத்தில் இவற்றிற்கு எதிராகத் தீவிரமாகத் தொழிற்படுவதற்கு எடுத்துக் காட்டாக விண்ட்ஹோக் விளங்குகிறது. 1990 இல் தென்னாபிரிக்காவிடமிருந்து விடுதலை பெற்ற நமீபியா

அதன் ஜனாதிபதியான சாம் நுஜோமாவின் தலைமையில் பல கட்சிச் சனநாயக அமைப்பில் உறுதியாகச் செயற்பட்டு வருகிறது. நாட்டின் 100,000 வெள்ளையர்களிற் பெரும்பாலானோர் தொடர்ந்து அங்கேயே வசிக்கிறார்கள். தெற்கு, மேற்கு ஆபிரிக்க மக்கள் அமைப்பு (Swapo-South West African People's Organisation) என்ற கட்சி ஏற்கனவே பாரிய பெரும்பான்மையுடன் விளங்குகிறது. அடுத்த மாதம் நடைபெற விருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் இந்தக் கட்சியின் பலம் மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. ஆனால் எல்லா வகையிலும் முழு நிறைவு நமீபியாவில் நிலவுகிறது என்றும் கூறுவதற்கில்லை. உள் நாட்டுப் பத்திரிகைகள் மேலிடங்களில் ஊழல் இடம் பெறுவதை ஒழுங்காக வெளிப்படுத்திய வண்ணமே உள்ளன. விண்ட்ஹோக்கிலும், வல்விஸ் குடாப் பகுதியிலும் வேலையற்றோர் வேலைகளைத் தேடி வந்து ஆயிரக் கணக்கில் முண்டியடித்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் வேலை வாய்ப்புக்கள் தாம் அரிதாயுள்ளன. பரந்த இந்த உலகில் உடையவருக்கும், இல்லாதவருக்கும் இடையேயுள்ள நீண்ட இடைவெளி நமீபியாவிலும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் 1.5 மில்லியன் நமீபியர் எதிர் காலத்தில் நம்பிக்கையை இழந்து விடவில்லை. "எம்மிடையே இன்னமும் வறுமை நிலவுகிறது. பயிற்சியும், திறனும் பெற்ற மனிதவளம் இல்லாத நிலையில் எம்மால் நாட்டை முன்னேற்றுவது இயலாத காரியந்தான். ஆனால் 90 சத வீதமான நமீபியர் எங்கள் புனர் நிர்மாணக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இவையாவிலும் மேலாக நாங்கள் அமைதியையும், உறுதிப் பாட்டையும் அநுபவித்து வருவது தான் குறிப்பிடத்தக்கதாகும்" என்று நுஜோமா நியூஸ் வீக் சஞ்சிகைக்குக் கூறினார்.

நமீபியாவின் மிகத் தொலைவிலில்லாத இறந்த கால வரலாற்றை நோக்கும் பொழுது இந்தச் சாதனை அற்பமானதன்று. நுஜோமாவின் (SWAPO) கட்சி, இனத்துவேஷ ஆட்சியை எதிர்த்து 23 ஆண்டுகளாகக் கடுமையான கெரில்லாப் போரை நடத்திய பின்புதான், ஐ. அமெரிக்கா (1989 இல்) தலையிட்டுச் சமாதான உடன் படிக்கைக்கு வழி வகுத்தது. போராட்டத்தில் ஆயிரக் கணக்கானோர் சாவைத் தழுவிக் கொண்டாலும், ஐ. நா. சபையின் மேற்பார்வையில் அதன் உதவியோடு நேர்மையானதும், நியாயமானதுமான தேர்தல் நடந்து நீதி கிடைத்தது; SWAPO ஆட்சியில் அமர்ந்தது; புதிய யுகம் மலர்ந்தது.

நுஜோமா சுதந்திரச் சந்தைக் கோட்பாட்டிற்கு ஆதரவாயிருப்பதை ''மார்க்சிச பயங்கரவாதம்'' என்ற பொய்யான முத்திரைகுத்தி, பிறிற்றோறியாவின் பிரசாரத் தந்திரமானது அவர் மீது குற்றம் பாரிக்க முற்படுகிறது. நிலச் சீர் திருத்தத்தை அவரது அரசு பின்போடத் தீர்மானித்தும், தென்னாபிரிக்காவின் முன்னைய டாதுகாப்புப் படை மனித உரிமை மீறலில் ஈடுபட்டதற்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்காது விட்டதும், செல்வவளம் பொருந்திய சிறுபான்மை வெள்ளையருக்கு மீளவும் நம்பிக்கை அளிப்பனவாயுள்ளது. கடந்த மார்ச் மாதத்தில் தென்னாபிரிக்கப் பேரரசு நமீபியாவின் ஒரே துறைமுகமான வல்விஸ் குடாவில் தான் கொண்டிருந்த மேலாதிக்கத்தை மீள அளந்ததன் பயனாக, பிறிற்றோறியாவுடனான நேச உறவில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அடுத்த மாதம் இடம் பெறப்போகும் பொதுத் தேர்தலில் இரு பெருந்தலைகள் மோதிக் கொள்ளப் போகின்றன. 64 வயதான நுஜோமாவுக்கே வெற்றி வாய்ப்பு அதிகம். அவரின் ஆளுங் கட்சியில் மேலாண்மை கொண்டிருப்போர் ஓவம்போகுலக் குழுவினர் நாட்டின் பதிவான மொத்த வாக்காளரின் எண்ணிக்கையில் அரைப் பங்கான 700,000 வாக்காளர் இந்தக் குலக்குழுவினரே. குலக்குழுக் கலாசாரம் நிலவும் ஒரு நாட்டில் தமது குலக்குழுவினரான ஓவம்போவினரின் முழுமையான ஆதரவு நுஜோமாவின் பக்கமே இருக்கும் என்பது நிச்சயம். ஏழு கட்சிகளாகச் சிதறிக் கிடக்கும் எதிர்க் கட்சிகள் 1989 இல் நடந்த தேர்தலில் 42 சத வீத வாக்குகளையே பெற்றன. நுஜோமாவை எதிர்த்துப் போட்டியிடும் 54 வயதான மிஸ் கேக் முயாஸ்கோ முன்பு SWAPO கட்சியிலிருந்தவர் தான். இந்தத் தேர்தலில் அவர் DTA என்ற கட்சியின் இசைவுச் சீட்டுடன் தேர்தலில் குதித்திருக்கிறார். ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பிறிற்றோறியாவின் பின் பலத்தோடு போட்டியிட்டதாகிய இழுக்கிற்கு (Stigma) இலக்கானது DTA.

நமீபியாவினுள்ளேயே இரு நமீபியாக்கள் உள்ளன. விண்ட்ஹோக்கின் செல்வக் கொழிப்பு நிறைந்த வெள்ளையர் மேலாண்மை கொண்டிருக்கும் பகுதி ஒரு நமீபியா. இவர்களின் மொத்தத் தொகை முழுமையான சனத்தொகையின் 5 சத வீதம் மட்டுமே. ஆனால், நாட்டின் பொருளாதார உற்பத்தியைக் கட்டுப்படுத்தும் வல்லாண்மை இவர்களுக்கே உண்டு. இரண்டாவது நமீபியாவிலே படிப்பறிவற்ற, வறிய கிராமப்புற மக்கள் அடங்குவர். இவர்களோடு புற நகரங்களில் வாழும் சேரிவாழ் மக்களையும் சேர்க்கலாம். இனத் துவேஷம் என்பது பாரம்பரியச் சொத்தாக ஓரளவு இன்னமும் வெளிப்படும் நிலையில், மக்களில் 50 சத வீதத்தினர் வேலையில்லாமை, வதிவிடத் தட்டுப்பாடு என்பவற்றால் கஷ்டப்படுவது தொடர்கின்றது. கல்வி வாய்ப்பு, சுகாதாரவசதி என்பனவும் ஒருப் பாகவேயுள்ளன. சுமார் 1,400 வெள்ளையர் குடும்பங்கள் நாட்டின் அரைப்பங்கு நிலத்திற்கு உரிமையாளராயிருக்கும் நிலையில், 1994 இல் மிகத் தாமதமாகவே, 1994 இன் ஆரம்பமென்ற அமர்வு முடிவுக்கு வரும் வேளையிலேயே– நிலவுரிமை பற்றிய சட்டம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது. நிலவுரிமையில் நிலவும் அசமத்துவம் இச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனோடு வேறு பல பிரச்சினைகளும் மேலெழுந்து கொண்டிருக்கின்றன. கிராமப்புற நமீபியர்கள் வேலைகளை நாடி நகர்ப்புறங்களுக்கு வருவதனால் குற்றவியல் சார்ந்த தீய செயல்கள் தலையெடுக்கின்றன. அரசு ஊழியர்களிடையே ஊழல்கள் தாண்டவமாடுகின்றன. வெளிநாட்டு விவகார அமைச்சின் உயரதிகாரி ஒருவரின் மனைவி, வெளிநாட்டுத் தூதரகம் ஒன்றிற்கு மேசிடெஸ் பென்ஸ் கார் கொள்வனவு செய்த வகையில் சட்டவிரோதமாக 23,000 டொலர் பெற்றுக் கொண்டதையும் பாராளுமன்றத் தவிசாளர் (Ombudsman) அதைக் கண்டுபிடித்ததையும் இத்தகைய ஊழல்களுக்குத் உதாரணமாகக் காட்டலாம்.

கட்சியில் சர்வாதிகாரம் தலைதூக்குவதாக எதிர்க் கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர். அது மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு ஆட்சிக்கு வருமானால், அரசுயாப்பிலே தனக்கு வாய்ப்பான மாற்றங்களை நிறைவேற்றும் என்று எதிர்வு கூறப்படுகிறது.

'' 1989 இல் SWAPO வெற்றி பெற்றதுபோல, இப்பொழுதும் வெற்றி பெறுமானால் மக்கள் ஜனநாயகத்துக்கு முத்தங் கொடுத்துப் பிரியாவிடை அளிக்க வேண்டியதுதான். அவர்கள் (SWAPO) தங்கள் அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டவே விரும்புவார்கள் '' என்று முயாங்கோ கூறுகிறார்.

கடந்த மாதம் செவ்வி (Interview) ஒன்றின் போது நுஜோமா மேற்கூறிய குற்றச் சாட்டுக்களைப் புறந்தள்ளிவிட்டு நமீபியாவின் மூல வளம் பற்றியும் அதன் எதிர்காலப் பயன்பாடுபற்றியுமே விரிவாகக் கூறினார். ஜேர்மனியிலும் இருமடங்கு நிலப்பகுதியைக் கொண்டது நமீபியா. ஆனால், சனத் தொகையோ குறைவு. அதன் நாணயப் பெருக்கம், பிரதான பொருளாதார ஊக்கி, பெறுமதிவாய்ந்த வைரக் கற்களாகும்.

1993 இல் வைரக்கல் ஏற்றுமதி மூலம் 1.3 மில்லியன் டொலர் சம்பாதிக்கப்பட்டது. டிபியர் என்பவருடன் 25 ஆண்டு காலத்துக்கான வைரக்கல் உடன்படிக்கையைச் சென்ற மாதந்தான் நுஜோமா மேற்கொண்டார். இதன் மூலம் அரசுக்கு 50 சத வீதமான உபவருமானம் கிடைக்கும். டிபியர் பொட்ஸ்வானாவுடன் செய்து கொண்ட உடன்படிக்கை மாதிரியில் இந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டதாகும். இவ் உடன்படிக்கையால் கிடைக்கும் கிரமமான வருமானம் நமீபியாவை ஆபிரிக்காவிலேயே உறுதியும், திறனும் வாய்ந்த ஜனநாயக நாடாக உருவாக்கும். மற்றைய ஆபிரிக்க நாட்டவரிலும் நமீபியர் தமது முடிவைச் செயலாக்கும் மனவுறுதி படைத்தவர்கள்.

நியூஸ்வீக், நவம்பர், 1994.

★

அவர்கள் நிகழ்த்தும் அற்புதங்கள்

தமிழில்: சொக்கன்

இனத்துவேஷப் பேரழிவுகளைக் பட்டாலும் ஓர் அமைதியான புரட்சியும்

ஓராண்டுக்கு முன்னர் இதே வேளை ஒஸ்லோவில் நெல்சன் மண்டேலா நோபல் பரிசைப் பெற்றபோது சூழவிருந்து பாராட்டுப் பேரார வாரம் வான் முட்ட எழுந்தது. தென்னாபிரிக்கர் தங்கள் நாட்டுரிமையிற் பெற்ற வெற்றியை இது பறைசாற்றியது. கடந்த மாதம் காலணிகள் அணியாத வெற்றுக் கால்களுடனும், கந்தை யுடைகளுடனும் காட்சி தந்த 2,000 கறுப்பர்களுக்கு மண்டேலா கடுமையானதோர் உண்மையை எடுத்துரைத்தார். அவருடைய உரை, ஒறேஞ்ச் ::பாம்' நகரத்தின்காற்பந்து விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது. அவர் சொன்னார்: ''எங்களிடம் அற்புதங்களை எதிர்பார்க்காதீர்கள். பொதுத் தேர்தலுக்கு முன்பு நாடு முழுவதிலும் பயணஞ் செய்து எங்கள் மக்கள் அனைவருக்கும் இன்றுள்ளதிலும் சிறந்த நல்வாழ்வை வழங்க விருப்பதாக உறுதியளித்தேன். ஆனால் இன்று நான் நற் செய்தி எதனையும் கொண்டு வரவில்லை'' என்பதாக.

இருந்த போதிலும் இந்தப்பெரு நிலத்திலே அமைதியானதொரு புரட்சி கால்கொள்ளத் தொடங்கித்தான் இருக்கிறது. அங்கும் இங்குமாக வெள்ளையர்களும், கறுப்பர்களும் தனித்தும், கூட்டமாகவும் புத்தூக்கத்துடனும், உற்சாகத்துடனும் இன்றுள்ள நிலையை மாற்றியமைக்கும் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

கிழக்குத் திறான்ஸ்வாலின் கிராமப்புறத் தெரு ஒன்றின் பக்கலில் முள்மரம் ஒன்றின் கீழ் இரண்டு வாரங்களுக்கு முன்பு கறுப்பர்களான விவசாயிகள் சிலர் கூடிநின்று தமது சொந்த இடத்திற்குத் திரும்பியதை மகிழ்ச்சியோடு கொண்டாடினார்கள். ''வீடு, எங்கள் வீடு, இனிமையான வீடு'' என்று, நாட்டின் வடக்கிலே பேசப்படும் மொழியாகிய 'பெடி' யில், கையால் எழுதப்பட்ட அட்டை ஒன்று பழசாகி இற்றுப் போன கூடாரத்துணி மீது தூங்கிக் கொண்டிருந்தது. சோதோ என்னும் இனக்குழுவின் ஒரு பிரிவினரான 'பெடி' கூட்டத்தைச் சேர்ந்த இவர்கள் டூர்ண்கோப் கிராமத்திலே எழுபது ஆண்டுகளாக விவசாயத்தில் ஈடுபட்டிருந்து வெள்ளையரின் இனத்துவேஷத்தினால் குடிபெயர்ந்து மீளவும் திரும்பி வந்தவர்கள்; தங்களின் செழிப்பான நிலத்தைப் பண்படுத்தி பீச் பழங்களை உற்பத்தியாக்கி விற்று வாழ்ந்தவர்கள். 1974 இல் இவர்களின் வீடுகள், பாடசாலைகள், தேவாலயங்கள் யாவும் புல்டோசர்களால் இடித்து அழிக்கப்பட்டன.

தேசிய அரசின் துராக்கிரமிப்பின் காரணமாக அதன் இன வெறிக்கு இலக்காகிக் காட்டு வாழ்க்கை நடத்திய இவர்களுக்குத் தங்கள் சொந்த மண்ணுக்கு மீண்டது எவ்வளவு மகிழ்ச்சியாக இருந்திருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை. அன்று நாட்டில் நிலவிய இனத்துவேஷச் சட்டமானது 87 சத வீதமான நிலத்தை வெள்ளையருக்கு உடைமையாக்கியது. தென்னாபிரிக்கக் கறுப்பர்களில் முதன் முதல் தமது நிலங்களுக்குத் திரும்பி முன்பு தம்மிடம் பறிக்கப்பட்ட நிலங்களிலே மீண்டும் குடியமர்த்தப்பட்டவர்கள் இந்தப் பெடிகள் தாம்.

மேற்கு முனையிலிருந்து 1,500 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பிரதேசத்தில் முன்பு கறுப்பரிடம் பறிக்கப்பட்ட நிலங்களுக்கு உரிமையாளராய் மாறிப் பீச் பழ உற்பத்தியில் ஈடுபட்டு அதிலிருந்து பத்து மில்லியன் டொலர் வருமானம் பெற்று வந்த வெள்ளையரான ஹென்றி வைற்ஹோலின் விவசாயப் பண்ணையின் 33 சத வீதப் பங்குக்கு இன்று 170 கறுப்பு விவசாயிகள் பங்காளர்களாய் மாறும் நிலை உருவாகியுள்ளது. இவர்களிற் சிலர் டச்சுக்காரரின் ஆட்சிக் காலத்திலே பண்ணை அடிமைகளாய் ஆக்கப்பட்டவர்கள். இவர்கள் தமக்குக் கிடைக்கும் பங்குச் சொத்தினைத் தங்களின் காலத்துக்குப் பிறகு பிள்ளைகளுக்குக் கையளிக்கும் உரிமையைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

கறுப்பரின் தாயகம் 13 ஆண்டுகளுக்கு முன்பு ''சுதந்திரம்'' பெற்ற காலத்தில் ஹென்றி வைற்ஹோலுக்குக் கறுப்பரின் விதியே ஏற்பட்டு அவர் தமது நிலத்தை இழந்தது உண்மைதான். ஆனால் இன்று அவர் கேப்ரவுனிலிருந்து 95 கிலோ மீற்றர் தொலைவில் விவசாயப் பண்ணையைச் செழிப்பான நிலத்தில் மீளவும் உருவாக்கியுள்ளார். ''நாங்கள் மீண்டும் வளவாழ்விற்குத் திரும்பியிருக்கின்றோம். முன்பு நாம் பெற்றுக் கொண்டவற்றில் ஒரு பகுதியைத் திரும்பவும் அளிப்பதற்கு நான் எண்ணியுள்ளேன்'' என்று கூறும் இவரைப் போன்ற வெள்ளையர் பலரும் ஒன்றுக்கும் வக்கற்றுப் போயிருக்கும் கறுப்பர்களைச் சொத்துரிமையாளராக மாற்றி வருகிறார்கள். மண்டேலாவின் தேசிய இணைப்புக் கோட்பாடு 1960 தொடக்கம் 1990 வரை வெள்ளையர்களால் நிலம் பறிக்கப்பட்ட கறுப்பர்களை மீண்டும் அவர்களின் நிலங்களுக்குச் சென்று வாழ உதவுகின்றது.

சமத்துவ அடிப்படையில் நாட்டைப் பிரித்திருந்த காலம் மாறிப் படிப்படியாக முன்னைய நிலைக்கு

எதிரியுடன் மோதும்போது ஒரே வகையான ஆயுதங்களுடன் இருப்பது, யுத்தத்தை இலகுவாக்குகிறது. இதற்கு வளைகுடா யுத்தம் ஒரு நல்ல அனுபவம் என்பதும், அமெரிக்க அதிகாரிகளின் கருத்தாக உள்ளது. இன்னும் ஒரு படி மேலே போய், பாதுகாப்புத்துறை ஒப்பந்தக் காரர்கள் வேலையின்றி இருக்கிறார்கள், நாங்கள் ஒரு நெருக்கடியான காலத்தில் இருக்கிறோம், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அழுத்தங்களை ஏற்படுத்துகிறது என்றெல்லாம் கூறப்படுகிறது.

எப்-15 மற்றும் எப்-16 ரகப் போர் விமானங்களும், எம்-1 ரக ராங்கிகளும், ஏ.எச் 64 ரக உலங்கு வானூர்திகளும், வெளி நாட்டு விற்பனைக்காக இப்போது உற்பத்தியாகின்றன. இந்த வெளி நாட்டு விற்பனைக்கான உற்பத்திகளுக்காக கிளின்ரன் நிர்வாகம் ஒரு பில்லியன் டொலரைக் கடனாகவும் வழங்க உத்தேசித்துள்ளது.

1993 ஆம் ஆண்டில் மட்டும் சுமார் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வருடம் முழுவதும் இத்துறை, வேலை வாய்ப்பை வழங்கியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. நோக்கம் எதுவாக இருக்கின்றபோதும் பென்ரகனும், அதன் விநியோகத்தர்களும் இத்தகைய தொழிற்சாலைகளைத் தொடர்ந்தும் பேணவே விரும்புகின்றனர். உதாரணமாக விமானப் படை பாவித்த நிலையிலுள்ள 300 எப்-16 ரக விமானங்களை இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ், மொஸ்கோ போன்ற நாடுகளுக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டுள்ளது. இவை புதிய விமானங்களைக் கொள்வனவு செய்யக் கூடிய நிலையில் இல்லை. மேலும் இவ் விற்பனை மூலம் பெறப்படும் 2 மில்லியன் டொலர் இலாபம் 75 புதிய எப்-16 ரக விமானங்களை நிர்மாணிக்கப் போதுமானதாகும்.

இதேவேளை, அமெரிக்காவின் ஆயுத விற்பனவுகள் தொடர்பாக வாடிக்கையாளர்களிடமிருந்தும் பரவலாக முறைப்பாடுகள் கூறப்படுகிறது. உலக அரங்கில் முக்கியமான 48 முரண்பாடுகளில் 39 முரண்பாடுகள் அமெரிக்காவின் ஆயுதங்களே பின்னணியில் இருக்கின்றன என்பது அதில் பிரதானமானது.

அமெரிக்காவின் ஆயுத ஏற்றுமதியில் விமானங்களையும், ராங்கிகளையும் விட சிறிய ரக ஆயுதங்களே முதலிடம் பெறுவதாகச் சுட்டிக் காட்டுகின்றனர். இதனால் அதிகளவில் இரத்தம் சிந்தப்படுவதில்லை என்பது அவர்களின் கருத்து. ஆனால் றுவாண்டாவில் இத்தகைய ஆயுதங்கள்தான் பெருமளவிலான கொலைகளுக்குக் காரணம் ஆகியுள்ளது. எனினும் பெரும் எடுப்பிலான ஆயுத தளபாடங்களுடன் இராணுவத்தினர் பாதுகாப்புக்கு இருக்கும்போது, ஒரு புயல் வீசும்போது பலர் உயிரிழப்பது தவிர்க்க முடியாதது தானே எனக் குறிப்பிடவும் படுகிறது.

அதாவது அமெரிக்காவின் ஆயுத விற்பனையால் பிரதேசத்தின் அதிகார சமநிலை பாதிக்கப்படமாட்டாது என்பதே அமெரிக்க நிர்வாகம் கூறும் பதிலாக இருக்கிறது. எனினும் வெளிநாடுகளுக்கு ஆயுதங்கள் விற்பனை செய்வது பெரும்பாலும் எதிர் விளைவுகளையே ஏற்படுத்துகிறது. பனாமா, ஈராக், சோமாலியா மற்றும் ஹெய்ற்றி போன்ற நாடுகளில் அமெரிக்க இராணுவ அணிகள் சந்தித்த எதிர்ப்பு இதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அவர்களின் எதிரிகள் அனேகமாக அமெரிக்காவின் ஆயுதங்கள், பயிற்சிகள் மற்றும் இராணுவ தந்திரோபாயங்களைப் பெற்றவர்களாகவே இருந்து உள்ளனர். இது தொடர்பாக பென்ரகனும், கடற்படைப் புலனாய்வாளர்களும் அமெரிக்க நிர்வாகத்திற்கு எச்சரிக்கை செய்துள்ளனர், புகார் கூறியுள்ளனர். பிராந்திய நாடுகளின் பலம் அதிகரிப்பது தொடர்பாகவும் அமெரிக்கா அக்கறை கொண்டுள்ளது.

ரைம், டிசம்பர் 19, 1994

★

கனன் நிறுவனத்தின் புதியரக வீடியோ கமெரா

வீசீ-சீ I என்ற குறியீடுடன் கனன் நிறுவனம், சிறிய குழுவினர் கலந்துரையாடல் செய்யும் போது, சிலரைத் திரையில் முன்னுக்கும் வேறு சிலரைத் திரையில் பின்புறமும் மாற்றி ஆறுவிதமாகப்படம் பிடிக்கும் தொழில்சார் வீடியோ படக்கருவியைத் தயாரித்துள்ளது. இதன் விளக்கத்தைப் பற்றிக் குழுவின் தலைவர் பேசும்போது அவருக்குப் பிரதான இடம் கொடுத்துப் படம் பிடித்தல், தலைவர் குழு அங்கத்தவர் ஒருவரைக்குறிப்பிட்டு பேசும்போது அவரைத் தனித்துக்காட்டுதல், பின்பு இன்னுமொருவர் குறிக்கிடும் போது அவரையும் முன்னுக்குக் கொண்டுவருதல், சாதாரண வீடியோ கமெராவிலும் இதைச் செய்யலாந்தானே என்ற கேள்வி எழுகின்றது. விந்தியாசமென்னவென்றால் இந்த வீடியோ கமெராவைச் சுமந்தபடி கலந்துரையாடல் செய்வோர் மத்தியில் உலாவ வேண்டும். ஆனால் கனன் இப்போது தயாரித்திருக்கும் கமெரா ஒரு குறிப்பிட்ட தேவைக்காகத் தயாரிக்கப் பட்டுள்ளது. கலந்துரையாடலைக் குழப்பாமல் தூரத்திலிருந்து படம் பிடிக்கும் ஆற்றல் இந்தப் புதியரகக் கருவிக்கு உண்டு. இந்தப் புகைப்படக் கருவி ஒரு கணனிப் பொறியுடன் பொருத்தப்பட்ட நிலையில் செயற்படுகின்றது. சாதாரண வீடியோக் கருவி அப்படி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதன் விலை 2000 டொலர்.

வந்து ஒத்துழைப்பதாகக் கூறுவது அதிர்ச்சி தருகிறது என்று கூறுகி றார்கள். விவசாயிகள் இழப்பீட் டடிப் படையில் நில உரிமைப் பேச்சு வார்த்தைகளைச் சுமுகமா கத் தீர்க்கத் தயாராக உள்ளார் கள் என்றே தெரிகிறது.

தொழிலாளர்கள் அரசுப் பின் பலத்துடன் இயங்கும் இரு வைப்ப கங்களிலிருந்து (Banks) கடனுதவி பெற்று வைற்ஹோலின் 33 வீதம் பங்குகளை வாங்குவதற்கான நடவடிக்கைகளுக் கெனப் பிர தி நிதித்துவக் குழுவொன்றை உரு வாக்கி உள்ளார்கள். விவசாயப் பண்ணை உற்பத்திகளை விற்பனை செய்து பெறும் வருவாயிலிருந்து கடனைச் செலுத்தி, பத்து வருடங் களில் 28 000 டொலர் மதிப் புடைய பங்குக்கு ஒவ்வொருவரும் உரிமையாளராகலாம் என்பது இவர்களின் கணிப்பீடு. இது சாத் தியப்படுமானால் ஆண்டான் அடிமை நிலைமாறித் தொழி லாளர் சொத்துரிமையாளராகும் அதிசயம் நிகழலாம்.

தொழிலாளரின் இந்தத் திட் டம் நிலக் கைம்மாற்றம் அன்று; இலாபம் அளிக்கும் துணிக ர முயற்சியாகும். விவசாயப் பண்ணை யில் தொழில் புரிபவர் வில்ஹெல் மினாவிசெர். இவருடைய மூன்று சகோதரிகளும், இவரின் கணவரும் விவசாயப் பண்ணைத் தொழிலாளி களே. '' கடந்த காலம் எங்களுக்கு எதையும் தரவில்லை. இப்பொழுது எதிர்காலத்துக்கு நாம் ஏதாவது சேமித்து வைக்க வழி பிறந்திருக் கிறது '' என்கிறார் இவர். வைற் ஹோல், '' இது இருசாராருக்கும் வெற்றி – வெற்றி நிலைமை யாகும் '' என்கிறார். தொழிலாள ருக்குப் பாதுகாப்புணர்வும், விவ சாயப் பயன்களும் கிடைப்பதால் அவர்கள் விசுவாசமாகத் தொழில் புரிவார்கள், வைற்ஹோலின் தாராண்மை, அவரின் பழத்தோட் டத்தில் வேலை செய்யும் பெண் கள் அவரை, '' அப்பா '' என்று அழைக்க வைத்திருக்கிறது.

இத்தகைய பரிசோதனைகள் நம் பிக்கையளிப்பனவாயினும், டேர்ண் கோப் வாசிகளான பெடி கூட்டத் தினரைப் பொறுத்தவரையில் வித்தியாசமானவை. 1964 இல் இவர்களை இவர்களின் பாரம் பரியப் பிரதேசமான லெபோவி லிருந்து அன்றைய வெள்ளையரசு வெளியேறுமாறு நிர்ப்பந்தம் கொடுத்தது. இவர்களில் கடைசிக் குடியானவரையும் அன்றைய காவல் துறையினர் 20 ஆண்டு களுக்கு முன்பு வலுவந்தமாக வெளியேற்றினர். இவர்களின் பழத்தோட்டங்கள் போர்ப்பயிற்சி நிலையமாக மாற்றியமைக்கப்பட் டன. அவ்வேளையில் சுமார் 10 டொலர் ஒவ்வொரு குடும்பத்துக் கும் இழப்பீடாக வழங்கப் பட்டது.

மனித உரிமை நிறுவனங்களின் பக்கத்துணையோடு பெடிகள் 1989 இல் தமது நில உரிமைகளை மீளப் பெறச் சட்ட நடவடிக்கையை மேற்கொண்டனர். நீண்டகால மாக இவ்விடயத்தில் மண்டேலா அரசு வாதாடி வந்து இம்மாதத் தொடக்கத்தில், விவசாயிகளைத் தமது தாயகத்துக்குத் திரும்ப அனுப்பியிருக்கிறது. நாள் தோறும், கூட்டங் கூட்டமாக இவர்கள் தங்கள் நிலங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தாயகம் திரும்புவதற்கான ஒழுங்கு களை கலுஷி கலுஷி என்பவர் மேற்கொண்டு வருகிறார். அடுத்த வருடத் தொடக்கத்தில் 20, 000 பேர் திரும்புவர் என எதிர்பார்க் கப்படுகிறது. '' வீடுதிரும்புதல் என்பது எத்தகைய உணர்ச்சியது பவம் என்பதை உம்மால் நம்ப முடியாது. நாங்கள் முன்மரங்களின் கீழ் நிற்கும் பொழுது புதர்கள் இசை பாடுகின்றன. எத்தகைய மகிழ்ச்சியான நத்தார் நாளை நாம் கொண்டாடப் போகிறோம் என்பதைச் சொல்லால் விளக்க முடியாது '' என்கிறார் கலுஷி.

கறுப்பரான விவசாயிகளை நிலமற்றவர்களாக ஆக்குதலும் அவர்களை விவசாய முயற்சி யிலிருந்து அப்புறப் படுத்தலும் தேசியக் கட்சி பதவிக்கு வரு முன்பே தொடங்கி விட்டன, இனத்துவேஷம் அன்று சட்டவரம்பு கொண்ட ஒன்றாகக் கடைப்பிடிக் கப்பட்டது. மண்டேலாவின் அரசு வரலாறு பூர்வமாக இந்த அநீதியை ஒழித்துக் கட்டுவதில் குறிப்பிடத் தக்க முன்னேற்றம் காண்பதற்கு அது திட்டமிட்டுள்ள ஐந்தாண்டு காலத்திலும் கூடிய காலம் தேவைப் படும். ஓராண்டுக்கு முன்பு அவர் எடுத்துக் கொண்ட சூளுரையான, தொழில் வாய்ப்புகள், வதிமனை கள், பாடசாலைகள், வைத்திய சாலைகள் ஆகியவற்றை வழங்கு வதற்கும் காலம் எடுக்கும். இருந்த போதிலும் தன்னம்பிக்கைக்கான ஒளிக்கதிர்கள் தோன்றி, தென்னா பிரிக்கர் பலருக்கும் உற்சாகம் அளிப்பதாக இவ்வாண்டு அமை கிறது.

பிற்றர் ஹோதோணின் (கேப் ரவுண்) செய்தியறிக்கையிலிருந்து தரட்டப்பட்டது.

ரைம் டிசம்பர் 19, 1994.

★

கணனி ஒலிக்கருவி

இரண்டு ஸ்பீக்கர்களையும் (ஒலிப்பெட்டிகள்) இந்தக் கணனி ஒலிக்கருவியையும் உங்கள் வீட்டுக் கணனிப்பொறியில் பொருத்தி விட்டால் மிகவும் உயர்தரமான கச்சேரி மண்டப இசை வருவதாக இதன் தயா ரிப்பாளர் தெரிவிக்கின்றார். ஒலிப்பெட்டிகள் ஒவ்வொன்றும் 20 வாற் ஒலியைத்தருகின்றன. இன்னுமோர் 50 வாற் ஒலி அதிர்வுடைய ஒலிப்பெட்டி அடிநாதம் (Base) கொடுப்பதற் காகப் பொருத்தப்பட்டுள்ளது. இது ஓர் ஒலிப்பிறப்பாக்கி மாத்திரமே. இதன் விலை 700 டொலர்.

பணத்திற்கு ஏற்ற அதிக பயன்

(என்சைக்ளோப்பீடியாஸ் கலைக்களஞ்சியங்கள்)





தமிழில்: திரு. இராமதிலகர்

எது உங்களுக்குச் சிறந்தது?

இருபத்திரண்டு புத்தகங்களைக் கொண்ட உலகப் புத்தக கலைக்களஞ்சியத்திற்கு முதல் தவணைப் பணம் கட்டும் சிரமத்திலும் பார்க்க CD-ROM கலைக் களஞ் சியம் ஒன்றிற்கு 100 டொலர் செலவழிப்பது அவ்வளவு பிரச் சினையானதல்ல. வருடம் ஒன்றுக்குப் புதிய இணைப்புக்களுக்கு 50 டொலர் செலவழித்தாலும் முதலீடு பயனுள்ளதாகும். சிறந்ததைத் தெரிவு செய்ய, நிகழ்ச்சித்திட்ட கதி, உபயோகிக் கும் இலகுத் தன்மை மற்றும் தகவல்களின் தரம் ஆகிய வற்றைக் கவனத்தில் எடுக்க வேண்டும். அதாவது உங்களது உள்ளுணர்வின்படி செயற்படவேண்டும்.

மைக்குரோ சொஃப்ற் என்காற்ரா
Microsoft Encarta

நாம் பரிசோதித்த நிகழ்ச்சித் திட்டங்களில் மிகவும், பரந்ததும் அதிக விரைவானதும் முன்னேற்ற கரமானதும் விவேகமான தாய் விளங்கியதும் ஏதாவது அலுவலக கணனித் திரையில் காட்டக் கூடி யதும் என்காற்ரா 95 ஆகும். மனத்தைக் கவரும் கட்டளையிடும் கட்டமைப்பும் வயது வந்தோரை யும், பாடசாலை மாணவர்களை யும் ஈர்த்து அவர்களை ஆழமாக ஈடுபடச் செய்யக் கூடியது. உதா ரணமாக போர்க் கப்பலைத் தேடும் பொழுது, USS மிசூரியின் வண்ணப்படமும் மற்றும் பலவகை யான கப்பல்களும் காட்டப்படு கின்றன. விடயத்தின் வீச்சும், ஆழமும், மெதுமையான வீடியோ வும் இலகுவான தேடுதல் முறை யும் உடைய என்காற்ரா, கிட் டச் செல்லக் கூடியதும், நவீன மானதும் எல்லையில்லாப் பயனுடையதுமாகும்.

இப்புறோகிறாமின் விந்தை யாதெனின் இதன் விற்பனைக்கு முக்கிய காரணியாக அமைவது இதன் விடயப் பரப்பு அல்லது வடிவமைப்பு அல்ல. தலை வட் டத்தின் மீது குறி காட்டியை உபயோகிப்பாளர் செலுத்தும் போது தேவையான சட்டம் வழுக்கி வெளியேறும் போது ஏற்படும் தெளிவான அமைதி யான 'ஸ்லூஷ்' ஒலியாகும். மைக்குரோ சொஃப்ற் செய்திகளின் படி 'ஸ்லூஸ்' ஒலியும் என்காற்ரா வின் நவீன வரைபட இடை முக மும் பலகாலமாக எதிர் பார்க்கப் பட்ட Windows 95, இயக்கும் தொகுதியின் முன்னோடியாகும். அவ்வாறெனின் உடனே முதலீடு செய்யுங்கள்.

கொம்ரன்ஸ்
Compton's

T. V விருந்துகள் எவ்வாறு உங்களை அழைத்து மகிழ்வியாக உண்ண வைக்கின்றதோ அதே காரணங்களுக்காக கொம்ரன்ஸ் அழைத்து பகிழ்வோடு உபயோ கிக்க வைக்கின்றது. ஒவ்வொரு பகுதிக்கும் ஒவ்வொன்றாக மூன்று வெவ்வேறு பிரிவுகள் உண்டு.

கொம்ரன்'ஸ் திரையை மூன் றாகப் பிரித்து விளக்கவுரைக்கு ஒன்றும், படங்களுக்கு, வீடியோக் களுக்கு ஒன்றும், மற்றது தேசப் படங்கள், நேரக் கோடுகள், பொருள் அடக்கம் ஆகியவற்றுக்கு மாய் உள்ளது. விம்பம் அல்லது விளக்கவுரை முழுத்திரையிலும் பெரிதாகக் காட்டப்பட்டு பின்பு

தெரிவுக்குரிய திறவு கோலை இயக்கி மேற் கூறிய மூன்று பகுதிகளும் பார்க்கப்படுகின்றன. இடை முகங்கள் தெளிவாகவும், வண்ணங்கள் அழகாகவும், மற்றும் உயிரூட்டங்களைப் பார்க்கும் போது அல்லது தென் ஆபிரிக்காவின் ஒரு தேசிய கீதத்தைக் கேட்கும் போது தெரிவுச் சட்டங்கள் மறைவதில்லை. கொம்ரன்ஸ் இரண்டையும் தருகின்றது. அவ்வாறு என்காற்றா தருவதில்லை. இதன் குறை யாதெனில், விளக்க வுரைகள் மிகச் சுருக்கமாக இருப்பதனால் கலைக்களஞ்சியம் போலல்லாது அகராதி போல் தோன்றுகின்றது. நன்றாக ஒழுங்கு செய்யப்பட்ட திரையில் விடயங்களைத் தேடுவதற்கு சிறுவர்களை அழைத்தும் செல்லும் கொம்ரன்ஸ் உடன் விடை தேடும் பெரியோரை மழுங்கடித்து விடும்.

குறோலியர்
(*Grolier*)

1995 ஆம் ஆண்டு குறோலியர் பல்லூடக கலைக் களஞ்சியமானது மட்டமான பேச்சும், ஆழமற்ற விடயமும் கொண்ட 'கொக்ரெயில்' விருந்து போன்றது. தொடக்கி அதிக தாமதத்திற்குப் பின் சினமூட்டும் ஒலிகளுடன் திரையில் தடுமாற்றமடையச் செய்யும் வரை படங்கள் தோன்றுகின்றன. பின்பு பல உருவங்களைக் கொண்ட விளக்க மில்லா சட்டம் தோன்றுகிறது. அதிகமான உரைகள் குறுகியனவாகவும், ஆழமற்றவையாகவும் உள்ளன. கலைக் களஞ்சியத்தின் பல்லூடகப் பகுதியில் ஓரளவு இரசிக்கக் கூடியது உண்டு. நிக்சன் - குருசேவ் அடுக்களை விவாதமும் உண்டு. அணுகுண்டு போடப்படும் ட்ரூமனின் அறிவிப்பும் உண்டு. ஆனால் சில தெரிவுகள் விளக்க மளிப்பவையாக இல்லை. பல்லூடக தேசப்படப் பகுதியில் ''எண்ணங்களும், நம்பிக்கைகளும்'' என்னும் தலைப்பில் பெண்களின் வாக்குரிமையைப் பற்றியே உள்ளது. இரண்டாம் உலக யுத்தத்திற்கு இடங் கொடாமல் கொரியா மற்றும் வளைகுடாப் போர்களுக்கு தேசப்படத்தில் இடம் கொடுக்கப்பட்டு உள்ளது. விரைவாகத் தகவல்களைப் பெற விரும்பும் உயர் நிலைப் பள்ளி மாணவர்கள் இந்த CD-ROM ஐ விரும்புவார்கள். ஆனால் ஆழமான தகவல்களைத் தேடுபவர்களுக்கு ஏமாற்றமே உண்டு.

புக்ஷெல்ஃப்
(*BookShelf*)

முதன் முதலாக 1991 இல் WINDOW'S க்காக வெளியிடப்பட்ட பொருள்களில் ஒன்றான மைக்குரோ சொஃப்ற் புக்ஷெல்ஃப் இன்றும் உபயோகமாயுள்ளது. இதன் எண்ணக்கரு விவேகமாயுள்ளது. உங்களது மேசைக்கு அருகாமையில் உள்ள புத்தக அடுக்கில் உள்ள அகராதி, கலைக்களஞ்சியம், தேசப்படங்கள், பஞ்சாங்கம், மேற்கோள் புத்தகம், மற்றும் வரலாறு ஆகிய யாவற்றையும் ஒரு தட்டில் அமைக்கப்பட்டு உள்ளது. தேடுதல் இலகுவானதாகும். திறவுகோல் சொல்லை அச்சுப்பதிவு செய்யும் பொழுது தேவையான பதிவுகள் வெளிக்காட்டுகின்றன. மேலும் சிறப்பாக புத்தக அடுக்கில் தெரிவு செய்யப்பட்ட உருவங்களை எல்லா நேரங்களிலும் திரை மேலே திறந்து வைத்துக் கொள்ளலாம். உதாரணமாக VIRUS என்ற பதிவைப் பற்றி அறிவதற்குக் கலைக் களஞ்சிய உருவத்தை இயக்கி உரைக் கோவையில் இச் சொல்லை வெளிப்படுத்தலாம். ஒரு புத்தகம் அல்லது எல்லாப் புத்தகங்கள் ஊடாக ஒரே நேரத்தில் பார்க்கலாம். புத்தக அடுக்கு (Bcok Shelf) ஒரு பூரண உசாத்துணைக் கருவி அல்ல. என்காற்றா அல்லது கொம்ரன்ஸ் போலல்லாது இது சுருக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட தலைப்பில் எல்லாத் தகவலும் பெற விரும்பினால் வேறு மூலகங்களில் பார்க்க வேண்டும். ஏதாவது தகவலின் உண்மைத் தன்மை அல்லது வரைவிலக்கணம் என்பவற்றை விரைவாகப் பார்ப்பதற்கு இது சிறப்பானதாகும். உங்களது வேலை ஏதாவது ஆராய்ச்சி செய்து எழுத வேண்டியதாக இருப்பின் புக்ஷெல்ஃப் ஐ CD-ROM இயக்கும் கருவியில் பொருத்தி வைத்துத் தேவையான நேரம் தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் உங்களது பழைய புத்தக அலுமாரி மீது ஓர் அழகான தாவரத்தை வைத்து விடுங்கள்.

●

மிஸ்ற் (Myst) விளையாட்டை ஆக்கிய மனிதர்கள்

தரில் நிறைந்த கணனி விளையாட்டு உலகத்தில், CD - ROM Myst கலையம்சம் பொருந்திய சினிமாப்படத்திற்கு சமமானது. விமர்சகர்களால் வரவேற்கப்பட்டுத் தூக படிய அலுமாரித்தட்டில் வைக்கக்கூடியதும் எனலாம். வாஷிங்ரன் மாநிலத்தை ஒரளவு ஒத்த பழைமை வாய்ந்த மர்மமான அழகான தீவு ஒன்றில் கதை அமைக்கப்பட்டுள்ளது. சுட்டுத்தள்ளும் காட்சிகள் இல்லை. உதைக்கும் குத்துச் சண்டை வீரர்களும் இல்லை. மதிய உணவுப் பெட்டிகள் மற்றும் மாணவர் கொப்பிகள் மீது ஒட்டக் கூடிய கார்ட்டூன் உருவங்களும் இல்லை.

ஆனால் வெளியிடப்பட்ட ஒரு வருடகாலத்தில் பல்லாயிரக்கணக்கான இரசிகர்களைத் தன்வசமாக்கி Myst விற்பனையில் முன்னணியில் திகழ்கின்றது. Myst ஐ வெளிவிடும் புறோடர் பண்ட் 500, 000 பிரதிகளை வெளியிட்டுள்ளது. CD-ROM விளையாட்டுக்களில் பல்லாயிரம் பணத்தை இறைத்த மிகப்பெரிய ஊடக

கூட்டு நிறுவனங்களாலன்றி வாஷிங்டன், ஸ்போகேன் இல் மாற்றி அமைக்கப்பட்ட கறாஜ் கட்டடத்தில் வேலை செய்யும் இரு சகோதரர்கள் றான்ட் மில்லர், றொபின் மில்லர் ஆகியோரால் நிறுவப்பட்ட சுயேச்சையான சொஃப்ற்வெயார் நிறுவனமாகிய சியான் இன்கோப்பறேஷன் Myst இன் வெற்றியைப் படைத்ததுதான் மிகவும் விசேடமாக உள்ளது. அடுத்த படைப்பில் Myst இன் கதையைப் பூரணப்படுத்தி மில்லர் சகோதரர்கள் தமது புகழை நிலைநிறுத்துவார்கள் என இவர்களின் இரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

மிஸ்ற்றைப் படைக்கும் போது சகோதரர்களின் இலக்கு மிகவும் எளிதாக இருந்தது. ''நாம் ஏதாவது விளையாடலாம் என எண்ணி எமக்காக இதை ஆக்கினோம்'' என 28 வயதுடைய றொபின் கூறுகிறார். ஆனால் மிஸ்ற் ஓர் அற்புதத் தோற்றப்பாடாகி பலபேர் இதைப் பிரதிபண்ணிப் போலிகளை வெளியிடும் போதும், சகோதரர்கள் விருப்பமில்லாத பல்லூடக 'சுப் பர்ஸ்ரார்ஸ்' ஆகிய பின்பும் தாம் ஸ்போக்கேனில் வசிக்கும் இரு சாதாரண ஆட்கள் எனத் தம்மைப் பற்றி எண்ணுகிறார்கள். ''எமது நிறுவனம் ஒன்பது பேரைக் கொண்டது; அழகான உற்பத்தியை வெளிவிடுவோம். ஆனால் பொதுவாக இத் தொழில் மற்றவர்களால் உருவாக்கப்படும்'' என 35 வயதுடைய றான்ட் கூறுகிறார். ''படைக்கும் ஆற்றல் உடைய ஒருவரின் தொலைக்காட்சியைப் போன்றது இது. தொலைக்காட்சியாது என்பதை அது வரையறுக்கவில்லை.''

இன்று இவர்கள் ஒன்றாக வேலை செய்யினும் வெவ்வேறு பாதைகளில் தமது முயற்சிகளை ஆரம்பித்தார்கள். றான்ட், இளநிலைப் பாடசாலையில் படிக்கும் போதே அண்மையில் உள்ள பல்கலைக்கழக கணனி ஆய்வுகூடத்திற்கு சென்று வந்தார். ஒரு சபையிலும் சேர்ந்திராத போதகரான இவரின் தந்தை றொன் ஆய்வு கூடப் பயிற்சி முடிவடைந்தவுடன் தினமும் மகனைக் கடமையுணர்ச்சியுடன் வீடு அழைத்து வரும் அதே வேளை இவரின் தாய் பாபரா, இவர் கொண்டு வரும் அச்சுக் கோவைகளை அவை வர்க்கமூல அட்டவணைகளாக இருப்பினும் அதிசயப் பொருள்களைப் பார்ப்பது போல் வரவேற்பார். ஒவியரான றொபினும் தான் வரைந்த எல்லாப்படங்களையும் பெற்றோர் மகிழ்ச்சியுடன் வரவேற்றதாக நினைவு கூருகிறார்- தான் வரைந்த எல்லா விகாரமான படங்களையும் தாய் விரும்பி இரசித்ததாகக் கூறுகிறார்.

வழமையாக ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிவைப் பற்றி வினா எழுப்ப இவர்களின் பெற்றோர்கள் இவர்களை ஊக்குவித்தார்கள். புதிய தொழில் ஒன்றின் முன்னோடிகளுக்கு இவ்வகையான மனோநிலை உதவும். ''இல்லை, இல்லை, இவ்வாறுதான் இதைச் செய்ய வேண்டும். என்று எங்கள் பெற்றோர்கள் ஒரு போதும் கூறவில்லை'' என்று றான்ட் கூறுகிறார். உலகம் அருந்தும் போதும் அரசியல் அல்லது உலக விடயங்களைப் பற்றிப்பேசும் பொழுதும், ''தமது எண்ணங்களை மாற்றி, நீ கூறுவது சரியாக இருக்கலாம், அல்லது எனக்குத் தெரியாது, அவ்விடயத்தை மேலும் அறிய வேண்டும்'' என்று தமது பெற்றோர்கள் கூறுவார்கள் என றொபின் கூறுகிறார்.

புதுமையான குழந்தைகள் நிகழ்ச்சித் தொடர் ஆரம்பத்துடன் 1930 களின் நடுப்பகுதியில் இரு சகோதரர்களும் தொழில் ரீதியாக இணைந்தனர். 1987 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'தமான் ஹோல்' ஒரு விசித்திரமான நிலத்தின் கீழ் உலகத்தின் நாடுகாண் பிரயாணமாகும். 1990 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'கொஸ்மிக் ஒஸ்மோ' பார்வையாளரை ஒரு விநோதமான விண்வெளிக்கப்பலில் விண்ணுலகம் கொண்டு சென்றது. 1992 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 'ஸ்பேஸ்ஸ்' விஞ்ஞானம் மற்றும் இயற்கைப் பரிசோதனைகளை வலியுறுத்தும் ஓர் ஆய்வு விளையாட்டாகும். மூன்று நிகழ்ச்சிகளிலும் றொபினின் நுணுக்கமான கறுப்பு – வெள்ளை கோட்டுப் படங்களும் றான்டின் புறோகிறாமிங்கும் ஒன்றிணைந்தன. குழந்தைகளின் சொஃப்ற்வெயார் விமர்சகர்களால் இவை நன்றாக வரவேற்கப்பட்டு விற்பனையும் சிறப்பாக இருந்தது.

1990 ஆம் ஆண்டுகளின் ஆரம்பகாலத்தில் புதிதாகத் தோன்றிய CD-ROM உலகை ஆராய சகோதரர்கள் ஆவல் கொண்டதாக றான்ட் கூறுகிறார். மேம்படுத்தப்பட்ட ஒலி, ஒளியின், உதவி, மனத்தில் நிலைநிறுத்தக் கூடியதும் படத்தில் அழகாகவும் இருக்கக் கூடிய வேறு விதமான விளையாட்டுக்கு வழி சமைத்தது. நீதி நெறிகளில் நற்பண்புகளை வலியுறுத்தும் குடும்பத்தில் வளர்ந்ததால் அவர்கள் வன்முறையற்ற பிள்ளைகள் விளையாடக்கூடிய விளையாட்டை ஆக்கினார்கள்.

எல்லா நிபந்தனைகளையும் மிஸ்ற் உள்ளடக்குகின்றது. நேர்கோட்டில் அல்லாத இயக்கத்தை நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் காட்டிய முன்னைய முயற்சிகளின் அடுத்துவருவது இதுவாகும். வேறு விதமாகக் கூறின் ஒரு வழி மட்டுமல்லாமல் பலவழிகளில் விளையாடலாம். தொடராக எல்லாப் புதிர்களையும் விடுவிக்காமல் சுற்றி வரலாம். இதன் முன்னோடிகள் போலல்லாது அத் தீவின் வரலாற்றையும், அங்கே வசித்த மக்களைப் பற்றியும் உண்மையான கதையைக் கூறுகின்றது. மிஸ்ற் காலத்திலூடாகச் செல்லும் பொழுது அதன் நம்பகத்தன்மையைக் கூட்டுவதற்காக விளையாட்டின் காலத்திற்கு முற்பட்ட காலத்தின் வாழ்க்கை விபரங்களை மிஸ்ற்றை ஆக்கும் முன் தாம் எழுதியதாகச் சகோதரர்கள் கூறுகின்றார்கள்.

அடுத்ததாகப் படைக்கப் போவது மேலும் பிரகாசிக்கும் என உறுதியாகக் கூறுகிறார்கள். கலைப் பகுதியான கீழ் தளத்தில் றொபின் வேலை செய்யும் அதேவேளை

றான்ட் அவர்களின் கறாஜின் மேல் மாடியில் வேலை செய்கிறார். படிகளில் மேலும் கீழும் அதிகம் ஓட வேண்டியுள்ளது. ''நான் மேலே சென்று கணனி வேலையைப் பார்க்கும் பொழுது, றான்ட் கீழே வந்து எனது சித்திரங்களை விமர்சிப்பார்'' என றொபின் கூறுகின்றார். தனது சகோதரனின் விமர்சனத்திற்கு றொபின் அதிக கவனஞ் செலுத்துகிறார். படங்கள் வரைவதற்கு றான்ட்தான் முதன் முதலாகச் சகோதரனுக்குக் கற்பித்துக் கொடுத்தார். ''நான் சிறுவனாக இருக்கும் போது எனக்கு றான்ட் படம் வரைந்து காட்டித் தெறிப்புகளும், விம்பங்களும் வரைவதைக் கற்பித்தது ஞாபகமாக இருக்கின்றது'' என றொபின் கூறுகின்றார்.

விளையாட்டுக் களத்தில் முதலாம் மிஸ்ற் தனித்திருந்த அதே வேளையில் அண்மைக் காலங்களில் சொஃப்ற் வெயார் ஆக்கத் தொழில் நுட்பப் புதுமைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக இரண்டாம் மிஸ்ற்றுக்குப் பலத்த போட்டி ஏற்படும் என்று மில்லர் சகோதரர்கள் நன்றாக அறிந்திருக்கிறார்கள். ''நாம் மிஸ்ற்றுடன் போட்டியிடவில்லை. மிஸ்ற்றுடன் போட்டியிடுபவர்களுடன் நாம் போட்டியிட வேண்டியுள்ளது'' என றான்ட் கூறுகிறார்.

இரண்டாம் மிஸ்ற்றில் மிகவும் சிறந்த விம்பங்களை ஆக்க முடியும எனக் கூறுகிறார்கள். ''முதலாம் மிஸ்ற்றை ஆக்கிய இயந்திரங்கள் எப்மிடம் உண்டு. உருவங்களை மிகத் தெளிவாகவும், கூடிய நுணுக்கமாகவும் ஆக்க முடியும். முதலாம் மிஸ்ற்றில் மரங்கள் உண்மையாகத் தோன்றுகின்றன. ஆனால் அவற்றை மிக அண்மையில் பார்க்கும்போது அவ்வளவு உண்மையாகத் தெரியவில்லை. இரண்டாம் மிஸ்ற்றில் உருவமைப்பில் அதிக கவனஞ் செலுத்துகிறோம். உருவங்கள் பழக்கப்படாத வையாகி இருக்கும். எனவே, மரமொன்று நீங்கள் சாதாரணமாக வீதியில் பார்க்கும் மரம்போல் இராது. முன் ஒருபோதும் பார்க்காத மரமாகவே இருக்கும். அசைவும், உயிரூட்டமும் அதிகமாக இருக்கும்'' என றொபின் கூறுகின்றார்.

வெளிவிடும் நாள் அவர்களுக்குத் தெரியாது, இந்த நேரத்தில் கூறவும் முடியாது, முடிந்தவுடன் வெளியிடப்படும் என்று மட்டுமே சுருக்கமாகக் கூறலாம்.

''இது புதிதாக இருப்பதனால் உத்வேகம் அளிப்பதாக இருக்கின்றது. மனித வர்க்கத்தின் இறுதி ஊடகம் இதுதான் என நான் கருதவில்லை. புத்தகங்கள் எப்போதும் இருக்கத்தான் போகின்றன. அவையும் எப்போதும் பெறுமானம் உள்ளவையாக இருக்கப்போகின்றன'' என றொபின் கூறுகின்றார்.

மிஸ்ற் இரசிகர்களுக்குத் தெரிந்ததுபோல சொற்கள்தான் மர்மத்தின் திறவுகோலாக இருக்கின்றன. மேலும் தெரிய வேண்டுமா? நீங்கள் அவ் விளையாட்டை விளையாட வேண்டும்.

எழுதியவர்கள்:
பாபரா கன்றோலிற்ஸ் மற்றும்
பற்றீசியா கிங்.

★

தொலைக் காட்சிப் பேச்சை பதியும் கருவி

தொலைக் காட்சிப் பெட்டி அல்லது வானொலிப் பெட்டியுடன் இணைக்கப்படும் கடதாசியில், பேச்சுக்களைப் பிரதி பண்ணித் தரும் கருவி தயாரிக்கப்பட்டுவிட்டது. உதாரணம் தொலைக் காட்சியில் ஒருவர் பேசிய பேச்சை உடனுக்குடன், காகிதத்திற் பதிந்து, தேவைக்கேற்ற விதத்தில் இக்கருவி தந்து விடும். தட்டச்சு இயந்திரத்தில் உள்ள திறன்கள் யாவும் இக் கருவியில் உள. இடைவெளி விடுதல், வெவ்வேறு பேச்சாளர்களின் நிகழ்ச்சிகளை வித்தியாசப்படுத்தல் முதலியன இதில் அடங்கும். தொலைக் காட்சியுடன் இணைப்பதற்குரிய சகல சாதனங்களும் இதிலடங்கும். இதன் விலை 2,000 டொலர்.

புரட்சிகரமான 'வொல்வோ' கார்

மின்சாரத்திலும், எண்ணெயிலும் செயற்படும் மோட்டார்க் கார்களை, சுவீடன் நாட்டு வொல்வோ கார் நிறுவனம் தயாரித்துள்ளது. பிஸ்ரன், சிலின்டர் இத்தியாதி இதில் இல்லை. இது ரேர்பைன் முறையில் (TURBINE) இயங்குகின்றது. பாரிய கடற் கப்பல்களிலும், விமானங்களிலும் இது பயன்படுத்தப் படுகிறது. இதில் மின் கலங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த வாகனம், மின்சாரத்தில் மாத்திரம் இயங்கும்போது 50 மைல் தூரம் ஓடும். மின்சாரம், எண்ணெய் இரண்டிலும் ஒன்று சேர்ந்து ஓடும்போது, இந்த முழு அளவுக் கார் கலனுக்கு 45 மைல் செல்கின்றது. இதன் சிறப்பம்சம்: புகை போக்கியால், புகை மிகுதியாக வெளி வராமையே. நூறு மைல் வேகத்திற்கு மேல் இதனால் ஓட முடியும். இது, இன்னும் விற்பனைக்கு விடப்பட வில்லை. தற்சமயம், இது சுவீடனில் தயாரிப்பில் உள்ளது.

உணவும் சமையற் கலையும்

"இல்லத்தரசிகளே! உங்கள் கணவரின் இதயம் எங்கேயென்று தேடாதீர்கள்; அது அவருடைய வயிற்றில்தான் இருக்கிறது."

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

உணவும், நீரும் உயிரின் ஆதாரம். உணவைச் சேகரிப்பதிலும், பாகம் பண்ணுவதிலும் கிரமமாக உண்ணுவதிலும் மனிதரின் நேரமும், பணமும் செலவாகின்றன. ஓர் இனத்தின் பிரதான உணவு வகைகள் அவர்கள் வாழும் நாட்டின் அமைவிடம், சீதோஷ்ணம், மண்வளம், பண்பாடு ஆகியவற்றை எமக்குத் தெரிவிக்கும். 4,000 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் வாழும் இவ்வுலகின் சரி பாதியினர் கோதுமை, பார்லி, சோளம், கடலை போன்றவற்றையும் மிகுதியினர் அரிசியையும் தமது உணவாக்குகின்றனர். ஆகவே உலக மக்களின் உணவிற் பெரும்பகுதி தானியவகைகள் என்பது புலப்படும். அவர்கள் உண்ணும் உணவிலிருந்து வாழ்க்கைத் தரம் ஆரோக்கிய நிலை ஆகியவற்றையும் நாம் அவதானிக்கலாம். இன்று படிப்படியாக உணவு உட்கொள்ளும் விதம் பற்றிய பல சம்பிரதாயங்கள் ஒவ்வொரு நாட்டிலும் வளர்ச்சி பெற்றுள்ளன. அதே சமயத்தில் தொடர்புச் சாதனங்களால் சுருங்கிவரும் இவ்வுலகில் இனங்கள் மாத்திரமல்ல அவர்களின் உணவு வகைகளும் இடம் மாறியுள்ளன. உணவு ஒரு பிரதான வர்த்தகப் பொருளாக மாறியதால் இன்று கோதுமையும், அரிசியும் கிழக்கு மேற்கு என்று பாராது எத்திசையும் ஏற்கும் உணவாகியுள்ளன.

தானியங்களுக்கு அடுத்தபடியாக இறைச்சி, மீன், முட்டை, பால், பழங்கள், மரக்கறி ஆகியவை எமது உணவாக அமைகின்றன. இறைச்சிகளில் மாட்டின் இறைச்சி முதலிடம் பிடித்துள்ளது. மாடு வளர்ப்பிற்குப் பெரும் புல்வெளிகள் தேவைப்படுகின்றன. வட-தென் அமெரிக்கா, அவுஸ்திரேலியாக் கண்டங்களில் மாடுகள் இறைச்சித் தேவைகளுக்காக வளர்க்கப்படுகின்றன. இக் கண்டங்களில் வாழ்வோர் தாம் தின்று மிஞ்சியதை ஏற்றுமதி செய்கின்றனர். ஆட்டின் இறைச்சியைத் தின்போர் ஒப்பீட்டு ரீதியில் மிகக் குறைவு. ஆனால் மாட்டின் பாலைப் போன்று ஆட்டின் பால் விரும்பிப் பருகப் படுகின்றது. ஆசிய நாடுகளிலும், ஐரோப்பாவின் சுவிற்சர்லாந்து, ஸ்பெயின், அமெரிக்காவில் மெக்சிக்கோ ஆகிய நாடுகளிலும் ஆட்டின் பால் பருகப்படுகின்றது. ஆட்டின் பாலைத் தொழிற்சாலைகளில் மாவாக்கி சுவிற்சர்லாந்து ஏற்றுமதி செய்வது இங்கு குறிப்பிடத்தக்கது. மத்திய கிழக்கிலும், வேறு பாலைவன நாடுகளிலும் ஒட்டகத்தின் பாலை மக்கள் குடிப்பர். அத்துடன் அதன் இறைச்சியையும் உண்பர். ஐரோப்பிய நாடுகளில் பிரான்சும், ஆசிய நாடுகளில் மொங்கோலியாவும் இதை மாதிரிக் குதிரையைப் பயன்படுத்துகின்றன.

அமெரிக்காவில் பிரபலமடைந்த ஜப்பானிய சமையல் நிபுணர் மற்சுவா.

ஆசிய நாடுகளில் சோறும், அரிசி மாவில் செய்யப்பட்ட உணவு வகையும் மக்களின் மூன்று நேரச் சாப்பாடாகி இருக்கின்றது. எனினும் இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா கலந்த உரொட்டியும், வெதுப்பு வகைகளும் இன்று பரவலாகத் தின்னப் படுகின்றன. சோற்றுடன் மீன், இறைச்சி, மரக்கறி போன்றவற்றைக் கறிளாகச் சமையல் செய்து கூட்டுணவாக இக் கண்ட மக்கள் உண்ணுகின்றனர். கடலோரத்தில் வாழ்பவர்கள் மீன், இறால், நண்டு, கணவாய் போன்றவற்றைப் பெரிதும் விரும்பி உண்ணுகின்றனர். ஐரோப்பாவில் சுவீடன், நோர்வே, டென்மார்க், பின்லாந்து போன்ற நாடுகளும் ஆசியாவில் ஜப்பான் மற்றும் தென்கிழக்காசிய நாடுகளும் மீனைப் பல்வேறு விதத்தில் பாகம் பண்ணி உண்கின்றனர். ஜப்பான் தனது தேசிய உணவாகச் சோறையும், மீனையும் கணிக்கின்றது. இந்தியா இலங்கை போல் அல்லாது ஜப்பானியர்கள்

இன்னும் சொற்றின் அளவு மிகக் குறைவு. மீன் இறைச்சி உணவே உலக மக்கள் உணவு. தாவர உணவைத் தனியாக உண்போர் தொகை மிகச் சொற்பம்.

சீனாவின் உணவு வகைகளும் பாகம் பண்ணும் முறைகளும் இன்று உலகெல்லாம் பரவியுள்ளன. ஆதிகாலந் தொட்டு சீனாவின் பெருந்தொகை மக்களுக்குத் தேவையான உணவு அங்கு போதுமான அளவில் தயாரிக்கப்படவில்லை. அவர்களுடைய நாக்கில் நீரூறும் பாக சாஸ்திரத்தின் இரகசியம் இந்தப் பற்றாக்குறைதான். லீக்ஸ், கரட், அவரை போன்ற மரக்கறி சில துண்டு கோழி இறைச்சி, அல்லது பன்றி இறைச்சி, வெள்ளை அரிசி, அல்லது அரிசி மாவில் செய்த நூடில்ஸ் போன்றவற்றை ஒன்றாகக் கூட்டிச் சரக்கு வகைகளைக் கணக்காகச் சேர்த்துப் பல் சுவைகளை அவர்கள் உண்டாக்கியுள்ளனர். தென் இந்தியாவின் சாப்பாரின் இரகசியமும் இதுதான். மிஞ்சியவற்றை அல்லது கிடைத்த சிறியளவை ஒன்றாக்கிச் சாம்பார் செய்யப்படுகின்றது. உணவுத் தட்டுப்பாடு உருசிகளுக்கு வழி காட்டுவதை இங்கு உணரலாம். யாழ்ப்பாண மக்களுக்குத் தனித்துவமான கூழும் இவ்வாறான கண்ணோட்டத்தில் பார்க்கக்கூடிய உணவு வகைதான். ஒரு காலத்தில் இது ஏழைகளின் உணவாக மதிக்கப்பட்டுள்ளது. இன்றோ தேசிய உணவின் ஸ்தானம் அதற்குண்டு. அத்துடன் அதன் தயாரிப்புச் செலவும் பெருமளவு கூடிவிட்டது.

இன்று பசிக்கு வயிற்றை நிரப்புவதோடு மக்கள் திருப்திப் படவில்லை. விஷயமறிந்தவர்கள் ஊட்டச் சத்தை விரும்பி உண்கின்றனர். எமது உடலுக்குப் புரதம் எனப்படும் புரோட்டீன் அத்தியாவசியம். இன்றியமையாத உணவுப் பொருள்கள் என நாம் கருதும் யாவற்றிலும் புரோட்டீன்கள் உள்ளன. மீன் இறைச்சி, முட்டை, பால், பட்டாணிகள், பருப்பு, சோயா யாவற்றிலும் புரதம் உண்டு. இவையாவற்றிலும் மனிதனுக்குத் தேவையான அமினோ அமிலங்கள் உருவாகின்றன. அமினோ அமிலங்களின்றி மனிதன் உயிர் வாழ முடியாது. புரதத்தை உடல் பிற்கால உபயோகத்திற்குச் சேகரித்து வைப்பதில்லை. உடலின் திசுக்களைப் புதுப்பிக்கவும், பேணவும் தினசரி புரதம் உட்கொள்ளுவது அவசியம். சீன மக்களும், ஜப்பானியர்களும் பன்னெடுங் காலமாகச் சோயா அவரையைப் பல்வேறு உருவங்களில் தயாரித்து உட்கொள்கின்றனர். சோயாவைச் சுவையாகச் சமைப்பதில் இந்த இரு நாடுகளும் முன்னணியில் இருக்கின்றன. சீனாவில் பால் கறக்கும் பிராணிகளும், இறைச்சிக்காக வளர்க்கப்படும் ஆடும், மாடும் மிகக் குறைவு. அவர்கள் தங்கள் புரதத் தேவைக்குப் பன்றி, கோழி, தாரா, சோயா ஆகியவற்றையே நம்பியிருக்கின்றனர். சீனர்களுடைய சமையற் கலையும் இவற்றைச் சுற்றியே அமைகின்றன.

உடலின் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் ஒவ்வொரு விற்றமினிலும் சிறிதளவு எமக்கு வேண்டும். எமது சராசரி உணவில் இவை இருக்கின்றன. மேலதிகமாக எதையும் உட்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. தரமான உணவில் 'டி' விற்றமினை விட மற்றவை யாவும் உண்டு. எமது உடலால் விற்றமினையும் சேமிக்க இயலாது. அதே சமயத்தில் கூடுதல் விற்றமின்கள் கெடுதல் விளைவிக்கும் என்பதையும் நாம் மறக்கலாகாது. விழிகள், தோல், பற்கள், எலும்பு ஆகியவற்றின் ஆரோக்கியத்திற்குப் பச்சைக் காய்கறிகள், பழங்கள், முட்டை, இறைச்சி, பால் ஆகியவற்றில் உள்ள விற்றமின் 'ஏ' அவசியம். சமிபாடு, நரம்பு வலிமை, நோய்த் தடுப்பு ஆகியவற்றிற்குத் தேவையான விற்றமின் 'பி' தானியங்கள், பருப்புக்கள், பன்றி இறைச்சி, ஈரல் ஆகியவற்றில் காணப்படுகின்றன. பொதுவாக விற்றமின் 'பி' பால், முட்டை, பச்சைக் காய்கறிகளில் காணப்படுகின்றன. திசுக்கள், எலும்புகள், பற்கள் ஆகியவற்றின் ஆரோக்கியத்திற்குத் தேவையான விற்றமின் 'சி' தக்காளி, முட்டை, பழங்கள், கோவா, முள்ளங்கி ஆகியவற்றில் உண்டு. கொழுப்புச் சத்துள்ள உணவைத் தள்ளிவைப்பது; உடலுக்கு நலம்.

மனிதன் வாழ்வதற்காக உண்கின்றானா அல்லது உண்பதற்காக வாழ்கின்றானா என்ற எல்லையில்லாத வாக்குவாதம் நிகழ்ந்தபடி இருக்கின்றது. பசி வரும்போது உருசிபாராமல் உண்டால் போதும். தின்பதை உருசியாகத் தின்னவேண்டும் இல்லாவிட்டால் வேண்டாம் இப்படி இரண்டு கட்சி. காசு கொடுத்து வாங்கும் உணவுப் பொருள்களை வாய்க்கு உருசியாகத் தின்றாலென்ன என்றொருகேள்வி? இனிமையான இல்லறத்திற்கு அன்பு, அரவணைப்பு, பரஸ்பரம் புரிந்துணர்வு போன்ற உளம் சார்ந்த விஷயங்கள் மட்டுமல்ல உணவு சார்ந்த அம்சங்களும் கூடும் பத்தில்உண்டு.கணவனைப் பிடியில் வைத்திருக்க, கைதேர்ந்த சமையல் அவசியம் என்றெல்லாம் பேசப்படுகின்றது. உடற்கூறு அறிஞர்களின் கூற்றுப்படி மனிதனின் நாவில் 3,000-க்கு மேற்பட்ட சுவை மொட்டுகள் இருக்கின்றன. பெரும்பாலான மிருகங்களின் நாவிலும் இது காணப்படுகின்றது. மனிதனை விட சுவையுணர்வு அதிகமுள்ள பிராணி பன்றிதான். இதன் நாவில் 6,000 சுவை மொட்டுகள் உள்ளதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஆகவே திமிங்கிலம் போன்று மனிதனால் உணவை விழுங்க முடியாது. மனிதன் சுவையை விரும்புபவன். சுவைத்து உண்பவன் என்பதை நாம் ஏற்பது புத்தி.

மிகவும் நீண்டதொரு பாரம் பரியத்தைக் கொண்டது சமையற் கலை. என்று நெருப்பும், அடுப்பங்கரையும் ஆரம்பமாகிலவோ அன்றே பல்சுவையே குறியான சமையற் கலையும் தொடங்கி விட்டதெனலாம். உணவைப் போற்றாத நாடுமில்லை, நாகரிகமுமில்லை என்று துணிந்து கூறலாம்.

பாக சாஸ்திரத்திற்கொரு நளன், வைத்தியத்திற்குத் தன்வந்திரி, அரசியலுக்கு சாணக்கியன், காம சாஸ்திரத்திற்கு ஒரு வாத்சாயனர் என்பது நீண்டகால வழக்கு. இந்த வரிசையில் நளனுக்குத்தான் முதலிடம். இன்றும் இதே நிலை தான். ஓர் உணவகத்தின் பெருமை அதன் சமையலில் தங்கியுள்ளது. ஐந்து நட்சத்திர விடுதிகளிலும், தனவந்தர்களின் மாளிகைகளிலும் பெயரெடுத்த ராசியான சமையற்காரர்களே அகப்பையைப் பிடிக்கிறார்கள். இவர்களுடைய ஊதியத்தைப் பற்றிச் சொல்லத் தேவையில்லை. மேலைத்தேயங்களின் உணவகச் சிகரமெனப்படும் றிட்ஸ் ஹோட்டலின் பிரதம சமையற்காரர் ஜோன் லெக்மான் தனது சுயசரிதையில் கூறுகிறார்: "நான் கலைஞன். எனக்குத் திடீரெனப் புதிய பாக முறைகள் தோன்றும். எனக்கு மேலதிகமாகத் தரப்படும் அன்பளிப்புப் பெரிதல்ல. எனது கையை நம்பி இத்தனை கோடீஸ்வரர்கள் வந்தார்களே அந்தப் பெருமை போதும்" என்கிறார்.

கறிகளுக்கும், உணவு வகைகளுக்கும் சுவை சேர்ப்பவை விதம் விதமான சரக்குத் தூள்களும், வாசனைத் திரவியங்களும், கருவேப்பிலை போன்ற தாவரங்கள் என்று பொதுவாகக் கூறினாலும் இவை எந்த அளவில் கலக்கப்பட வேண்டும் என்பது பரம இரகசியம். நிபுணருக்கு நிபுணர் இது வித்தியாசப்படும். அத்துடன் நெருப்பைக் கூட்டுவதிலும் குறைப்பதிலும் சுவைகூட வாய்ப்புண்டு. எமது விறகு அடுப்பில் இது கடினம். மின்சார அல்லது எரிபொருள் அடுப்பில் இது சாத்தியப்படும். அத்தோடு இன்றைய முன்னணி சமையற்காரர்கள் புரட்சிகரமான ஆராய்ச்சிகளைத் துணிந்து செய்கிறார்கள். பழைய பல்லவிகளைக் கைவிட்டு ஆசியாவின் சமையற் காராகள் மேற்கத்திய முறைகளையும், சரக்குகளையும் பயன்படுத்துகிறார்கள். அதே போன்று மேலைத்தேயக் கலைஞர்கள் ஆசியாவின் பாரம்பரியங்களைத் தமது பாணியில் அறிமுகஞ் செய்துள்ளார்கள். மேலைத்தேயங்களில் காரத்திற்கு மிளகை நம்பியிருக்கிறார்கள். இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மிளகாயைப் பயன்படுத்துகிறார்கள். இப்போது ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மிளகாய்த் தூள் பாவிக்கப்படுகின்றது. இன்று உலக நாடுகளின் தலை நகர் யாவற்றிலும் கீழைத்தேய, மேலைத்தேய உணவு எதையும் விரும்பியவாறு பெற்றுக் கொள்ளலாம். மேற்கு நாடுகளில் சாப் பாட்டு மேசை அலங்காரமும் முக்கிய இடம் வகிக்கின்றது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் மிளகாய்த் தூளை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள்; நாமும் அப்படியே. அவர்களும் தேங்காயைச் சமையலில் சேர்க்கிறார்கள்; நாமும் அவ்வாறே. ஆந்திராவில் சிகப்பு நிற முழு நீள மிளகாயை மீன் குழம்பில் போடுகிறார்கள். சோற்றை வாயில் போடுமுன் இந்த மிளகாயைக் கையில் எடுத்து உறுஞ்சி உண்கிறார்கள். அவர்கள் உணவருந்தும்போது கண்ணிலிருந்து ஆனந்த நீர் பெருகும். அவர்கள் புளியைக் கறியில் போடுவதோடு, வெறுமனே வாயிலும் போடுகிறார்கள். புளியை வாயில் மெல்லாத தெலுங்கு தேச மக்களைக் காண்பது அரிது. இவ்வாறு உருசிகளும், பாகம் பண்ணும் முறைகளும் ஏராளம். கிழக்கு நாடுகளின் அரையல் அல்லது சம்பல் ஐரோப்பிய, அமெரிக்க உணவகங்களில் காணமுடியவில்லை. இதில் அவர்கள் அக்கறை காட்டுவதைக் காணோம்.

இன்று ஆண், பெண் இருபாலாரும் சமத்துவம் பேணுங் காலம். பெண் வேலைக்குப் போக ஆண் வீட்டில் சமையல் செய்யுங் காலம். இருவரும் வேலைக்குப் போனால், சமையல் தொடக்கம் குழந்தைப் பராமரிப்பு வரை பகிர்ந்து செய்கிறார்கள். வாழ்விலும், தாழ்விலும் ஆணும், பெண்ணும் உண்மையில் சமபங்கு எடுக்க ஆரம்பித்துள்ளார்கள். விருந்து வைபவங்களிலும், உணவகங்களிலும் கடினமான வேலையைச் செய்யும் ஆண்கள் வீட்டிலும் அடுப்படி வேலை செய்வதில் குறை வொன்றுமில்லை. மனைவி பிற நாடுகளுக்கு வேலைதேடிச் சென்றால் கணவன் பிறர் உதவியை நாடாமல் தனது உணவைத் தயாரிக்கலாம் அல்லவா? தாரமிழந்த ஆடவர் பெறும் நன்மைகள் பற்றியோ இங்கு சொல்லத் தேவையில்லை.

ஆதாரம்:
1. ஏசியா வீக், நவம்பர் 9, 1994
2. தாவரபோசன சமையல்
பு. முருகேசபிள்ளை– 1987

உல்லாசப் பயணிகளுக்கொரு நீர்மூழ்கிக் கப்பல்

நோமாட் 1000 என்ற குறியீட்டுடன் ஆறு பயணிகளும், இதை இயக்கும் பொறியியலாளர்களும் கடலுக்கடியில் 1000 அடி கீழே செல்லக் கூடிய நீர் மூழ்கிக் கப்பல் தயாராகி விட்டது. இதில் இரண்டு டீசல் இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. நீருக்குமேல் சாதாரணக் கப்பல்போல் பயணிப்பதென்றால் இது 1000 கடல் மைல்கள் செல்லவல்லதெனத் தயாரிப்பாளர்கள் அறிவிக்கின்றனர். நீருக்குக்கீழ், மேலுக்கு வராமல் மூன்று நாள் தங்கும் ஆற்றலும் இதற்கு உண்டு. இதில் மேலதிகமாகப் பொருத்தப்பட்டிருக்கும் 110 குதிரைச் சக்தி மின்சார மோட்டர் நீருக்குக் கீழ் செலலும்போது இயங்கி உதவுகின்றது. இதன் விலை 4.5 மில்லியன் டொலர்.

இராசா டீசல் என்ஜினியர்ஸ்

எல்லாவகை

★ டீசல் பம்புகளும்,
★ இன்ஜெக்ரர்களும்
★ திருத்துவதும்
★ சேவிஸ் செய்வதும்
★ உதிரிப்பாகங்களையும்

வினியோகம் செய்பவர்கள்.

180, பருத்தித்துறை வீதி, குருநாதர் கோவிலடி,
யாழ்ப்பாணம். 22779

கலக்சி புகைப்பட சேவை

புகைப்படத்துறைப் பொருட்கள் விற்பனையும் வர்ணப்புகைப்பட பிரதியாக்கலும்

புகைப்படத்துறையில் ஆர்வமும், ஆராய்ச்சி நோக்கமும்
கொண்ட யாவருக்கும்

ஒரு மகிழ்ச்சியான செய்தி!

நீங்களும் வர்ணப்பிரதியாக்கம் செய்ய முடியும்

★ வர்ணபுகைப்பட பிரதியாக்கல் பயிற்சி வழங்கல்
★ நவீன இயந்திரங்களைக் கையாளும் பயிற்சி வழங்கல்
★ புகைப்படத்துறை சார் எழுத்து ஆக்கங்களை வெளியீடு செய்தல்
★ புகைப்படத்துறை சார் ஆராய்ச்சிகளிற்கு ஊக்கமும், உதவியும் வழங்கல்

போன்ற பலதரப்பட்ட சேவைகளையும் ஆற்ற ஆயத்தமாக உள்ளோம்.

கலக்சி புகைப்பட சேவை
337 1/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கலக்சி 024-2479
இல. 64, 1-ம் மாடி,
பஸ் நிலையம், வவுனியா.

முகாமைத்துவம்

உண்ணக் கொடுத்து உறவைத் தேடுங்கள்

வாடிக்கையாளரை நம்பிக்கையுடன் உபசரிக்கும் திறமை முகாமைத்துவத்திற்கு இன்றியமையாதது

தமிழில்:
கலாநிதி சோமஸ்கந்தன்

இன்றைய பல்தேய இராஜதந்திரிகள் விருந்துண்பதிலும், கொடுப்பதிலும் அதிக நேரம் செலவிடுகின்றனர். மாலை நேரத்திலும், பின்பும் உயர்தர உணவகங்களிலும், உல்லாச விடுதிகளிலும் அவர்களைக் காணலாம். இதற்குரிய நிதியை அவர்களின் அரசுகள் வழங்குகின்றன. வெளிநாடுகளில் இவ்வாறு உலாவும் இராஜதந்திரிகளை அவர்கள் பிரதிநிதிப்படுத்தும் நாட்டின் காதும், கண்ணும் என வருணிப்பர். உயர் மட்டத்தினருடன் கேளிக்கைகளில் கலக்கும் போது தமது நாட்டிற்குத் தேவையான பல அரிய தகவல்களை அவர்கள் சேகரிக்கின்றனர். உளவுத் துறையினரும் இவ்வாறே செயற்படுகின்றனர். கணக்காய்வாளர்களின் கூட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட பெரு நிதி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. இதை வைத்து விருந்தோம்பலை வெகு விமரிசையாகச் செய்கின்றனர். ''ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில்கண்வையடா'' என்ற பாட்டு வரிக்கமைவாக அவர்கள் செய்திகளைத் திரட்டுவதிற் குறியாய் இருப்பர்.

இரு அதிகாரிகள் தம்முள் உரையாடி உணவருந்துகின்றனர்

சராசரி அரசுகளிலும் கூடுதலான வருடாந்த வரவு செலவுக் கணக்குகளைக் கொண்டுள்ள சர்வதேச வர்த்தக ஸ்தாபனங்களும், தயாரிப்பு நிறுவனங்களும் இன்று உள்ளன. இவை பெரும் சாம்ராச்சியங்கள் போல் இயங்குகின்றன. அரசுகளுக்கு உளவுத்துறை மிகவும் முக்கியமான அங்கமாகும். அது போல் இந்த சர்வதேச நிறுவனங்களுக்கும் உளவுத்துறை அத்தியாவசியம். போட்டி நிறுவனங்களின் வருங்காலத் திட்டங்கள் என்ன என்பதை அறிவதிலும், தமது நிட்டங்களைப் பிறர் அறியாவண்ணம் தடுப்பதிலும் இந்த அலகு பயன்படுகிறது. தொழில் நுட்பத் திருட்டு இன்று பரவலாக நடைபெறுகிறது. பல வருடங்கள் முயன்று பெரும் பொருட் செலவில் ஆராய்ச்சிகள் செய்து பெறும் கண்டுபிடிப்புக்கள் சில மாதங்களில் பிற நாடுகளில் அறிய வருவதின் மர்மம் என்ன? நிறுவனங்கள், அரசுகள் போன்று ஒருவரை ஒருவர் உளவுத்துறை மூலம் கண்காணிக்கின்றன. பணத் தேவையுள்ள போட்டி நிறுவனப் பொறியியலாளர்களுக்கு உதவி செய்து தொழில் இரகசியங்களை மாற்றாகப் பெறுகின்றனர். முக்கியமானவர்களுடன் நட்பும், நல்லுறவும் வளர விருந்து உதவுகின்றது.

பயன் கருதா விருந்தோம்பல் இன்று அருகி வருகிறது. பகிர்ந்து உண்ணும் மனித வழக்கின் தொடர்ச்சியென்று விருந்து கொடுப்பதை விளக்கலாம். காலப் போக்கில் அன்பு மனித நேயம் போன்ற உயர் குணங்களை வெளிப்படுத்த வேண்டிய விருந்தோம்பல் கௌரவம், பணச்செருக்குப் போன்றவற்றை வெளியிடும் கருவியாக மாறிவிட்டது. அத்துடன் பிறர் இரகசியங்களை அறிவதற்கு ஒரு சுலபமான மார்க்கமாகவும் உணவு மாறிவிட்டது. தெரிந்தும் இப்பொறியில் வீழ்வது மனித இயல்பு. தொழிற்சாலை ஆய்வுகூடத்தில் கடமை புரியும் ஒருவருக்குப் பெருஞ் செலவில் மாற்றார் விருந்துபசாரம் கொடுப்பதென்றால் அதில் உள் நோக்கம் இருந்தே திரும். அத் தொழிலாளி இதை அறிந்தும் அதில் பங்கு கொள்ளும்போது தான் ஒரு விற்பனைப் பண்டம் என்பதை நிரூபிக்கின்றார். ஒவ்வொரு மனிதருக்கும் அவர் தகுதிக்கேற்ப ஒரு விலையுண்டு என்ற வாக்கியத்தை இங்கு நினைவு கூருதல் சாலவும் நன்று.

வர்த்தக ஸ்தாபனங்கள், தொழிற்சாலைகள், ஆய்வு கூடங்கள் போன்றவற்றின் உயர் அதிகாரிகளுக்கு உணவு கொடுக்கும் சம்பிரதாயங்கள் பற்றி பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இவற்றை விளக்கி நூல்கள் எழுதப்பட்டுள்

முகாமைத்துவம்

ளன. காலை, மதியம், மாலை, இரவு என நான்கு பிரிவுகளாக வகுக்கப்பட்டு அந்தந்த நேரங்களுக்கு உரிய உணவு வகைகள் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றுள் காலை உணவு குறைந்த நேரச் செலவும், பணமுதலீடு உடையதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. காலை 7.30 மணிக்குப் பின்பாகவும், 9 மணிக்கு முன்பாகவும் அமைவது காலை உணவு. விழிப்புணர்ச்சி கூடிய நேரமென்றும், சந்திப்போர் இருபகுதியும் வெறும் வெட்டிப் பேச்சில் அதிகநேரம் செலவிட முடியாத சமயமென்றும், காலை உணவு விபரிக்கப்பட்டுள்ளது. சுற்றி வளைக்காமல் விஷயத்திற்கு விரைவில் வரவேண்டியது மிகவும் அவசியம். காலை உணவு நேரத்தில் முக்கியமான ஒரு சில பேச்சுக்கள் மாத்திரம் முடிக்கக் கூடியதாக இருக்கிறது. இரு பகுதியினரும் தத்தமது அலுவலகம் செல்லவேண்டியிருப்பதால் பேச வேண்டியவை எது என்பதை முன்கூட்டியே தயாரித்து உணவு மேசைக்கு எடுத்துச் செல்வது அவசியம்.

அமெரிக்க ஜனாதிபதி வெள்ளை மாளிகைக் காலை உணவுக் கலந்துரையாடல்கள் பிரசித்தமானவை. அதிகாரிகளைச் சந்திக்கவும், சுருக்கமாக நடப்புக்களைப் பற்றிப் பேசவும் ஜனாதிபதிக்கு நல்ல சந்தர்ப்பம். ஜேர்மனியில் காலை 10 மணிக்கு ஒரு குவளை காப்பியும், ஒரு துண்டு கேக்கும் சாப்பிடும் வழக்கமுண்டு. அதிகம் பேசாமல் கூடுதல் வேலை செய்யும் இந்த இனத்தவர் காப்பி அருந்தியபடி பேசுவது எல்லாம் மிகுதிநாள் வேலையைப் பற்றித்தான். ஆங்கிலேயர்கள் தேநீர்ப் பிரியர்கள். அவர்களுடைய காலை உணவு மிகவும் விஸ்தாரமானது. வறுத்த மீன் அல்லது இறைச்சி, முவண்ணெய், பால், முட்டை, பழம், தேநீர், இத்தியாதி, அவர்கள் மாலையில் தேநீர் அருந்தும் போதும் பல்வேறு உணவு வகையை உட்கொள்வர். இங்கிலீஸ் தேநீர் என்று சொன்னால் மாலை நேரத்தில் அவர் உண்ணும் உணவையே குறிக்கும். மேலை நாடுகளில் மதியபோசனம் மிகவும் சுருக்கமாக இருக்கும், கீழைத்தேயங்களின் மதிய உணவும் அதைத் தொடர்ந்துவரும் ஒரு மணித்தியால தூக்கமும் மேற்கில் காணமுடியாது.

இரவுணவை வீட்டில் அல்லது உணவகத்தில் அவர்கள் பெற்றுக் கொள்வர். உணவோடு தொழில் சம்பந்தமான பேச்சுக்களையும் நடத்துவர். நாம் கையால் சாப்பிடும் இனமானபடியால் புத்தகங்கள், கோவைகள் போன்றவற்றைப் புரட்டிப் பார்க்க முடியாது. அவர்கள் கத்தி, கரண்டி, முள்ளு போன்றவற்றின் உதவியுடன் உண்பதால் அவற்றைத் தட்டில் வைத்தபடி தங்கள் அலுவலகப் பேச்சையோ, பேரம் பேசுதலையோ தொடரலாம். உரத்துப் பேசாத சமூக விதி உணவகங்களிற் பேணப்படும். காதலர்கள் போல் தாழ்ந்த குரலில் உலகின் ஆணிவேரையே அசைக்கக் கூடிய முக்கிய விஷயங்கள் உணவு விடுதிகளில் பேசப்படலாம்.

மேற்குலக உணவுச் சம்பிரதாயங்களில் மது முக்கிய இடம் வகிக்கின்றது. அவர்கள் மதுவைக் கட்டியாளுகிறார்கள். நாம் அதற்கு அடிமையாகிறோம். இன்ன உணவுடன் இன்ன ரக மது, எந்த அளவில் குடிக்க வேண்டும் போன்ற விதிகள் அங்கு உண்டு. உதாரணமாக மீனுடன் வெள்ளை நிறத் திராட்சை மது, இறைச்சி உடன் சிவப்பு நிறத் திராட்சை இரசம், இரவுணவு முடிந்த பின் சின்னஞ் சிறிய கிண்ணத்தில் பிரண்டி, மாலை நேரத்தில் மூன்றுக்கு மேற் பட்ட மதுக்களின் கலவை அதுவும் சிறியளவில், சுய நினைவு இழக்கும் விதத்தில் குடித்தல் யாபேராலும் வெறுத்து ஒதுக்கப்படும். உயர் குடிப் பிறந்தோர் மத்தியில் அப்படியோர் கட்டுப்பாடு உண்டு. மதுவைப் போன்று ஆண், பெண் இரு பாலாரும் சேர்ந்து ஆடும் நடனமும் முக்கிய இடம் வகிக்கின்றது.

இங்கும் நடன அரங்குகளில் தராதரம் பார்த்து அனுமதி வழங்கப்படும். மேலைத் தேயத்தில் சாதி போன்ற அமைப்பு இல்லாவிட்டாலும் இறுக்கமான வர்க்க ஒழுங்குகள் உள்ளன. பெண்ணைத் தொடுதல், அணைத்தல், பேச்சுக் கொடுத்தல் போன்றவற்றில் நடைமுறைகள் உள்ளன. இவை எம்போன்றோருக்கு விந்தையாகத் தோன்றினும் அது அவர்கள் பண்பாடாகும்.

பொது உணவகங்களில் காக்கப்பட வேண்டிய சில ஒழுக்க முறைமைகள் உள்ளன. கொட்டாவி விடுதல், ஏப்பம் விடுதல் அநாகரிகமாகும். இவற்றை அடக்கிக் கொள்ளுதல் வேண்டும். நாம் எம்மை அறியாது செய்யும் அங்க சேஷ்டைகள் உள்ளன. மூக்கைக் குடைதல், காதை விரலால் அல்லது எழுது கோலால் இண்டுதல், கையால் உடலைச் சொறிதல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். அதாவது பலர் கூடும் இடங்களில், மேற்குலகில், மத்திய கிழக்கில் உங்கள் மீது அபிமானமுள்ள அரேபியர் விருந்து வைத்தால், நன்றாய் உண்டபின் நீங்கள் ஏப்பம் விட்டுக் காட்டினால் அவர் மனம் மகிழ்வார். அவருடைய உணவைப் போற்றுவதாகப் பொருள் கொள்வார். வெற்றிகரமாக உணவுடன் உங்கள் வியாபாரப் பேச்சுக்களையும் முடிப்பதற்கு இவை வழிகாட்டிகளாகும். எச்சந்தர்ப்பத்தி

லும் உரத்துப் பேசாமல் அடக்கி வாசித்தல் உங்களுக்குப் பல நண்பர்களைத் தேடித்தரும்.

அங்கத்துவ நாடுகளின் பிரதிநிதிகளுக்கும், அவர்களுடைய விருந்தினருக்குமாக ஐ.நா. தனது கட்டடத் தொகுதியில் நடத்தும் உணவகத்தில் உலகப் பிரசைகள் யாவேரும் கூடும் வாய்ப்பு உண்டு. ஒவ்வொரு நாட்டின் உணவு சம்பந்தமான பழக்க வழக்கங்களும் ஒரு கைந்நூலில் அச்சிடப்பட்டு அங்கு வேலை செய்வோருக்கு வழங்கப்படுகிறது. இக்கையேட்டில் பல உருசிகரமான செய்திகள் உண்டு. உயர் குடிப் பிறந்த அரேபியர்கள் எவ்வளவு பசித்தாலும் கொடுக்கப்படும் உணவை மூன்று தரம் வேண்டாமென்பர், நான்காவது முறை தயங்காமல் பரிமாறவும், ஆங்கில நாட்டவர் ஒரு முறை வேண்டாமென்றால் அவர்களை நம்புங்கள். தாவர உணவு மாத்திரம் கேட்கும் இந்தியர்களுக்கு முட்டை கொடுக்க வேண்டாம். அவர்களின் சித்தாந்தத்தில் முட்டை தாவர உணவாகாது. இப்படி பல பண்பாட்டு வெளிப்பாடுகள் அச்சாகியுள்ளன. உயர் மட்டத்தில் உலாவுதல் மிக அவதானமான அப்பியாசமாகும்.

எம்மத்தியில் பலர் வாய் பேசாமல் சாப்பிடப் பழகியவர்கள்; மேற்குலகில் இது எடுபடாது. எனினும் பாரதியாரின் கவிதை வரிகள் எம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

'' தேடிச் சோறு நிதம் தின்று – பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிகவு ழன்று – பிறர்
வாடப் பல செயல்கள் செய்து – நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும்
– பல
வேடிக்கை மனிதர் ..... ''

ஆதாரம்:
(1) அந்த நாள் ஞாபகம்
(2) வேள்ட் எக்சிக்கியூட்டிவ் டைஜெஸ்ற் – 01 செப்தெம்பர் 1994

★

சூட்டு உடை அலங்காரம்

சூரிய ஒளியால் சுடுபடுவதைத் தடுக்க ஒளித் தடைகள் அவ்வளவு தூரம் செயற்பாடு உள்ளவை அல்ல என்று ஆய்வுகள் கூறுகின்றன. மேற்கு நாடுகளில் வெயிலில் காய்ந்து தங்கள் தோலை மிளிர்த்த முனைவோர் அப்பொழுது, சூரிய ஒளியில் உள்ள கடும் ஊதா பீ. கதிர்களால் தோலுக்குத் தீங்கு உண்டாகாமல் இருக்கப் பல பூச்சு வகைகளைப் பயன் படுத்துவர். அதனால் பாதுகாப்பு உள்ளதென அவர்கள் தவறாக நம்பிக்கொண்டு வெகுநேரம் வெயிலில் காயும் பொழுது, அந்தப் பூச்சுக்கள் நிச்சயம் தீங்கு உண்டாக்கக் கூடிய கடும் ஊதா ஏ. கதிர்களை வடிகட்டுவதில்லை. அத்துடன் வெயிலில் காயும் பொழுது பூசிக்கொள்ளும் பூச்சுக்களில் உள்ள மூலகங்களினால் நீண்டகாலகதியில் என்ன தீங்குகள் வரலாமோ என்றும் கவலைப் படவேண்டியுள்ளது. வெயிலில் காய்வதையும் வெகு நேரம் வெயிலில் திரிவதையும் பாதுகாப் பானதாக்க அமெரிக்காவில் ஸ்கொட்ஸ்டேல் நகரில் உள்ள ஃபஷொக்ஸ்கின் என்ற ஆடை தயாரிப்பு நிறுவனம் புதுவகை ஆடைத் தொகுதி ஒன்றைத் தயாரிக்கின்றது. நைலோன் நுண் இழைகளால் இறுக்கமாக நெய்யப்பட்ட புடைவையால் அவை செய்யப்படுகின்றன. அவற்றை தரலிப்பாகவோ உலர்ந்ததாகவோ விருப்பப்படி அணிந்து கொள்ளலாம். அந்தப் புடைவைக்கு சூரிய ஒளிக் கதிர்களை வடிகட்ட முடியுமாம். உதாரணமாக பருத்தியாலான ஒரு மேலாடை சூரிய ஒளித் தாக்கத்தில் இருந்து பாதுகாப்புத் தரும் திறன் 5 என்று இருக்கையில், இந்தப்புதிய துணியால் கிடைக்கும் பாதுகாப்புத் திறன் 30 ஆகும் என்று அதன் உற்பத்தியாளர்கள் அறிவிக்கின்றனர். இந்தத்துணி பருத்தியிலும் பார்க்க 25 வீதம் பாரங் குறைந்ததாகவும், நெடுநாள் நின்று பிடிப்பதாகவும் உள்ளதென்று அவர்கள் அறிவிக்கின்றனர். விலைகள்: ஒரு தொப்பிக்கு 190 டொலரில் இருந்து ஒரு மேலாடைக்கு 50 டொலர் வரையுமாக விற்பனையாகிறது. வெயிலில் விளையாடும் போதும், நீரில் படகில் செல்லும் பொழுதும் கூட இந்தப்புதிய ஆடையை அணிந்து கொள்ளலாமாம்.

மனிதவியல் வரலாறு

வட அமெரிக்க பழங்குடியினரின்

"பழம் பெருமை பேசுவதிற் பயனிலைக் கண்டீர்
எனில், வேரற்ற மரம் வாழாது கானகத்தே"

இன்று பழைய வரலாற்றைத் தேடும் காலம். இனங்களுக்கு இது தேவைப்படுகிறது. கலை விபத்தல்ல பாரம்பரிய விளக்கம். புதைபடிவ ஆய்வில் வெளிவரும் பொருள்கள் பண்பாட்டைப் புலப்படுத்துகின்றன. தினசரி பாவிப்பிற்குரிய கைவினைப் பொருள்களும் அவ்வாறே இனங்களின் தரத்தை வெளிப்படுத்துகின்றன.

வட அமெரிக்காவின் பழங்குடியினரைச் செவ்விந்தியர்கள் என்றழைக்க இரண்டு காரணங்களுண்டு. பூமி உருண்டை, மேற்குத் திசையில் சென்றால் இந்தியாவுக்குப் போகலாம் என்று புறப்பட்ட கொலம்பஸ், குறுக்கே வந்த நிலப்பரப்பை இந்தியா என்றும் அங்கு வாழ்ந்தோரை இந்தியர்களென்றும் நினைத்ததுதான். அமெரிக்காக் கண்டம் வாழ் பழங்குடியினருக்கு இந்தியர் என்று பெயர் வரக்காரணமும் கொலம்பஸ் தான். இவனைப் பின்தொடர்ந்து வந்த ஐரோப்பியர்கள், இப் பழங்குடியினரின் உடல் நிறத்தைத் தவறாக சிவப்பு என்றுள்ளனர். உண்மையில் அவர்கள் நிறம் மெல்லிய மஞ்சள்.

வட அமெரிக்காவின் மூத்த குடியினர் செவ்விந்தியர்கள். ஆசிய அமெரிக்கக் கண்டங்கள் தொடுக்கப்பட்டிருந்த காலத்தில் இவர்கள் வட-கிழக்கு ஆசியாவிலிருந்து வேட்டை மிருகங்களைப் பின் தொடர்ந்து இங்கு வந்துள்ளனர். இது இற்றைக்கு 30,000 வருடங்களுக்கு முன் நடந்திருக்க வேண்டும். இவர்கள் மொங்கோலொயிட் (Mongoloid) குடும்பத்தைச் சார்ந்தவர்கள்.

இவர்கள் பெருந்தொகையினர் அல்லர். அமெரிக்கக் கண்டங்களை

நிரப்புவதற்கு அவர்களின் தொகை போதாது. இப்பாரிய நிலப்பரப்பின் தனித்தனிப் பகுதிகளில் அவர்கள் குடியேறினர். வட அமெரிக்காவில், மெக்சிக்கோ நாட்டிற்கு வடக்கில் இப்போதைய அமெரிக்க ஒன்றியம் கனடா ஆகிய நிலப்பரப்பில் குடியேறியவர்கள்

தமிழில் :

கலாநிதி க. சோமஸ்கந்தன்

பெரும் கண்டங்களையோ பெரிய கற்சிலைகளையோ எழுப்பவில்லை. இவற்றைச் செய்பவர்கள் தென் அமெரிக்காவிலும் மத்திய அமெரிக்காவிலும் குடியேறியவர்களே. ஆனால் எழுத்து இன்மை இவர்கள் யாவருக்கும் பொதுவாகும்.

வட அமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்கள் எல்லோரும் ஒரே குலத்தவர் என்பது பெருந்தவறு. அவர்கள் சிறிய குழுக்களாகவே வாழ்ந்தனர். வித்தியாசப் பட்ட பல்வேறு மொழிகளை அவர்கள் பேசினர். வட அமெரிக்காவில் வாழ்ந்த பழங்குடியினர் அறுநூற்றுக்கு (600) மேற்பட்ட மொழிகளைப் பேசியதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. மொழி வித்தியாசத்தால். அவர்களுக்கிடையில் தொடர்பு மிகக் குறைவு. சைகை மொழி பாவிப்பில் இருந்ததாக அறியப்படுகிறது.

இன்று பின் தங்கியவர்களாக இருப்பினும் வட அமெரிக்கப் பண்பாட்டில் அவர்களுடைய தாக்கம் அழியாதிருக்கிறது. அமெரிக்க ஒன்றியத்தின் (யு. எஸ். ஏ) 27 மாவிலங்களின் பெயர்கள் செவ்விந்திய மொழிகளுக்குரியவை, பெரும் நகரங்கள், நதிகள், ஏரிகள், கிராமங்கள் இந்திய மொழிப் பெயர்களைத் தாங்கி நிற்கின்றன. அமெரிக்கர்கள் பேசும் ஆங்கிலத்தில் பெருந்தொகையான செவ்விந்திய மொழிச் சொற்கள் கலந்துள்ளன. வெள்ளை இனத்தவர்களுடன் செவ்விந்தியர்கள் இரத்தக் கலப்பு செய்துள்ளனர். இதனால் அமெரிக்கர்களுக்குப் பல அணு

வாழ்வும் பண்பாடும்

கூலங்கள் ஏற்பட்டுள்ளன. அமெரிக்கர்களின் ஆற்றல் பெருகியுள்ளது.

வட அமெரிக்கா மிகப்பெரிய நிலப்பரப்பு, பல்வேறு திணைகள் கொண்டது. வித்தியாசப்பட்ட சீதோஷ்ண நிலைகள், மலைகள், காடுகள், பாலைவனங்கள், கடலோரம் என்றவாறு ஒவ்வோர் இடத்திலும் வித்தியாசப்பட்ட மரங்கள், பயிர்வகைகள், விலங்குகள் காலங்களில் இங்கு வாழ்ந்த இந்தியர்களின் வாழ்க்கை முறைக்கு மாறுபட்டதாக அமைந்தது. வாழ்ந்த இடத்திற்குத் தகுந்தவாறு அவர்களுடைய உணவு, உடை, உறையுள் மாறுபட்டதாக இருக்கின்றது. இதுவே பண்பாட்டின் அடிப்படை.

அவர்கள் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்தனர். காலங்களில் மாற்றத்தையும், மழை, பனி, காற்று, புயல் போன்றவற்றின் வருகையையும் கூர்ந்து கவனித்தனர். அவர்களிடம் விஞ்ஞான அறிவுகிடையாது. சூரிய சந்திரரும், இரவு பகலும், வெய்யில் மழையும், ஆவிகள் (Spirits) கூட்டுப் பாட்டில் இயங்குவதாக அவர்கள் நம்பினர். அவர்களுடைய ஐதீகங்களும், நம்பிக்கைகளும், சடங்குகளும் செவ்விந்திய மதத்திற்கு விளக்கம் தருகின்றன. இதன் அடிப்படையிலேயே அவர்களுடைய சமூக நோக்கம் அமைகிறது. வனவிலங்குகளையும் சில வகைத் தாவரங்களையும், சூரியனையும் பெரு மழையையும், காற்றையும் வணங்கினர். தங்கள் கடவுளரின் தயவைப் பெற விதம்விதமான மதச் சடங்குகளை நடத்தினர். தாம் இறந்தபின் குறிப்பிட்ட பாதையால பிறிதோர் இடம் செல்வதாகவும் அவர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

ஒருவரோடொருவர் தொடர்பற்று வட அமெரிக்கக் கண்டத்தின் பல பகுதிகளில் அவர்கள் வாழ்ந்தனர். இதனால் அவர்கள், தமது உணவைத் தேடும் விதமும் விடுதிகளை அமைக்கும் பாங்கும், வீட்டுப்பாவனைக்குத் தேவையான உபகரணங்களைச் செய்யும் முறைகளும் அவற்றின் உருவமும் வித்தியாசப்படுகின்றன. இவர்கள் கடின உலோகங்களை அறியமாட்டார்கள். கூர்மையான கல்லாயுதங்களை அவர்கள் மிகத் திறமையாகப் பாவித்தனர். வெள்ளையர்கள் வரும்வரை அவர்கள் இரும்பை அறியமாட்டார்கள். செம்பு அவர்கள் அறிந்த உலோகம், ஆனால் அவர்கள் அதை உபயோகப்படுத்துவதில்லை.

செவ்விந்தியர்களைப் பற்றிய நூல்கள், வட அமெரிக்காவின் பழங்குடியினரை 7 பெரும் பிரிவுகளாக வகுத்துள்ளன.

01. கிழக்கின் சமதரைப் பூமியில் வாழ்ந்தவர்கள், ஐரோப்பியர்கள் முதன்முதலாக வட அமெரிக்காவுக்கு வந்தபோது இவர்களைத்தான் முதன்முதலாகச் சந்தித்துள்ளனர். இவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று ஒதுக்கியவர்கள் பின்பு அவர்களின் உதவியுடன் நலம் பெற்றுள்ளனர். நிலத்தைப் பணபடுத்த, பசளை இட, மீன் பிடிக்க, ஆற்றில் ஓடம்விட, இந்திய முறைப்படியே அவர்கள் செய்ய ஆரம்பித்தனர். இன்று அமெரிக்காவில் கொண்டாடப்படும் நன்றி கூறும் விழா இந்திய உதவியை நினைவு கூருகிறது. கிழக்குக்கரை இந்தியர்கள் பெரும்பாலும் விவசாயிகள் என்பது குறிப்பிடத்தக்கது

02. வேறு பல வட அமெரிக்காவில் காணப்படும் சமதரைப் பூமிகளில் காணப்படும் செவ்விந்தியர்கள். இவர்கள் பெரும்பாலும் வேட்டையாடி வாழ்ந்தவர்கள்.

03. தென்மேற்குப் புறத்தில் வாழ்ந்தவர்கள், இவர்களில் இரண்டு குழுக்கள் முக்கியம் வாய்ந்தவை. பியூபிலோ இந்தியர்கள், நவாஜோ இந்தியர்கள் (Puebolo, Navajo) இந்த இரண்டு குழுக்களின் நெசவு, கைவினைப் பொருள் தயாரிப்பு ஆகியவற்றையும் பிறிதோர் இடத்தில் விரிவாக ஆராய வேண்டியுள்ளது. இவர்களும் பெரும்பாலும் விவசாயிகளும் கால் நடை வளர்த்து வாழ்ந்தவர்கள்.

04. குறிப்பாக ஒரிடத்தில் நிலை கொள்ளாத நாடோடிகள்.

05. பாலைவனத்தில் வாழ்ந்தவர்கள், இவர்கள் உணவு பற்றாக் குறையால் கஷ்டஜீவனம் நடத்தியவர்கள் தானாகவே வளர்ந்த நெல், கோதுமை வேறு புல்வகைகளைச் சேகரித்து உண்டனர். சில வேர்களையும் இவர்கள் உணவாகக் கொண்டிருந்தனர். இவர்களும் கைவினைப் பொருட் தயாரிப்பில் உயர் நிலையில் உள்ளனர்.

06. பெரும் கடலோடி மீன் பிடித்து வாழ்ந்த பசுபிக்கரையோர வட மேற்கு இந்தியர்கள் இவர்கள். ஆழ்கடலுக்குச் சென்று திமிங்கில வேட்டையாடினர்.

07. அலாஸ்கா போன்ற பனிப் பிரதேசத்தில் கலைமான் வேட்டையாடி வாழ்வார்கள். இந்த ஏழு பிரிவுகளுக்குமிடையில் பெரும் பண்பாட்டு வித்தியாசங்கள் உண்டு. அதேபோல் ஒவ்வொரு பிரிவிலும் ஏராளம் உட்பிரிவுகளும் உண்டு.

செவ்வித்தியர்கள் உடற் பலம் மிக்கவர்கள். மஞ்சள்நிற முடையவர்களுக்குப் பொதுவான பாரஞ்சுமக்கும் வலு உண்டு. பலவிதமான விளையாட்டுக்களையும் ஓட்டப் போட்டிகளையும் அவர்கள் வைத்திருந்தனர். பந்துடன் விளையாடும் அவர்களுடைய பிரதான விளையாட்டுக்கள் இன்றைய அமெரிக்க விளையாட்டுக்களுடன் கலந்துள்ளன. கால நிலை சரியில்லாத போது இருப்பிடத்திற்குள் விளையாடுவதற்கும் அவர்களிடம் தயாரிப்புக்கள் இருந்தன. குழுக்கள் ஒன்று கூடும் நாள்களில் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறும். பெண்களும் தமக்கிடையில் விளையாட்டுப் போட்டிகளை நடத்தினர்.

அவர்களுடைய கலைப் பொருள்களில் சிறுபிள்ளைகளுக்கென செய்யப்பட்ட பாவைகள் பிரதான இடம் வகிக்கின்றன. மதச் சடங்குகளிலும் அவை பாவிக்கப் பட்டன. பலவிதமான இசைக் கருவிகளையும் அவர்கள் பயன்படுத்தினர். மேளங்கள், கிலுகிலுப்பைகள். ஒன்றோடு ஒன்று தேய்த்து ஓசை எழுப்பும் கருவிகள் இதிலடங்கும். இசை அவர்கள் வாழ்வில் முக்கிய இடம் பெறுகிறது. மேற்கு நாட்டவர் காதுக்கு கர்ணகடூரமாயிருப்பினும் சமயச் சடங்குகளின் போதும் பொழுது போக்காகவும் பெரும் குரலில் பாடுவர்: தாலாட்டுப் பாடல்களும் முக்கிய இடம் பெறுகின்றன.

நடனமும் அவர்கள் வாழ்வுடனும் மதத்துடனும் நெருங்கியதாகும். கடவுளை மன்றாடும் போது நடனமாடிப்பாடியே இரந்தனர். நோய் நொடியைத் தீர்ப்பதற்கும், நல்ல அறுவடையை வேண்டியும் பெண்கள் பூப்பெய்திய போதும் அவர்கள் நடனமாடினர். வீரர்கள் யுத்தத்திற்குச் செல்லும் போது ஆவேசமாகப் பாடினர். ஆடல், பாடல் இந்த இனத்தின் குறியீடுகளாகும்.

இன்றைய கலிபோர்னியாப் பிரதேசத்தில் வாழ்ந்த பாலை வனத்தைச் சார்ந்த செவ்விந்தியர்கள் செய்த —இன்றுவரை செய்யும் பெட்டிகள், குட்டான்கள், கடகங்கள் உலகப்பிரசித்தமானவை. சில வகைப் பட்டைகள். செடிகள் புற்கள் போன்றவற்றில் இருந்து இவற்றைச் செய்துள்ளனர். கிழக்கில் வாழ்ந்த விவசாய இந்தியர்களும் இத்தகைய கைவினைப் பொருள்கள் தயாரிப்பில் பெரும் புகழ் பெற்றுள்ளனர். மட்பாண்டங்கள் கலை நயமுடன் இன்று வரை செய்கின்றனர். மரத்தில் செய்த வீட்டுப்பாவிப்புத் தட்டுக்கள் அகப்பைகள் சாப்பாட்டு உபகரணங்கள் மிகவும் முன்மாதிரியானவை. இன்று மேற்குலகப் பிரயாணிகள் முதுகில் பொதிகளைச் சுமப்பதற்குக் கருவிகளை உலோகத்தில் செய்து பாவிக்கின்றனர். அக் காலத்தில் இந்தியர்கள் மரத்தில் இதைச் செய்தனர். பியூபிலோ, நவாஜோ இனத்தவர்கள் பாய்கள், தடுக்குகள் போன்றவற்றைப் பின்னுவதிலும். கம்பளம் தடித்த போர்வைகள், உடைக்குரிய சேலைகளை நெசவு செய்வதிலும் திறமை மிக்கவர்கள். ஆட்டின் மயிரில் செய்த ஆடைகளை அணிந்தனர். அவர்கள் தயாரித்த வர்ணங்கள் இன்றும் பிரதிபண்ணப் படுகின்றன. பல்வேறு ஓவியங்களையும் இந்தியர்கள் பதனிட்ட தோலில் வரைந்துள்ளனர். இன்று இவையாவும் அமெரிக்காவின் நுண்கலைக் காப்பகங்களில் இருக்கின்றன.

ஆழ்கடலில் சென்று மீன் பிடித்த இந்தியர்கள் மீன்பிடி வள்ளங்கள் செய்வதற்கு கல்லான ஆயுதங்களைப் பாவித்தனர். பல்வேறு மீன்பிடி உபகரணங்களைச் செய்து வைத்திருந்தனர். வள்ளங்களில் ஒட்டை வந்தால் அடைப்பதற்குத் தாரைப் பயன்படுத்தினர். தார் அமெரிக்காவில் இயற்கையாகக் கிடைக்கிறது. வேட்டையாடும் இந்தியர்கள் பறவைகள் போன்ற கலை நயம் பொருந்திய உருவங்களைச் செய்து உயிர்ப் பறவைகளை ஏமாற்றிக் கொன்றனர்,

இந்தியர்கள் வாழும் நிலம் யாவும் குழுவிற்கே சொந்தம். தனியார் உரிமை அவர்கள் அறியாத தொன்றாகும். ஐரோப்பியர்கள் வட அமெரிக்காவுக்கு வந்த பின் தனி நபர்களின் நிலத்திற்குச் சொந்தம் பாராட்டினர். இதனால் இரு பகுதிக்கும் பெரும் முரண்பாடும் நெடிய யுத்தங்களும் தோன்றின. ஈற்றில் இந்தியர்கள் பலம் குன்றி கீழ் நிலைக்கு வந்துள்ளனர். அவர்களுடைய தாழ்வுக்கு நிலம் தான் காரணம். இன்று அமெரிக்க அரசு இந்தியர்கள் விடயத்தில் பெரும் விழிப்புணர்ச்சியுடன் செயற்படுகிறது. அமெரிக்க உள்நாட்டு விவகார இலாகா 550 செவ்விந்தியக் குழுக்களுக்கு அங்கீகாரமும் உதவியும் வழங்கியுள்ளது. பெருந்தொகையான இந்தியர்கள் ஐரோப்பிய இனங்களுடன் கலந்து விட்டனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. அத்துடன் அவர்களுடைய வாழ்க்கை முறைகளும் மாறிவிட்டன. 1990ஆம் ஆண்டு அமெரிக்க ஒன்றியத்தில் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டில் 1.9 மில்லியன் அமெரிக்கர்கள் தம்மை செவ்விந்தியப் பரம்பரையினர் எனப் பதிவு செய்துள்ளனர்.

ரைம் ஒக்ரோபர், 31. 1994.

பாரமில்லாத தோணி

எஸ்கிமோவர் உபயோகிக்கும் கயாக் என்ற பாரமில்லாத தோணியைப் போன்ற பாரம் குறைந்ததும், இலகுவாகச் சுமந்து செல்லக்கூடியதும், மடித்து வைக்கக் கூடியதுமான தோணி ஒன்றை ஏரியஸ் 2000 என்ற பெயரில் ஜேர்மனியின் ஹான்ஸ் கிளெப்பர் கோர்ப்பரேசன் சந்தைக்கு விட்டுள்ளது. சுமார் 4 மீற்றர் நீளமும், மூன்றில் இரண்டு மீற்றர் அகலமும் கொண்ட இறப்பராலான தோணிக் கவசமும் கன்வஸ் துணியாலான மேற்பரப்பும் மடிக்கக் கூடியதாக மரத்தாலான சட்டமும் கொண்ட அதனை மடித்து முதுகில் சுமந்து செல்வதற்கான பலமான பட்டிகளும் பொருத்தப்பட்டுள்ளன. ஆகக் கூடுதலாக 200 இறாத்தல் வரை நிறையான ஒரு தோணியோட்டி செலுத்திச் செல்லக் கூடிய அந்த இலகு தோணியில் முதுகின் அமைப்புக்கு ஏற்றதாக வளைந்து கொடுத்துத் தாங்கும் மெதுமையாக்கப்பட்ட இருக்கையும் உள்ளது. அத்தத் தோணியும் அதனை மடித்து எடுத்துச் செல்வதற்கான தாங்கியும் ஒன்றாக 50 இறாத்தல் அளவு நிறை உள்ளன. பச்சை, சிவப்பு, இளஞ்சிவப்பு நிறங்களில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. விலை 2000 டொலர். அந்த வலித்தல் தோணியைப் பாய்த் தோணியாக்குவதற்கும் உபகரண இணைப்புக்கள் உள்ளன.

மனிதனின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழில்:
கலாநிதி க. சோமஸ்கந்தன்

சார்ல்ஸ் டார்வின் (Charles Darwin 1809–1882) நிலை நாட்டிய கொள்கை பரிணாமக் கொள்கை எனப்படும். இயற்கைத் தேர்வு உயிரினங்களின் பரிணாம வளர்ச்சிக்குப் பயன்படு கிறது. டார்வின் 1859 இல் பரிணா மக் கொள்கையை விளக்கி உயிரி னங்களின் தோற்றம் '' (Origin of Species) என்ற நூலை வெளியிட் டார். 1871 இல் இதை மேலும் விரிவு படுத்தி பாலுணர்ச்சியின் தொடர்பும் மனிதனின் தோற்ற மும் இயற்கைத் தேர்வும்'' (Descent of Man And Selection in Relation To Sex) எனும் நூலை பிரசுரித்தார். இதில் மனிதன் குரங்கிலிருந்து தோன்றியவன் என்று கூறியுள்ளார். உயிரினங் களின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிக் குறிப்பிடும் டார்வின் மனிதனும் மற்றப் பிராணிகளும் ஒரே முன்னோரின் சந்ததியினர் தான் என்று தெரிவிக்கிறார். ஒரே உயிர்மம் கொண்ட பிராணியான அமீபாதான் (Amoeba) அந்த முன்னோர் மனிதச் சிந்தனையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத் தியவர் டார்வின். அவர் தொடக்கி வைத்த பணி இன்றும் தொடரு கிறது.

சிறுகச் சிறுக காலப்போக்கில் உயிரினங்கள் சூழ்நிலைக்கேற்ப உடலமைப்பில் இன்றைய உருவைப் பெற்றன என்பது பரிணாமக் கொள்கையின் சாரம். அடர் காட்டு வாழ்க்கையின் போது நான்கு காலில் நடந்த பிராணி புல்வெளிக்கு வந்த போது எட்டிப் பார்க்க வசதியாக நிமிர்ந்து நிற்கத் தொடங்கியது. அக்காலகட்டத்தில் பெருங்காடுகள் குறைந்து புல்வெளி கள் கூடியிருக்கலாமென்றும் தெரி விக்கப்படுகிறது. இது தட்பவெப்ப மாற்றங்களின் பெறுபேறாக இருத்தல் வேண்டும். கூன் நிமிர்ந்த போது முன்கால்கள் இரண்டும் கைகளாக மாறின. உணவு தேட வும் வேட்டையாடவும் கைகள் உதவின. இச்செயற்பாடுகளில் ஈடு

விஞ்ஞானம்:

நாங்கள் அறிந்திராத முன்னோரின் இனத் தோற்றம் பற்றியவை பாடநூல்களில் காணப்படும் செய்திகளாகும்.

எமிலஸ் பல்லும் தடை எலுப்பும்

படும் போது மூளை விரிவு ஏற்பட் டிருக்கலாம். கண்டெடுக்கப்பட்ட கபாலக் கூடுகள் இதற்குச் சான்று பகருகின்றன. இரண்டு கால் இயக் கத்திற்குத் தரப்படும் விளக்கம் இதுவாகும். சுமார் 20 இலட்சம் வருடங்களுக்கு முன் இந்த மாற்றங் கள் நடந்திருக்கலாமென்று புதை படிவ ஆய்வுகள் அறியத்தருகின் றன.

உயிரினங்கள் மூலக்கூறுகளில் உள்ள புரோட்டீன், டி. என். ஏ மூலக்கூறுகளைக் கொண்டு மூலக் கூறு இயலாளர்கள் ஆய்வுகள் செய்கின்றனர். இவை மனிதனுக் கும் ஆதிப் பிராணிகளுக்குமுள்ள சந்ததித் தொடர்பைத் தெளிவு படுத்துகின்றன. மரபுக் கீற்று மாற்றங்கள் பற்றிய புதிர்கள் துலங்க ஆரம்பித்துள்ளன. மாற் றங்களுக்கு குரோசேரம்களே பொறுப்பு. ஆனால் அவையேன் அப்படிச் செயற்படுகின்றன என்ற கேள்விக்கு விஞ்ஞானம் இன்னும் விடை தரவில்லை.

மேற்கூறியவை யாவும் உயிரி யல் பாடநூல்களில் காணப்படும் செய்திகளாகும்.

அண்மைக் காலத்தில் ஆபிரிக் காவின் பல பாகங்களில் மண்ணி லிருந்து மீட்கப்பட்ட எச்சங்கள் டார்வினின் கொள்கையை மேலும் உறுதிப் படுத்துகின்றன. மனித இனத்தோற்றம் பற்றிய காலக் கணிப்பீடுகளில் மாற்றங்கள் செய்ய வேண்டிய அவசியத்தையும் அவை உணர்த்துகின்றன.

எதியோப்பியாவின் (Ethiopia) அராமிஸ் (Aramis) பிரதேசம் 4. 4 மில்லியன் வருடங்களுக்கு முன் நீர்வளம் உள்ள பிரதேசமாக இருந்து இப்போது வரண்ட நில மாகி விட்டது. இங்கு தேடுதல் நடத்திய ஜப்பானியர். ரோக்கி யோப் பல்கலைக்கழகப் பேராசிரி யர் ஜென் சுவா (Gensuwa) 'ஹோமினிட்' (Hominid) எனப் படும் மனிதச் சார்புக் குரங்கின் பல் ஒன்றை மண்ணிலிருந்து பொறுக்கி எடுத்துள்ளார். இது 1992 டிசெம்பர் 17 இல் நடை பெற்றது. சுவா அவர்களின் தலை மையில் இருபது பேர் கொண்ட குழு அவ்விடத்தில் தொடர்ந்து 1994 வரை தேடுதல் நடத்திய போது 17 இந்த ரகப் பிராணி களின் உடற்பகுதிகள் கிடைத்துள் ளன. அவை பற்கள், கை எலும்பு கள், கால், தலைப்பகுதியின் பாகங்கள், தாடை எலும்பு என்பனவாம்.

இவை 4. 4 மில்லியன் வருடங் களுக்கு முன் வாழ்ந்த பிராணிக் குரியவை என்பது விஞ்ஞானி

களின் முடிவு. சுவாவுடன் கூட்டாகத் தேடுதல் நடத்தியவர்கள் இன்னும் இருவர். கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ரிம் வைற் (Tim White) எதியோப்பியத் தலைநகர் அடிஸ் அபாபா ஆதிமனிதர் ஆய்வுகூடத்தைச் சேர்ந்த பேர்கான் அஸ்போ (Berhan Asfaw) ஆகியோர். இப் பிராணிக்கு மூவரும் ஒஸ்ரறலோபித்தேக்குஸ் ராமிடுஸ் (Australo Pithcus Ramidus) என்று பெயர் சூட்டியுள்ளனர். இப்பெயரின் பொருள் பின்வருமாறு:-

ஒ. என்றால் தென்மண்டலத்திற்குரிய மனிதக் குரங்கு. நா என்றால் வேர் அல்லது மூலக்கரு ஆய்வு கூட அறிக்கைப்படி இதன் முழு உருவமைப்புச் சிறியது. அதன் உயரம் 4 அடி மாத்திரமே, நிறை 65 இறாத்தல்.

மரபியல் விஞ்ஞானிகள் இந்தப் பிராணிக்குக் கொடுக்கும் விசேஷ கவனிப்பின் காரணம் யாது? முதலாவதாகப் பேரறிஞர் டார்வின் மனிதன் குரங்கிலிருந்து தோன்றினான் என்பதை நிரூபிக்கிறது. இரண்டாவதாக குரங்கு மனிதனாக மாறும் நெடிய சங்கிலித் தொடர் வரலாற்றில் ராமிடுஸ் கேந்திர நிலையில் இருக்கிறது. இங்கிலாந்து லிவர்ப்பூல் பல்கலைக் கழகப் பேராசிரியர் பேர்னாட் வூட் (Bernard Wood) நேச்சர் என்ற விஞ்ஞான இதழில் இப்பிராணி பற்றி, ''பெருங்குரங்குகள் படிப் படியாக வளர்ச்சி பெற்று மனித உருவெடுத்த தொடக்கத்தில் எவ்வாறு இருந்தன என்பதற்கு இவை சான்று'' என்று எழுதியுள்ளார். இதன் உருவமைப்பை நோக்குங்கால் பரிணாம வளர்ச்சிப் பாதையில் குரங்கிற்கும் மனிதனிற்கும் இடைப்பட்ட நடுவழியில் ஒ. ராமிடுஸ் நிற்கிறது. இதற்கு வேர் அல்லது மூலக்கரு எனப் பெயரிடப்பட்டது மிகப் பொருத்தமே.

ராமிடுஸ் கண்டு பிடிக்கப் பட்ட அராமிஸ் பிரதேசத்திற்கு 45 மைல்களுக்கப்பால் ஹடார் (Hadar) என்னும் இடத்தில் ஒ. அபெறன்சிஸ் என்ற ரகப் பிராணி 1974 இல் மண்ணிலிருந்து மீட்கப்பட்டுள்ளது. இப்பிராணிக்கு லூசி (Lucy) என்ற செல்லப் பெயரை விஞ்ஞானிகள் கொடுத்துள்ளனர். இப்பிராணி ராமிடுஸ் ரகப்பிராணியுடன் ஒப்பிடும் போது கூடுதலான மனித அடையாளங்களைக் கொண்டுள்ளது. இப் பிராணி 3.2 மில்லியன் வருடங்களுக்கு முன் கிழக்கு ஆபிரிக்காவில் குழு வாழ்க்கை நடத்திய தாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தப் பிராணி நன்றாக நிமிர்ந்து நேராக நடை பயின்றதென்றும் ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன. ராமிடுஸ் பிராணிக்குக் கூடுதலான குரங்கின் அம்சங்கள் இருந்துள்ளது. அதனுடைய மண்டை ஓடு சிம்பான்சிக் குரங்கை ஒத்ததாகும். ராமிடுஸ் நேராக நடந்ததற்கு சந்தேகமற்ற ஆதாரம் கிடைக்கவில்லை. இது வரையும் இடுப்புப் பகுதி எலும்பு கண்டுபிடிக்கப்படவில்லை. கிடைத்த கால் எலும்புகள் அது நேராக நடந்திருக்கலாம் என்று தெரிவிக்கின்றன.

பேராசிரியர் சுவா பொறுக்கி யெடுத்த ராமிடுஸ் பல்லை இவ் விடத்தில் ஆராய்வது மிகப் பொருத்தம். மனித வர்க்கத்தைச் சார்ந்த பெருங்குரங்குகளின் பற்கள் மனிதரைப் போல் அல்லாது வேட்டைக்கும் தாக்குதலுக்கும் உரியனவாக அமைந்துள்ளன. ராமிடுஸ் இனத்தின் பல் சிறியனவாகும். இவை வேட்டைக்கும் தாக்குதலுக்கும் பயன்படா. அவை மனிதப் பல்லின் சாங்கத்தைப் பெற்றுள்ளன. ராமிடுஸ் பிராணியின் கை எலும்பை ஆராய்ந்த விஞ்ஞானிகள் அவை மரமேறுவதற்கும் கிளைக்குக் கிளை தாவுவதற்கும் பயன்பட மாட்டா எனத் தெரிவித்துள்ளனர். ஆகவே ராமிடுஸ் மரத்திலிருந்து இறங்கி தரை வாழ்வைக் கொண்டிருக்கலாம் என்று எண்ண இடமுண்டு. அதன் பல்லை வைத்து அதன் சமூக வாழ்க்கையையும் விஞ்ஞானிகள் ஆய்வு செய்துள்ளனர். பெண் ராமிடுஸ் ஆண் சோடியைத் தேடும் போது கூரிய பல்லைக் காட்டி எதிரியை மிரட்டக் கூடிய வனைத் தேடவில்லை. உணவு தேடுவதற்கு ஓர் துணையையும் பிள்ளையைத் தூக்குவதற்குப் பல மான கைகள் இரண்டுடைய ஆணையுமே தேடின. மரத்தில் தொங்காமல் விட்டபின் மனிதக் குரங்கின் கைகள் குழந்தை பராமரிப்புக்கு மிகப்பொருத்தமாக அமைந்ததாக சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

15 – 20 மில்லியன் வருடங்களுக்கு முன் புராதன மனிதன் தனது குரங்கு மூதாதையரிடமிருந்து தனி இனமாகப் பிரிந்து விட்டானென்று பாட நூல்கள் தெரிவிப்பதாக இக்கட்டுரையின் முற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1973 ஆம் ஆண்டு தொடக்கம் நடைபெறும் மூலக்கூறு ஆய்வுகள் வித்தியாசமான விடை பகருகின்றன: 'அன்திறப்பொயிட்ஸ்' (Anthrapoids) எனப்படும் மனிதக் குரங்கின் குருதிப் புரோட்டீனையும் இன்றைய மனிதனின் குருதிப் புரோட்டீனையும் ஒப்புநோக்கிய விஞ்ஞானிகள் இரண்டிற்கும் பெரும் ஒற்றுமை இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். (புரோட்டீன் என்பது புரதம் அல்லது பிசிதம்) இந்த ஆய்வு கூட ஒப்பீட்டின்படி இரு இனங்களும் 4-6 மில்லியன் வருடங்களுக்கு உட்பட்ட காலத்திலேயே தனித்தனியாகப் பிரிந்

திருக்க வேண்டும். இந்த ஆய்வு கூடக் கண்டு பிடிப்பை ஒ. றாமிடுல் உறுதிப்படுத்துகிறது.

பாடப்புத்தகங்கள் மனிதனின் கூன் நிமிர்ந்த வரலாற்றைப் பெரிது படுத்துகின்றன. தவறில்லை ஆனால் அவனுடைய பல்லின் உருவம் மாறிய கதையையும் இனி வரும் பதிப்புக்களிற் சேர்த்துக் கொள்வது அவசியம்.

பரம்பரை வளர்ச்சிக்கு சார்ள்ஸ் டார்வின் வாழ்வு நல்ல உதாரணம். அவருடைய தந்தை வழிப் பாட்டனார் ஏராஸ்மஸ் டார்வின் இங்கிலாந்தின் புகழ் பூத்த விஞ்ஞானி. தந்தையோ பிரபல வைத்தியர். மாமன் மகள் எம்மாலை மனைவியாகத் தெரிவு செய்தார். இவர்களுக்கு 5 ஆண், 2 பெண் பிள்ளைகள். தாவரவியல் மேதை சேர் பிரான்சிஸ் டார்வின் இவர்களிலொருவர். தனது பிற் காலத்தில் சார்ள்ஸ் டார்வின் மகனின் உதவியுடன் அரிய தாவரவியல் நூலொன்றை எழுதியுள்ளார். சார்ள்ஸ் டார்வின் தன் வாழ்நாளில் எழுதிய கடிதங்கள் புத்தகமாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன. அவருடைய ஒரு மகன் கேம்பிறிஜ் பல்கலைக்கழகத்தில் அதி உயர் சித்தியடைந்த போது அவர் அனுப்பிய வாழ்த்துக் கடிதம் அதிலடங்கும். ஒரு வரி நினைவில் இருக்கிறது. ''மகனே; உம்முடைய அளப்பரிய சாதனையை என்னால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை.'' இளைய தலைமுறையினரின் சாதனைகள் பெற்றோரை இன்றும் வியப்பூட்டுகின்றன.

ஆதாரம்:

1) எட்னா லெளபர் எழுதிய சார்ள்ஸ் டார்வின் வாழ்க்கை நூல்
2) நியூஸ் வீக் ஒக்ரோபர் 03, 1994.

★



அடி ஊடாகப் பார்க்கக்கூடிய ஓடம்

வழமையாக அடியூடு பார்க்கக்கூடியதான தோணிகள் மரத்தாலோ கண்ணாடி இழையத்தாலோ கட்டப்பட்டு அவற்றுக்கு அடியில் ஊடுபார்க்கக்கூடிய யன்னல் பொருத்தப்பட்டிருக்கும். ஆனால் அந்த யன்னல்களின் விளிம்புகள் ஊடாக நீர்கசிவது அனேகமாக நடப்பது உண்டு. இப்பொழுது கலிபோர்னியாவில் உள்ள கிறிஸ்டல்போட்ஸ் இன்கோர்பரேட் என்ற நிறுவனம் அப்படி நீர்கசிவு உட்புகமுடியாத விதமாக அடி ஊடாகத் தெரியும் தோணிகளை உற்பத்தி செய்து சந்தைக்கு விட்டிருக்கிறது. கடல் நீரில் நின்று பிடிக்கக்கூடியதான உயர் தாக்கத்தைத் தாங்கக்கூடிய அக்கிறிலிக்ஸ் கண்ணாடியால் ஆக்கப்பட்ட அந்தத் தோணியில் அடிப்பாகம் ஒரு முழுவார்ப் பாக உள்ளது, அது 25 குதிரை வலுக்கொண்ட மணிக்கு 30 மைல் வேகமாகச் செல்லக்கூடியதான பக்க இணைப்பு மோட்டார் உடையது. விலை: 8000 டொலர்.

அத் தோணியுடன் பின் இணைக்கத்தக்க சிறு தோணியும் 800 டொலர் விலையில் உள்ளது.



மெதுமையாகத் தொடல்

கணனி யுகத்தில் தொழில்சார் இடையூறாக முக்கியமாக ஏற்படுவது கை மணிக்கட்டு உழைவாகும். இப்பொழுது கணனித் தயாரிப்பாளர்கள் பல மணி நேரமாக கணனி அமுக்கிகளைச் செயற்படுத்தும்போது ஏற்படும் கைவலிப்பைப் போக்க ஏற்றதான மாதிரியில் அமுக்கிகள் அமைவுடைய கணனிகளைத் தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். அமெரிக்காவில் உள்ள பெரும் கணனித் தயாரிப்பு நிறுவனமான மைக்ரோ சொப்ட் கோர்ப்பரேஸன் தொழில் செயற்பாடுகளைக் கவனத்தில் எடுத்து வழமையான அமைப்பிலான அமுக்கிச் சட்டத்திற்குப் (KEY BOARD) பதிலாக வசதிகள் கூடியதும் இயக்க இலகுவானதுமான கணனி அமுக்கச் சட்டங்களைத் தயாரிக்கிறது.

தட்டச்சாளர்கள் கைகளை மேலும் இயற்கை அமைவான விதத்தில் வைத்துக் கொண்டு மெதுவாகத் தொட்டு இயக்கக் கூடியதாக சட்டத்திலுள்ள அமுக்கிகள் பிரித்து வைக்கப்பட்டு சட்டம் வெளிப்புறமாகத் திருகிவிடப்படுவதாக அமைக்கப்பட்டுள்ளது. அமுக்கி சட்டத்தின் அதிகரிக்கப்பட்ட அகலமும் கோணமும் வேண்டிய விதத்தில் வசதிப்படக்கூடியதாக சரிப்படுத்திக் கொள்ளத் தக்கதாக அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இயங்குனர் தமது தோள்களை மேலும் நிமிர்ந்த நிலையிலும் ஆறுதலான விதத்திலும் வைத்துக் கொண்டு செயற்பட அது உதவுகிறது.

விலை: 100 டொலர்

யார் அங்கவீனர்கள்

வேலைத்தளத்தில்: சர்ச்சைக்குரிய சட்டம் தொழிலில் ஏற்படுத்திய பாதிப்பு



நரிப்பிடிப்பால் நலிவுற்றவராக்கப்பட்டார்: உடற் தளர்வுப் பயிற்சியில் முரே.

எழுதியவர்:
லெஸ்லீ ஹொஃவ்மான் - ரோஸன்
கரேன் ஸ்பிரிங் ஜோன்ஸ்
சிக்காக்கோவிலிருந்து

தூரனெக் குழப்ப மடைந்த நோயாளி ஒருவர் கதிர் வீச்சு சிகிச்சையாளர் ஜேன் முரேயின் மீது விழுந்ததினால் முரேக்கு முதுகெலும்பில் முறிவு ஏற்பட்டது. இதனால் எக்ஸ்ரே பிளேட்டுக்களைக் கைகளினால் தலைக்கு மேல் அவரால் தூக்க முடியாது என்றதும் அமெரிக்காவில் ஓர்லாண்டோவிலுள்ள புளோரிடா மருத்துவ மனையின் நிர்வாகம் அவர் வேலைக்குப் பொருத்தமற்றவர் எனக் கூறி வேலையிலிருந்து நீக்கி விட்டது. முரே விட்டாரா? நிர்வாகத்திற்கு எதிராக வழக்குத் தொடர்ந்தார். குற்றச் சாட்டு என்னவென்றால் அங்கவீனர்களெனப் பாகுபாடு காட்டுகிறார்கள் என்பதுவே.

அமெரிக்கப் பாராளுமன்றமான காங்கிரஸ் அங்கவீனமுடைய அமெரிக்கர்களுக்குரிய சட்ட மூலம் ஒன்றினை அங்கீகரித்தது. 1960களில் மார்ட்டின் லூதர் கிங்கினால் அமெரிக்காவில் வாழும் கறுப்பு இன மக்களின் அடிமைத் தனத்திற்கெதிராக உரிமைகள் வேண்டி நடத்திய சிவில் போராட்டத்தின் வெற்றியினால் இயற்றப்பட்ட மனித உரிமைகள் சட்டங்களின் பின்னர், கொண்டு வரப்பட்டுள்ள உன்னதமான மனித உரிமைச்சட்டம் இது என்கிறார்கள்.

அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் அங்கக் குறைபாடு உள்ளவர்கள் தொழில் புரிய விரும்பும் பட்சத்தில் 'பிரதான பொருளாதார நீரோட்டத்தில்

தமிழில்:
டாக்டர் எஸ் பி. ஆர். சிவமாறன்

பெருமையோடு தம்மையும் இணைத்துக் கொள்வதற்கு இந்தப் புதிய சட்ட மூலம் வழி வகுக்கின்றது' என வர்ணித்தார். ஆனால் நான்கு வருடங்களின் பின்னர் கூட தேசிய அங்கவீன தொழில் விழிப்புப் பணியகம் (National Disability Employment Awareness – NDA) எதுவித முன்னேற்றமான நிலையையும் காண முடியாத நிலைக்கு வந்தது. அங்கக் குறைபாடு உள்ள ஒருவருக்கு தொழில் வாய்ப்புக் கிடைப்பதற்கு உதவி செய்தாலும் ஏற்கனவே தொழிலில் இருக்கின்றவர்களுக்கு காயங்கள் அல்லது அங்கவீனங்கள் ஏற்படுகின்ற போது அவர்கள் தமது தொழிலைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளவே பிரதானமாக உதவி செய்கின்றது. இது அங்கவீனர்களுக்காகக் குரல் கொடுப்பவர்கள், தொழில் முகவர்கள் என இரு சாராரையும் விசனப் படுத்தியது.

'கடுமையான முதுகுவலி, மன அழுத்தம் போன்ற பிரச்சனையுடைய தொழிலாளிகளுக்கே ஏ. டி. ஏ. ஏஜென்சி பிரதானமாக பாதுகாப்பளிக்கின்றது' என்கிறார் வின்கம் மனித வள நிறுவனத்தின் உதவித் தலைவர் (Vincam Human Resources) கிறிஸ்ரீனா ஹரிஸ். ஏ. டி. ஏ. ஏஜென்சியின் வழக்குகளை விசாரிக்கும் 'சமமான தொழில் வாய்ப்பு ஆணைக்குழு' (The Equal Employment Opportunity Commission) 1992 இல் இருந்து ஏறக்குறைய 35,000 முறைப்பாடுகளைப் பெற்றது. மேலும் இந்தச் சட்டம் இயற்றப்பட்டு இற்றை வரை மூன்றில் இரண்டு அங்கவீனர்கள் தொழில் வாய்ப்பின்றியே இருக்கின்றார்கள். தங்களுக்குப் பாகுபாடு காட்டப்படுகின்றது எனச் சொல்லப்பட்ட 85 சத வீதமான முறைப்பாடுகள் பரிசீலனையில் இருந்த பொழுதிலும் இதனை முறைப்பாடு செய்த அனைவரும் அனேகமாக அதே வேலைத் தளத்தில் தொடர்ந்தும் வேலை செய்கின்றார்கள். முதுகுவலி, கைவிரல்களில் வலி (Carpal Tunnel Syndrome) ஆகியனவையே பிரதான பிரச்சனைகளாக 40 சத வீதத்தை வகிக்கின்றது. விழிப்புலன் இழந்தவர்கள், காது கேட்காதவர்கள் ஆறு சத வீதம் மாத்திரமே.

வழமையான அங்கவீனர்கள் இந்தச் சட்டத்தை தங்களுக்கேற்ற விதத்தில் பெரிதாகப் பயன் படுத்திக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் இதனால் இவர்கள் அனுபவிக்கின்ற பல்வேறு மருத்துவ வாய்ப்புக்கள் பாதிக்கப்பட்டு விடும். வறுமைக் கோட்டினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் மருத்துவ வசதிகளை,

அங்கவீனத்தைக் காட்டிப் பெறுகின்ற தொழிலுக்காக இழப்பது 'மரணப் பொறியாகும்' என்கிறார் ஜனாதிபதியின் அங்கவீனர்களின் தொழில் வாய்ப்பிற்குரிய ஆணைக்குழுவின் முன்னாள் தலைவரான ஜஸ்ற்றின் டார்ட். ஆனாலும் இந்தச் சட்டத்தில் சல்லடை போன்று பல இடை வெளிகளையும் கொண்டிருக்கின்றது. 'தொழில் வழங்குபவர்கள் நியாயமான அளவுக்கு ஏற்றுக் கொள்ள வேண்டும்' என ஒரு தெளிவோ வரையறையோ இல்லாமல் குறிப்பிடுகின்றது. உதாரணமாக இயலாதது (Impairments) என்பது போதைப் பொருள்களுக்கு அடிமையானது முதல் உள்நிறையும், பருமனும் மிகவும் கூடியவர்கள் வரை உள்ளடக்குகின்றது.

அண்மையில் இடுப்பு மூட்டில் பிரச்சனை ஏற்பட்டு குந்தியிருக்கவோ, திரும்பவோ, நீண்ட நேரம் நிற்கவோ முடியாத டரன் ஹேவெல் என்பவருக்கு உடலுழைப்புக் குறைந்த இலேசான ஆனால் தற்காலிகமான வேலையை 13 கிழமைகளுக்கு அவர் வேலை செய்த மிச்சலின் டயர் கூட்டுத்தாபனம் வழங்கியது. ஆனால் தன்னுடைய அங்கவீனத்திற்கேற்ப நிரந்தரமான வேலையைத் தரவில்லையென டரன்கோவெல் கூட்டுத் தாபனத்திற்கெதிராக வழக்குப் போட்டார். ஆனால் கூட்டுத்தாபனத்திற்கே வெற்றி கிடைத்தது. ஆனாலும் இப்படியான வழக்குகளை அடிக்கடி சந்திக்க நேரிடும் என நிறுவனம் அஞ்சுகிறது.

நியாயமான அளவு என்றால் என்ன?

மிச்சலின் மற்றும் ஏனைய தொழில் முகவர்களுடைய தொழில்களுக்கு கடுமையான உடலுழைப்பு உடையவர்களின் தேவையிருப்பதனால் மிச்சலின் கூட்டுத்தாபனத்திற்கெதிரான கோவலின் வழக்கு, ஒர்லண்டோவிலுள்ள புளோரிடா மருத்துவ மனைக்கு எதிரான ஜேன் முரேயின் வழக்கு இந்த நிறுவனங்களுக்குப் பெரும் இடைஞ்சலை ஏற்படுத்தும் என்று கருதுகின்றார்கள். அவர்களுக்கு உண்மையான பிரச்சனைகள் இருந்த போதிலும் நிறுவனங்கள் சட்டப் பிரச்சனைகளுக்காக இழுபட்டுக் கொண்டிருக்க முடியாது என்கின்றார்கள். மேலும் அங்கவீனம் காரணமாக, உதாரணமாக முரேயின் முதுகுவலிக்காக அவருடைய வேலைப் பளுவைக் குறைக்கின்ற போது அவருடைய சக ஊழியர்களுக்கு வேலைப் பளுவை அதிகரிப்பதும் ஒரு பிழையான முன்னுதாரணமாகவே அமைந்து விடும் என நிறுவனத்தின் வழக்கறிஞர்கள் கருதுகின்றார்கள். அங்கவீன சமூகத்தினரிடையேயும் பலத்த முரண்பாடு நிலவுகின்றது. இவர்களுக்கு உதவுகின்ற ஒரு சாரார் இந்தச் சட்டத்தை வன்மையாக ஆதரிக்கின்றார்கள். வியாபார நிறுவனங்களிலும், பொதுக் கட்டடங்களிலும் முச்சக்கர வண்டிகள் விடக் கூடிய வசதிகளையும், விழிப்புலன் இழந்தவர்களுக்குரிய பிறெயில் குறியீடுகளையும் வாங்கி வசதிகளைப் பெருக்க வேண்டும் என்கிறார்கள். இன்னொரு சாரார் இந்தச் சட்டங்களைப் பலர் துஷ்பிரயோகம் செய்ய முடியுமென்பதால் இதனால் மொத்த வியாபாரத்துக்கும், தொழிலுக்கும் நஷ்டங்கள் ஏற்பட்டு இந்தச் சட்ட மூலம் யாருக்கு உண்மையில் உதவவேண்டும் என்று இயற்றப்பட்டதோ அவர்களுக்குப் பெரும் பாதகமாக அமையப் போகிறது என்கிறார்கள்.

ஏற்கனவே அமெரிக்காவின் சிவில் உரிமைகளுக்கான ஆணைக்குழுவின் (The U. S. Commission on Civil Rights) ரஸல் ரெடென்போ என்பவர் ஏ.டி.என் எல்லைகள் வரையறைகள் கட்டுப்படுத்தப்படல் வேண்டுமா? என்பதனை ஆராயும் படி அறை கூவல் விடுத்திருக்கின்றார். அங்கவீனர்களுடைய உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் டெனைவர் ஐ மையமாகக் கொண்ட ADAPT என்கின்ற நிறுவனத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் அதன் தேசிய அமைப்பாளருமான மைக்கல் ஒளபேர்கர் அங்கவீனர்களின் பட்டியலிலிருந்து மதுபானத்திற்கு அடிமையானவர்கள், போதைப்பொருள் பாவனையாளர்கள், முதுகில் வலி ஏற்படுபவர்கள் ஆகியோரை நீக்க வேண்டுமெனக் கருதுகின்றார். ஆனாலும் இந்தப் புதிய ரக அங்கவீனர்கள் தமக்குக் கிடைத்துள்ள புதிய சலுகைக்கான சட்ட மூலத்தை அங்கலாய்ப்புடன் பாதுகாக்கவே முயற்சிக்கின்றார்கள்.

நியூஸ்வீக் நவம்பர் 7, 1994

★

சவர்க்காரச் சவாரி

குதிரைகளின் பிடரி மயிருக்கு மெருகூட்ட முன்பு பாவிக்கப்பட்ட சவர்க்காரத் தைலம் இப்பொழுது மனிதர்களின் பாவனைக்காக வெகுவாக விற்பனையாகிறது. அதன் உற்பத்தியாளர்களை ஸ்றெயிற் அறோ நிறுவனத்தார் தற்போது அதனை மனித பாவனைக்கு என்று பிரத்தியேகமாக ஈகுவன்னே என்ற விற்பனை அடையாளத்துடன் சந்தைக்கு விட்டுள்ளது. பாவனையாளர்கள் அந்தச் சவர்க்காரத் தைலம் பாவனைக்குமிக உகந்ததாகக் கூறுகின்றனர். குதிரைகளுக்கு என்று உற்பத்தி செய்த பொருளில் மூன்றில் இரண்டு பங்கு மனித பாவனைக்குக் கொள்வனவு செய்யப்படுவதால் விற்பனை பல்கிப் பெருகிக் கொண்டு வருகிறது.

★

தொல்பொருள் தொகுப்பாளரின் வீழ்ச்சி

மின்னி மினுக்கிடும் சாம்ராச்சியத்தின் உள்ளே புராதன நாணய விற்பனைச் சமரசத்தில் ஈடுபட்டவன், கோடீஸ்வரனான புறூஸ் மக்னெல். இன்று அவன் சிறை விருந்தாளியாகும் அவல நிலை.

எழுதியவர்: ஜெரி பேன்போம்

தமிழில்: திரு. சொக்கன்

ஏள் மக்னெல் தென்கலிபோர்னியாப் பல்கலைக் கழகத்தின் உயிரியல் இரசாயனப் பேராசிரியர். அவரின் மனைவி ஷேர்லி ஆய்வுகூடத் தொழில் நுட்பவியலாளர். இவர்களின் மகன் தான் புறூஸ் மக்னெல். அவன் தனது ஐந்தாவது பராயத்திலேயே உணவு விடுதிகள், பெறுமதி வாய்ந்த சொத்துக்கள் கொண்ட ஏகபோக உரிமையாளரையே முதுகுக்கு மண் காட்டக் கூடிய திறமையைப் பெற்றிருந்தான். அவனுடைய கனவுலகிலே அவனின் தாய் ஷேர்லியைப் பால்டிக் சதுக்கத்தில் ஏழைமை நிறைந்ததும், குறைந்த வாடகையுடையதுமான சிறு வீட்டில் உலவவிட்டுத் தானோர் ஆடம்பர மாளிகையிலேயே உல்லாச வாழ்வு வாழ்ந்து கொண்டிருந்தான். புறூஸின் கனவுலகிலிருந்து அவனை விடுவிக்க அவன் பெற்றோர், தொலைக் காட்சி இரசனையைக் கட்டுப்படுத்திப் புத்தி சாதுரியமான செயற் பாடுகளில் ஈடுபடுத்தினர். இந்த ஈடுபடுத்தலும் செல்லமும் அவன் வரையிலே சிறந்த பயன் அளித்தன.

புறூஸ் வாலிப பருவத்தினை எட்டிப் பிடிக்க முன்னரே செல்வ வளம் நிறைந்த தொல் பொருள் தொகுப்பாளனாய் மாறினான். தொல்பொருள் தொகுத்து விற்றதோடு அவன் நின்றுவிட வில்லை. அவற்றைத் தொகுத்தது போலவே ஹொக்கி விளையாட்டுக்குழு, காற்பந்தாட்ட விளையாட்டுக்குழு, பந்தயக் குதிரைகள், றோல்ஸ்ரோய்ஸ் கார்கள், ஐந்து வதிவுமனைகள், தனிப்படத் தனக்குச் சொந்தமான ஜெற் விமானம் என்பவற்றோடு, தொல் பொருள்களை இனங்காணும் நிபுணன் என்ற உலகளாவிய கணிப்பையும் தொகுப்பதில் வெற்றி கண்டான். மெய்வல்லுநரின் திறன்களை மதிப்பிடும் நடுவனாக, குதிரைகளின் திறமைகளைக் கண்டு பிடிக்கும் வல்லுநனாக அவனுடைய பெயர் கொடிகட்டிப் பறந்தது.

இவற்றையெல்லாம் தொகுத்தது போலவே இன்று 44 வயதான புறூஸ் சிறை வாசத்தையும் தொகுத்துக் கொள்வான் போல இருக்கின்றது. அவன் செய்துள்ள குற்றங்களுக்கு மிக மோசமான எல்லாவற்றையும் ஒழுந்து 'ரற்ரா' சொல்கிறார், மக்னெல், தின்டாடிக்கொண்டிருக்கும் கடன்காரர்களுக்குப் பணம் செலுத்துவதற்காக, தனது வீடுகள், கார்கள், ஹொக்கிக் குழுவைக் கூட விற்கவேண்டியதாயிற்று.

தண்டனையாக 9 ஆண்டுகள் சிறை வாசத்தை அநுபவிக்க நேரலாம். ஐ. அ. அரசின் நீதித்துறை அவன் மீது வங்கி மோசடி, அஞ்சல் மோசடி, சதியில் ஈடுபட்டமை உட்பட நான்கு பாரிய குற்றங்களைச் சுமத்தி விசாரணைக்குள்ளாக்கியுள்ளது. ஏற்கனவே அவனுடன் இணைந்து தொழிற்பட்ட இருவர், வங்கி மோசடியில் ஈடுபட்டதற்காகவும், பொய்யான அறிக்கைகள் மூலம் ஏமாற்றி 138 மில்லியன் டொலர் பணத்தை அதன் முதலீட்டாளரிட மிருந்து மோசடி செய்தமைக்காகவும், பொய்யான நிறுவனங்களின் பெயரால் சொத்து விபரங்களை மறைத்து வைத்தமைக்காகவும், சோடிப்புக் கற்பனைகள் வாயிலாகக் கூடன் பெற்றதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டு உள்ளனர்.

புறூஸ் மக்னெலின் சாம்ராச்சிய மாளிகையில் இன்று எஞ்சியிருப்பன அதன் சில இடிபாட்டுச் சிதைவுகள் தாம். லயொனைஸ் கடனுதவி நிறுவனத்துக்கு 121 மில்லியன் டொலர்களும், அமெரிக்க வங்கிக்கு 40 மில்லியன் டொலர்களும், மெறில் லிஞ்ச் நிறுவனத்திற்கு 37 மில்லியன் டொலர்களும் கடன் இறுக்க வேண்டிய நிலையில் நீதிமன்றத்தின் மூலம் தனது வங்குரோத்து நிலையினை வெளிப்படுத்தி உள்ளான். இரண்டு வதிவிட மனைகள், அவனது சொந்த ஜெற் விமானம், சில கார்கள், ஹொக்கி விளையாட்டுக் குழு, திரைப்பட நிறுவனம் ஒன்றில் இட்டிருந்த பங்குப் பணம் என்பன அவனது கைகளிலிருந்து நழுவிப் போய் விட்டன. பொங்கு சனியில் அவன் கட்டியெழுப்பிய பயமலை, மங்கு சனியின் போது முற்றாக நொருங்கித் துகளாய் விட்டது. கிரேக்கப் புராதன நாணயமான 'ட்றாச்மா' ஒன்று கூட இன்று அவனிடம் இல்லை.

புறூசின் ஆரம்ப ஈடுபாடு புராதன நாணயங்களான பழங்காலச் சிற்பங்கள், கருவிகள் முதலான வற்றைத் தொகுப்பதிலும் கவனஞ் செலுத்த வைத்தது. இவை பற்றிய அறிவை விரிவாக்க லொஸ் ஏஞ்சல்சின் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்திலுள்ள புராதன வரலாற்றுத் துறையிலே பட்டப்படிப்புக்கென அவன் சேர்ந்தாலும் அதனை இடை நடுவில் நிறுத்திக் கொண்டு தொல்பொருள் தொகுப்பிலும் விற்பனையிலும் ஈடுபட்டான். அவனுடைய தன்னம்பிக்கைச் செருக்கும் அவனைப் பிடர் பிடித்துத் தள்ளியதே படிப்பை இடை நிறுத்திய காரணமாகத் தோற்றுகின்றது. இதற்கு முன்பே தனது தொல்பொருள் சேகரிப்புப் பயணத்திலே பழைமையான வணிகப் பாதைகள் யாவும் அவனுக்குத் துலாம்பரமாயின. 1974 இலே அவன் கைப்பட்ட புராதன நாணயம் ஒன்றின் விலைத் தரம் 100,000 டொலராயிருந்தது. ஆனால் கி.மு. 5 ஆம் நூற்றாண்டில் அதினியாவின் 'டிக்கட்றாச்சம்' (decadrachm) பெறுமதி கொண்ட அதனை 420,000, டொலருக்குக் கொள்வனவு செய்து சில வாரங்களிலேயே 470,000 டொலருக்கு அவனால் விற்க முடிந்தது. அதே ஆண்டில் புராதன நாணய விற்பனைக் கடை ஒன்றையும் ஹொலிவூட்டின் மைய இடமான றோணி றோடியோட் நைவில் தொடங்கினான்.

தொல்பொருள்களைப் புறூஸ், துருக்கி, கிறீஸ், இத்தாலி நாடுகளிலிருந்து களவாடியவர்களிடம் விலைக்குப் பெற்று விற்பனை செய்வதில் தொடர்ந்து ஈடுபடல் ஆனான். 'வனிற்றி ஃபெயர்' (Vanity Fair) என்ற சஞ்சிகையின் நிருபருக்கு "நான் பிடிபட நேர்கையில் குறித்த பொருளைத் திருப்பி அளித்துத் தப்பிக்கொள்வேன்" என்று பெருமையடித்துக் கொண்டான். (18 வயதிலேயே தங்க நாணயங்களைக் கள்ளக் கடத்தல் செய்த 'பெருமை' இவனுக்குண்டு) "எனது நண்பர்களான கல்வியாளர்கள், 'களவாடப்பட்ட பொருள்களை விற்பனை செய்வதாகிய ஒழுக்கக் கேட்டில் நீ ஈடுபட்டிருக்கிறாய்' என்று குறை கூறுவதை நான் விரும்பவில்லை. எனக்கு அது தெரியும் .... இப்படியான சிறு முணுமுணுப்பு எழுந்தாலும் உடனேயே அந்தப் பொருளை (களவுப் பொருளை) த் திருப்பி அளிக்கும் படி நான் எனது ஊழியர்களுக்குச் சொல்லிவைத் திருக்கின்றேன்" என்கிறான்.

புறூசிடம் பணம் உருளத் தொடங்கியது. அவன் பணத்தின் மேல் உருண்டான். இந்தப் பக்கம் பந்தயக் குதிரைகள், அந்தப் பக்கம் பங்கர் ஹண்ட் நிறுவனத்தோடு வெள்ளி வியாபாரம், அடுத்த பக்கம் ஹொக்கி விளையாட்டுக் குழு (1988) இன்னொரு பக்கம் ஒளிபரப்பு ஒப்பந்தம் என்று எல்லாப் பக்கங்களிலும் பணம் காட்டாறு போலப் பெருகியது. அவனுடைய பணம் திரட்டும் திறமையைக் கண்டு வங்கிகள் தங்களிடம் பணம் கடன் பெறுமாறு இரந்து நின்றன. மெறில் லிஞ்ச் நிறுவனம் மட்டும் புராதன நாணய வியாபாரத்துக்கென்று மூன்று வர்த்தக நிலையங்களை அவனுக்கு உருவாக்கிக் கொடுத்தது. குதிரைகளின் தரத்தினை உறுதிப்படுத்தும் நிலையம் ஒன்றினைத் தனது கார்ச் சாரதியை உரிமையாளராகவும், தர உறுதிப்படுத்தாளராகவும் கொண்டு தொடங்கியதும் குறிப்பிடத் தக்கதாகும்.

இன்று சகலமுமே தலைகுப்புற வீழ்ந்து விட்டன. முன்போலப் புறூஸால் பணம் தேட முடியாதவாறு அவனுடைய வர்த்தக நிறுவனங்கள் சரிந்து போயின. கடன்காரர்கள் வரிசையாக முட்டி மோதிக்கொண்டு நிற்கிறார்கள். அவர்கள் தங்கள் முதலீடுகளை மீள்பெற வழக்குத் தொடர்கிறார்கள். அவனுடைய ஆவணங்களை ஐ.அ. அரசு ஆராயத் தொடங்கி அவனது பொய்மைகள், சூழ்ச்சி வலைகள் யாவும் அம்பலம் ஆகிக் கொண்டிருக்கின்றது.

சிறைக் கூடத்தில் தனது சகசைதிகளுக்கு புறூஸ் தனது வீரப் பிரதாபங்கள் பற்றியும் அகஸ்துஸ் (உரோம சாம்ராச்சியத்தின் மாபெருந் தலைவர்களில் ஒருவன்) அரசியற் சீர்திருத்தம் பற்றியும் ஒனஸ் வாக்னரின் பேஸ்போல் (Base Ball) அட்டை தனக்கு 400,000 டொலர்களைப் பரிசிலாகத் தந்தது பற்றியும் பேருரைகள் நடத்துவதுதான் இன்று அவனால் முடியக் கூடிய காரியம். ஏகபோகமாக ஒளிபரப்புக் காட்சியில் அவன் தனது பாத்திரத்தை நடிக்கவும் கூடும். அவன் விடுதலை ஆன பின்னர் UCLA ஆய்வு நிறுவனத்தின் அழைப்பினை ஏற்று அங்கு அவன் உரையாற்றவும் நேரலாம்.

லொஸ் ஏஞ்சல்சிலிருந்து
பற்றிக் ஈகோன் அனுப்பிய
அறிக்கையிலிருந்து.
ரைம் நவம்பர் 14, 1994

★

சுற்றுச்சூழல்

உயிரினங்களுக்கு

மிகத் துணிச்சலான நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் மடகாஸ்காரின் அற்புதமான விலங்கினமும் காடுகளும் அழிந்து நாசமாகலாம்!

எழுதியவர்: தாயோலங்காரோவிலிருந்து
ஜே. மண்டலின் நாஷ்

நீல் அள்ளுப்பட்டுப் போவது போலும், மயானத்தின் கல்லறைகள் அடுக்கியிருப்பது போன்றும் காடுகளை வெட்டி வீழ்த்திய பின்னர் அதன் எஞ்சிய பகுதிகள் காட்சியளிக்கின்றன. தாவரவியலாளரான சைமன் மல்கம்பா "இந்த அழிவுகள் எமது ஞாபகத்திற்குட்பட்ட காலத்தில் நடந்திருப்பதுதான் மனதில் பெரும் சோகத்தை ஏற்படுத்துகின்றது" என்கின்றார்.

ரனோமாபனா தேசிய பூங்காவின் (Ranoma fana) கிழக்குப்புறமாகவுள்ள மிசூரி தாவரவியல் பூங்கா, ஆராய்ச்சி நிலையத்திற்கு (Missoori Botanical Garden) அருகில் ஏக்கர் கணக்கில் மரங்களை வெட்டி வெறும் நிலமாகக் காட்சியளிக்கின்றது.

ஆபிரிக்காக் கண்டத்தின் கீழ் முனையில் கிழக்குப் புறமாக இந்து மகா சமுத்திரத்தில் மடகாஸ்கார் தீவு இருக்கின்றது. பல பத்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் ஆபிரிக்காக் கண்ட பெரு நிலப்பரப்பிலிருந்து பிரிந்து இந்தத் தீவுகளுக்கு வந்த மிருகங்கள் தமக்கே உரிய தனித்துவத்துடன் வாழ்வதோடு வித்தியாசமான விலங்குகளாகவே கூர்ப்படைந்துமுள்ளன. பார்ப்பதற்கு அருவருப்பான நீண்ட கழுத்தையுடைய சிறிய பூச்சிகள் முதல் கழுத்தில் புட்டியுள்ள பெரிய ரைனோசரஸ் (Rhinoceros) வரை இருக்கின்றன. மரத்தில் தொங்குகின்ற குரங்கு போன்ற விலங்கு எழுப்பும் சங்கீத ஒலி மிகவும் அதிசயமானது. அங்கே இருக்கின்ற 50 சத வீதத்திற்கும் அதிகமான பறவைகள், 85 சத வீதத்திற்கும் அதிகமான மரங்கள், 95 சத வித ஊர்வன வகை மிருகங்கள் (Reptiles) மற்றும் இந்த வருடம் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்ட பச்சோந்தி போன்ற புதிய விலங்குகள் பூமியில் வேறு எந்தப் பிரதேசத்திலும் காணப்பட முடியாதவை.

தமிழில்:
டாக்டர் எஸ். பி. ஆர். சிர்மாறன்

அடுத்த சில தசாப்தங்களுக்கு இவற்றினுடைய விதி உலகத்திலேயே மிகவும் வறுமையான, அங்கு வாழுகின்ற மக்களின் கையில் தங்கியிருக்கின்றது. உலக வன விலங்கு நிதியமும் (World Wildlife Fund) (Conservation International) சர்வதேச பாதுகாப்பு இரண்டும் அமெரிக்க அமைதி இராணுவத்தின் (American Peace Corps) உதவியுடன் விவசாயத்திற்கான திட்டம், அடிப்படைக் கல்வியறிவிற்கான பயிற்சி, (Literacy Training) மருத்துவர்களை வாடகைக்கு அமர்த்தி குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுதல், சுகாதாரம் பேணுதலுக்கான தகவல்களைப் பரப்புதல், சனப்பெருக்கத்தைக்கட்டுப்படுத்துதல்

போன்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துகின்றார்கள். ஏனெனில், மனிதனுடைய அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத வரை மரங்களைப்பற்றியும் எப்படி கதைக்க முடியும்? என்கின்றார் சர்வதேச பாதுகாப்பின் தலைவர் ரொடெரிக் மாஸ்ட்.

மடகாஸ்கார் தீவிலுள்ள 12 மில்லியன் (120 இலட்சம்) மக்களும் பஞ்சத்தில் வாழ்வதனால் அவர்களுடைய பசி அங்குள்ள சூழலைப் பாதிக்கத்தான் செய்யும். தென் பகுதியின் காடுகள் பல அழிக்கப்பட்டு ஆடு, மாடு, வரிக்குதிரை போன்ற கால் நடைகளை வளர்க்கின்றார்கள். இதுவே உள்ளூர் செல்வந்தருக்கான தலைமையாகும். கையொப்ப மரங்கள் (The Signature Trees) அவற்றில் உள்ள கூரான

ஏற்படும் பாரிய அழிவு

முட்களும், தசைப்பிடிப்பான இலைகளும், வீடுகட்டுவதற்கும், விறகுக்குமாகப் பயன்படுத்தப்படுவதனால் அவை அழிகின்றன. மேலும் காடுகளில் சோளம் பயிர் செய்யப்படுகின்றது.

நல்ல விளைச்சலுக்காகக் கோடை காலத்தின் கடைசிப் பகுதியில் புற்களுக்கு வைக்கின்ற தீ பரவி துப்பாக்கி வேட்டுக்கள் வெடிப்பது போன்று வெடித்து காடுகளையும் நாசமாக்குகின்றது. சித்த மருத்துவத்திற்குப் பயன்படுத்தப்படும் மருத்துவப் பயிர்களும் அக்கறையின்றி வேரோடு பிடுங்கப்படுவதனால் அவற்றின் கழிவுகள் அழுகி நோய்களையும் ஏற்படுத்துகின்றன.

உலக வனவிலங்கு நிதியத்தினர் தென்முனையிலுள்ள தயோலக்னாரோ (Taolagnaro) துறைமுகப் பகுதியை அண்டியே வேலை செய்கின்றார்கள். கானா (Ghana) நாட்டைச் சேர்ந்த தாவரவியலாளரான நத்தானைல் குவான்ஸா அன்ரனாரிவோ (University of Antanarivo) பல்கலைக்கழகத்தின் மருந்தியலாளருடன் இணைந்து அங்குள்ள மருத்துவப் பயிர்களின் எந்தப் பகுதியில் மூலிகைகள் இருக்கின்றன என்பதைக் கண்டு பிடிக்கும் ஆய்வுகளை மேற்கொள்ளுகிறார். உதாரணமாக இலையில் இருக்குமாயின் வேரைப் பிடுங்கிப் பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படாது. அமெரிக்க அமைதி இராணுவத்தைச் சேர்ந்த முன்னைநாள் மார்க்பென் செய்மதியின் உதவியுடன் காட்டுத் தீ பரவும் இடங்களை அடையாளங் கண்டு கிராமத்துத் தலைவர்களின் உதவியுடன் கட்டுப்படுத்த முயற்சிக்கின்றார். அண்டோகஹெலா (Andohahela) பிரதேசத்தின் நீர் வளம் செறிந்து காணப்படுவதனால் அதனைச் சுற்றியுள்ள காடுகளைப் பாதுகாக்க வேண்டும் என்கின்றார்.

வடக்கிற்கு நூற்றுக்கணக்கான கிலோ மீற்றர்களுக்கு அப்பால் ஊர்வன மற்றும் நிலத்திலும், நீரிலும் வாழும் விலங்கு இனங்களைக் காக்கும் முகமாகக் காடுகளை அழித்து விவசாயம் செய்வதற்குப் பதிலாக நெல் வயல்களில் வளங்குன்றாமலிருப்பதற்கு நைதரசன் செறிவாகக் கொண்ட அவரை,பயறு போன்ற பயிர்களை மாறிமாறி நடுமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது.

அபிவிருத்தியையும், இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுவதையும், தொடர்பு படுத்துகின்றபோது எதிர் பாராத விளைவுகள் சிக்கலாகத் தோன்றும். உதாரணமாக நீர்ப்பாசனத் திட்டம் ஒன்று அண்டோகஹெலாவிலுள்ள திஸ்சிமெலாகி (Tsimelahy) வாசிகளுக்காகக் கட்டப்பட்டது. அங்கு கிடைத்த நல்ல நெல் விளைச்சலினால் கிராமவாசிகள் அந்தப் பணத்திற்கு மேலும் கால் நடைகளை வாங்கினார்கள். தீனி போடுவதற்காகக் காடுகளை அவர்கள் அழித்தார்கள். எனவே, சூழல் கல்வியை அறிமுகப்படுத்தினார்கள். ஆனாலும், 40 சத வீதத்திற்கும் குறைவான பிள்ளைகளே பாடசாலைக்கு வருகின்றார்கள்.

தனிமைப்பட்டுள்ள சமூகத்தினரின் நம்பிக்கையைப் பெறுவதென்பது மிகவும் கடினமான கைங்கரியமாகவே உள்ளது.

குழந்தைகளுக்குத் தடுப்பூசி போடுமுகமாக முன்பின் தெரியாதவர்கள் திடீரெனப்போய் இறங்கியதும் எரிச்சலடைந்த கிராமத்தவர்கள் மருத்துவக் குழுவைத் திருப்பி அனுப்பி விட்டனர்.

மடகாஸ்காரில் அப்படி என்ன இருக்கின்றது? அங்குள்ள மரங்களும், மருத்துவப் பயிர்களும் மற்றும் விலங்குகளும் மிகவும் பயனுள்ளவை. சர்வதேச மருந்து நிறுவனங்களும், ஆய்வு நிறுவனங்களும் இந்த மூலிகைகளைப் பயன்படுத்திப் புதிய மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் ஆர்வங் காட்டுகின்றன. உதாரணமாக குழந்தைகளில் ஏற்படும் இரத்தப் புற்றுநோய் (Childhood Leukaemia)க்குரிய மருந்து கண்டு பிடிக்கும் வாய்ப்பு இருக்கின்றது. 50 வகைக்கும் அதிகமான கோப்பி இனங்கள் இருக்கின்றன.

ஆனாலும் துரதிர்ஷ்டவசமாகக் காலம் போதாது சனத்தொகைப் பெருக்க வீதம் உலகில் இங்கேயே மிக அதிகம். எனவே சனத்தொகைப் பெருக்கம் அங்குள்ள வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி விடும் என்கின்றார்கள் விஞ்ஞானிகள். ஏதாவது பெரியளவில் திட்டங்கள் தீட்டி முயற்சிகள் மேற்கொண்டால் ஒழிய உலகின் தலை சிறந்த வனவளமும், விலங்கினமும் இந்தப் பூமியை விட்டு நிரந்தரமாகவே அழிந்து விடும்.

ரைம், நவம்பர் 21, 1994.

★



மறக்கப்பட்ட மாபெரும் மிருகம்

சூழல் : தந்தங்களை வேட்டையாடுபவர்கள் தற்போது நீர்யானையைக் குறி வைக்கிறார்கள்.

எழுதியவர்கள் :
நியூயோர்க்கிலிருந்து
டொனி எமர்சன்
சுதர்சன் இராகவன்

தமிழில்:
டாக்டர் எஸ். பி. ஆர். சர்மாறன்

யானையின் தந்தங்களை வெளி நாட்டவருக்கு விற்பனை செய்வதற்காக வேட்டையாடுபவர்களினால் யானை இனம் அழிகின்றதென உலகின் அனைத்து நாடுகளும் யானையின் தந்தம் விற்பனை செய்யப்படுவதைத் தடை செய்தன. தந்த வியாபாரிகள் விட்டார்களா! தந்தம் போன்ற நீண்ட பற்களை உடைய 'நீர்யானை' (Hippo) என்கிற பெரிய மிருகத்தை வேட்டையாடுகின்றார்கள். இப்போது ஒன்றும் செய்யாவிட்டால், ஆபிரிக்காவின் சில பகுதிகளில் நீர்யானை முற்றாக அழிக்கப்பட்டு விடும் என்கிறார்கள் நிபுணர்கள்! இயற்கைக்கான அகில உலக நிதியத்தின் (World Wide Fund for Nature) பிரதிநிதி டாக்டர் சைமன் லிஸ்ற்றர் நீர்யானை 'மறக்கப்பட்ட விலங்காகி விட்டது' என்கிறார்.

துரதிர்ஷ்டவசமாக நீர்யானையை வேட்டையாடுவது மிகச் சுலபமாகும். சேற்று நீருக்குள் அசையாமல் படுத்திருக்கும் நீர்யானையை மிக இலகுவாகச் சுட்டு விடுவார்கள். இறந்த உடல் பலூன் போன்று ஊதி வெடிக்கும். பின்னர் பற்களை வெகு இலாவகமாகப் பிடுங்கி எடுப்பதுதான் பாக்கி.

நீர்யானையைக் காப்பாற்ற வேண்டுமென்கின்ற பிரச்சாரம் புதிய வேகம் பெற்றிருக்கின்றது. அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் நடைபெற்ற ஆபத்திலிருக்கும் விலங்கினங்களின் சர்வதேச வர்த்தக (International Trade in Endangered Species in Florida) மாநாட்டில் நீர்யானையை வேட்டையாடுபவர்களையும் அதன் பகுதிகளை விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு தற்போதுள்ளதை விடக் கடுமையான சட்டங்களும் வரையறைகளும் விதிக்க வேண்டுமென முன்மொழிந்துள்ளார்கள். 1988 இலிருந்து 1992 வரையில் ஹொங்கொங்கில் பதுக்கி வைத்து ஏற்றுமதி செய்யப்பட்ட பற்களின் எண்ணிக்கை 224 இலிருந்து 3,868 ஆக உயர்ந்துள்ளது. இதில் என்ன வேடிக்கை என்றால் இதன் பெரும் எண்ணிக்கை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது.

யானையின் தந்தம் கடத்தப்பட்ட அதே பாதையிலேயே நீர்யானையின் பற்களும் கடத்தப்படுகின்றது. கொங்கோ, புருண்டி, தன்சானியா ஆகிய ஆபிரிக்க நாடுகளில் இருந்து ஐரோப்பாவிலுள்ள பிரான்ஸ், பெல்ஜியம், ஸ்பெயின் போன்ற இடைத்தரகர்களின் உதவியுடன் ஹொங்கொங், ஜப்பான் போன்ற நாடுகளில் துண்டுகளாக்கப்பட்டு பல்வேறு விதமான தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றது. ஆனாலும் யானையின் தந்தம் ஒரு கிலோ 400 — 500 அமெரிக்க டொலருக்கு விற்கப்படுகின்ற நிலையில் இது ஒரு கிலோ 50—70 அமெரிக்க டொலருக்கே விற்பனை செய்யப்படுகின்றது.

அவை ஆபரணங்களாக, நகைகளாகச் செதுக்கப்பட்டதும் யானையின் தந்தத்திற்கும் இதற்குமுள்ள வித்தியாசத்தை வெகு சிலரே கண்டு பிடிப்பார்கள். இந்த வியாபாரம் பொங்கி வழிகின்றது. ஆபிரிக்காவில் மிகவும் அரிதாக எடுக்கப்படும் புள்ளி விபரங்களின்படி அதன் எண்ணிக்கை 160,000, அதாவது யானையின் சனத்தொகையின் காற்பங்கு தான் எஞ்சியிருக்கின்றது என்கிறார்கள் விலங்குப் பாதுகாவலர்கள்.

இரண்டிற்கும் ஒரே மாதிரியான வியாபாரத் தடையைக் கொண்டு வர வேண்டும் என்கிறார்கள். நீர்யானையின் பற்கள் விற்பனை செய்யப்படுவதை நன்கு கட்டுப்படுத்தி யானையின் தந்தங்கள் விடயத்தில் சற்றுத் தளர்த்துவதை சிம்பாப்வே, பொற்ஸ்வானா மற்றும் ஆபிரிக்காவின் தென்பகுதி நாடுகள் வரவேற்கின்றன.

யானைத்தந்த வியாபாரத்தின் மீது விதிக்கப்பட்ட முற்றான தடையினால் யானை பெருகியிருக்கின்றது. இந்த நாடுகள் ஒரு குறிப்பிடத்தக்களவு யானைகள் இருப்பதை விரும்புகின்றன. அதற்காக விற்பனை செய்யப்பட முடியாத

அளவிற்குத் தேங்கி நிற்கின்ற தந்தங்களை விரும்பவில்லை. சூடான், மலாவி போன்ற நாடுகள் தந்த வியாபாரத்தை முற்றாக நிறுத்துவதற்காக ஏராளமான தந்தங்களை கடமை உணர்வுடன் தடுத்து வைத்திருக்கின்றன. மலாவியின் வனவிலங்கு மற்றும் பூங்காவின் தலைவர் (Chief of Park and Wild life) மத்தியூ மட்டெம்பா, ''தந்த வியாபாரம் இன்னும் நடக்கின்றது; சட்ட விரோதமாக யானைகளை வேட்டையாடுவது குறைந்திருக்கின்றது. ஆனாலும் யானைகள் இன்னும் கொல்லப்படுகின்றன. யானையின் தந்தத்திற்கும் பாதாளச் சந்தை (Underground market) இருக்கின்றது'' என்கிறார்.

களவாக வேட்டையாடுதல்

ஆபிரிக்காவின் தெற்கு, கிழக்குப் பிரதேசங்களிலுள்ள பூங்காக்களில் நீர்யானை இருப்பதனால் இவை திறந்த சந்தையாகக் கருதப்படுகின்றது. ஸயர், மலாவி போன்ற நாடுகளின் பூங்கா காவலர்களுக்கு யானைகளின் தந்தங்களை விற்பனை செய்வதனால் கிடைக்கின்ற வருமானத்திலிருந்தே ஊதியம் வழங்கப்பட்டு வந்ததினால் தற்போது தடை வந்ததும் வருமானமும் குறைந்து விட்டது. எனவே இந்தப் பூங்காக்களே வேட்டைக்களங்களாக மாறிவிட்டன. ஆபிரிக்காவிலேயே ஸயர் நாட்டிலுள்ள விருங்கா தேசிய பூங்காவில் (Zaire's Virunga National Park) அதிகளவு 22,000 நீர்யானைகள் இருந்தன.

யானைத் தந்த வியாபாரத்திற்குத் தடை விதித்ததும் ஸயரின் இராணுவத்தினர் நீர்யானைகளை வேட்டையாடியதனால் அதன் எண்ணிக்கை அரைவாசியாகக் குறைந்தது, என்கின்றது 'ட்றபிக்' (Traffic) என்கிற வனவிலங்கு பாதுகாப்புக்குழு.

அனேகமான ஆபிரிக்க கிராம வாசிகள் சாதுவான நீர்யானைக்கு கருணை காட்டுவதில்லை. உணவுக்காகவும், ஊர்வலம் போவதற்காகவும் அதனுடைய கொழுப்பிலிருந்தும், பித்தப் பையிலிருந்தும் தயாரிக்கப்படும் உள்ளூர் மருந்து வகைகளுக்காகவும் வேட்டையாடுகின்றார்கள். நீர்யானையும் பொல்லாதது. அது மிரண்டால் கிராம வாசிகளைக் கடித்தும், மிதித்தும், தூக்கியெறிந்தும் கொலை செய்யும். வேறெந்த விலங்கையும் விட இது தான் ஒரு வருடத்தில் அனேகமான ஆபிரிக்கர்களைக் கொல்லுகின்றது. ட்றபிக் ஐரோப்பா (Traffic Europe)வைச் சேர்ந்த ரொம் டி மெலுனீர், கமரூன் கிராமத்தில் நீர்யானை ஒரே சமயத்தில் மீன் பிடிப்பவர்கள் 6 பேரைக் கொலை செய்ததினால் ஆத்திரமடைந்த கிராம வாசிகள் அது தண்ணீர் குடிக்கின்ற இடத்திலேயே வைத்துக் கொல்லுகின்றார்கள் என்கின்றார். மொஸாம்பிக்கன் அகதிகளிடமிருந்து மலாவி கிராம வாசிகள் வெறும் 10 அமெரிக்க டொலர்களுக்கு ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகளைப் பெற்று நீர்யானையைத் தாக்குகிறார்கள் என்கிறார் மற்றம்பே.

ஆபிரிக்க நாடுகளில் புதிய நீர்யானை பாதுகாப்பை ஆதரிப்பதில் மலாவியும் முக்கியமானதாகும். சில நாடுகள் தன்னிச்சையாக இவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கின்றன. ஸம்பியா தனது தேசியப் பூங்காவில் உல்லாசப் பயணிகள் நீர்யானையில் உலாவருவதைத் தடை செய்துள்ளது. 35 சத வீத வருமானத்தையும் உள்ளூர் மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கின்றது. இது நீர்யானைகளை வேட்டையாடுவதையும், கடத்துவதையும் குறைக்கத் தூண்டுகிறது. ஆனாலும் நீர்யானையை வேட்டையாடுவதைக் கைவிட நேரிட்டால் ஒரு வேளை அவர்கள் வேறு மிருகங்கள் மீது அதாவது நீண்ட பெரிய பற்களை உடைய திமிங்கிலம் வால்றாஸஸ் (Walruses) போன்றவற்றை வேட்டையாடுவார்கள்.

நியூஸ் வீக் நவம்பர் 21, 1994.

★

பற்கள் கவனம்

கொதிவலியால் அல்லது வாய் மணத்தால் பற்கள் எங்கள் கவனத்தைத் தம்மீது திருப்புகின்றன. நாம் எவ்வளவு சுவையாகப் பேசினாலும் எமது வாய் மணத்தால் அன்பர்கள் தூரம் விலகிச் செல்வர். வாயில் துர்நாற்றம் ஏற்பட பற்களுக்கிடையில் புகுந்திருக்கும் உணவுத்துகள்கள் காரணமாய் அமைகின்றன. நுண்கிருமிகளின் செயற்பாட்டினால் இந்த உணவுத்துகள்கள் அழுகித் துர்நாற்றம் வீசுகின்றது. நாக்கின்மீது காணப்படும் அழுக்குப்படலமும் இதற்குக் காரணமாகின்றது. பற்களுக்கிடையிலும் நாக்கின் மீதும் நுண்கிருமிகள் கனவேகமாக விருத்தியடைகின்றன. தரமான பற்பசைகளினால் பற்களைத் தேய்த்துச் சுத்தப் படுத்துவதாலும் நாக்கையும் அதே பிரஷ்களினால் மெதுவாகத் தேய்த்துக் கழுவுவதாலும் வாய்நாற்றத்தைப் போக்கலாம்.

சீரான வேகத்தில் பற்களைத் தேய்ப்பதற்காக மின்கலம் பொருத்திய பிரஷ்கள் விற்பனைக்கு வந்துள்ளன. நிமிடத்திற்கு 30,000 அதிர்வுகள் வரை இவை இயக்கமுடையவை என்று தயாரிப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். இதன் விலை: 149 டொலர். அமெரிக்காவில் எல்லா மருந்துக்கடைகளிலும் இது விற்பனைக்குண்டு. மின்கலத்தின் விலையும் இதற்குள் அடங்கும்.

றொக்கெற் கிளைடர்

ஒரே கட்டச் செயற்பாடுகளைக் கொண்ட மனிதர்களற்ற விண்கலமொன்று தரையிலிருந்து செங்குத்தாக மேற்கிளம்பிச் சென்று, பூமியின் சுற்றுவட்டப் பாதையில், வலம் வரும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இவ் விண்கலமானது கிடையாகப் பறந்து அதனது சக்கரங்களின் உதவியுடன் தரையிறங்கக் கூடியதாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. இது 1960 களில் விண் வெளிக்கு ஏவப்பட்ட X விமானங்களை (X Plane) ஒத்த தோற்றமுடையதாக இருப்பதும் கவனிக்கத்தக்கது. மீளவும் பயன் படுத்தக்கூடிய வகையிலும் ரீட்டான் – IV ஏவுகணையொன்றின் சுமையைக் காவிச் செல்லக் கூடிய விதத்திலும் லொக்ஹீட் நிறுவனத்தின் ஸ்கங்க் வேர்க்ஸார் இதனை வடிவமைத்துள்ளனர்.

ஒரே வரிசையில் ஒழுங்கமைக்கப்பட்ட பிச்சுத்தாரை வெளிப்போக்கிகளைக் (Plug Nozzles) கொண்டதாக ஏழுகல



இயந்திரங்களால் (Modular Engines) செலுத்தப்படும் இவ் விண்கலம், ஏரோ பொலிஸ்ரிக் றொக்கெற் (Aeroballistic Rocket) என அழைக்கப்படக் கூடியதாகும். அறுபதுகளின் மத்தியில் பெருமளவு பொருட் செலவுடன் இது பலவித பரிசோதனைகளுக்கு உட்படுத்தப் பட்டது. முன்னைய வடிவமைப்பின் போது கூம்பு வடிவத்திலான வெளிப்போக்கியின் ஊடாகவே இயந்திரத்தில் இருந்து வெளியேறும் வாயு அகற்றப் பட்டு வந்தது. தரையோடு கூம்பின் முனையின் ஊடாகப்பிச்சல் தாரையாக இவ்வாயு வெளியேற்றப்படுகிறது.

தாரா ஒன்று குளத்தை நோக்கி ஓடும்போது தனது மூக்கை 45 பாகை கோணத்தில் உயர்த்திப் பிடித்துக் கொள்வது போன்ற ஒரு நிலையிலேயே இவ்விண்கலமானது தரையிறக்கத்தின் போது பூமியின் வளிமண்டலத்தினுள் பிரவேசிக்கிறது. அதன் பின்னர் ஓடுதரைப் பகுதியை (Runway) அண்மிக்கும் போது தரைக்குக் கிடையாகப் பறந்து தரையிறங்குகிறது. இத்தகைய அசாதாரண மான பறத்தல் நிலையும் வயிற்றுப் பாகத்தின் வெளிப்புற அமைப்பும் உருவாக்கும் வெப்பத்தை விரைவாகவே அகற்றி விடுகிறது. இதனால் வெப்பத்தை உறிஞ்சக் கூடிய மூலப் பொருள்களின் தேவை வெகுவாகக் குறைக்கப்படுகிறது.

இத்தகைய வடிவமைப்பில் இவ்வாகனத்தைத் தயாரிக்கும் போது அதன் செலவினம் ஓர் இறாத்தல் எடைக்கும் 500 டொலர் வீதம் குறைவடைவதாக லொக்ஹீட் நிறுவனம் கூறுகிறது.

புதிய வகை வேவு விமானம்

ஒத்திசைவு இல்லாத தகவல் தொடர்பு சாதனங்களின் தரக் குறைவான செயற்பாடுகளால் வெவ்வேறு இராணுவ சேவைகளுக்கு இடையில் சண்டைக்கான வேவுத்தகவல் பரிமாற்றம் ஒழுங்கானதாக இருக்கவில்லை. இது அண்மையில் வளைகுடாவில் இடம்பெற்ற பாலைவனப் புயல் நடவடிக்கையின் மூலம் பெறப்பட்ட ஒரு படிப்பினையாகும்.

திறந்த சுற்றாடல் வேவு நடவடிக்கைகளுக்கான நடமாடும் ஒழுங்கமைப்பு (Mobile Operational - Intelligence Open Systems Environment) எனப்படும் மூஸ் இரண்டு ஏகனங்களின் புதிய செயற்பாட்டுடன் மேற்



கண்ட குறையை நிவர்த்தி செய்வதற்கான விமானப்படையின் முயற்சியாகும். 2½ தொன் எடைகொண்ட பல்வேறு இலத்திரனியல் கருவிகள் பொருத்தப் பட்ட இவ்வாகனங்கள், தகவற் செய்மதிகள் (Satellite) மற்றும் வானொலிக் கருவிகள் மூலம் கிடைக்கும் பல்வேறு தகவல்களையும் இணைத்து ஒத்திசைவாக்கி முழுமையான தகவற் பேறுகளை வழங்கக்கூடிய வகையில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இந்த மூஸ் ஆய்வுப் படுக்கைகள் நெருக்கடி நிலைமையொன்றின் போது தந்திரோபாய நடவடிக்கைக்கான தலைமையகமாகவும் நடமாடக் கூடியதாகவும் செயற்பட வல்லது.

★

புதிய சுமை தாங்கி

பெருமளவில் சுமைகளைக் காவிச் செல்லக்கூடிய உபகரணங்கள் கொண்ட போக்குவரத்து சாதனங்களே தற்போதைய தேவையாகவுள்ளது. ஒரே நேரத்தில் 30 தொன் எடையுள்ள சுமையை எடுத்து வந்து, காத்திருக்கும் விமானத்தில், ஏற்றக்கூடிய புதிய சுமை தாங்கி வாகனம் ஒன்றே விமானப் படையின் விருப்பத்திற்குரிய தேவையாக இருக்கிறது.

60 கே எனப்படும் புதிய சுமைதாங்கி வாகனம் தற்போது பாவனையில் இருக்கும் மூன்று சுமையேற்றும் இயந்திரங்களின் வேலையை செய்யக்கூடியதாகும். முன்னைய சுமைதாங்கிகளை விட 10 தொன்கள் எடையைக் கூடுதலாக ஏற்றிவிட இப்புதிய சுமைதாங்கியினால் முடியும். டீசலை எரிபொருளாகக் கொண்டு இயங்கும் இப்புதிய சுமைதாங்கி வாகனம் முழுச் சுமையையும் ஒரே நேரத்தில் ஒழுங்கு சேரத் தூக்கி உயரத்தில் கப்பலின் அல்லது விமானத்தின் சரக்குப்பகுதிக்கு நேரடியாகவே கொண்டு சேர்க்கக்கூடியதாகும்.

இவற்றுக்கான மூல மாதிரிகள் (Prototypes) ரெலிடைன் பிறவுண் என்ஜினியரிங் அன்ட் சவுத் வெஸ்ற் மொபைல் லிஸ் ரம்ஸ் நிறுவனத்தினால் ஏற்கனவே



தயாரிக்கப்படுகிறது. இம்மாதிரிகளில் ஒன்று இவ்வருடமே செயற்பாட்டிற்கு வரக்கூடும்.

★

புதியவகை மின்கலங்கள்

மின்சார மோட்டார் கார்களில் பொருத்தப்பட்டிருக்கும் மரபு ரீதியிலான பாரங் கூடிய ஈய அமில மின்கலன்கள் பற்றிய புகழுரைகளுக்குக் குறைவு இல்லை. எனினும் எலக்ட்றோ கோஸ் நிறுவனம் மோட்டார் வண்டிகளில் சக்தி வளம் ஊர்முடுகல் மின்கலத்திற்குத் திரும்பவும் உயிரூட்டல் போன்ற வற்றை மேற்கொள்ளுவதற்கு ஈய அமில மின்கலங்களுக்கு ஈடாகப் புதிய மாற்றீடு ஒன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.



ஈயத்தினாலான கம்பிச் சுருள்களும், பின்னல்களும் உட்பக்கத்தில் நிறைந்திருக்கும். ஹெரிசன் மின்கலங்களே அவையாகும். இவைகள் கண்ணாடி இழையங்களால் பிரிக்கப்பட்டிருக்கின்றன. இப்பின்னல்களில் ஒரு பசை தடவப்பட்டுக் கிடைப்பாடாக அடுக்கி வைக்கப்படுகிறது. இம் மின்கலத்தின் உபயோகம் பற்றிக் குறைகூற முடியாதுதான். எனினும் இதன் செலவு அதிகம். இதில் பயன்படுத்தப்படும் சோடியம் சல்பேற் அல்லது நிக்கல் ஹைட்றைட் என்பவை பெறுமதி கூடியனவையாக இருப்பதே இத்தொழில் நுட்பத்தில் இடையூறாக இருக்கிறது.

தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தப் புதிய கருவி

தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதற்குரிய கருவி ஒன்றைச் சாவன்னா நதிக்கரை தொழில்நுட்பவியலாளர்கள் உருவமைத்துள்ளனர்.

தாரை தாரையாக நீரைக் கொட்டக்கூடிய குழாய் ஒன்று மேல் நோக்கியதாக இருக்கும். மற்றைய பக்கத்திலே மேலதிக மான தண்ணீர் வெளியேறும் வரையிலே இது அமைக்கப்பட்டுள்ளது. சூடாக்கும் பகுதிக்கு நீர் சேரும்போது அது ஒரு வழிப் பாதையிலேயே செல்லும். மேலதிகமான தண்ணீர் அந்தத் தாங்கியினுள்ளேயே சுற்றோட்டத்தில் இருக்கும். சூடு கொடுக்கும் பகுதியில் இருந்து வெளியேறும் நீர் திரும்பவும் கொதிநீருடன் கலந்துவிட மாட்டாது. அந்த ஒரு வழிப்பாதையில் நாகம் போன்ற ஓர் உலோகம் சூடான நீரின் ஒட்டத்தைக் கட்டுப்பாடு செய்கின்றது. தாரை நீர் ஓடும் போது வெப்பநிலை ஒரே சீராக இருக்கும். தண்ணீரின் வருகையானது கழிப்பறைத் தேவை போன்ற இடையீடுகளால் தடைப்படும்போது மட்டும் இதில் மாற்றம் ஏற்படுகிறது. இக் கருவியை அமைப்பதற்கு 750 டொலர் வரை செலவு ஏற்படும்.

★

பூனைக் குடும்பத்தில் புலி

கலாநிதி கு. சோமஸ்கந்தன்

உயிரினங்கள் வகுப்பீட்டில் வகைப்படுத்தப்பட்ட குடும் பங்களில் பூனைக் குடும்ப மும் ஒன்று. வீட்டுப் பூனை, காட் டுப் பூனை, குறுவால் பூனை, சிங் கம், புலி, சிறுத்தை முதலியன இந்த் குடும்பத்தைச் சேர்ந்தவை. அவுஸ்திரேலியா, மடகஸ்கார், பசுபிக் தீவுகள் தவிர உலகின் மித உஷ்ணவலயத்தில் இவை பெரும்பாலும் காணப்படுகின்றன. ஆனால் புலி வாழும் சைபீரியா விதிவிலக்காக அமைகின்றது. வாழ் விடம், உருவம், நிறம், வழக்கங் கள் ஆகியவற்றில் வித்தியாசப்பட் டாலும் இவற்றைப் பிணைக்கும் குடும்ப அடையாளங்களை நாம் நன்றாக அவதானிக்கலாம். பூனை களில் மிகப் பெரியது புலி. மிகச் சிறியது வீட்டுப் பூனை. 600 இறாத்தல் வரை வளரக்கூடிய சைபீரிய வேங்கையே புலிகளில் மிகப் பெரிய உருவமுடையதாகும். இயற்பியலாளர்கள் பூனைக் குடும் பத்தை :பெலிடே (Felidae) என்றழைப்பர். அத்துடன் இறைச்சி யைப் பிரதான உணவாகக் கொண்ட விலங்குகளைக் காணி வொறா (Carnivora) என்பர். வன விலங்குகளின் கட்டமைப்பில் இறைச்சி தின்னிகள் முக்கிய இடம் பிடித்துள்ளன. கானகச் சக வாழ் வில் பெரிய பூனைகள் எனப்படும் புலியும், சிங்கமும் ஒருவித ஆதிக்க நிலையில் இருக்கின்றன.

புலி சுமார் 2.8 மீற்றர் நீளம் வரை வளரக்கூடியது. இந்தியா, வங்காள தேசம், மலேசியா, சைபீ ரியா, கொரியா போன்ற நாடுக ளில் இது காணப்படுகின்றது. ஆபிரிக்காவில் புலிகள் இல்லை. சிறுத்தையும், சிங்கமுமே உண்டு. ஆசியாவின் காடுகளில் சிறுத்தைப் புலி பரவலாகக் காணப்படுகின்றது. புலியும், சிங்கமும் ஒரே இடத்தில் வசிக்கமாட்டா. சிங்கம் வாழும் இந்தியாவின் கத்தியவார் காட் டிற்கும், புலி வாழும் கத்தியவார் மலைப் பகுதிக்குமிடையில் 160 கிலோ மீற்றர் இடைவெளி உண்டு. இரண்டும் சந்திக்க நேர்ந்தால் புலி சிங்கத்தைக் கொன்று விடும். மிரு கக் காட்சிச் சாலைகளிலும் இவை தூரத் தூரவே வைக்கப்படுகின்றன. எனினும் மனிதனின் பாதுகாப்பி லுள்ள புலியும், சிங்கமும் இனக் கலப்புச் செய்து புலிங்கம் எனப் பெய ரிடக்கூடிய குட்டிகள் கன்றுள்ளன. தமிழில்மரநாய், ஆங்கிலத்தில் போல் கற் (Polecat) எனப்படும் பிராணி நாயோ, பூனையோ அல்ல. இது வீசல் (Weasel) எனப்படும் மிரு தோர் பிராணியின் குடும்பத்தைச் சேர்ந்தது. இதன் விலங்கியற் பெயர் முஸ்ரெலா புற்றோரியஸ் (Mustella Putorius) ஆகும்.

மனிதர்களையும், பெரும் பாலான மிருகங்களையும் போல் பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தவை தமது முழுப் பாதத் தையும் நிலத்தில் பதித்து நடப் பதில்லை. இவை யாவும் தமது நுனி விரலில்தான் நடை பயி லுகின்றன. ஓடும்போது நடுத் தர வேகத்தில் குதிரையின் நடுத்த கதியில் செல்லுகின்றன. உச்ச வேகம் எடுத்தவுடன் பெரும் பாய்ச்சலில் இடத்தைக் கடக்கின்றன. ஒரு சிறந்த ஓட் டப் பந்தய வீரன் போல் நின்ற நிலையிலிருந்து தீவிர வேக மெடுப்பதற்கு இவை யாவற் றாலும் எளிதாகச் செயற்பட முடியும். தரைவாழ் விலங்கினங் களில் வேகங் கூடியது சிற்றா (Cheetah) எனப்படும் சிறுத்தை தான். இதன் உடல் நீளம் 4.5-5 அடியும், நிறை 100-140 இறாத்தலும் இருக்கும். மணி ஒன்றுக்கு 70 மைல் வேகத் தில் இது ஓடக்கூடியது. இந்த வேகத்தில் ஒரு மைலைக் கடந்த பின் சிறிதளவு வேகத்தைக் குறைத் துக் கொண்டு தொடர்ந்து ஓடும் ஆற்றல் இதற்குண்டு. இந்தியாவில் சிறுத்தைகள் பொறி வைத்துப் பிடிக்கப்பட்டு வேட்டைக்கு உதவு தற்குப் பழக்கப்படுகின்றன. சங்கிலி யால் பிணைக்கப்பட்டு வேட்டைக் குக் கூட்டிச் செல்லப்படும் போது சிறுத்தையின் தலை தடித்த கறுப்பு உறையால்மூடப்பட்டிருக்கும். பிராணி கள் தென்பட்டவுடன் உறை நீக்கப் பட்ட பின் சிறுத்தையை ஏவி விடு வார்கள். ஒரு நொடியில் அது தன் வேலையை முடித்து விடும்.

பூனைக் குடும்ப அங்கத்தவர் கள் யாவருக்கும் முன் கால்களில் ஐந்து விரல்களும், பின் கால்களில் நான்கு விரல்களும் உண்டு. ஒவ் வொரு விரலிலும் மிகக் கூரிய வளை நகங்கள் உண்டு. சிறுத்தை

ஒன்றைத் தவிர மற்றெல்லாவற்றிற்கும் இந்த நகத்தை உள்ளிழுத்து வைத்திருக்கவும் வேட்டைக்கும், மரமேறவும், பிறவுக்கும் தேவைப்படும் போது நீட்டவும் முடியும். சிறுத்தையின் கால்களும் தனி வித்தியாசப் பட்டவை. அதன் கால்கள் நான்கும் மெலிதாகவும், நீளமாகவும் இருக்கின்றன. அதன் நகங்கள் மறைத்து வைத்திருக்க முடியாமல் கனிஸ் (Canis) குடும்பத்து நாய்கள் போன்று எப்போதும் நிரந்தரமாக வெளியில் இருக்கின்றன. புலிக்கும், சிறுத்தைக்கும் ஓர் ஒற்றுமை இருக்கின்றது. இரண்டும் மரமேறமாட்டா. பூனைக் குடும்பத்தவர் பெரும்பாலும் இரவில் வேட்டையாடுவர். இதற்குச் சிறுத்தை விதிவிலக்காக அமைகின்றது. அது பகலில் இரை தேடும். புலி இரவில் இரைதேடி இரவில் தான் இரை உண்ணும். தப்பித் தவறிப் பகலில் கொன்று வீட்டால் இழுத்துச் சென்று மறைத்துவீட்டு இரவில் உண்ணும். தின்றது போக மீகுதி இருந்தால் அடுத்த நாள் உண்ணும்.

ஒரு வேளையில் புலி 30-38 கிலோ உணவைத் தின்னும். பொதுவாகப் பசி எடுத்தால் தான் புலி இரை தேடும். பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தவை வேட்டையாடி வயிறு முட்டத் தின்பதும், நன்றாகப் பசி எடுக்கும் வரை பட்டினி கிடப்பதுமாகத் தமது பொழுதைப் போக்குகின்றன. இது இயற்கையின் தற்காப்பு விதியாகும். மனிதரைப் போல் கிரமமாகப் பூனை இனம் உண்ணத் தொடங்கினால் காடு வெறிச்சோடிவிடும். வீட்டுப் பூனைகள் மனிதருடன் சேர்ந்து சற்றுக் கிரமமாக உண்ணுகின்றன. எனினும் சில வேளைகளில் அவை உண்ணாமல் கிடப்பதை அவதானிக்கலாம். இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த யாவற்றிற்கும் பெரிய கண்களும், ஆகக் குறைந்த ஒளியில் பார்க்கும் திறனும் உண்டு. மனிதர்களைப் போன்று நேர்ப் பார்வை உள்ள கண்களான படியால் கூடுதல் திறனுடன் இருக்கின்றன. பகல் வேட்டையாடும் சிறுத்தைக்கும் இத் தகைய கண்கள் உண்டு. அத்துடன் யாவற்றிற்கும் கூர்மையான காதும், மோப்ப சக்தியும் உண்டு. இவ்வினத்தின் நாக்கும் எலும்பிலிருந்து இறைச்சியை உரித்தெடுக்க அரம்போல கரடு முரடாக இருக்கின்றன.

சிங்கம் ஒன்றைவிடப் பூனை இனத்தைச் சேர்ந்தவை யாவும் வேட்டைக்குச் செல்லும் போது தனியாகவே வழி நடப்பர். சில வேளைகளில் 30 சிங்கங்கள் கூட ஒன்றாகச் சேர்ந்து வேட்டைக்குச் செல்வதை விலங்கியலாளர்கள் அவதானித்துள்ளனர். புலி வேட்டைக்குச் செல்லும்போது தனியாகவே செல்லும். குறிப்பிட்ட எல்லைக்குள் அது வேட்டையாடும். விலங்குகளிற் கிடையில் தேவையற்ற மோதல்களைத் தவிர்ப்பதற்காக இயற்கை அமைத்த இந்த ஒழுங்கு ''இரைக் களப்பகுதி'' எனப்படும். இது பட்சி இனங்கள் மத்தியிலும் இருப்பதாக அவதானிகள் தெரிவிக்கின்றனர். சில சமயங்களில் ஆண் புலி தனது துணையுடன் இரை வேட்டையாடும்போது ஆண்புலி ஒரு விலங்கைக் கொன்று விட்டால் பெண் புலி அந்த இரையைத் தொடாது. தான் வயிறார உண்டபின் எஞ்சியதைப் பெண்புலி தின்ன அது அனுமதிக்கும். சிறுத்தைப்புலி கூட்டமாக உலாவுவதைக் காட்டுக்குச் செல்வோர் கண்டுள்ளனர். ஆனால் சிறுத்தை இரை வேட்டைக்குச் செல்கையில் தனித்தே செல்லும். மரத்திலேறிக் குடும்பத்துடன் சிங்கம் சிரம பரிகாரம் செய்வதைப் பார்க்க வென்றே கென்யாவின் வனவிலங்குக் காப்பகங்களுக்குப் பயணிகள் செல்வர்.

சாதாரணமாகப் புலிகள் ஒரு தடவையில் இரண்டு அல்லது மூன்று குட்டிகள் வரை ஈனும். கற்ப காலம் 14-16 வாரங்கள் என்பதே கணக்கு. குட்டி போடும் போது தனியாக ஒதுக்குப் புறமாகத் தந்தையின் கண்ணில படாமல் பெண்புலி ஈனும். இல்லாவிட்டால் ஆண்புலி குட்டிகளைத் தின்றுவிடுமென்று சொல்லப்படுகின்றது. பிறக்கும் குட்டியின் நிறை 1.25 கிலோ தொடக்கம் 1.5 கிலோ வரை இருக்கும். தாய் குட்டிகளுக்கு இரண்டு மாதங்கள் வரை பால் கொடுக்கும். குட்டிகள் பசியினால் தாயைப் பிராண்டிக் கடிக்கும் போது தான் உண்ட பாதி செரித்த உணவைக் கக்கி குட்டிகளுக்கு உண்ணக் கொடுக்கும். குட்டிகளுக்கு மூன்று மாதம் ஆகும் போது தாய் தன்னுடன் வேட்டைக்குக் கூட்டிச் செல்லும். இரண்டரை வருடங்கள் வரை தாயின் அரவணைப்பு இருக்கும். இதன் பின் குட்டிகளைத் துரத்திவிடும். இச் சமயத்தில் அது இன்னுமொரு முறை குட்டி போடுவதற்குரிய உடல் நிலையில் இருக்கும்.

இனச் சேர்க்கை புரிய வேண்டும் என்ற எண்ணம் பெண் புலிக்கு வரும் போது அது ஒரு விதமான கர்ச்சனை ஒலி கிளப்பும். இந்தக் குரலொலி 2 கி.மீ சுற்றுக்குக் கேட்கும். இது ஒரு சுயம்வர அழைப்பு. இதையேற்று ஒன்றுக்கு மேற்பட்ட ஆண் புலிகள் அங்கு வரும் போது அவற்றிற் கிடையில் சண்டை மூளும். இதைப் பெண் புலி பார்த்தபடி இருக்கும். தோல்வி கண்ட ஆண்புலிகள் யாவும் விலகியபின் வெற்றி பெற்ற வேங்கை பெண் புலியை அணுகும். இரண்டின் மீசைகளும் ஒன்றை ஒன்று தொடும்போது பெண்புலி இணங்கி விட்டதாகப் பொருள் கொள்ளலாம். சேர்க்கைக்குப் பின் ஆண் புலி பெண் புலியின் பிடரியில் பலமாகப் பிராண்டிவிட்டு ஓட்டம் பிடித்துவிடும்.

சிறுகச் சிறுக உயிரினங்கள் சூழ்நிலைக்கும், தேவைக்கும் ஏற்ப உடற்பாங்கில் இன்றைய உருவத்தைப் பெற்றன என்பதே டார்வின் முன்வைத்த பரிணாமக் கொள்கையின் சாரம். இந்த மாற்றத்தைப் பூனைக் குடும்பத்திலும் குறிப்பாகப் புலிகளின் நெடிய வரலாற்றிலும் நாம் அவதானிக்கலாம். 3) மில்லியன் வருடங்களுக்கு முன்பே பூனைக் குடும்பம் ஊன் உண்ணிகள் மூலத்திலிருந்து பிரிந்து தனியொரு வகையாக வளரத் தொடங்கியுள்ளது. காலப் போக்கில் இவை இரண்டு பிரிவுகளாகப் பிரிந்துள்ளன. ஒன்று இன்றைய பூனைக் குடும்பமாக உருப்பெற்றுள்ளது. அடுத்து ஒரு மில்லியன் வருடங்களுக்கு

முன் பனிப்படலம் பூமியைக் கப்பிப் பிடித்த காலத்தில் முற்றாக அழிந்துள்ளது. அழிந்த மிருகத்தைத் தந்தப் பல்லிலுள்ள புலி என்று மண் அகழ்வுச் சான்றுகள் தெரிவிக்கின்றன. இந்த விலங்குகளுக்கு மேல் வாயில் இருபக்கமும் இரண்டு நீண்ட கூரிய குத்துக் கத்தி போன்ற வேட்டைப் பற்கள் இருந்துள்ளன. டார்வின் கூறிய இயற்கைத் தேர்வில் தேவையற்றவை தேய்ந்து மறையும், தேவையானவை வலுப்பெற்று வீரியும்.

இன்றைய பூனைக் குடும்பத்தில் காணப்படும் ஒவ்வொரு பிராணியும் வேட்டையாடும் இயந்திரம் என்னுமளவுக்கு விருத்தியடைந்துள்ளன. அதன் உடலின் கூறுகள் அத்தனையும் வேட்டையே குறியாகப் பூரண வளர்ச்சி பெற்றுள்ளன. புலியை எடுத்துக்கொண்டால் அதை ஒரு வேட்டைக்குரிய ஆயுதமாகவே நாம் கொள்ளலாம். அதன் வாயின் முற்பகுதியில் நான்கு கூரிய வேட்டைப் பற்கள் இருக்கின்றன. இவை கடித்துக் குதறுவதற்கும், கிழிப்பதற்கும் உதவுகின்றன. வாயினுள் தாடையின் இருபக்கமும் கத்திக் கூர்மையுள்ள பற்கள் காணப்படுகின்றன. இவைகத்தரிக்கோல் போன்று மேலும் கீழும் அசைந்து இடைப்பட்ட நரம்புதசை நார், வலுவான இறைச்சி யாவற்றையும் வெட்டித் துண்டுகளாக வயிற்றுப் பகுதிக்கு அனுப்புகின்றன. மனிதர்களுடைய வாய் போன்று புலியின் வாய் பக்கவாட்டில் அசைய இந்தக் கத்தரி போன்ற பற்கள் இடங் கொடா. ஆகவே அது தின்னும் இறைச்சி அரைபடாமல் துண்டுகளாகவே உட்செல்லுகின்றது. அதன் வயிற்றில் அதிசக்தி வாய்ந்த சமிபாட்டுத் திரவங்களும், அமிலங்களும் இருப்பதால் சமிபாடு எளிதில் நடைபெறுகின்றது. பற்கள் குறைவாக இருப்பதால் புலியின் தலை வட்டவடிவமாக இருக்கின்றது. நாய் போன்று வாய்ப்பகுதி நீண்டிருக்க இங்கு வாய்ப்பில்லை. இதே போன்று அதன் காதுகளும் சிறிதாகவும் வட்டவடிவாகவும் உரோமம் அடர்ந்ததாகவும் இருக்கின்றது. கண்ணின் கடைப்பகுதியிலிருந்து கருங்கோடு ஒன்று பின்நோக்கிச் சென்று அதன் பெரிய கண்களுக்கு அணி சேர்க்கின்றது.

புலியின் உடற்பருமனுக்கு மீதமிஞ்சிய மூளைப்பகுதி அதற்கு உண்டு. மிகவும் உயர்வான புத்திக் கூர்மையுடைய உயிரினத்தின் இலட்சணம் இதுவாகும். இது அதன் வேட்டைத் திறனில் தெற்றெனத் தெரிகிறது. பூனைக் குடும்பத்தைச் சேர்ந்தவையெல்லாம் ஓசைபடாமல் இரையைப் பின் தொடர்வதிலும், தருணம் வாய்த்தவுடன் பாய்ந்து இரையாக்குவதிலும் திறன் உள்ளவையாக இருக்கின்றன, வீட்டுப் பூனையின் உள்ளங்காலை ஒத்ததாகப் புலியின் பாதத்தின் கீழ்ப்பக்கமும் மென்மையாகவும் நெடுந்தூரம் அமைதியாக முன்னேறுவதற்கு ஏற்றதாகவும் இருக்கின்றன. இரை மேல் பாய்வதற்குச் சரியான நேரம் வரும் வரை பொறுமையாகக் காத்திருக்கப் புலிக்குத் தெரியும். உடற் பருமனை மிதமிஞ்சிய மூளையைப் போன்று அதன் தசை நார்களும் கூடுதல் வலுவுடன் இருக்கின்றன. இவை அதனுடைய எலும்புகளுடன் நேரடியாகப் பொருத்தப்பட்டுள்ளபடியால் திடீரென்று உடற்பாரத்தைத் தூக்கியபடி தூரம் பாய்வது எளிதாகின்றது. அதனுடைய எலும்புகளும் பாய்வதற்கும் பாய்ந்தபின் நிலத்தில் மீண்டும் ஆபத்தில்லாமல் இறங்குவதற்கும் ஏற்ற விதத்தில் அமைந்துள்ளன. எலும்புகள் ஒன்றோடொன்று இறுக்கமாகப் பொருத்தப்படாதபடியால் பாய்ச்சலுக்கு மிகவும் அனுகூலமாக இருக்கின்றது. பூனைக்குடும்பத்தினரின் தோலும் பாய்ச்சலுக்கு ஊதவ இறுக்கம் இல்லாமல் இருக்கின்றன.

புலியினுடைய பின் கால்கள் இரண்டும் நிலத்தில் உதைத்துக் கொண்டு மேலெழும்புவதற்கு ஏற்றதாகப் பலத்துடனும், தசைநார் போர்த்தபடியும் இருக்கின்றன. அத்துடன் அதனுடைய தோள் எலும்பும் தசை நாரும் நிலத்தில் இருக்கும் போது அதிர்ச்சி தாங்கிகளாகச் செயற்படுகின்றன. புலிப் பாய்ச்சலின் வேகமும், முன்னெச்சரிக்கை அற்ற திடீர்த் தாக்குதலும் அதன் வெற்றிக்கு அடிகோலுகின்றன. இத்திறமை பொதுவாக எல்லாப் பூனைக்குடும்பத்தினருக்கும் உண்டு. பூனைக் குடும்பத்தினருடைய உடலின் அடிப்பாகம் புவி ஈர்ப்புடன் போட்டியிடாமல் கீழ்நோக்கி இருக்கின்றன. இவற்றினுடைய வால் ஒடும்போது தளம்பலைத் தடுக்கின்றது. சமநிலையைப் பேணுவதற்கு உதவுகின்றது. இரையைப் பின் தொடரும் போதும், பாயும் நேரம் வரை காத்திருக்கும் போதும் இவ் வினத்தின் வால் மெதுவாக ஒரு சொடுக்குடன் அசைந்தபடியே இருக்கும். புலி முதற்கொண்டு இவையெல்லாம் இராப் பிராணிகளானபடியால் அவற்றின் போக்கு வரத்திற்கு முகத்து மீசை பேருதவி செய்கின்றது. அதனுடைய உணர்ச்சி நரம்புகளுடன் இந்த மீசை பொருத்தப்பட்டிருப்பதால் அதில் தட்டுப்படு பவை யாவும் உடனடியாக அதன் முனையில் பதியப்படுகின்றன. ஒரு நாடார் கருவிபோன்று அதன் மீசை செயற்படுகின்றது.

பூனைக் குடும்பத்தைச் சேர்ந்த தலையாவும் நீரில் நன்றாக நீந்தும் வழக்கம் உடையன. ஆதிகால எகிப்தியர்கள் வீட்டுப் பூனையை தெய்வமாகக் கொண்டாடிய செய்தியாம் அறிந்ததே. ஆனால் இதை எலி பிடிப்பதற்கும் நைல் நதியில்

மீன் பிடிப்பதற்கும் பழக்கி வைத் திருந்தனர் என்ற தகவலும் கிடைத் துள்ளது. புலிகள் நீண்ட தூரம் நீந்திச் செல்லும் தன்மை உடையன. நதியும் கடலும் சந்திக்கும் வங்காள தேசத்தின் சதுப்பு நிலங்களில் புலி மீன் பிடித்து உண்பதாக உயிரியல் நூல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் வீட்டுப் பூனைகளிற் சில நீரை வெறுத்து ஒதுக்குவதும் உண்டு. பூனைக் குடும்பத்து பிராணிகள் யாவும் சுத்தம் பேணுவதில் அக்கறை யாக இருக்கின்றன. முன்கால்கள் இரண்டாலும் முகத்தையும் உடம்பை யும் 'கழுவுவதையும்' நாக்கால் நக்கி உடலைச் சுத்தம் செய்வதை யும் நாம் அவதானிக்கலாம். இவை யாவும் நிலத்தில் உள்ளவையாகும். வீட்டுப் பூனைகள் சில சமயம் விதி விலக்காக வீட்டை அசுத்தப்படுத் துவதுண்டு.

பூனைக் குடும்பத்தில் பெரிய தும், உயர் தாக்குதல் திறன் உள்ள துமாகப் புலி இருக்கும்போது வனத் திற்கும் அங்குள்ள உயிரினங்களுக் கும் சிங்கத்தை இராசாவாகவைப் பதின் காரணம் யாது? அதனுடைய ஒங்கார ஒலியே காரணம் என்று பார்வையாளர்கள் தெரிவிக்கின் றனர். அத்துடன் ஆபிரிக்கா வாழ் ஆண்சிங்கத்தின் கழுத்து, பிடரி, முதுகு ஆகிய பாகங்கள் நீண்ட உரோமம் அடர்ந்ததாகவும் இருக்கின் றன. இந்த அணிகலனுடன் அது நேராகப் பார்க்கும் போது இராஜ பார்வை தென்படுவதாகக் கருத இடமுண்டு. இதனால் தான் உலகின் பல முடிதரித்த மன்னர்கள் தம்மைச் சிங்கமாக சித்திரித்துள்ளனர். எனினும் மூவேந்தரில் தலையாய சோழன் இதில் மயங்காது புலியைத் தான் தன் கொடியில் தூக்கி வைத்துள்ளான்.

●

புயல் விசுமா?



ஒரிகொன் சயன்ரிபிக் இன்கோர்ப்பரேசன் என்ற பெயர் கொண்ட போட்லண்டில் உள்ள நிறுவனம் உள்ளூர் பருவ நிலையைப் பற்றி எப்போதும் குறிகாட்டும் வீட்டுப் பாவனை பராமானி (Barameter) ஒன்றை சந்தைக்கு விட்டுள்ளனர். அதில் இலகுவில் விளங்கிக் கொள்ளக் கூடிய விதமாக 4 வரிசை திரவப் பளிங்குக் குறி காட்டித் திரை ஒன்று உள்ளது. அதில் தொலைக்காட்சி அடையாளங்கள் மூலம் கடும் வெயில், ஓரளவான வெயில், மேக மூட்டமான நிலை அல்லது கடும் மழையும், காற்றும் என்ற எந்தப் பருவ நிலை எதிர் வரும் 24 மணி நேரத்தில் நிலவப் போகிறது என்பதை வீட்டில் இருந்து கொண்டே ஒருவர் அறிந்து கொள்ள முடியும். ஆகையால் வானொலி அல்லது தொலைக்காட்சியில் அறிவிக்கப்படும் பொதுவான பருவ நிலை அறிக்கையை நம்பி வெளியில் இறங்கி எதிர்பாராது பருவநிலை மாற்றங்களால் தடுமாறாமல் கடைசி நிமிடம் வரையிலான உள்ளூர்ப் பருவ நிலையை அறிந்து கொண்டு திட்டமிட்டுச் செயலாற்றலாம். அது வெளிப்படுத்தும் பருவ நிலை எதிர்வு கூறல்கள் எதிரில் வரும் 12 முதல் 24 மணி நேரத்திற்குள் 75% அளவு சரியானவையாக அமைகின்றனவாம். மழை ஏதும் தூறப் போகிறதெனில் அந்தச் சாதனத்தில் குறியீடு அதனைக் காட்டுவதுடன் பாவனையாளர் அத்தகவலைக் கவனத்திற் கொள்ளும் வரை பீப் பீப் என்று ஒலியெழுப்புமாம். அப்போது பாவனையாளர் அதனை அமுக்கி ஒன்றை அழுத்தி மௌனமுறச் செய்ய முடியும். அதில் உள்ள வேறு அம்சங்கள் வீட்டிற்கு உள்ளேயும், வெளியேயும் நிலவும் வெப்ப நிலையை பரனைட் செல்சியஸ் ஆகிய இரு அளவுகளிலும் காட்டுவதும் நாட் காட்டியுடனான விழிப்பொலி எழுப்பும் மணிக்கூடும் ஆகும். 7 அங்குலம் X 1 அங்குலம் X 4 அங்குலம் அளவிலான அந்தச் சாதனம் 4 AAA மின்கலங்களின் வலுவால் இயங்குகிறது. மேசையில் வைப்பதற்கு ஏற்ற சார்த்தியும், சுவரில் தொங்கவிடக் கூடிய கொழுக்கியும் அதில் உள்ளன. அதனை வாங்கிப் பாவிக்கத் தொடங்கிய பின்பு உரிய உள்ளூர்ப் பருவ நிலைக்கு அது தன்னைப் பழக்கப்படுத்திக் கொள்ள 24 மணி நேர அளவு காலம் செல்லுமாம். விலை: 90 டொலர்.

புதுவகை மதக்குழு ஒன்றில் நிகழ்ந்த பல பயங்கரப் படுகொலைகள்

எழுதியவர் :
மிக்கேல் எஸ். சேர்றில்

சோலார் ரெம்பிள் (Solar Temple - சூரியக் கோயில்) என்பது சுவிற்சர்லாந்திலும், கனடாவிலும் உள்ள ஒரு புதுவகை மதக்குழுவாகும். துயரங்களின் ஊடாக மீட்சி அடையலாம் என்று நம்பும் ஒருவகை மாயாவாதத்தை அந்த மதம் போதிக்கிறது.

சென்ற ஒக்ரோபர் மாதத்தின் முற்பகுதியில் அந்த மதக்குழுவைச் சேர்ந்த நம்பிக்கையாளர்கள் அதன் ஆன்மீகத் தலைவர் ஜொவ்ரட் 46, ஆன்மீகத் துணைத் தலைவர் ஜோப் மம்புறோ 70, குறைந்தது ஐந்து குழந்தைகள் ஆகியோர் உட்பட 53 பேர் சுவிற்சர்லாந்திலும், கனடாவிலும் ஆட்கொலையும்- தற்கொலையுமான விதத்தில் கொலையுண்டு இடந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பொலிசாரால் 2 சந்தேகநபர்களைத் தேடி உலகெங்கும் வலைவிரித்து உள்ளதுடன் பல்வேறு இடங்களில் இருந்தும் அந்த மதக்குழு அதனைப் பின்வருவோரை ஏமாற்றி அவர்களுடைய காசை எல்லாம் கறந்து எடுத்த பின்பு கொன்றொழிப்பதில் ஈடுபட்டு வந்துள்ளது என்று அறிக்கை கிடைக்கிறது.

அந்தப் பெருந்தொகைக் கொலைகளைத் தொடர்ந்து பல தற்கொலைகளும் நடந்திருக்க வேண்டும் என்று சுவிற்சர்லாந்திலும், கனடாவிலும் உள்ள பொலிசார் நம்புகின்றனர். சைரே நாட்டில் பிறந்த ஒரு பெல்ஜியக் காரரான ஜொவ்ரட்டும், பிரேஞ்சுக் கனேடியரான மம்புறோவும் உடல்கள் கருகிய நிலையில் இறந்து கிடந்த போதும் அவர்களுடைய பல்வரிசை அமைப்புக் குறிக்கோளைக் கொண்டு சடலங்களின் ஆள் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவர்கள் இருவரும் தற்கொலை செய்து கொண்டு உள்ளனர் என்று கூறக்கூடியதாக உள்ளது. அந்தக் கொலைகள் நடத்தப்பட்ட இடங்களில் பெற்றோலியம், யுரேன் வாயு என்பன கொண்ட கொள்கலன்கள் வைக்கப்பட்டு அமைப்பு வந்து தொலைபேசி இயக்கத் தொடங்கிய உடனே செயற்படக்கூடியதாக அதில் பொருத்தப்பட்ட பொறி வெடிவெடித்துத் தீ பற்றும் விதமாக ஒழுங்கு செய்து வைக்கப்பட்டுள்ளது.

சுவிற்சர்லாந்தின் தலைநகர் ஜெனீவாவுக்குக் கிழக்கே கிரஞ்சஸ்-சல்வான் என்ற பனிச்சறுக்கல் விளையாட்டுக் கிராமத்தில் உள்ள எரியுண்ட நிலையில் கிடக்கும் மூன்று தங்குமடங்களில் இருந்து 25 சடலங்களும், கனடாவில் மொன்றியல் நகருக்கு மேற்கே உள்ள சியறி என்ற கிராமத்தில் பண்ணைக் கட்டடம் ஒன்றில் 23 சடலங்களும் மொன்றியலுக்கு வடக்கே உள்ள ஓர் இடத்தில் 5 சடலங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

அந்த மர்மப் படுகொலை பற்றிய விசாரணைகளில் ஈடுபட்ட ஐரோப்பா, வட அமெரிக்கா, அவுஸ்திரேலியா ஆகிய மூன்று கண்டங்களைச் சேர்ந்த பொலிசாருக்குக் கிடைத்துள்ள சான்றுகளின் படி சியறியில் கொலையுண்டவர்களில் அனேகர் சுடப்பட்டுள்ளனர். அவர்களைக் கொன்ற கொலைஞன் அல்லதுகொலைஞர்கள் அதன் பின்பு கிரஞ்சஸ்-சூர்-சல்வானுக்குச் சென்றுள்ளனர்.

'சியறியில் காணப்பட்டசில சடலங்களின் தலைகளில் வெடி வைக்கப் பட்டுக் இடந்ததுடன், ஏலவற்றின் தலைகளில் எட்டுச் சூடுகள் வரை நடத்தப் பட்ட காயங்கள் காணப்பட்டன' என்று லுஷேன் பல்கலைக் கழக சட்டவைத்திய நிபுணர் பிரேத பரிசோதனை நடத்திய பின்பு கூறினார். மேலும் அவர்; '' அதனால் அந்த இறப்புகள் தற்கொலையால் ஆனவை என்றுகூற முடியாது; உள்



அந்த மதக்குழுவை ஆரம்பித்த முன்னாள் ஜேர்மன் நாஸி இரகசியப்படை கெஸ்டபோவின் ஓர் அதிகாரியான ஜூலியன் ஒரிகாஸ் இறந்தபோது 1993 இல் ஜெவராட் (வலது மூலையில் நிற்பவர்) புனித ஜெரூசலத்தில் முன்னாள் மதக் காவல் வீரருக்கு உரிய சிலுவை அடையாளம் பொறித்த மத உடையில் பிரேத அடக்கச் சடங்கை நடத்துகிறார்.

ளது '' என்றும் கூறினார். சியறியில் கொலை நடந்த இடத்தில் இருந்து பொலிசார் 52 வெற்றுத் தோட்டாக் கவசங்களைக் கண்டெடுத்துள்ளனர். அதன் பின்பு கிரஞ்சஸ்-சூர்-சல்வானில் -22 கலிபர் பிஸ்ரல் ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. சுவிற்சர்லாந்தில் கொலைகள் நடைபெற்றதற்கு ஐந்து நாள்களுக்கு முன்பு தான் கியூபெக்கில் இறந்து கிடந்த ஐந்து பேரில் மூவர் கூராயுதத்தால் குத்திக் கொல்லப்பட்டிருக்கின்றனர் என்றும், அப்படிச் செய்தவர்கள் தான் கிரஞ்சஸ்-சூர்-சல்வானுக்கு வந்து தம்மைத்தாமே தற் கொலை செய்திருக்க வேண்டும் என்றும் கனேடியப் பொலிசார் நம்புகின்றனர்.

இந்தப் பல கொலைகள் ஏன் நடத்தப்பட்டன என்பதை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது. பிரான்சில் வெளிவரும் லே மொண்ட் என்ற தினசரி, டி மம்புறோவினதும், அவருடைய மனைவியான பிரெஞ்சுக் காரியான ஜெகோவினதும் கடவுச் சீட்டுக்கள் அவர்கள் இறப்பதற்கு 5 நாள்களுக்கு முன்பு பிரெஞ்சு உள்நாட்டு அமைச்சர் சார்ள்ஸ் பாஸ்குவாவுக்குத் தபாலில் வந்து கிடைத்ததாகச் செய்தி வெளியிட்டுள்ளது. அத்துடனான அன்பார்ந்த சார்ளி என்று தொடங்கப்பட்ட கடிதத்தின் பிரதி ஒன்றும் லேமொண்டுக்குக் கிடைத்துள்ளது. அதன்படி பரிசில் இருந்து கிடைக்கப் பெற்ற அறிவித்தல் ஒன்றின் படி ஒற்றாவாவில் உள்ள பிரெஞ்சுத் தூதரகம் சென்ற ஆண்டில் ஜெசேலினின் கடவுச்சீட்டை புதுப்பிக்க மறுத்துள்ளது என்று அறியக் கிடக்கிறது. ஆனால் பிரெஞ்சு அமைச்சர், '' பாஸ்குவா சோலார் ரெம்பிளை தாங்கொணாத் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கி அழிக்க முனைவதால் நாங்கள் இந்தப் பூவுலகை விட்டுச் சென்றுவிடத் தீர்மானித்து விட்டோம் '' என்று மம்புறோ அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளாராம்.

சோலார் ரெம்பிளிடம் இருந்து உலகில் பல பாகங்களிலும் உள்ள 300 -க்கு மேற்பட்ட தனி நபர்களுக்கும், அமைப்புக்களுக்கும் பிரசுரங்கள் தபாலில் அனுப்பப்பட்டு வந்துள்ளனவாம். அவருடைய தந்தையார் பிரான்சில் மிக்க பிரபல்யம் பெற்ற பனிச்சறுக்கு வீரர்களில் ஒருவராவார். அந்த வயாநட் இப்பொழுது சுவிற்சர்லாந்தில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளான். சோலார் ரெம்பிளுக்கு மதம் மாறிய பெரிய இடத்துத் தொடர்பு உள்ளவர்களில் பலர் தங்கள் சொத்தை எல்லாம் அதற்குத் தாரை வார்த்துக் கொடுத்துள்ளார்களாம்.

அந்த மதக் குழு தன்னிடத்தே 93 மில்லியன் டொலருக்கு மேற்பட்ட பணத்தைக் கொடுத்துள்ளதாம். இந்தப் பணத்திலிருந்தே ஜொவ்ரட்டும், மம்புறோவும் பெரும் படாடோபமாக வாழ்ந்து மேற்கு ஐரோப்பாவிலும், கனடாவிலும் வீடுகள் வாங்கி வைத்துக் கொண்டனர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவருகின்றன. அத்தகைய ஐந்து வீடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அவற்றில் சுவிற்சர்லாந்தின் மொன்றோவில் உள்ள தொடர்மாடி மனை ஒன்றிலும் பிரான்சில் அவினோ என்ற இடத்தில் உள்ள தனி வீடொன்றிலும் தீ பற்றிக் கொள்ளக்கூடிய விதமாகப் பொறி வைக்கப்பட்டிருந்ததாம்.

ஜெராட்டும், மம்புறோவும் கள்ளமாகத் துப்பாக்கி விற்பதிலும் கப்பம் கேட்டுக் காசு கறப்பதிலும் ஈடுபட்டனரா என்று சுவிஸ், பிரெஞ்சு, கனேடியப் பொலிசார் விசாரணைகள் மேற் கொண்டனர். ஜெராட் தன்னைப் பின் பற்றுவோரை வெளிப்படையாகவே உலகின் இறுதியை எதிர்கொள்ள ஆயத்தமாக ஆயுதங்களைச் சேர்க்கும்படி கோரியுள்ளார். அதே போல் 1993 ஆம் ஆண்டில் அவர்கள் கனடாவின் சட்டத்திற்கு மாறாக ஆயுதம் வைத்திருந்த குற்றச்சாட்டுக் குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

அவுஸ்திரேலியாவில் சோலார் ரெம்பிள் தலைவர்கள் ஆயுதங்களையும், வெடிப் பொருள்களையும் வாங்கி மூன்றாம் உலக நாடுகளுக்கு விற்றிருக்கக்கூடும் என்று சந்தேகப்பட்டதால் அது பற்றிய விசாரணைகள் மேற்கொண்ட அவுஸ்திரேலியப் பொலிசார் அப்படி நடந்திருக்கக் கூடிய சாத்தியங்கள் இல்லை என்று கூறுகின்றனர்.

1980 களின் நடுப்பகுதியில் இருந்து மம்புறோ பல முறை அவுஸ்திரேலியாவுக்கு வருகை தந்துள்ளார். அவுஸ்திரேலியப் பழங்குடி மக்கள் வாழும் பாலைவனப் பிரதேசம் ஒன்றில் உள்ள உலூறு-கடாடஜூடா தேசியப் பூங்காவில் நடப்பட்டுள்ள அயர்ஸ் றொக் என்ற கற்றாணைக்கண்டு மம்புறோ '' அதனிடம் உள்ள மாயா சக்தி '' தான் தன்னை அவுஸ்திரேலியாவுக்கு ஈர்த்ததாகத் தம்மைத் தெரிந்தவர்களிடம் கூறியுள்ளாராம். அவர் அதனடியில் மதப் பூசை ஒன்று நடத்த விண்ணப்பம் செய்திருந்தாலும்; அதனை ஒரு புனிதச் சின்னமாக மதிக்கும் பழங்குடி மக்களே அதற்குப் பொறுப்பாக உள்ளவர்கள் என்பதால் அவர்கள் அனுமதி மறுத்து விட்டார்களாம்.

சிறிய கணனிக் குறிப்பேடு

சாதாரணமாகப் பெரிய அளவு குறிப்பேடு (Note Book), ரக்கக் கணனிகளிற் காணப்படும் சகல அம்சங்களும் உள்ள சிறியளவு குறிப்பேடு, ரக்கக் கணனி யொன்று அமெரிக்காவின் புகழ்பூத்த ஐ. பீ. எம் கணனி நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டுள்ளது. 7.4 அங்குல கறுப்பு வெள்ளை திரைத் தீரை இதிற் பொருத்தப் பட்டுள்ளது. இப் பொறியின் மேலும் 50 மெகா கேட்ஸ் (Megahertz) சொற் கோர்வைச் செய்முறையும் (Word Processor) பொருத்தப் பட்டுள்ளது. அத்துடன் 170 மெகாபைற் (Megabyte hard drive) இனையும் கொண்டுள்ளது. 3.8 இறாத்தல் நிறையுள்ள இதன் விலையோ, 2000 டொலர்.

பிரபஞ்சத்தின் வயது என்ன வென்பது தெரியுமா? மார்க்கண்டேயர் போல் என்றும் பதினாறு.

-(பிழையான மறுமொழி)

வோஷிங்ரனிலிருந்து
எழுதியவர்கள்:
மைக்கல் டி. லெமோனிக்
டிக் தொம்சன்

வயது என்பது மிக முக்கிய மான விடயமாகும். இந்தப் பூமியில் எல்லாவற்றிற்கும் ஒரு வயதுண்டு. மனிதன், மரம், மண்டபம் என எதற்கும் ஒரு வயதுண்டு. இதே போன்று இந்தப் பிரபஞ்சத்திற்கும் ஒரு வயதுண்டு.

ஆனாலும் இந்தப் பிரபஞ் சத்தின் தோற்றம் பற்றி ஆராயும் விஞ்ஞானிகள் (Cosmologist) பல தசாப்தங்க ளாக அதனுடைய வயதை ஆணி அடித்தாற் போல் சரியாகக் கூறு கிறார்கள் இல்லை. அண்ணள வாக 7 பில்லியனுக்கும் (7, 00, 00 இலட்சம்) 20 பில்லியனுக்கும் (20, 00, 00 இலட்சம்) இடைப் பட்ட வருடங்கள் இருக்கும் என் கிறார்கள். இது தசங்களில் தமது அளவுகளைக் குறிப்பிட விரும்பும் விஞ்ஞான உலகில் ஓர் அவமான மாகவே கருதப்படுகின்றது. ஆனால் நிலைமை இன்னும் மோச மாகவே இருக்கின்றது. ஏனெனில் மிக அண்மையில் அளவீடு செய்யப்

தமிழில்:
டாக்டர் எஸ். பி. ஆர். சர்மாறன்

பட்ட பிரபஞ்சத்தின் வயது ஒரு நட்சத்திரத்தினுடைய வயதை விடக் குறைவாக இருக்கின்றது.

சொர்க்கத்திலும் வயதுப் பிரச்சனை

பிரபஞ்சத்தைப் பற்றிய ஹபிள் தொலைக் காட்டியின் கண்டுபிடிப்புக்களும், பௌதிக கொள்கைகளும் கேள்விக்குறியாகியுள்ளன.

உதாரணமாக 6 பில்லியன் (6, 00, 00 இலட்சம்) வருடத் திற்கு முந்திய ஆதிகாலத்து விலங் கொன்றின் எலும்புக்கூடு கைவசம் இருக்கின்ற போது பூமியின் வயது 4.5 பில்லியன் (45, 000 இலட்சம்) வருடங்கள் எனக் கூறுகின்றனர்.

நட்சத்திரங்களை விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் கார்னெஜி நிலையத்தின் (The Carnegie observatories) வென்டி பிரீட்மன் ஹபிள் விண்வெளித் தொலைக் காட்டியின் (Hubble Space Telescope) உதவியுடன் பிரபஞ் சத்தின் வயது 8 பில்லியன் (8, 00, 00 இலட்சம்) வருடங்கள் எனக் கணித்துள்ளார்கள். ஆனால் அரிசோனா மாநிலத்தின் டக்ஸன் நகரிலுள்ள நட்சத்திரங் களின் அசைவுகளைக் கண்காணிக் கும் தேசிய ஒப்ரிக்கல் அஸ்ற் றோனோமி ஒப்சவேற்றரியின் (National Optical Astronomy Observatories) ஜோர்ஜ் ஜக்கோபி சில நட்சத்திரங்களின் வயது 16 பில்லியன் (16, 00, 00 இலட்சம்) வருடங்கள் எனக் கணக்கிட்டிருப் பதால் 'பிரபஞ்சத்தைப் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சி தற்போது மிகவும் இக்கட்டான நிலையில் இருப்பதாக'க் கூறுகிறார்கள்.

பிரபஞ்சத்தில் உலா வரும் கோள்கள் பற்றிய விஞ்ஞானத்தில் அது வரையில் மங்கலாகத் தெரிந்த ஹபிள் தொலைக்காட்டி யைச் சரி செய்ததிலிருந்து சில அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. சூமேக்கர்-லெவி 9 (Comet Shoemaker Levy) வால் நட்சத்திரம் வியாழனுடன் மோதியதை மிகத் தெளிவாகப் படமெடுத்தது.

தற்போது இதனுடைய தலையாய பணி இந்த அடி நுனி தெரியாத அகிலத்தின் வயதைக் கண்டுபிடிப்பதாகும். மேலும் இதனுடைய இயற்கையான இறுதி முடிவையும் காண்பதாகும். ஹபிள் தொலைநோக்கி தனது இறுதிக் கண்டுபிடிப்புக்களின் படி இந்தப் பிரபஞ்சத்தின் வயது 8 பில்லியன் (8,00,00 இலட்சம்) ற்கும் 12 பில்லியனுக்கும் (12,00,00 இலட்சம்) இடைப்பட்ட ஆண்டுகள் என்கின்றது. ஆனாலும் சில நட்சத்திரங்களின் வயது 16 பில்லியன் (16,00,00 இலட்சம்) வருடங்களாக இருக்க வேண்டும் என நம்பப்படுகின்றது. இந்தப் புதிய கண்டுபிடிப்பு குழப்பத்தை ஏற்படுத்துகின்றது. கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கிரக ஆய்வாளரான அலெக்ஸி பிலிப்பென்கோ, ''இது மிகவும் அற்புதமான சமாச்சாரம். இது கோள்கள் பற்றிய விஞ்ஞான ஆய்வில் ஒரு புரட்சியை ஏற்படுத்தப் போகின்றது'' என்கிறார்.

ஆய்வுக்குழு பிரபஞ்சத்தின் வயதை அளவிட ஒரு மறைமுகமான முறையைப் பயன்படுத்தியது. முதலில் ஆகவும் தூரத்திலுள்ள சுதந்திரமாகவுள்ள கிரகங்களின் அமைப்பான (Victro Cluster) விக்ரோ தொகுதியின் தூரத்தைக் கணிப்பீடு செய்தார்கள். பின்னர் முதன் முதலாக ஹபிளினால் 1920 இல் கண்டு பிடிக்கப்பட்ட பிரபஞ்சம் விரிவடைகின்ற வேகத்தின் அளவைக் கண்டு பிடித்தார்கள். இது எமது பிரபஞ்சத்திலிருந்து இன்னொரு பிரபஞ்சத்துக்கான இடை வெளியைக் கணக்கிடுவதன் மூலம் பெறப்படும். பின்னர் விஞ்ஞானிகள் வெளிச்சம் தெரிகின்ற செஃபீட் (Cepheid) என்கின்ற நட்சத்திரக் கூட்டத்தைத் தெரிவு செய்து அதன் தூரத்தை அளவீடு செய்தார்கள். இதன் படி பிரபஞ்சத்தின் வயது 12 பில்லியன்கள் (1,200,00 இலட்சம்) வருடங்கள் எனக் கணகிட்டுள்ளார்கள்.

பிரபஞ்சம் பெருகிக் கொண்டே போகின்றது என 1929 இல் எட்வின் ஹபிள் கண்டு பிடித்ததிலிருந்து பிரபஞ்சமானது பெரிய தொரு வெடிப்புடன் தோன்றியிருக்க வேண்டுமெனக் கருதுகின்றார்கள். எனவே அந்தத் தகர்ப்பு ஏறக்குறைய 7–20 பில்லியன் (7,00,00–20,00,00 இலட்சம்) வருடங்களுக் கிடையில் ஏற்பட்டிருக்கலாம் என கணித்திருக்கின்றார்கள். அமெரிக்காவின் இன்டியானா பல்கலைக்கழகத்தில் (Indiana University) மைக்கல் பியர்ஸ் தலைமையில் ஆறு விண்வெளி விஞ்ஞானிகள் வேர்கோ (Virgo) நட்சத்திர மண்டலத்தில் ஏற்பட்ட தகர்ப்புக்களை அவதானித்ததன் அடிப்படையில் பிரபஞ்சத்தின் வயது 7.2 பில்லியன் (72,000 இலட்சம்) என கணிப்பீடு செய்துள்ளனர்.

பிரபஞ்சத்தின் வயதைப் பற்றிய குழப்பம் தொடர்கின்றது. பிரபஞ்சமானது ஒரு குறிப்பிட்ட மாறாத (Cosmological Constant) இடை வெளியிலேயே பிரிகின்றது என்கின்ற எடுகோளினை முன் வைத்த பிரபல்யமான ஜேர்மன் விஞ்ஞானி [illegible]றைன் இதுவே 'தன்னுடைய வாழ்நாளின் மிக மோசமான யோசனை' எனக் குறிப்பிட்டுள்ளார்.

''எங்களுடைய எடுகோள்களைத் திணிப்பதல்ல எமது நோக்கம், இயற்கை என்ன சொல்லுகின்றதோ அதனைக் கேட்கவே நாங்கள் இருக்கின்றோம்'' என்கின்றார் பிரிட்டிஷ் கொலம்பியாவில் இருக்கின்ற டொமினியன் பிரபஞ்ச கண்காணிப்பு நிலையத்தின் (Dominian Astrophysical Observatory) விண்வெளி ஆய்வாளரான சிட்னி லண்டன் பேர்க். ஆனால் பிரபஞ்சமானது ஆதி அந்தம் இல்லாத அண்டத்தினுள் பெருகிக் கொண்டே போவது மட்டும் உண்மை,' என்கிறார்கள்.

இந்த வயதுப் பிரச்சனைக்கு இன்றைக்கு, நாளைக்கு தீர்வு எதிர்பார்க்காதீர்கள்; ஏனெனில் இந்த ஆராய்ச்சியில் ஏற்கனவே இருள் சூழ்ந்திருக்கின்றது; அவநம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. ஆனாலும் உண்மையான வெளிச்சத்தைக் காண முன் இருளினூடாக இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியிருக்கின்றது என்கின்றார்கள் பிரபஞ்ச ஆய்வாளர்கள். பொறுத்திருந்து பார்ப்போம்.

ரைம் நவம்பர் 7, 1994

★

புழுதி மண்ணின் மீது கட்டடங்கள் எழுப்பலாம்

பலவீனமான புழுதி மண்ணில் அமைக்கப்படுகின்ற பல மான கட்டடங்கள் கூட கடதாசி அட்டைகளில் கட்டப்படும் வீடுகள் போல ஆகிவிடக் கூடும். ஆனால் ஜோர்ஜியாவில் தொழில் நுட்பவியலாளர்கள் புழுதி மண்ணைக் கூடப் பாறைகளைப் போன்று பலமிக்கவையாக்கக்கூடிய ஒரு தந்திரோபாயத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

அதிகூடிய வெப்ப சக்தியை வெளியிடுகின்ற பிளாஸ்மா மின்சூள் (Torch) ஒன்றின் ஒளியைப் பாய்ச்சுவதன் மூலம் எத்தகைய புழுதி மண்ணும் கெட்டிப்படுத்தப்பட்டு விடலாம் என்று இப் பொறியியலாளர்கள் நம்புகின்றனர். சூரியனின் மேற்பரப்புக்குச் சமமான வெப்பத்தைக் கக்கும் இம் மின்சூள் மின்சாரத்தில் இயங்குகிறது. இதனைப் பயன்படுத்தும்போது பூமிக்குக் கீழேயுள்ள கட்டுமானங்களில் கூட தாக்கம் ஏற்படுகிறது.

அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின்போது பிளாஸ்மா வெப்பச் சூளினால் சுடப்பட்டபோது புதியமண் உருகிக் கெட்டியாக்கப்பட்டு கண்ணாடி போன்ற திண்ம உருவைப் பெற்றிருக்கிறது அவதானிக்கப்பட்டுள்ளது. சற்றுத் தூரத்தில் இருந்த புழுதி மண் செங்கற்கள் போல வைரத்தைப் பெற்றிருப்பது அவதானிக்கப் பட்டிருக்கிறது.

வாழ்க்கை வசதிகளும் குற்றத் தடுப்பில்

தமிழில் :
கலாநிதி கு. சோமஸ்கந்தன்

வீடு, விடுதி, மனை என்பன நாம் உண்டு, உறங்கி வாழுமிடத்தைக் குறிக்கும். எமது நிதி வசதிக் கேற்ப எமது வீடும், பொருளும் அமைகின்றன. எமது வாழ்வின் அமைதியைக் கெடுப்பன வற்றில் திருடர் பயம் முதன்மையானது. சுவர் எழுப்பி, பூட்டுகள் பொருத்தி, காவலரையும் நியமிக்கிறோம். தேவாலயம் போனாலும் கோபுர வாயிலில் விட்ட சாலணி, மிதிவண்டி ஆகியவை நினைவாய் இருக்கிறோம். இறைவனின் பெறுமதிமிக்க சொத்துக்கள் திருடப்படுவதைத் தினசரி மூலம் அறிகின்றோம்.

நாட்டின் முழு வருவாய்த் தொகை உயர, கொலை, களவு போன்ற குற்றச் செயல்கள் குறையுமென்பதெல்லாம் பொய். வருவாய்ச் சிறப்புமிக்க அமெரிக்காவில் இவை இரண்டும் உச்சத்தில் இருக்கின்றன. அமெரிக்கர்கள் தமது வீட்டையும், காரையும் நேசிக்கிறார்கள். வீட்டுக் களவுக்கு அடுத்த படியாகக் கார்த் திருட்டு இடம் பிடித்துள்ளது. எமது நாட்டில் நடக்கும் மிதிவண்டித் திருட்டுடன் இதை ஒப்பிடலாம். வீடுகளுக்குள் புகுந்து திருடுவதுடன், பாலியல் வன்முறை, வெறும் பலாத்காரம் ஆகியவற்றையும் திருடர்கள் நடத்தி வைக்கிறார்கள்.

வீட்டுக்குள் நுழையும் திருடனுக்கு அமெரிக்கர்கள் அஞ்சுகிறார்கள். இதைத் தடுப்பதற்காகப் பல வேறு கருவிகளைப் பெரும் பணச் செலவில் வாங்கித் தமது வீட்டில் பொருத்துகிறார்கள். தேசிய மட்டத்தில் எடுக்கப்பட்ட கணக்கின் படி அமெரிக்காவில் 55 மில்லியன் தனியார் வீடுகள் காணப்படுகின்றன. நாடளாவிய திருட்டுக்களின் முழுத்தொகையில் மூன்றில் இரண்டு தனியார் வீடுகளைப் பாதிக்கின்றன. வருடமொன்றுக்கு 10 மில்லியன் வீடுகளில் பாரிய திருட்டுக்கள் நடப்பதாகக் காவல் துறை அறிக்கை தெரிவிக்கிறது. ஒவ்வொரு வீட்டுச் சொந்தக்காரருக்கும் 1,280 டொலர் சராசரி நட்டம் ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 70 சத வீதத் திருட்டுக்கள் கதவுப்பூட்டுப் போன்றவற்றை உடைத்த பின் நடத்தப்படுகின்றன.

வீடுகளுக்குப் பாதுகாப்புத் தரவல்ல பலதரப்பட்ட கருவிகளைத் தயாரிப்பதில் அமெரிக்கத் தொழில் நுட்பமும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக விஞ்ஞானபூர்வமான ஆய்வுகளும் நடந்தபடியே இருக்கின்றன. விண்வெளித் திட்டங்கள் போன்று இங்குமொரு வேகமான ஈடுபாடு காணப்படுகின்றது. ஆனால் காவல்துறை அறிக்கைகள் 100 சத வீதம் Noolaham Foundation திருட்டைத் தடுக்கும் கருவிகள் இதுவரையில் தயாரிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கின்றன. உங்கள் வீட்டில் பொருத்தப்பட்ட கருவிகள் உங்கள் பாதுகாப்பிற்குப் போதுமென்று திருப்திப்படாதீர்கள்; நீங்கள் உசாராய் இருப்பது மிகவும் அவசியம் என்று அமெரிக்கக் காவல்துறை பரிவுடன் வேண்டுகிறது.

மேலைத் தேசங்களில் அமெரிக்கா உட்பட கடின உழைப்பிலிருந்து சிறிது ஓய்வுபெற வருடத்தில் ஒரு முறை குடும்பசகிதமாக வெளியூருக்கு அல்லது வெளிநாட்டிற்கு உல்லாசப் பயணம் போகும் வழக்கம் உண்டு. இக் காலத்தில் அவர்களுடைய வாழும் மனை தனித்திருப்பது தவிர்க்க முடியாத தொன்றாகும். இது திருடர்களுக்கும், விஷமிகளுக்கும் வசதியாக அமைகிறது. பெரும்பாலான திருட்டுக்கள் இருட்டில் நடைபெறுகின்றன. மாலை 7 மணி தொடக்கம் அதிகாலை 2 மணி வரையிலான காலப்பகுதியில் திருடர்கள் சுறுசுறுப்பாக இருப்பர். இதமான காலநிலையையும் அவர்கள் விரும்புகின்றனர். முன்கதவு, பின்கதவு மூலமாகவே அவர்கள், வீட்டிற்குள் நுழைவதாகக் காவல் துறை ஆய்வுகள் இயம்புகின்றன. யன்னலை உடைத்து அல்லது பெயர்த்து உட்புகுவது மிகக்குறைவு. வீட்டோடு இணைந்திருக்கும் கார் விடும் பகுதிக் கதவு மூலமாகவும் நுழைகிறார்கள். புள்ளிவிபரங்கள் பின்வருமாறு:— பின்கதவு, முன்கதவு மூலம் 63 சத வீதம், கார் விடும் பகுதிக் கதவு மூலம் 8 சத வீதம், தனிக் கண்ணாடி பொருத்திய யன்னலை உடைத்து 4 சத வீதம், வீட்டுக் கூரையைப் பிரித்து இறங்குவது மிகவும் அரிது. இதுபோன்ற ஆய்வுகள் பாதுகாப்புக் கருவிகள் தயாரிப்பில் நன்கு உதவுகின்றன.

நியூயோர்க் பொலிசாரின் உயர் அதிகாரி சார்ஜன் சிகி, '' வீட்டின் உள்ளும், புறமும் வெளிச்சம் போடுங்கள். திருடர்கள் வெளிச்சத்தை வெறுக்கிறார்கள் '' என்று கூறுகிறார். ''21 ஆம் நூற்றாண்டிலும் ஒவ்வொரு வீட்டிற்கும் ஒரு கடிநாய் மிகவும் அவசியம். இல்லாவிட்டால் கடிநாய் கவனம் என்ற பலகையாவது தொங்க விடுங்கள். நாய் இல்லையென்று திருடன் அறிந்து வைத்திருந்தாலும் உள்ளே வரத் தயங்குவான். சுற்றுலா அல்லது நெடும்பயணம் போகும்போது வீட்டை நாயிடம் ஒப்படைக்க முடியாது. பாதுகாப்புக் கருவிகளையும், உங்கள் அயலவர்களையும் நீங்கள் நம்பியிருக்க வேண்டும் '' இவ்வாறு சொல்கிறது சார்ஜன் சிகியின் அறிவுரை.

திருடர் பயமும்; இலத்திரனியல் கருவி.

"அஞ்சி அஞ்சிச் சாவாரே; இவர்
அஞ்சாத பொருளில்லை அவனியிலே."

நீங்கள் வீட்டை விட்டுக் கிளம்பமுன் பாதுகாப்புக் கருவிகளைப் பரிசோதித்து நல்ல நிலையில் விட்டுச் செல்வதோடு சில அடிப்படைப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் எடுக்கும்படி பொலிசார் கூறுகின்றனர். நீங்கள் வீட்டில் இல்லை என்பதற்கு ஆதாரமாக வீட்டு வாசலில் குவியும் பத்திரிகைகள், பால் போத்தல்கள் போன்றவற்றை உரிய அறிவித்தல்கள் மூலம் நிறுத்தி வையுங்கள். வீட்டைச் சுற்றியுள்ள புல்வெளியை நன்றாகத் தரையோடு வெட்டிச் சுத்தப்படுத்துங்கள். பூச்செடிகளை நீரூற்றிக் கவனிக்கும்படி உங்கள் அயலவரைக் கேளுங்கள். அவருக்கும் நீங்கள் இப்பணியைச் செய்ய வேண்டி வரும். மறவாதீர்கள். மேல்மாடியன்னல்வரை வளர்ந்திருக்கும் மரத்தின் இலைகளை வெட்டி விடுங்கள். யன்னல் கதவு போன்றவற்றை நன்றாகப் பூட்டி இழுத்துப் பார்த்தபின் வெளியேறுங்கள்.



01. இரண்டாம் மாடி யன்னல்கள் மறையாமல் கிளைகளை வெட்டுதல்.
02. ஏணி மற்றும் சாதனங்களை பாதுகாப்பாக வைத்தல்.
03. அயலவரின் காரை வழிபாதையில் நிறுத்த வழிவகுத்தல்.
04. வீட்டிற்கு வரும் காகிதாதிகளை அயலவரை வாங்கச் சொல்லுதல்.
05. கடிதங்கள், பத்திரிகைகளை நிறுத்துதல்.
06. புற்களை கட்டையாகக் கத்தரித்தல்.
07. முன்கதவைப் பலப்படுத்தல்.
08. பெயர்ப் பலகையை அகற்றுதல்.
09. விட்டு விட்டு எரியும் சாதனத்தை மின்விளக்கில் பொருத்துதல்.
10. யன்னல்களைப் பூட்டுதல்.
11. கதவு யன்னல்கள் முன்னால் நிற்கும் செடிகளை கத்தரித்தல்.
12. வெளியே மின்விளக்கை உயரப் பொருத்துதல்.
13. செடிகளைக் கவனிக்க அயலவரின் உதவியைக் கோரல்.
14. மங்கலான விளக்கை அமைத்தல்.
15. மின் கதவையும் பலப்படுத்தல்.
16. பாதுகாப்பு ஸ்ரிக்கரை தேவையான இடங்களில் கையாளல்.
17. வெளிப்புறமுள்ள விளக்குகளுக்கு தானியங்கி அமுக்கிகளைப் பொருத்துதல்.

சொந்தமாக அல்லது வாடகைக்கு வீடு வைத்திருக்கும் வசதியுள்ள அமெரிக்கர்கள் பி.சி. எனப்படும் தனியார் கணனிகளைப் பல்வேறு தேவைகளுக்காக வைத்திருக்கிறார்கள். இந்தக் கணனிகளில் பொருத்தக்கூடிய பாதுகாப்புக் கருவிகளை அமெரிக்காவின் பிரபல தொழில் நிறுவனங்களான எக்ஸ்-10, மற்றும் றேடியோ ஷாக் (X-10, Radio Shack) தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளன. அவற்றின் செயற்பாடுகள் இதன் கீழ் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்தக் கணனியில் இணைக்கப்பட்ட கருவி அண்மையில் உள்ள காவல் நிலையம், தீ அணைக்கும் படை, தொலைத் தொடர்பு தொலை பேசி இணைப்பு மூலமாக நடக்கும். தொலைபேசி இணைப்பு வெட்டப்பட்டால் இக் கருவி செயலிழக்கும்.

அமெரிக்க நகரப்புற வீடுகள் நெருக்கமாக இருக்கின்றன. கண்ணாடிகளை உடைத்து அல்லது நொருக்கி வீட்டிற்குள் இறங்கத் திருடர்கள் தயங்குவார்கள். அவர்கள் சாவிக் கொத்துடன் வருவார்கள். கதவைத் திறந்து உள்ளே போவதே அவர்கள் வழிமுறை. ஆகவே இலத்திரனியல் கருவிகள் கொடுக்கப்பட்ட கதவுப் பூட்டுக்களைப் பொருத்தும்படி பொலிசார் அறிவுறுத்துகின்றனர். அன்னியர்களின் நிறவுகோல்கள் இப் பூட்டுக்களில் செலுத்தப்பட்டவுடன் வீட்டிலுள்ள ஒலி – ஒளிக் கருவிகள் இயங்கத்தொடங்குகின்றன. திருடனின் செவிப்பறை கிழியும் ஒலியும், விட்டு விட்டுப் பல திசையிலிருந்து பாயும் ஒளியும் திருடனை மிரட்டுகின்றன. அவன் இதற்கு மசிவானா என்பது வேறு விஷயம்.

ஒலி, ஒளி மிரட்டல்கள் போதாதென்று காப்புறுதி நிறுவனங்களும், காவல்துறையினரும் கருதுகின்றனர். தனியார் துறைக்கெனத் தயாரிக்கப்பட்ட பாதுகாப்புக் கருவிகளில் வெளித் தொடர்பை ஏற்படுத்தும் கருவிகளே சிறப்பானவை என்று தெரிவு செய்யப்பட்டுள்ளன. உயர்தர இலத்திரனியல் முறையில் இயங்குகின்ற இவை இன்று 7 மில்லியன் வீடுகளில் பொருத்தப்பட்டுள்ளன. விலை மாத்திரம் கூடுதலானபடியால் கூடுதல் விற்பனை தடைப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விலை குறையலாம் என்று தயாரிப்பாளர்களின் அண்மைக்கால அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

விலைகுறைந்த, ஆனால் மிகவும் உபயோகமான சில வீட்டுப் பாதுகாப்புக் கருவிகள்.



01. இதுவரை காலமும் விற் பனைக்கு விடப்பட்ட மின்சுமிழ் வெளிச்சத்தை ஏற்றி அணைக்கும் போது கருவிகள் பெரும் அவச்சொல்லிற்கு ஆளாகியுள்ளன. இவை தினசரி ஒரே நேரத்தில் வெளிச்சம் போடுவதாலும் அணைப்பதாலும் வீட்டில் ஆட்கள் இல்லை என்பதை திருடர்கள் நன்கு உணர்வர். இதனைச் சீராக்க செயற்பாடற்ற இலத்திரனியல் கருவி அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது எதிர்பாராத நேரங்களில் வெளிச்சம் போடுவதும் அதே விதமாக ஒழுங்கற்ற விதத்தில் விளக்கை அணைக்கவும் செய்கிறது. ஒவ்வொரு மின்சுமிழுக்கும் ஒவ்வொரு கருவியைப் பொருத்த வேண்டும். ஆனால் விலை ஒன்றுக்கு 10 டொலர். இதுமாதிரி ஐந்து கருவிகள் ஆட்கள் இல்லாத வீட்டில் பொருத்தப்பட்டால் வெளியூர்த் திருடர்கள் திரும்பியும் பார்க்க மாட்டார்கள். வீட்டின் முன்பக்கத்து வெளிச்சத்தையும் இந்தக் கருவியின் உதவியுடன் இயக்கலாம்.

02. 190 பாகை நிலப்பரப்பை இந்த ஒரு சோடி இலத்திரனியல் இயக்க விளக்குகள் பாதுகாக்கின்றன. இரவில் இதன் பார்வையில் யாரேனும் உலாவினால் உடனே பெரும் வெளிச்ச வெள்ளத்தை அவை உண்டாக்கிவிடும். இதன் ஒளி 70 அடிக்குப் பாயும். 8,100 அடி அகலத்தைப் பரப்பி நிற்கும். இது பகல் வேளையில் வேலை செய்யாது. சூரிய வெளிச்சம் இல்லாத வேளையில் அதன் பார்வையில் யாரேனும் நடமாடியவுடன் வெளிச்சம் பரப்பும். இது ஒரு சென்சர் கோர்ப்பரேசன் தயாரிப்பு. விலை 35 டொலர்.

வகை தொகையாகப் பாதுகாப்புக் கருவிகள் சந்தைப்படுத்தப்பட்டாலும் தொழில் நுட்பம், விற்பனைக்குப் பின் சேவை, நம்பிக்கை, பிரிதிறன் [illegible] மேன்மை பொங்கும் அம்சங்கள்



03. எக்ஸ் 10, யூ. எஸ். ஏ அமெரிக் காவின் வீட்டுப் பாவிப்புக்கு என சிறிய ரக ஆனால் மிகவும் சக்திவாய்ந்த இலத்திரனியல் சாதனங்கள் செய்யும் நிறுவனம். வீட்டில் தற்சமயம் உள்ள மின்சாரக் கம்பியில் பொருத்தப்படக் கூடிய ஒரு தொகுதி வீட்டுப் பாதுகாப்புக் கருவிகளை எக்ஸ் 10 வெளியிட்டுள்ளது. கதவு யன்னல் ஆகியவற்றுடன் அன்னியர்கள் உராய்தல் அல்லது திறவுகோல் மூலம் திறக்க எத்தனித்தால் வெளிச்சத்தை இயக்கி பெரும் ஒலியையும் ஏற்படுத்தும் ஏற்கனவே இக் கருவியில் பதியப்பட்ட 4 தொலைபேசி இலக்கங்களுக்கு அது உங்கள் வீட்டுத் தொலைபேசி மூலம் அபாய அறிவித்தல் கொடுக்கும். நெருப்பு, திருடர் போன்ற அபாயங்களுக்கு இது பாதுகாப்பு வழங்கும். இதன் விலை: 200 டொலர்.

இதில் 1 தொடக்கம் 10 வரை பத்துப் பாகங்கள் உண்டு.

அவை:–
01. கருவி முழுவதையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் மூலக் கருவி.
02. உள் வீட்டு ஒலி, ஒளிச் சாதனங்களை தூரவியங்கி முறையில் தூரத்தில் இருந்து இயக்கும் அலகு.
03. அதன் திறப்புக் கோர்வை.
04. ஏற்கனவே பதியப்பட்ட தொலைபேசி அழைப்பை குறிப்பிட்ட நான்கு இலக்கங்களுக்கு அனுப்பும்.
05. பொலிஸ் வாகனத்தின் ஒலியை ஏற்படுத்தும் கருவி.
06. கதவு, யன்னல் ஆகியவற்றைக் கண்காணிக்கும் கருவி,
07. மின் தொடர்பு அலகு.
08. மனித நடமாட்டத்தை அவதானிக்கும் அலகு.
09. உத்தரவிடும் பகுதி.
10. வெளிச்சங்களைக் கட்டுப்படுத்தும் பகுதி.

நிலவற்றில் தான் உண்டு. தரத்தர வாங்குவதில் பிடிவாதமாய் உள்ளோர் ஏ.ரீ. அன். ரீ (AT. & T), ஹணிவெல் (Honey Well) சியேஸ் (Sears) போன்றவை தயாரிக்கும்கருவிகளை விலையைப் பொருட்படுத்தாது வாங்குகின்றனர். இவற்றைப் பொருத்துவதற்கு நிபுணர்கள் வீட்டிற்கு வரவேண்டியது அவசியம். பொருத்தும் தவறுகளால் காவல் துறையினருக்கு வீண்சிரமம் ஏற்படுகிறது.

" தவறான தகவல்கள் கிடைப்பதால் நாம் தொல்லைப் படுகிறோம். தகவல் கிடைத்ததும் வீடுகளைப் பார்வையிடுகிறோம். பொய்யான தகவலென்றாலும் போக வேண்டிய நிர்ப்பந்தம் உண்டு " என்கிறார் சார்ஜன் சீகி. பிழையான நிர்மாணம், பழுதடைதலும் பழையனவாதலும் தவறுக்குச் சில காரணங்கள். பார்வையிடும் செலவு நூறு டொலர். இதைக் காவல்துறை ஏற்றாலும் இறுதியில் வரியிறுப்பாளர்கள் சுமக்கவேண்டியுள்ளது. ஏ.ரீ. அன். ரீ, ஹணிவெல், சியேஸ் போன்ற நிறுவனங்கள் புகழ் பெற்ற பாரம்பரியங்களும் உயர்வான கட்டுப்பாடும் உள்ளவை. விலையும் உயர்வாக இருக்கின்றது. முதலாவது நிறுவனத்தின் கருவிகள் 2500—3000 டொலருக்கு விற்பனை ஆகின்றன. இரண்டாவதின் விலை 4000 டொலர். மூன்றாவது 3000—3500 டொலர் வரையில் விலைபோகின்றன.

ஒன்றை மாத்திரம் விரிவாக ஆய்வு செய்தால் அடுத்த இரண்டையும் விளங்கிக் கொள்ளலாம். ஏ.ரீ. அன். ரீ நிறுவனம் கம்பித் தொடர்பற்ற கதிரியக்க முறையில் இயங்கும் சிஸ்ரம் 8000, கம்பி இணைப்புள்ள சிஸ்ரம் 8300 என்ற இரு ரகங்களை வழங்குகிறது. இவை தனியார் வீடுகளுக்கு உகந்தவை. சிஸ்ரம் 8300 மேலும் விரிவுபடுத்தப்பட்டு நகைக் கடைகள், பெரும் பணப்புழக்கமுள்ள வர்த்தக நிலையங்கள், வங்கிகள் போன்ற இடங்களுக்கு அதிக விற்பனையாகின்றன. கம்பிகள் மின்சார இணைப்புக்கள் போன்று பொருத்தப்படுகின்றன. 8000 8300 ஆகியவற்றுக்கிடையில் இந்தக் கம்பி இணைப்புத்தான் விதியாசம்.

வீட்டைச் சுற்றியும், உள்ளுக்கும் சேந்திர நிலைகளில் சென்சர்கள் (Sensors) எனப்படும் இலத்திரனியல் கண்கள் வைக்கப்படுகின்றன. இவற்றின் லென்சுகளில் படுபவை யாவும் வீட்டின் மையப் பகுதியில் பொருத்தப்படும் கட்டளைப் பகுதிக்கு (Control Panel) தகவல்களாக அனுப்பப்படுகின்றன. வெப்ப வித்தியாசம், ஒலி வித்தியாசம் போன்றவற்றையும் கிரகித்துச் சென்சர்கள் கட்டளைப் பகுதிக்கு அனுப்புகின்றன. இவ்வாறு சென்சரும், கட்டளைப் பகுதியும்தினசரி 24 மணிநேரமும் இயங்குகின்றன. தனக்குக் கிடைக்கும் தகவல்களைக் கட்டளைப் பகுதி ஓயாமல் பகுப்பாய்வு செய்து அதன் பெறுபேறுகளின் படி தக்க நடவடிக்கை எடுக்கிறது.



04. அப்பிள், மக்கின் ரொஸ், கொமோடோர், ஐ. பி. எம் போன்ற எல் லாவித வீட்டில் பாவிக் கும் தனியார் கணனி யுடன் (பி.சி) பொருத்தக் கூடிய பாதுகாப்புக் கரு வியை எக்ஸ் 10 யூ. எஸ். ஏ. தயாரித்துள்ளது. இதுவும் மின்சாரக் கம்பி மூலம் இயங் குகின்றது. 256 வகை ஒலி ஒளி சம்பந்தமான கட்டளைகளை இதில் பதித்தால் அது அவ்வாறே செயற்படும். உங்கள் உத்த ரவுப்படி நீங்கள் வீட்டில் இருந்தாலென்ன இல்லாவிட்டாலென்ன அது செயலாற்றும். விலை: 69 டொலர்.

05. அமெரிக்காவின் றேடியோ ஷாக் நிறுவனம் தயாரித்த இந்த இலத்திரனியல் பாதுகாப்புக் கருவி அமெரிக்க காப்புறுதி நிறுவனங்களின் ஆதரவு பெற்றுள்ளது. இதைப் பெறுவதற்காகப் புதிய கம்பிகள் வீட்டில் பொருத்த வேண்டும். மின்சார கம்பிகள் போதாது, இதனுடைய கண்கள் போன்ற சென்சர்கள் வீட்டின் எட்டுத் திசைகளிலோ நிலைகளிலோ பொருத்தப்படல் வேண்டும். திருடர்கள், நெருப்பு ஆகிய அபாயங்களை இது கண்காணிக்கும். உங்களுக்குத் தேவையான வேறு உப கருவி களை இதில் பொருத்தும் வசதி உண்டு. அதாவது மேலதிக சென்சர்கள் ஒலி ஒளி எழுப்பும் சாதனங்கள். தொலைபேசி மூலம் உதவி கோரல் அலகு போன்றவற்றை இது அடக்கும். இதை மேற்பார்வை முறையிலும் வடிவமைக்கலாம். அதாவது நகரத்தினுள் மத்திய கட்டுப்பாட்டு நிலையத்துடன் தொடர் பாக்கலாம். இதற்கு மேலதிகச் செலவாகும். இந்தக் கருவி மாத்திரம் 200 டொலர். வீட்டில் ஆள்கள் நடமாடுவது போன்ற பிரமையை ஏற்படுத்தக் கண்ணாடி யன்னல்களின் பின்னால் நிழல் உருவத்தை உண்டாக்கும். இதையும் நீங்கள் வாங்கி இதில் இணைக்கும் வசதி உண்டு.

சென்சர்கள் கட்டளைப் பகு திக்கு அனுப்பிக் கொண்டிருக்கும் தரவுகள் பலதரப்பட்டவை. அவை ஒன்றையும் விட்டு வைப்ப தில்லை. இந்த அடிப்படையில் இயங்கும் கட்டளைப்பகுதி வீட் டிற்கு அல்லது குடியிருப்பாளர்க ளுக்கு ஆபத்து என்று தீர்மானித்த வுடன் தொலைபேசி இணைப்பு மூலம் நகரத்தில் அமைக்கப்பட்டி ருக்கும் மத்திய கட்டுப்பாட்டு நிலை யத்திற்கு அறிவித்தல் கொடுக்கும். மத்திய கட்டுப்பாட்டு நிலைய அலுவலர்கள் கிடைத்த முறைப் பாடு சரியானதா என்பதைக் கணப் பொழுதில் கணிப்பீடு செய்து விடுவர். பின்பு அவர்களே காவல்துறை போன்ற பாதுகாப் புச் சேவையுடனோ, தியணைக் கும் படையுடனோ தொடர்பு கொள்வர். மத்திய கட்டுப்பாட்டு நிலையத்தினர் கருவியின் தவறு களை மதிப்பீடு செய்வதிலும் தேர்ச்சி பெற்றவர்கள். அதே போன்று சென்சர்களின் தவறு களை மதிப்பீடு செய்யும் வலு வீட் டில் பொருத்தப்பட்டிருக்கும் கட்ட ளைப் பகுதிக்கும் உண்டு. மின்சா ரக் கோளாறு, கம்பி நிர்மாணக் கோளாறு, கம்பிகளுக்குச் சேதம் போன்றவற்றிற்கு ஈடுகொடுக்கும் திறன் கட்டளைப் பகுதிக்கு உண்டு.

இப்படியான அடுக்கடுக்கான மேற்பார்வை (Supervision) அம் சம் இந்த வகைப் பாதுகாப்பின் சிறப்பாகும். பாதுகாப்பு இலத்திர னியலில் இதை விஞ்ச வேறு கண்டுபிடிப்புக்கள் இதுவரை வெளி வரவில்லை. தடைகள் யாவற்றை யும் மீறிப் பலாத்கார நோக்கு டன் அன்னியர்கள் நுழைந்து விட் டால் சென்சர்கள் செய்தி அனுப்ப முன்பாக சங்கேத மொழி மூலம் கட்டளைப் பகுதியுடன் தொடர்பு கொள்ளலாம். இதற்குரிய சொற் களும், குரலும் கட்டளைப் பகுதி யில் பதியப்பட வேண்டும். அதைக் கேட்டதும் கட்டளைப் பகுதி உட னடி அவசர சேவையை ஆரம் பித்துவிடும். அதாவது நகரத்தில் மத்திய கட்டுப்பாட்டு நிலையத்து டன் தொடர்பு கொள்ளாது நேரடி யாகப் பொலிசாருக்கு அழைப்பு விடுக்கும்.

சென்சர்களைத் தாம் நினைத்தவாறு தற்காலிகமாக நிறுத்தி வைக்க வீட்டுக்காரரால் முடியும். நிலாக்காலத்தில் வெளிப் புறச் சமையல் சாப்பாடு செய்யும் போது அப்பகுதி சென்சர்களை அணைக்கலாம். வேறு பகுதி சென் சர்கள் இயங்கிக் கொண்டிருக்கும். 8000, 8300 போன்ற கருவிகளை ஆய்வுகூடப் பரிசோதனை செய்த இலத்திரனியல் வல்லுனர்கள் சென் சர்களின் திறனும், கட்டளைப் பகுதியின் மேற்பார்வையும் குற்ற மற்றதாக இருத்தல் வேண்டுமெ னத் தீர்ப்பளித்துள்ளனர். வெளி உலகத் தொடர்பிற்குத் தொலை பேசி இணைப்பை முற்றாக நம்பி யிருப்பது தவறு. இணைப்பை வெட்டினால் வெளித் தொடர்பு துண்டிக்கப்படும் என்றும் அவர் கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ஏரி அன்ரீ நிறுவனத்தின் பிர தம இலத்திரனியல வல்லுனர் ரிட்மோர் கொடுக்கும் விளக்கம் பின்வருமாறு: தொலைபேசி இணைப்புக்கள் செயலிழக்கும் போதும், பலாத்காரமாக வெட் டப்படும் போதும் மத்திய தொலை பேசி நிலையக் கண்காணிப்புப் பிரி வினரின் கணனிப் பார்வையில் அது பட்டதும் அவர்கள் நடவ டிக்கை எடுப்பார்கள். அத்தோடு றேடியோ அலைவழியாக இயங் கும் கம்பியில்லாத் தொலைபேசி யையும் எமது அடுத்த தலைமு றைத் தயாரிப்புக்கள் பயன்படுத்து கின்றன. மேலும் எமது சென்சர் கள் கூடிய விரைவில் றாடார் முறையில் இயங்கத் தொடங்கு மென்றும் ரிட்மோர் கூறுகிறார். வருங்கால விரிவாக்க 8000, 8300 போன்ற கருவிகள் இயங்கும் அடிப் படைகளில் நடைபெறும் என்பது தெளிவு.

பொப்பியூலர் மெக்கானிக்ஸ்
ஜூன் 1994.

24/4/95
LIBERATION TIGERS OF TAMIL EELAM
DENMARK BRANCH
Postbox 47
2600 Strøve
Denmark

மலிவு விலையில்: —— மொத்த வியாபாரம்!

உங்கள் கையிருப்பின் பெறுமதியை விஞ்சும்
நுகர்ச்சிப் பொருள்கள் மலிந்து கிடக்கின்றன.

அம்பிகை களஞ்சியம்

மொத்த சில்லறை வியாபாரம்
304, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.